533

சிவமயம்

ஆத்மஞான பாஷியம்

அல்லது

பரமார்த்த இன்ப சாகரம்

இஃது

கஞ்சை

சென்னை — கூடை — வேப்பேரி

ஸ்ரீலஸ்ரீ சிவ குமார மௌனகுரு சுவாமி அவர்கள்

அருளியது

ACC NO 39228

ஓம்

சென்னை — கூடை

திருவாளர். மு. அப்புசெட்டியார் அவர்களால்

அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

ஜெய வருடம் ஆடி மாதம்

1954

இதன் விலை] [அஞ்சு 8

கா. ஏ. அசலானந்த சுவாமிகள்
அவர்கள் ஆங்கில மன்மத ஆண்டு ஆனி மீ திங்கள் பாத்தில்
கும்பாபிஷேக நாளில் இலவச
சிவமயம் மாக அளிப்பன்று..
7-7-55..

ஆத்ம ஞான பாஷியம்

அல்லது

பரமார்த்த இன்ப சாகரம்

S3-3

இஃது

தஞ்சை

சென்னை — கூடூர — வேப்பேரி

ஸ்ரீலஸ்ரீ சிவ குமார மௌனகுரு சுவாமி அவர்கள்

அருளியது

சென்னை — கூடூர

திருவாளர். மு. அப்புசெட்டியார் அவர்களால்

அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

ஜெய வருடம் ஆடி மாதம்

1954

இதன் விலை] [அணா 8

முக்கிய குறிப்பு

*

இந்நூலில் அச்சுப் பிழைகளும் புள்ளிகள் சரியாக விழாமலும் இருக்கக்கூடும் ஆகவே படிக்கும் அன்பர்கள் திருத்தமாகப் படிக்கவும்.

முகவுரை

அகண்ட பரிபூரண சத்து சித்து ஆனந்த சொரூப மாய் என்றும் எங்கும் வியாபித்து விளங்காகின்ற பரம் பொருளாகிய ஈச்சுரன். தனது சங்கல்பத்தினல் அணுவுக்கு அணுவாகவும் அளவுக்கு அளவிடப் படாததாகவும தன் னுள விளங்கக்கூடிய மாபெரும் ஒப்பற்ற சத்தியினலேயே சர்வ அண்ட பிண்டசராசரங்களையும் அளித்து. எறும்பு முதலாயுள்ள சர்வ ஆன்ம கோடிகளையும் அளித்து அவை களுள் எல்லாவற்றிலும் சிறந்த மானிட வர்க்கத்தையும் அளித்து. மனம். புத்தி. அறிவு. ஞானம் முதலியவைகளையும் அளித்து இவைகளுக்கு உதவியாக இருந்து உண்மை, பொய், நித்திய. அநித்தியம். நன்மை. தீமை. இன்ப. துன்ப முதலியவைகளை விளக்கிக் காட்டக்கூடியதும் சென்ன மரண மென்னும் பவப்பிணியை நீக்கிப் பேரின்பமுத்தியை அளிக் கக்கூடிய ஆத்ம ஞானத்தை அளிப்பதுமான அருமறை என்னும் வேதத்தையும் அளித்துள்ளார்:—அந்த வேதமா இப்பொழுது நிலவக்கூடிய வேதமென்னிலோ அது அல்ல அது மிகவும் சுருக்கமானதும் சத்தானதுமாகும்; அதைப் பிற்காலத்தில் சமஸ்கிருதமென்னும் வடமொழியில் வரைந்த பொழுது தங்கள் தங்கள் விருப்பத்திற்கு வேண்டியபடி சூத்திரங்களும் மந்திரங்களும் புதியதாகச் செய்து அந்தந்த இடங்களில் புகுத்திச் சேர்த்து இவ்வளவு பெரியதாகவும் நான்காகவும் பல சந்தேகங்களுக்கும். தர்க்கங்களுக்கும் கற்பனை என்பதற்கும் காரணமாக விளங்கி வருவதாகும் ஆகி வேதமானது மூன்று பகுதிகளாக ஏற்பட்டுள்ளது அதாவது, கரும காண்டம். பத்தி காண்டம், ஞான காண்டம் என்பனவாகும்

பிற்காலத்தில் கரும காண்டம்–பத்தி காண்டம். இரண்டையும் சித்தாந்த மென்றும் துவிதமென்றும் விளங் கக்கூடிய கடவுள்–ஆன்மா. என்னும் பிரிவினையாகவும்— ஞானகாண்டத்தை வேதாந்தமென்றும்-அத்துவித மென் றும் விளங்கக்கூடிய கடவுள் ஆன்மா என்னும் பிரிவினை அற்ற ஏகமாகவும் ஏற்படுத்தி உலகில் விளங்கிவருகின்றது.

இந்த வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டும் ஒரே பொருளாகும் அதாவது. வேதமென்றால் அறிவு-அந்த மென்றால் முடிவு. அறிவின் முடிவு-சித்து என்றால் அறிவு-அந்தமென்றால் முடிவு. அறிவின் முடிவு-ஆன்மாவானது அறிவைக் கொண்டு அவ்வறிவிற்குரிய வழியில் நின்று முடிவில் அவ்வறிவின் சொரூபமாகவே விளங்கப பெறுவ தாகும்-மேலும். சித்தாந்தமாகிய-கரும காண்டத்தின். பத்தி காண்டத்தின முதிர்ச்சியின் முடிவே ஞானகாண்ட மாகும் ஆகவே, வேதமென்பது சித்தாந்தம்-இவ்வேதத்தின் முடிவே வேதாந்தம். இது இல்லாவிடில் அது இல்லை. அது இல்லாவிடில் இதுவுமில்லையாகும்.

இந்த வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களும் அனேகம் இருகின்றன அதிற் சில உபநிடதம். பிரம சூத்திர முதலிய பல நூல்களுக்குப் பாஷியங்களும். விரிவுரைகளும் செய் திருக்கின்றார்கள் இதமாதிரியாகச் சித்தாந்த சாஸ்த்திரங் களும் அனேகம் இருக்கின்றன இதற்கும் விரிவுரைகளும செய்திருக்கின்றார்கள் இவைகளெல்லாம் ஆத்மஞான சூரியனுக இருப்பினும் கிரமமாகவும் சுருக்கமாகவும் சுலபமாகவும், இல்லாதபடி மிக அரும் பதங்களாகவும் விரிவாகவும் முறணபாடாகவும கலபபடமாகவும இருப் பதால் பலவித சந்தேக்ங்களுக்கும் - தர்க்கங்களுக்கும். கற்பனை என்பதற்கும காரணமாக இரூப்பதுடன் அந்த ஆதம ஞான உண்மைகளையும்-தத்துவங்களையும் வழி களையும மாந்தர்கள் அறிந்து அவ்வழியில் நின்று அடைந்து அனுபவிக்க முடியாதபடி ஏதாமொரு அதி தீவிர பரி பக்குவமுடையவர்களே அறிந்து அடையக்கூடியதாக இருந்து வருகின்றது. ஆகவே, அந்த ஆத்ம ஞானத்தின் உண்மைகளையும்—தத்துவங்களையும்—வழிகளையும் மிகச் சுலப மாகப பாமரர் முதற பண்டிதர்கள வரை பிலும—பாலர்கள் முதற பெண்கள் வரையிலும எல்லோரும் தெற்றென அறிந்து அடைந்து அனுபவிக்க வேண்டுமென்கிற பூரண ஆவலையும உத்தேசத்தையும் கொண்டே சர்வ வேதாந்த சித்தாந்த நூல்களின கருத்துக்களையும்-தத்துவங்களையும். உண்மையான நிலைகளையும அமைத்து மிக எளிய நடையில் இனிமையான சரிதா சூபமாகவும சுலபமாகவும் விளக்க மாகவும கிரமமாகவும் அனுபவத்திற்கு ஏதுவாகவும் இந் நூலை எழுதி வெளியிட்டதாகும். இதிலுள்ள ஒவ்வொரு

சரித்திரங்களிலும் ஆத்ம ஞானத்தின் அப்பியாசமென்னும் சாதனைகளாகிய நிஷ்காமிய கருமம். நிஷ்கரமிய பக்தி நிஷ்காமிய தவம் முதலாக. கல்வி அறிவு அன்பு பக்தி ஒழுக்கம் சிவகாருண்யம், தருமம் கற்பு அகிம்சை சத்தியம் பொறுமை நீதி நிராசை பற்றின்மை நம்பிக்கை வைராக்கியம். சாஸ்திரம் சத்சங்கம் கேள்வி–விசாரணை சாதுக்கள் தரிசனம் பூசை தியானம் முதலியவைகளும் இவைகளின் முதிற்சியான பற்றற்ற ஆத்ம ஞான நிலையும் ஆத்ம சக்தியும் சர்வமும் கடந்த மேலான அத்துவிதப் பேரின்பமுத்தி நிலையும் ஞானிகளின் பெருமையும் சச்சுரனின் திருவிளையாடல் முதலியதும் தெற்றென விளங்கக்கூடும்.

இந்நூலில் எல்லாப் பொருள்களும் அடங்கியிருக்கின்றன. அதாவது: அளவிடப்படாத அமிர்தானந்த சாகரத்தை அணுவாகிய பாத்திரத்துள் அடக்கி வைத்திருப்பதை போன்று அளவிடப்படாத ஆத்ம ஞான சாஸ்திரங்களின் பொருள்கள் எல்லாம் இச்சிறிய நூலாகிய பாத்திரத்தில் அடங்கி இருக்கின்றது ஆனால் கோடை காலத்தில் ஆற்றின் சுடுமணலின் கீழ் குளிர்ச்சியான தண்ணீர் இருப்பதைச் சிலர் அறியாதவர்களும் அதை அறிந்து சொல்வதை நம்பாதவர்களும் உண்டல்லவா? அப்படி அதை நம்பிக் கரத்தாலும் மண்வெட்டியாலும் எவ்வளவுக் கெவ்வளவு தோண்டத் தோண்ட மிக இனிமையானதும். குளிர்ச்சியானதும் மிகத் தெளிவானதுமான தண்ணீர் ஊறி ஊறிப் பெருகி வெளியிலும் ஓடப் பெறுவதைப் போன்று இந்நூலையும ஏதோ ஒரு புராணக் கதைகளைப் போல மேற்பார்வையாகப் பார்த்து விட்டுவிடாமல் மன ஒர்மை என்னும் கரமும்–மெய்யறிவென்னும் மண்வெட்டியும் கொண்டு உற்று ஆழ்ந்து பார்க்கப்பார்க்க உண்மைகள் விளங்கித் தன்னுள் இயற்கை இன்பமானது ஊறி ஊறிப் பெருகி ஆத்ம ஞானப் பேரின்பசாகரத்தில் மூழ்குவிக்கும் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆகவே எல்லோரும் மன ஒர்மையாகக் கற்றும் கேட்டும் ஆராய்ந்தும் உண்மைகளைத் தெரிந்தும் அவ்வழியில் நின்று ஆத்ம ஞான நிலையும் அதற்குரிய முத்தி பேறறையும் அடையப் பெறுவீர்களாக.

ஓம்–சாந்தி–சாந்தி–சாந்தி

உயிரெலாம் இன்ப உருவமாய் வாழ்க

கடவுள் வணக்கம்

அறுசீர் விருத்தம்

ஆதியில் இறை புகன்ற அருமறை முடிவாய் நிற்கும்
போதமாம் ஆத்ம ஞானப் பொருள்தனை எவரும் கண்டும்
நீதமா யடைந்தும் உய்ய நிகழ்த்திடு மிந்நூ லென்றும்
தீதிலா விளங்க ஈசன் திருவடி மனத்துள் வைப்பாம்.

பொருள் அடக்கம்

எண்		பக்கம்
1.	ஆத்மானந்தன் – அறிவானந்தன் சரிதம் ...	1
2.	மதிமுகன் சரிதம்	33
3.	சிவானந்தன் சரிதம்	59
4.	அம்பலவாணன் சரிதம்	90
5.	அனகன் சரிதம்	130
6.	சித்தி அம்மையின் சரிதம்	165
7.	புஷ்பகவல்லி ஞானானந்தன் சரிதம்	204

ஸ்ரீலஸ்ரீ சிவ குமார மௌனகுரு சுவாமி அவர்கள்

சிவமயம்

ஆத்ம ஞான பாஷியம்

அல்லது

பரமார்த்த இன்ப சாகரம்

1

ஆத்மானந்தன் அறிவானந்தன் சரிதம்

முன்காலத்தில் அளகேந்திரபுரமென்னும் ஓர் பட்டினத்தில் சந்திரசேகரனென்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் கல்வி, அறிவு, ஒழுக்கம பக்தி, தருமம், நீதி முதலிய நற்குணங்களுடன் மிகப் பலவந்தனுகவும் விளங்கினன். அவ்வரசனுடைய மனைவி கனகவல்லி என்பவளும இத்தகைய குணங்களுடையவளாய் இருந்தனள். இப்படி இருக்க, இவர்களுக்கு மக்கட்பேறு இல்லாத குறைவால் அக்கவலையே இரவும் பகலும் இவர்களை மிகவும் வருத்தியது. இவ்வரசனுடைய மந்திரி மனோதயன் என்பவனுக்கும் மகப்பேறு இல்லை. ஆகவே இவ்வரசனும், மந்திரியும் சதா காலமும் இக்கவலையிலேயே ஈடுபட்டு இதன் காரணமாக யாகயக்ஞங்களும் முப்பத்திரண்டு தானதருமங்களும், பிரதினம் செபம், தவம், பூசைகளும் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானமும் செய்து வந்தார்கள். அதன் பிறகு சில நாள் சென்று இருவருடைய மனைவிகளுக்கும ஒரே சமயத்தில் கர்ப்பம் ஏறபட்டு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. இதனை அறிந்த அரசனும் மந்திரியும் மிகுந்த சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவர்களாய் முப்பத்திரண்டு தானதருமங்களும் செய்து பின்பு செய்ய வேண்டிய சடங்குகளையும் செய்து முடித்து அக் குழந்தைகளை வளர்த்து வந்தார்கள். அதன் பிறகு அக்

குழந்தைகளுக்கு நாமகரணம் சூட்ட உத்தேசித்து, தக்க பெரியோர்களை வருவித்து, அவர்கள் மூலமாக அரசனுடைய குமாரனுக்கு ஆத்மானந்தனென்றும், மந்திரி குமாரனுக்கு அறிவானந்தனென்றும் பெயரிட்டார்கள். பின்பு ஐந்து வயதானவுடன் கல்வி கற்கும்படி ஏற்படுத்தினார்கள். இப்படியிருக்க இக்குழந்தைகள் இச்சிறு வயதிலேயே கல்வி, அறிவு, ஒழுக்கம், பக்தி, காருண்யம் முதலிய நற்குணங்களும் தாய், தந்தை, குருவிடத்திலும் மற்றும் பெரியோர்களிடத்திலும் மிகுந்த பயபக்தி, மரியாதையாகவும் நடப்பதை உணர்ந்த அரசன்முதல் எல்லோரும் மிகுந்த வியப்பும் சந்தோஷமும் அடைந்தார்கள். பின்பு இரு குழந்தைகளுக்கும் சினேகமும் அன்பும் அதிக முதிர்ச்சியானபடியால் ஒருவரை ஒருவர் கணநேரமாகிலும் பிரிந்திருக்க முடியாத நிலைமையை அறிந்த அரசனும் மந்திரியும் யோசித்து மந்திரி குமாரனை அரண்மனையிலேயே வசிக்கும்படி ஏற்படுத்தினார்கள். இருவருக்கும் வயது பனிரண்டு ஆயிற்று.

அக்காலத்தில் ஒரு நாள் இருவரும் அரண்மனையின் வினோதங்களைச் சுற்றிப் பார்க்க விரும்பி சேவகனையும் கணக்குப்பிள்ளை ஒருவரையும் அழைத்துக்கொண்டு எல்லாம் சுற்றிப்பார்த்துப் பின்பு கணக்குப்பிள்ளையை நோக்கி 'இந்த அரண்மனையை இவ்வளவு அற்புதமாக என்னுடைய தந்தைதானே கட்டினார்' என்பதாக அரசகுமாரன் விசாரித்தான். இதைக்கேட்ட கணக்கப்பிள்ளை 'உங்களுடைய தந்தை கட்டியதல்ல. இவருடைய தந்தைக்குத் தந்தையுடைய காலத்தில் கட்டியதாகச் சொல்லிக் கொள்வார்கள்' என்றான். இதைக் கேட்டவுடன் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றான். அதற்கு 'அவர்கள் இறந்து போனார்கள். அவர்கள் சரீரங்களை தகனித்து விட்டார்கள். அந்த ஆன்மாக்கள் எந்த உலகில் எந்தச் சௌக்கியமாக இருக்கின்றனவோ தெரியவராது' என்றான். இதனைக் கேட்டவுடன் இருவரும் திகிலடைந்து பின்பு 'அவர்கள் இறந்தபொழுது எது எதைக்கொண்டு சென்றார்கள்?' என்றான் 'எவர்களும் எதையும் கொண்டு செல்ல முடியாது. அவரவர்கள் செய்துள்ள பாவம் புண்ணியம் இரண்டையே கொண்டு போவார்கள்' என்று கூறினான். அப்படியா! ஆனால் என் தந்தை எப்படி, அவர்களும்

அதன் பிறகு நீங்களும் இந்த உலகிலுள்ள எல்லோர்களும் இதேமாதிரிதான் என்றான். இதைக் கேட்டவுடன் இதென்ன விந்தையாக இருக்கின்றது என்பதாகச் சிறிது நேரம் யோசித்து நின்று பின்பு அவ்விருவரையும் அனுப்பி விட்டு இக்குழந்தைகள் இருவரும் தங்கள் இருப்பிடத்தை அடைந்து வெகுநேரம் வரையில் இச் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தார்கள்.

பின்பு அரசகுமாரன் மந்திரி குமாரனை நோக்கி இதென்ன எல்லாம் அனித்யமாகச் சொற்பனம் போன்றல்லவா இருக்கின்றது.

பிறப்பதும் இறப்பதும் நிச்சயமாகவும் இதற்கிடையில் தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றம், வீடு, செல்வம், போகம், ஆடம்பரமும் இதனிமித்தம் கொலை, களவு, பொய், சூது, மோசம், லோபம், அகம்பாவம், அபிமானம், பெருமை, இவைகளும் மற்றும் அரசன், குடிகள், செல்வந்தன், ஏழை, பலவான். பலமற்றவன், உயர்ந்தவன், தாழ்ந்தவனென்றும் பாலன், யௌவனன், விருத்தன், தடியன், குள்ளன், உயரனென்னும் இவ்விதம் இன்னும் பலவிதமாக உலகில் ஏற்பட்டு நிலவி நின்று முடிவில் எல்லாம் அபலமாவதுடன் இச்சரீரமுமல்லவா அபலமாகி விடுகின்றது. நிலையுள்ளதும், உண்மையானதும் எதுவும் காணேமே. ஈச்சுரன் ஒருவரே நித்தியமாயும் சொந்தமாயும் காணப்படுகின்றான். அத்துடன் நாம் செய்துள்ள பாவம், புண்யமும் சொந்தமாகக் காணப்படுகின்றன. மற்றவையெல்லாம் கற்பனையாக ஏற்பட்டு சொற்பனம் போல் அழிகின்றனவே! ஐயோ இதனை உலகில் மாந்தர்கள் பிரத்தியட்சமாகக் கண்டும் அனுபவித்தும் மீண்டும் இதில் இச்சையுற்று ஏன் ஈடுபடுகின்றார்கள்? இது மிகுந்த ஆச்சரியமும் விபரீதமுமாகவன்றே இருக்கின்றது? என்பதாக இன்னும் பலவிதமாக இருவரும் சமபாஷித்துக் கொண்டிருந்து அது முதல் இச் சிந்தனையிலேயே ஈடுபட்டார்கள். உடனே ஆடை ஆபரணாதிகளை நீக்கிவிட்டு சாதாரண வஸ்திரத்தையும திருநீறையும் உத்திராக்கத்தையும் அணிந்து கொண்டார்கள். பஞ்சணைப் படுக்கையை நீத்துத் தரையிற் படுக்க ஆரம்பித்தார்கள். பண்டு பலகார ருசிகளை நீத்தார்கள். வேடிக்கை விளையாட்டுகளை நீத்தார்கள். பள்ளிக்கூடப் படிப்பையும் விட்டார்கள். இருவரும் சத்தா தனி இடத்தை அடைந்து ஈச்சுரனை பூசிப்

பதும் பத்தியும் அன்பும் ததும்பக்கூடிய பாடல்களை உருக்கமுடன் பாடி அழுது தொழுது வணங்குவதும் செபம் தியானம் செய்வதும், தங்களுடைய தாய் தத்தையர்களையும் சுற்றத்தவர்களையும் குருவையும் மற்றும் உலக மாந்தர்களையும் நினைந்து நினைந்து 'ஐயோ! இவர்கள் இன்னும் இந்த உண்மையை அறியவில்லையே! பொய்யை மெய்யாகக் கொண்டு விணக அழியப்போகின்றார்களே' என்பதாக மனம் வருந்துவார்கள்.

இவர்கள் இத்தகைய நிலையில் இருப்பதை அறிந்த அரசனும் மந்திரியும் அவர்கள் பரிவியரும் மனத்தில் லடைந்து அளவில்லாத துக்க முடையவர்களாய் இவர்களை அழைத்து 'குழந்தைகளே! நீங்கள் இந்தப்பருவத்தில் இப்படி இருப்பது பொருத்தமாகுமா? இதற்காகவா நாங்கள் தவம செய்து உங்களைப் பெற்றோம். இன்னும் யானை யேற்றம் குதிரையேற்றமும் அஸ்திர சஸ்திர வித்தைகளும் கற்றுத் திருமணமுடித்துக் கொண்டு ராஜபோகங்களை அனுபவித்துக் கொண்டு ஆனந்தமாக இருவரும் வாழ வேண்டியதை விடுத்து இவ்வித நிலைமையில் இருப்பது தர்மமாகுமா? என்பதாக இன்னும் பலவிதமாகக் கூறி பரிதபித்து அழுதார்கள்.

இவ்வாக்கியங்களைக் கேட்ட இருவரும் இவைகள் ஒவ்வொன்றுக்கும் தக்க உண்மையான சமாதானங்களைக் கூறி, 'இவைகள் அனைத்தும் பொய்மையும் கேவலமும் துன்பமும் அனித்தியமுமானவை. இவைகள் விவேகிகளால் வெறுப்பதாகவும் அவிவிவேகள் கொள்ளக்கூடியதாகவும்உள்ளன. ஆகவே இவ்விஷயத்தைப்பற்றிக் கவலைப்படுவதும் அழுவதும் தங்களுக்குப் பொருத்தமன்று, சந்தோஷப்படுவதே பொருத்தமாகும் என்பதாகக கூறி, மேலும் சர்வத்திற்கும் காரணமாயும் நித்தியமாயும் உள்ள பரம்பொருள் எதுவோ அப்பரமேச்சுரனையே நீங்களும் நாடுங்கள். அதுவே எங்களுக்குச் சந்தோஷம் எனபதாகக் கூறி தங்களுடைய இடத்தைச் சேர்ந்தார்கள். இதனைக் கேட்ட அரசன், மந்திரி முதலானவர்கள் மிகுந்த துக்க முற்று இதற்கு என்ன செய்வதென்பதாக யோசித்துத் தக்க வித்வான்களையும் பிராமணர்களையும் கொண்டு வந்து பல வாக்கியங்களைப் புகன்றும், சங்கீத முதலிய நாடகக் கச்சேரிகளை வைத்து நடத்தியும், மிக்க அழகு வாய்ந்த நடனப் பெண்

களை நடனமாடச் செய்தும், பின்பு மற்ற தேசத்து அரசகுமாரர்களை வருவித்து உற்சாகமூட்டச் செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை. இதனை அறிந்த அரசனும் மந்திரியும் மிகுந்த துக்க சாகரத்தில் மூழ்கினவர்களாய் இரவும் பகலும் இக்கவலையிலேயே ஈடுபட்டு ராஜகாரியங்களையும் நீத்தார்கள். வயதும் பதினேந்தாயிற்று. இப்படி இருக்க அரசகுமாரனும் மந்திரி குமாரனும் யாத்திரை செய்துவர உத்தேசித்து இவர்களிடம் விடை பெறுவதற்காக வந்தார்கள்.

இதனைக் கேட்ட அரசனும் மந்திரியும் மிகுந்த கோபமும் துக்கமும் உடையவர்களாய் 'நீங்கள் எங்களைக் கொல்லவா உத்தேசித்திருக்கின்றீர்கள். பெரும் புண்ணில் குச்சியாற்குத்துவது போன்று இதைக் கூறவந்தீர்கள்' என்பதாக மிகக் கடிந்துரைத்தார்கள். உடனே அவ்விடத்தை விட்டு நீங்கி தங்கள் இடத்தை அடைந்து மிகுந்த துக்கமுடன் ஏ பரமேஸ்பரா ஏ கருணாகரா ஏ கைலாசவாசா நீதான் கருணைவைத்து எங்களுடைய எண்ணத்தைப் பூர்த்திசெய்ய வேண்டு மென்பதாகப் பல தரம் துதித்து வணங்கிப் போற்றித் தியானித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி இருக்க அச்சமயத்தில் அரசனுடைய சபைக்கு நாரத முனிவர் வந்தனர். அவர் வரவை அறிந்த அரசன் மந்திரி முதலானவர்களும் எழுந்து வணங்கிச் சோடச உபசாரங்களுடன் தக்க ஆசனத்தில் அமரச் செய்தார்கள். பின்பு நாரத முனிவர் அரசனை நோக்கி 'உன்னுடைய முகமானது மிகுந்த துக்ககரமாகப் புலப்படுகின்றதே, காரணம் யாது? என்பதாக வினவினர். இதனைக் கேட்ட அரசனும் மந்திரியும் வணங்கி, சுவாமி! தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமிருக்காது. ஆகவே நல்ல தருணத்தில் தங்களுடைய தரிசனம் கிடைத்தது. இது எங்களுடைய பாக்கியந்தான்' என்பதாகவும், மற்றும் துக்கத்தின் காரணத்தையும் விபரமாகக் கூறித் தாங்கள்தான் இதனை நிவர்த்திக்க வேண்டுமென்றார்கள். இதனைக் கேட்ட நாரதர் அக்குழந்தைகளை அழைத்து வரும்படி கூறினர். இதனைக்கேட்ட அவ்விருவரும் மிகுந்த சந்தோஷமுடன் வந்து சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து பயபக்தியுடன் நின்றார்கள். அவர்களை நாரத முனிவர் தழுவிப்பின்பு இவர்களிடம் இவ்விஷயத்தைப் பற்றிச் சம்பாஷித்தனர். இவர்கள் கூறிய மேலான வாக்கியங்களையும் விடைகளையும்

கேட்ட நாரத முனிவர் மிகுந்த சந்தோஷ முடையவராய் சிறிது நேரம யோசித்துக் கொண்டிருந்து பின்பு அரசனையும் மந்திரியையும் நோக்கி உங்களுடைய தவப்பயனாலும் ஈச்சுரனுடைய அனுக்கிரகத்தாலும் உற்பவித்த மகாத்மாக்கள இவர்களைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். இவர்களுடைய எண்ணப்படியே நீங்களும் உடன்படுவீர்களாகில் அதனால் எவ்விதக் கெடுதியும் ஏற்படாது. நன்மையே உண்டாகும். உங்களுடைய கவலையும் நீங்கும் என்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு சென்றனர்.

அதன் பிறகு எல்லோரும் மிகுந்த சந்தோஷமும் சமாதானமும் கொண்டு இக்குழந்தைகளை நோக்கி, நீங்கள் யாத்திரை செய்ய விரும்பினால் நாங்களும் வருகிறோம். போய் வரலாமென்று அரசன் கூறினன். இவர்கள் சம்மதிக்கவில்லை. பின்பு சேனைகளுடன் சென்று வாருங்கள் என்றான். அதற்கும் உடன்படவில்லை. பின்பு சேனாதிபதியுடன் தக்க ஒரு வீரனையும் அனுப்புகிறோம். நீங்கள் இருவரும் குதிரையின்மீது சென்று வாருங்கள் என்றான். அதற்கும் உடன்படாமையால் இருவரும் தனியாகவும் கால் நடையாகவும் செல்வதற்கு எங்கள் மனம் ஒப்புக்கொள்ளாது என்றான் அரசன். இதனைக்கேட்ட அக்குழந்தைகள் சிறிது நேரம் யோசித்து பின்பு அவர்களுடைய தொந்தரவுக்காக ஒப்புக் கொண்டனர். மறுதினம் அரசன் மந்திரி முதலியோர்களும் அப்பட்டினத்திலுள்ள எல்லாச் சனங்களும் வந்து வழி அனுப்பினார்கள். அரசன் வேண்டிய அளவு இரத்தினங்களையும் பொன்னையும் ரூபாய்களையும் முடிப்புகளாகக் கட்டி இருவீரர்களிடத்திலும் கொடுத்து இன்னும் வேண்டியது அனுப்புகிறேன் என்றும் இருகுழந்தைகளையும் பாதுகாப்புடன் இவ்விடம் கொண்டுவந்து சேர்க்கும்படியாகவும்கூறினன். அவர்களும் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமெனக் கூறிவிட்டு, நால்வரும் நான்கு குதிரையின்மீது ஏறிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். அன்று தினம் வெகுதூரம் வரையிலும் சென்று, நாடு நகரங்களெல்லாம் கடந்து ஒரு வனத்தினுள் வழியாகச் செல்லும்போது அவ்வனத்தினுடைய பலவித அற்புதங்களைப் பார்த்துக் கொண்டே நேரத்தைக் கவனிக்காதிருந்தனர். திடீரென்று சூரியன் அஸ்தமனமாயிற்று. இருள் மூடிக்கொண்டது. வழி ஒன்றும் தெரியவில்லை. சிறிது தூரம் கஷ்டத்துடன்

சென்றும் முடியவில்லை. பின்பு அங்கே ஒரு சிறிய குளம் இருந்தது. அதனருகில் தங்கிச் செலல உதேசித்து இறங்கி ஸ்நான முதலிய கருமங்களை முடித்துக்கொண்டு பின்பு சிறிதும் நேரம் அன்பும பத்தியும் ததுமபக் கூடிய பாடல்களை உருக்கமாகப் பாடினர்கள். பசியும் களைப்பும் அதிகமாக நேர்ந்தது.

அப்பொழுது வீரர்களை நோக்கி வீரர்களே நவரத்தனங் களும பொன்னும் பணமும் நிறைய இருந்தும் இப் பசியை நீக்க முடியாமற் போயிற்று அல்லவா? அல்லது இவைகளைச் சாப்பிட்டால் பசி தீருமா? எல்லாம ஈச்சர னுடைய திருவுளச் சித்தம் யெப்படியோ அப்படி நடக்கட்டும் என்பதாக பேசிக்கொண்டிருக்கும் பொழுது சிறிது தூரத்தில் ஒரு வெளிச்சம் தோன்றிற்று. அங்கே நால்வரும் சென்றபொழுது ஒரு மரத்தடியில் ஒரு வேடுவன் உட்கார்ந்திருந்தான். இவர்களைக் கண்டவுடன் நீங்கள் யாரையா என்பதாக அவன் விசாரித்தான். அதற்கு இவர்கள் உண்மையைக் கூறினர்கள். ஐயா! இதோ தேனும் தினைமாவும் இருக்கின்றன. வேண்டுமானல் கொண்டு போய்ச் சாப்பிடுங்கள் என்பதாக எடுத்துக் கொடுத்தான். மிகுந்த சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டு ஐயா, வேடு வனே உனககு நவரத்தினம் வேண்டுமா, பொன் வேண்டுமா பணம் வேண்டுமா சொல் தருகிறோம் என்றார்கள். உடனே வேடுவன் அந்தச் சனியன்கள் எனக்கு வேண்டாம், அதனல் ஆவது ஒன்றுமில்லை, நீங்களே சுமந்து அலையுங்கள் என்று மறுத்து விட்டான். இதனைக்கேட்ட நால்வரும் மிகுந்த வியப் பும் நாணமு முடையவர்களாய் இவ்விடம் வந்து அத் தினை மாவைச் சாப்பிட்டார்கள். அது மிகத் திவ்யமாகவும் திருப் தியாகவும் இருந்தது. மிகுந்த சந்தோஷத்துடன் அன்றிரவு அங்கே தங்கி இருந்து, மறு தினம் அதி காலையில் எழுந்து ஸ்நான முதலிய கருமங்களை முடித்துக் கொண்டு நால்வரும் புறப்பட்டுச் சென்றார்கள். சிறிது தூரம் சென்றவுடன அங்கே மிக வயது சென்ற விருத்தாப்பியமான வேடுவப் பெரியவர் இருந்தார். இவர்களை நோக்கி நீங்கள் யார் எங்கே போகின்றீர்கள் என்றனர். ஐயா நாங்கள் யாத்திரை யாகப் போகின்றோம் என்றார்கள். இதனைக் கேட்டுச் சிரித் துக் கொண்டு யாத்திரைக்குப் போகின்றவர்களுககு வில், அயபு, கத்தி, கேடயமும் வேண்டுமோ? பணமூட்டைகளும்

வேண்டுமோ? ஏன்? அந்த ஈச்சுரன் வேண்டியவைகளை யெல்லாம் அளித்துப் பாதுகாக்கமாட்டாரோ? அவ்வளவு நம்பிக்கை இல்லாதவர்கள் யாத்திரைக்கு ஏன் செல்ல வேண்டும்? ஓகோ நீங்கள் இருவரும் இப் பையன்களைக் காப்பாற்றுகிற விரர்களா? அப்படியானால் நான் அவர்களை இதோ கட்டப் போகின்றேன் உங்களுடைய சாமார்த்தியத் தைக் காட்டுங்கள் பார்க்கலாமென்பதாக சூதிரையின் முன் சென்று இறங்கும்படி செய்து அவர்களுடைய கரத் தைப் பிடித்தவுடனே ஒரு விரன் இறங்கி ஓடி அவருடைய கரத்தைப் பிடித்து இழுத்தான். உடனே அவர் மற்றொரு கரத்தால் அவ் விரனைத் தள்ளினவுடன் தலைகீழாகப் போய் விழ்ந்தான். பின்பு சேனாதிபதி கோபமுடன் ஓடி வந்து கரத்தைப பிடித்தான். உடனே அவனையும் அவ் விதம் தள்ளினார், இருவரும் விழுந்து எழுந்தவுடன் அடே உங்களுடைய சரீரபலம் தெரிந்துவிட்டது. இனி உங்க ளுடைய ஆயுத பலத்தைக் காட்டுங்கள் பார்க்கலாமென்ப தாக தன் வில்லைப் பிடித்து நினரார். உடனே அவர்களும் மிகுந்த கோபமுடன் பாணப் பிரயோகஞ் செய்தார்கள். இக் குழந்தைகள் எவ்வளவோ. மன்றாடியும் எவர்களும கேட்கவில்லை. அவ்வீரர்களும் தங்களால் ஆனமட்டும் வேண்டிய பாணங்களை யெல்லாம் பிரயோகித்தும எல்லா வற்றையும் நாசஞ் செய்துவிட்டும் பின்பு இனிமேல் நான் பாணம் தொடுக்கின்றேன். அதைத் தடுங்கள் பார்க்கலாமென்று ஒரு பாணம் விட்டார். அது அவர்க ளுடைய வில், அம்பு, கத்தி, கேடய முதலியவற்றை தும்சம் பண்ணிவிட்டது. பினபு இரண்டு பாசக் கயிற்றைத் தொடுத்துவிட்டார். அது இருவரையும கால் கையுடன் சேர்த்துக் கட்டிவிட்டது. கீழே விழ்ந்து கிடந்தார்கள். இதனை அறிந்த குழந்தைகள் மனம் வருந்தி ஐயா தாங்கள் செய்தது தர்மந்தானு? வேண்டாம். அவர்களை அவிழத்து விடுங்கள் என்பதாகப் பலவாறு வேண்டினார்கள். அடே! உங்களுக்கு ஏன் இந்தக் கவலை? நீங்கள் யாத்திரை செல் லுங்கள் என்றனர். ஐயா இத்தகைய நிலைமையில் நாங்கள் எப்படிச் செல்ல மனம வரும என்றார்கள். அடே இதை எவர்களாலும் அவிழ்க்க முடியாது. உங்கள் நிமித்தமாக இவர்களை உங்களுடைய பட்டினத்திற்கே அனுப்புகின் றேன். அங்கே உன் தந்தையாகிய அரசனால்தான இதை அவிழ்க்க கூடுமென்பதாக அவர்களைத் தூக்கி இரண்டு

குதிரைகளின்மீது வைத்து விழாதபடி கொடிகளாற் கட்டி மற்ற குதிரைகளில் பணம், பொன், இரத்தினம் முதலிய முடிப்புகளைக் கட்டி நீங்கள் உங்கள் பட்டணம் போய் சேருங்கள். இக் குழந்தைகளைப்பற்றிக் கவலை வேண்டா மெனச் சொல்லுங்கள் என்பதாகக் கூறி குதிரைகளுக்கு ஒவ்வோர் அடி கொடுத்தார். அவைகள் வந்தவழியே ஓட ஆரம்பித்தன.

அதன் பிறகு இவர்களை நோக்கி ஐயோ என்னுடைய வாழ்நாளெல்லாம் வீணாளாகக் கழிந்தன. நான் பிராணி களைக் கொன்று தின்ற தோஷம் நீர யாத்திரை செய்ய விருமபுகின்றேன். நீங்கள் பாதுகாத்துக் கொண்டுவந்து சேர்க்க முடியுமா என்றனர். ஐயா அப்படியே வாரும் என்று அழைத்துக்கொண்டு மூவரும் புறப்பட்டுச்சென்று அக் காட்டைக் கடந்து சிறிதுதூரம் சென்றவுடன் ஐயோ என் கால் கை யெல்லாம் நோகின்றனவே, பசி, தாகம் தாங்கமுடிய வில்லையே. மயக்கம் உண்டாகின்றதே. நான் உங்களை நம்பி வந்தேனே. அடே யென்னைச சிறிதுதூரம் தூக்கிச் செல்லுங் கள் என்பதாக உட்கார்ந்துகொண்டு பாசாங்கு செய்தார். இதுவும் ஈசுசுரனுடைய சோதனை தான் என்பதாக இருவரும் அவரைத்தூக்கிச் சென்றார்கள். வழியில் ஒருகுள மும் விருட்சமுமிருந்தன. அங்கே இறக்கி மூவரும் தாக விடாய் தீர்த்துப் பின்பு அம்மரத்தடியில் இளைப்பாறினர் கள். அப்பொழுது என் கால்கள் மிகவும நோகின்றன. இருவரும் சிறிது பிடியுங்கள் என்றார். அப்படியே பிடித் தார்கள். பின்பு பாடும்படியாகச் சொன்னர். அவ்விதமே அன்பு பத்தியாகப் பாடினர்கள். ஆஹா நன்றாக இருக் கின்றதே இன்னும் பாடுங்கள் என்று கூறிக்கொண்டே அவாகள் மடியிற் படுத்தார். அதன் பிறகு இவர்களுக்கும் தங்களை அறியாது நித்திரை ஏற்பட்டு மரத்தின்மீதும் சார்ந்தவண்ணம் துயின்று பின்பு விழித்துப் பார்த்தார் கள். இவரைக் காணவில்லை. எழுந்து அங்குமிங்கும் தேடி ஐயோ இவரைக் காணோமே எங்கே போனாரோ தெரிய வில்லையே என்று துக்கமுடன் நிற்கும்பொழுது அசரீரி வாக்காக அடா குழந்தைகளே நாம் தாம் வந்தோம். நீங்கள் மனம் வருந்தாது ஆனந்தமாக யாத்திரை செய்து வாருங்கள். ஒருகெடுதியும் ஏற்படாது. போங்கள் என்ப தாகக் கேட்டது. இதனைக் கேட்டவுடன் ஆனந்தப்

பிரவாகத்தினுல் ஆடிப்பாடிக் குதித்து ஏ பரமேஸ்வரா ஏ சகதீஸ்பரா ஏ கடவுளே நீதானு இவ்விதம் வந்து எங்களை ஏமாற்றிப் பல வேடிக்கைகளைச் செய்து மறைந்தனை? என்பதாகப் பலதரம் போற்றித் துதித்தும் பாடியும் வெகு நேரம் நின்று பின்பு மிகுந்த ஆனந்தமுடன் புறப்பட்டுச் சென்றார்கள்.

அங்கே அந்தக் குதிரைகள் அதிவேகமுடன் நாடு நகரங்களையெல்லாம் கடந்து அரசனுடைய நகரத்துட் பிரவேசித்தன. விரர்கள் இருவரும் அளவில்லாத வெட்கமும் நாணமும உடையவர்களாய் ஐயோ இவ்வுயிருடன் அரசன் முகத்தில் எப்படி விழிப்போம்? என்ன பதில் கூறுவோம்? தற்கொலை செய்து கொள்வதற்கும் வழி இல்லையே! என்பதாக வருத்திக்கொண்டே சென்றார்கள். வீதியில் இந்நிலைமையைக்கண்ட ஆண்களும் பெண்களும் வியப்புற்றுக் கூட்டமாகப் பின் சென்றார்கள். அரண்மனைக்குள் நுழைந்தனர். இதனைக் கேள்விப்பட்ட அரசனும் மந்திரியும் மனம் படபடத்துத் துடிதுடித்து வேகமுடன் ஓடிவந்து அடே, குழந்தைகள் எங்கே? எங்கே? என்று கேட்டார்கள். இவர்களுக்குப் பேச முடியவில்லை சாடை காட்டினர்கள். அதற்குள் மற்ற சேவகர்களும், விரர்களும் ஓடிவந்து கட்டை அவிழ்த்தும் கத்தியால் அறுத்தும் முடியவில்லை. எல்லோரும் ஆச்சரியமுற்றுப் பின்பு அரசன் வந்து தொட்டவுடன் பட்டென்று நீங்கியது. பினபு அவர்களை இறக்கிச் சிறிது நேரம களைப்புத்தீரச செய்து பின்பு விசாரித்தார்கள். நடந்தவைகளை ஆதியோடந்தமாகக் கூறி, அந்த வேடுவர் கிழவர் மாலிடரல்லர் தெய்வீகத்தன்மையுடையவராகவே காணப்படுகின்றார். ஆகையால் குழந்தைகளுக்கு எவ்வித ஆபத்தும சூறைவும் ஏற்படாது. ஆனந்தமாக யாத்திரை செய்து திரும்புவார்கள். என்று கூறினர்கள். இவைகளைக் கேட்ட அரசனும் மந்திரியும மிகுந்த வியப்பும துக்கமும் கொண்டு பின்பு ஒருவாறு தேறி, சிறிது மனச்சமாதானத்துடன் ஈச்சுரனைப் பலவாறு போற்றித் துதித்து வணங்கி இரவும் பகலும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

இங்கே அவ்விருவரும் பல தீர்த்தங்களில் மூழ்கியும், மகானகளாகிய பெரியோர்களைக்கண்டு தெரிசித்து ஈச்சுவர ஆலயங்களுக்குச் சென்று அன்புருகப் பாடியும் ஆடியும்

போற்றித் துதித்தும் வணங்கியும் அழுதும்பின்பு அங்கங்கே ஈச்சுரனுடைய பெருமைகளைப் பற்றியும் பக்தி ஞான மார்க்கங்களைப் பற்றியும சங்கோப சங்கமாகப் பிரசங்கிப்பதும் இவைகளைக் கேட்டு ஆண்களும் பெண்களும் அளவில்லாத சந்தோஷமுற்றவர்களாய் மிகுந்த அன்பு பக்தியுடன் பால் பட்சணங்களும் பழங்களும அறுசுவையான உணவுகளும் அளிப்பதும் அவைகளைத் தாங்களும் உண்டு மற்ற சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அளித்துக்கொண்டு ஆனந்தமாக யாத்திரை செய்து கொண்டிருந்தார்கள்.

இப்படி இருக்க **காளிங்கபுரம்** என்னும் பட்டிணத்தில் **வீரகேசரி** என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் சாதாரணமான அன்பு பத்தி ஒழுக்கமும் முரட்டுக் குணமும் ஆடம்பரமும் காம இச்சையுமுடையவன். அவனுடைய மந்திரி **கனகேந்திரன்** என்பவன். நன்னடத்தையோ நற்குணங்களோ சிறிதும இல்லாதவன். எல்லாம் தீய நடத்தையும் தீய குணங்களும் ஆடம்பரமும் உடையவன். அவனுக்கு ஒரு புத்திரனுண்டு. அவனும இவ்விதமாகவே இருந்தான. இவ்வரசனுக்கு ஒரு பெண் குழந்தை உண்டாயிற்று. அதற்குப் **பூரணம்** என்பதாக நாமம் சூட்டிப் பிரியமாக வளர்த்து வந்தான். இப்பெண் சிறுவயதிலேயே கல்வி, அறிவு, ஒழுக்கம், பத்தி, அன்பு, தருமம் முதலிய நற்குணங்களுடன் மிகுந்த அழகும் வாய்ந்தவளாய் விளங்கினாள். அப்பெண்ணுக்கு **அமிர்தம் புஷ்பம்** என்னும் இரண்டு சேடிகள் உண்டு. அவர்களும் சிறு வயதிலேயே இத்தகைய குணங்களுடன் விளங்கினார்கள். இப்படி இருக்க நாளுக்கு நாள் மந்திரியானவன் அரசனைத் தன் வயப்படுத்தித் தன்னைப்போன்ற அனுசாரங்களையதுடன் அங்குள்ள அன்னசத்திரங்களையும் ஆலயங்களையும் மற்றும் பல தரும நிலையங்களையும் பூட்டுமபடியும் ஏற்படுத்தினான. குடிகளிடம வற்புறுத்தலாக அனேக வரிகளும் பகுதிகளும் வாங்குவான். கொடாவிடில் அடிப்பதும் சூட்டையில் மாட்டுவதும ஜெயிலில் அடைப்பதும் செய்வான். இப்படி வாங்கிய பணங்களைத் தீய வழிக்கும் தெண்டத்திற்கும் ஆடம்பரத்திறகும் செலவு செய்வான். இதனால் அத்தேச மக்கள் மிகுந்த தரித்திரமும் துக்கமும் நிறைந்தவர்களாகி, இவர்களைத் தூஷித்துக்கொண்டும் பயந்து கொண்டும் வாழ்ந்து வந்தார்கள். இத்தகைய நிலை

மையைக் கேள்வியுற்ற அரசனுடைய குமாரத்தி மிகுந்த துக்கமுற்றாள். அதுமுதல் தாய் தந்தையருக்குத் தெரியாத முறையில் பூசை செய்வதும் ஈச்சுரனை நினைந்து உருகி அன்பினால் அழுவதும் மிருதுவாகப் பாடுவதும் இச்சண்டாளர்கள் எப்பொழுது ஒழிவார்கள் என்பதாகப் பிரார்த்தித்துக கொண்டும் இருந்தனள். சேடிப்பெண்கள் இருவரும் இவ்விதமே எவர்களுக்கும் தெரியாதபடி பூசை செய்து வருகின்றார்கள். சேடிகள் வழிபடுவது அரசன் குமாரத்திக்கும் தெரியாது.

இப்படி இருக்க ஒரு நாள் காலையில் ஒரு சேடியின் முந்தானியில் ஒரு முடி இருந்தது. இதைக்கண்டு இது என்ன என்பதாக வினவினாள். உடனே இருவரும் பயந்து ஒன்றும பேசாது விழித்தார்கள். உடனே அரசகுமாரி யெழுந்து அம்முடியைத்தானே அவிழ்த்துப் பார்த்தாள். அதில் கற்பூர மணமுள்ள திருநீறு இருந்தது. மிகுந்த சந்தோஷமுடன் இது ஏது என்று வினவினாள். அவர்கள் தாங்கள் பூசை செய்ததாகவும் இதை அணியாது மறதியாக வந்து விட்டதாகவும் கூறினர். இதைக் கேட்டவுடன் அளவில்லாத ஆனந்தமுடையவளாய் ஆடிக்குதித்து சேடிகள இருவரையும கட்டிப் பிடித்துத் தழுவி நீங்கள் பயப்பட வேண்டாம். இது வரையில் நீங்கள் செய்வது எனக்குத் தெரியவில்லையே! இதோ பாருங்களென்று தான் பூசை செய்வதையும் காட்டினாள்.

பின்பு மூவரும் அளவிறந்த ஆனந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய், அது முதல் மூவரும அங்கேயே பூசை செய்வதும் அன்புருகப் பாடுவதும போற்றித் துதித்து வணங்குவதும் பின்பு பண்டு பலகாரங்களையும் உணவுகளையும் காசுகளையும் வஸ்திரங்களையும் தாய் தந்தையருக்குத் தெரியாமல் சேடிகளிடம் கொடுத்து சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் சிறிய அளவைக் குழந்தைகளுக்கும கொடுக்கும்படி செய்வதும சில சமயம் பணமில்லாவிடில் சொற்ப ஆபரணத்தைக் கொடுத்து அதை விற்றுக் கொடுக்கும்படி அனுப்புவதும் இவ்விதம் மிகுந்த சந்தோஷமுடன் மூவரும் இருந்து வந்தார்கள். இப்படி இருக்க இராசகுமாரனும் மந்திரிகுமாரனும் இப்பட்டினத்தைச் சேர்ந்தார்கள். அங்கே தரித்திரப்பிணியும துக்கப்பிணியும் நிறைந்து காணப்பட்டது. பின்பு ஆலயத்திற்குச் சென்றால் அது பூட்டி

இருக்கின்றது. இவைகளைக் கண்டு மிகுந்த வருத்தமுடன் அங்கே நிற்கும்பொழுது பல மாந்தர்கள் கூடினர்கள். இவர்களை நோக்கி ஐயோ இந்தச் சண்டாளனுடைய பட்டினத்திற்கு ஏன் வந்தீர்கள்? உங்களுக்கும் அபாயம் ஏற்படக் கூடுமே, சிக்கிரம் போய்விடுங்கள் என்பதாகக் கூறி மற்றும் அரசன் மந்திரியினுடைய கொடுமைகளையும் எடுத்துக் கூறினர்கள். இவைகளைக்கேட்டு மிகுந்த வருத்தமுடன் நின்று பின்பு ஈசுவரனை நோக்கி சிறிது நேரம் பாடி வணங்கினர்கள். சனங்களுக்காகப் பரிதாபப் பட்டார்கள். அரசனையும் மந்திரியையும் தூஷித்தார்கள். இதற்குள்ளாக கூட்டத்தைக் கண்ட சேவகர்கள் ஓடி வந்து இவர்களைப் பிடித்து அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தி நடந்த விஷயங்களைக் கூறினர்கள். இதைக்கேட்ட அரசனும் மந்திரியும் மிகுந்த கோபமுடன் இவர்களை ஜெயிலில் அடைத்துப் பூட்டும்படி உத்திரவு செய்தான். இதனை அறிந்த அப்பட்டினத்திலுள்ள எல்லோரும் அங்கங்கே கூட்டமாகக் கூடி மிகுந்த துக்கமுடன் பரிதபித்துக் கொண்டிருந்தார்கள். இதனை அறிந்த சேடிகள் இவ்விஷயத்தை இராசகுமாரத்திக்குத் தெரிவித்து மூவரும் மிகுந்ததுக்கமுடன இருந்து பின்பு நாம் செய்யக் கூடியது என்ன இருக்கின்றது எல்லாம பரமேசுரன் தான் இதைத் தீர்க்க வேண்டுமென்பதாகத் துதித்துக கொண்டிருந்தார்கள். இரவு வந்து விட்டது. சேடிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டுச் சாப்பிடாமலும் துயிலாமலும் இதே சிந்தனையில் படுத்திருந்தாள். பாதி ராத்திரி ஆகிவிட்டது. திடீரென்று இவளுக்கு ஒரு யோசனையும் தைரியமும் ஏற்பட்டது. உடனே எழுந்தாள். தந்தையினுடைய பள்ளியறைக்குச சென்றாள். குத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தந்தையும் தாயும சபர மஞ்சத்தில் தூங்குவதைக் கண்டாள். மெதுவாகச் சென்று அரசனுடைய உடுப்புகளையும் வாளாயுத்தத்தையும் சாவிக்கொத்தையும் எடுத்து வந்து அவைகளை அணிந்துகொண்டாள். பின்பு அரசனை வெட்டத் துணிந்தாள். மீண்டும் யோசித்துத் தந்தையைக் கொன்று விட்டாலென்னும் பழிச் சொல்லானது உலகம் உள்ள வரையில் நிலவக் கூடும். ஆகையால் வேண்டாம் பின்பு பார்க்கலாமென்பதாகத திரும்பி, பண்டு பலகாரங்களை ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு உட்தாழ்களைத் திறந்து கொண்டே வெளியில் வந்தாள். அங்கே பாராச்சேவகர்கள்

தூங்குவதைக்கண்டு வாளால் தட்டினாள். திடீரென்று விழித்து அரசனென்று அஞ்சி நடுங்கி நின்றார்கள். அவர்களைக் கூட்டிக் கொண்டு ஜெயிலுக்கு வந்து திறக்கும்படி செய்து அவர்களை வெளியேற்றி இவைகளைக்கொடுத்து மிகவும் வேண்டிச் சாப்பிடச் செய்து அவர்களையும் சேவகர்களையும் கூட்டிக்கொண்டு மந்திரி வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினாள். உடனே திறந்து வந்தனன். அடே சண்டாளா உன்னால் யாவரும் என்னுடைய தேசமும் பாழானேம். இனிமேல் நீ இங்கே இருக்கக் கூடாது. இப்பொழுதே அணிந்துள்ள ஆடை ஆபரணங்களுடன் வெளியேறி விடியுமுன் என் தேசத்தை விட்டு கடக்க வேண்டும். இல்லையேல் கொலை செய்யும்படி செய்வேன் என்று கோபமுடன் கூறினாள்.

இதைக் கேட்ட மந்திரி மனம் பதறி நடுங்கி அப்படியே சரியென்று மனைவியும் மகனையும் மற்ற இரு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு வெளியில் வந்தான். பின்பு அவர்களையும் அழைத்துக் கொண்டு இவர்களுக்கு உடன்தையாகவும் சினேகமாகவு முள்ள மாருதியென்னும் விதவானையும் போஜன் என்னும் உபாத்தியாயரையும் பல குடும்பங்களைப் பாழாக்கிச் செல்வானுக வாழும் மாணிக்கஞ் செட்டியையும் இவ்விதமாகக் குடும்பத்துடன் வெளியேற்றினாள்.

அப்பொழுது குணசிலன் என்ற ஒரு சேவக வாலிபனும் வந்தான். அவன் மிகுந்த அன்பு, பத்தி, ஒழுக்கம், காருண்ய முடையவன். அவனுக்கு ஆதிமுதல் இவர்கள் செய்ததற்கெல்லாம் மனம் வருந்துவான். கடவுளிடம் முறையிடுவான். இதைக் கண்டவுடன் அவனுக்கு ஆனந்தம் ஏற்பட்டது. வெகு நாள்கோபத்தையெல்லாம் அன்று தீர்க்க ஆரம்பித்துத் திட்டினான். உதைத்தான். அடித்தான். காரி உமிழ்ந்தான். இவ்விதமாக மந்திரி முதல் எல்லோர்களையும் பட்டினத்திற்கு வெளியில் விடுத்துப் பின்பு ஆலயத்திற்குத் திரும்பினார்கள். அவர்கள் எல்லோரும் மிகுந்த துக்கமுடன் செல்லும்பொழுது அங்கே வழிக் கொள்ளைக்காரர்கள் மறித்துக்கொண்டே அடித்து நீங்கள் யார் உண்மையைக் கூறுங்கள் என்று கேட்டார்கள். இவர்கள் உண்மையைக் கூறினர். உடன் அடே சண்டாளர்களே உங்களால் எத்தனையோ உயிர்கள் மாண்டன. எவ்வளவோகுடும்பங்கள்

பாழாயின. இத்தேசமும் பாழாகி விட்டது. நாங்கள் இந்நிலைமையை அடைவதற்கும் நீங்கள்தான் காரணம். உங்களை எத்தனையோ தடவை வந்தும் நீங்கள் சிக்கவில்லை. இன்றைக்கு வலிய வந்து சேர்ந்தீர்கள். மிக்கச் சந்தோஷம். இன்றுதான் கடவுள் எங்கள் பக்கம் திரும்பினார். உங்களைக் கொல்லக் கூடாது. இச் சென்மத்திலேயே நீங்கள் செய்த பாவங்களுக்குத் தக்க துன்பங்களை அனுபவித்து வாட வேண்டுமென்று கூறிக்கொண்டே அவர்களுடைய ஒவ் வொரு காலையும் ஒவ்வொரு கையையும் வெட்டி ஒவ்வொரு கண்ணையும் கெடுத்து மற்ற பெண்டு பிள்ளைகளை ஆடை ஆபரணங்களை யெல்லாம் அவிழ்த்துக் கொண்டு நிர்வாண மாக ஒருவருடன் ஒருவரைச் சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டு மந்திரி முதலியவர்களைப் பல தொந்தரவுகள் செய்து, குடுமியிற் கட்டி மரத்தின் மீது தொங்கும்படி செய்து விட்டுச் சென்றார்கள். இதனால் இவர்கள் சகிக்க முடியாத உபாதியாலும் துன்பத்தாலும் வாடிக்கொண்டிருந்தார்கள். இப்படி இருக்க அங்கே இராசகுமாரத்தி முதலியவர்கள் இவர்களை அனுப்பிவிட்டு ஆலயத்திற்குச் செல்லும் பொழுது ஆலயத்தில் பூட்டுத் திறந்து கதவுமட்டும் சாத்தி இருந்தது. இவர்கள் மெதுவாகத் திறந்து உள்ளே சென்று மறைவாக நின்றிருந்தார்கள். அங்கே ஒருவன் மண்கலசத்தின் நீரை சுவாமியின் உச்சியில் விட்டுக் கழுவிப் பின்பு கொஞ்சம் புட்பத்தை அதன் மீது சாத்தி பூவரச இலையிலுள்ள சிறிது சாதத்தை முன்னுக வைத்துச் சுற்றி வந்து சாஷ்டாங்கமாக வணங்கி அன்பினால் உருகித் தேம்பித் தேம்பி அழுது அதன் பிறகு சுவாமி சாப்பிடுங்கள் என்பதாக உள்கதவை சாத்திவிட்டுச் சிறிது நேரம் நின்று பின்பு சாமி சாப்பிட்டீர்களா என்றான். ஆம் என்று ஒரு சப்தம் கேட்கவே பின்பு கதவைத் திறந்து அந்த இலையை எடுத்துக் கொண்டு அக்கதவைப் பூட்ட எத்தனித்தான். இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இவர்கள் எல்லோரும் அளவில்லாத ஆனந்தப் பிரவாகத்துடன் அடே நில் நில் என்று சொல்லிக் கொண்டே சமீபத்தில் சென்றார்கள். இவர்களைக் கண்டவுடன் பயந்து நடுங்கி நின்றான். அப்போது அவனைத் தடவி நீ பயப்படாதே. சந்தோஷமாக உன்னுடைய விருத்தாந்தங்களை ஒன்றும் ஒழிக்காமல் சொல் என்றார்கள். இதைக் கேட்டு மனந்தேறி தைரியமுடன் சொல்லத் தொடங்கினான்.

ஐயா! நான் இப்பட்டினத்தில் வசிக்கும் ஒரு ஏழைக் குடியானவனது குமாரன். என பெயர் நித்தியானந்தன். என்னுடைய தாய் தந்தையரின் பெயர் நாகம்மாள், கருப்பணன் என்பார்கள். அவர்கள் கபடு, சூது அறியாதவர்கள். ஆனல் சாதுக்களிடத்தில் மட்டும் நிரமப பயபக்தி உண்டு. யாரோ ஒரு சாதுவின் கிருபையால் நான் உற்பவித்ததாகவும் பின்பு அவரே எனக்கு நாமம் சூட்டியதாகவும் சொல்லுவார்கள். எனக்குப் படிப்புத்தெரியாது. ஏதோ கடவுள் கிருபையால் சிறுவயதிலேயே மிகுந்த அறிவும ஒழுக்கமும் அன்பும் பத்தியும் காருண்யமும் தானே ஏற்பட்டிருந்தன. ஒரு சிற்றெறும்பாயினும் வருந்தவோ இறக்கவோ என் மனம் தாழாது. சாதுக்களிடத்திலும் மிகப் பிரியம். அவர்களுக்கு அன்பாகப் பணிவிடை செய்வேன். பசியால் வந்தால் பல வீடுகள்தோறும் ஒரு இலையில் அன்னம் வாங்கி வந்து அவாகளுக்கு அளித்துப் பசியை ஆற்றுவேன். சதாநேரமும ஈச்சுரா, ஈச்சுரா எனறே மனத்துள நினைந்திருப்பேன். பிரதினமும் ஆலயத்திறகுச் சென்று அன்பாகத் தெரிசித்து வந்துதான பின்பு வேலைக்குச் செல்வேன். இப்படியிருக்கப் பின்பு ஆலயத்தைப் பூசை இல்லாது பூட்டி விட்டார்கள். இதை அறிந்து மனம வருந்தி ஐயோ சாமிக்குச் சாப்பாடு இல்லாமல் பூட்டிவிட்டார்களே, பட்டினியாக இருப்பாரே என் செய்வது என்பதாக நினைந்து நினைந்து மிகுந்த துக்கமுடன் சாப்பிடாமலும் இருந்தேன். என் தாய் தந்தையர் வந்து அடே உடம்புக்கு என்ன? சாப்பிட்டு விட்டு வேலைக்குவா என்று அழைத்தார்கள். நான் ஒன்றுமில்லை போங்கள் வருகிறேனென்று கூறிவிட்டு அங்கேயே இருந்தேன். மத்தியான நேரத்தில் சுவாமியானவர் பூட்டுச்சாவிகள் விற்கும் ஒரு கிழவன் மாதிரியாக என் முன் வந்தார். ஆனல் இதன உண்மையை அப்போது அறியேன. பின்புதான் தெரிந்து ஆனந்தித்தேன. அப்பெரியவரை உட்காரவைத்து ரகசியமாக ஆலயத்தை திறக்கச் சாவி இருக்குமோ என்றேன். அவர் உடனே இவை இரண்டையும் எடுத்துக் காட்டி இதன விலை ரூபாய 2 ஆகும். ரூபாய் இருந்தால் கொடு. இல்லாவிடில் ஒரு கடுக்கனைக்கொடு என்றார். மிகுந்த சந்தோஷமாக கழற்றிக் கொடுத்து அவரை அனுப்பிவிட்டு திறவுகோலை கூரைக்குள் வைத்துக்கொண்டேன்.

மாலையில் கொஞ்ச புட்பமும் என் தாய்தந்தையருக்குத் தெரியாதபடி சிறிது சாதம், குழம்பும் பூவரச இலையில்

எடுத்து வைத்திருந்தேன். பின்பு பாதிச்சாமத்தில் ஒரு மண் கலசமும் எடுத்துக்கொண்டுபோய் ஆலயத்தைத் திறந்து குளத்தில் தண்ணீர்மொண்டு அபிஷேகம் செய்து புஷ்பம் சாத்தி அன்பு பத்தியுடன் வணங்கிப் பின்பு சாதத்தை முன்பு வைத்துக் கதவை மூடிச்சுவாமி சாப்பிடுங்கள் என்பதாகக் கூறிப்பின்பு சிறிது நேரம் சென்று சாமி சாப்பிட்டீர்களா என்றேன். ஒன்றும் பேசவில்லை. பல தடவைகேட்டேன். பேசவே இல்லை. நான்மிகவும் வருத்தமுடன் அழ ஆரம்பித்தேன்.

அதன்பிறகு அடே குழந்தாய் அழாதே! சாப்பிட்டு விட்டேன் என்று ஒரு சப்தம் கேட்டது. உடனே சந்தோஷமுடன் கதவைத் திறந்து இலையை எடுத்துக்கொண்டு பூட்டி விட்டு வந்து விட்டேன். அது முதல் பிரதி தினமும் இவ்விதம் செய்து வந்தேன். இதற்குப் பல இடையூறுகளும் துன்பங்களும் ஏற்பட்டும் விடவில்லை. கடுக்கனைக் காணாத படியால் தாய் தந்தையரால் மிகுந்த அடியும் பட்டேன் இதெல்லாம பொருட்படுத்தவில்லை. இப்படி இருக்க இன்றைய தினம் மாலையில் சாதம் எடுக்கமுடியவில்லை. பின்பு நான் சாப்பிடும்பொழுதே தெரியாமல் எடுத்து மடியில் வைத்துக்கொண்டு வழக்கம்போல் வெளித்திண்ணையில் தூங்கினேன். கருவாட்டுக் குழம்பானபடியால் அந்த வாடையை அறிந்து நாய் வந்து தெரியாமல் சாப்பிட்டுவிட்டுப் போயிற்று. பின்பு விழித்துப் பார்த்தால் சாதமில்லை. இனி என் செய்வது என்பதாக வருந்திப் பின்பு வீட்டுக் கூரையின்மீது ஏறி மெதுவாக உள்ளே குதித்துச் சாதமும் குழம்பும் எடுத்துக் கொண்டிருந்தேன். இச் சப்தம் கேட்ட எனது தாய் என்னை நாய் என்பதாக சீ சீ யென்று சொல்லிக்கொண்டே எழுந்து ஓடிவந்து துடப்பத்தால் முதுகில் இரண்டு மூன்று அடிகொடுத்தாள். நான் இதைநோக்காது, சீக்கிரமாக சாதம் குழம்பை எடுத்துத்தெரியாமல் வைத்துக் கொண்டு நிமிர்ந்து முத்தத்திற்கு வந்தேன். என் உருவை அறிந்தவுடன் அடே அன்ன வெறிகொண்டபயலே! இரவில் சாப்பிட்டும் அதற்குள இப்பொழுது தெரியாமல்பானையுடன் சாப்பிடுகின்றாயே என்று மீண்டும் அடித்தாள், திட்டினாள். என் தந்தையும் எழுந்து திட்டினார். நான் ஒன்றும் பேசாது வெளியில் வந்து சிறிது நேரம் இருந்து பின்பு வழக்கம் போல் இங்கே வந்து எல்லாம் செய்து முடித்தன. இதற்குள் நீங்களும் வந்துவிட்டீர்கள் என்று

சொல்லி முடித்தான் இவைகளை யெல்லாம் கேட்டு, அளவிறந்த ஆனந்தம் உடையவர்களாய் அவனைப் பல விதம் போற்றித் தழுவிச் சந்தோஷப் படுத்திப் பின்பு எல்லோருமாகப் பிரதக்ஷணம் வந்து போற்றி வணங்கித் தெரிசித்துக் கொண்டு பின்பு ராசகுமாரனையும் மந்திரி குமாரனையும் நோக்கி நீங்கள் இனிமேல் இங்கே இருக்கவேண்டாம். இப்பொழுதே புறப்பட்டு யாத்திரை செல்லுங்களென்று அனுப்பிவிட்டு இவனையும் வீட்டுக்குச் செல்லும் படியாக அனுப்பி விட்டு சேவகருடன் அரண்மனையை அடைந்து அவர்களையும் அங்கே இருக்கும்படி செய்து பின்பு தன்னுடைய இருப்பிடத்தைச சேர்ந்து கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டு இங்கே நடந்துள்ள விஷங்களை நினைந்து நினைந்து சந்தோஷித்துக் கொண்டே அலுப்பினால் தன்னையும் அறியாது நித்திரை வந்து அப்படியே சாய்ந்து கன்முகத் தூங்கிவிட்டாள் உடைகளை அவிழ்க்க மறந்து போனாள்.

பின்பு காலையில் வழக்கம்போல் சேடிகள் வந்து பார்த்த வுடன் அரசன் என்பதாகப் பயந்து வெளியில் வந்து சிறிது நேரம் யோசித்து அரசன் அங்கே இருப்பதைக் கண்டு இது யார் என்பதாக மெதுவாகச் சென்று தட்டி எழுப்பினார்கள். உடனே திடீரென்று எழுந்து அவசரமாக உடைகளைக் கழற்றிக் கொண்டிருந்தாள். இதற்குள் அரசன் சபைக்குச் செல்வதற்கு உடைகளை அணியப்பார்க்கும் பொழுது அவைகளைக் காணுமல் மனைவியிடம் விசாரித்தான். அவள் நான் பார்க்கவில்லையே என்றனள். உடனே திகிலடைந்து இரவுப்பாராச் சேவகர்களை அழைத்து வரும் படி செய்து விசாரித்தான். அவர்கள் அன்றிரவு நடந்த விடயங்களையெல்லாம் கூறினர்கள். இவைகளைக் கேட்டு மிகுந்த பிரமையும் துக்கமும் ஆச்சரியமு முடையவனாய் அளவிறந்த கோபத்துடன் அடே நான் வந்தேன் பொய் கூறுது உண்மையைக் கூறுங்கள் என்றான். ஆம் மகாராஜா நீங்கள்தான் வந்தீர்கள் என்பதாகப் பலதரம் கூறினர்கள். பின்பு சிறிது நேரம் யோசித்து அடே ரதங்களைக் கொண்டு போய் மந்திரி முதலானவர்கள் எங்கே இருந்தாலும் தேடி உடனே அழைத்து வாருங்கள் என்று அனுப்பிவிட்டு மற்ற யாத்திரைவாசிகள் இருவரையும் குடியானவன் மகனையும் எங்கிருந்தாலும் பிடித்துக் கட்டிக்கொண்டு வரும்படி செய்தான்.

இதற்குள் இராசகுமாரத்தி அவசரமாக உடைகளைக் கழற்றி முன்னிருந்த இடத்தில் வைக்க வந்தாள். இதை ராணி யானவள் கண்டு, அடி நீயா வைத்துக்கொண்டு உன் தந்தையைத் தேடவிட்டாயென்று பலவிதம் திட்டிப் பின்பு வாங்கி அங்கே வைத்தனள். அங்கே ராசகுமாரனையும், மந்திரிகுமாரனையும் தேடிப் பிடித்துக் கட்ட மனம் வராது பட்டினத்திற்குள் வந்தவுடன அரசனுக்காகப் பயந்து மெதுவாகக் கட்டிக் கொண்டும் குடியானவன் குமாரனையும் வீட்டிற் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தும் அரசனிடம் விட்டார்கள். அடே சண்டாளர்களே! இவ்வளவு காரியம் செய்தீர்களா? இன்னும் சிறிது நேரத்தில் உங்களைப் பேசிக் கொள்ளுகின்றேன் என்பதாகத் தூணிற்கட்டி வைக்கும் படி செய்தான். இவர்கள் மனம் பதறி ஏ ஈச்சுரா இதென்ன அனிதமாக இருக்கின்றது. இந்த அரசனே இரவில் வந்து இவ்வளவு காரியங்களும் செய்து விட்டு இப்பொழுது இவ் விதம் செய்கின்றான். இது என்ன விந்தையாக இருக் கின்றது? ஏ கடவுளே இதுவும் உன்னுடைய திருவிளை யாடல்தானே? என்று இன்னும் பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டும் ஈச்சுரனை தியானித்துக் கொண்டும் இருந்தார் கள். இப்படி இருக்க.

அங்கே மந்திரி முதலானவர்களைத் தேடிக் கண்டு அவர்களுடைய அகோரமான நிலைமையைக்கண்டு மிகுந்த துக்கமுடன் அக்கட்டுகளையெல்லாம் அவிழ்த்து மெது வாக எல்லோரையும் ரதங்களில் ஏற்றிக் கொண்டு அரசன் முன் இறக்கினார்கள்.

இந்த அகோர நிலைமையைக் கண்ட அரசன் மனம் பதைபதைத்து ஓடி வந்து இது என்ன அனிதமாக இருக் கின்றது. இது எப்படி ஏற்பட்டது என்பதாக விசாரித் தான். இவர்கள் எல்லோரும் ஓவென்று கதறி அழுது கொண்டு அன்றிரவில் நடந்த விஷயங்களையும் பின்பு வழிக் கொள்ளைக்காரர், செய்த விஷயங்களையும் கூறினார்கள். இத னைக் கேட்டு இதென்ன ஆச்சரியமாக இருக்கின்றது. நான் வரவில்லையே என்ருன் நீங்கள் தான் வந்தீர்கள் என்ருர்கள். பின்பு யாரென்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது இராணிக்கு இந்தவிஷயங்களெல்லாம் ஒன்றும் தெரியாது. அவள் உடை இங்கே இருப்பதாகவும் தேட வேண்டா மென்றும் சொல்லி அனுப்பினுள். இதைக்கேட்டவுடன்

வேகமுடன் எழுந்து சென்று இது எங்கிருந்தது என விசாரித்தனன். அவள் உண்மையைக் கூறினாள்.

உடனே அளவிறந்த கோபமுடன் மகளிடம் வந்து அடி சண்டாளி நீயா இவ்வளவு தைரியமாக இத்தனை காரியங்களைச் செய்தனை என்றான். ஆம் என்றனள். உடனே வாளை ஓங்கி வெட்டச் சென்றான். ராணியானவள் குறுக்கே மறித்துக் கொண்டாள். உடனே திரும்பி சபைக்கு வந்து என்னுடைய மகளான சண்டாளிதான் இவ்வளவு தைரியமுடன் இத்தனை காரியங்களும் செய்திருக்கிறாள் என்று கூறினான். இதனைக் கேட்டு எல்லோர்களும் வியப் படைந்தார்கள். பின்பு கொலையாளர்களைக் கூபபிட்டுத் தன்மகளையும் சேடிகள் இருவரையும் யாத்திரை வாசிகளிருவரையும் குடியானவன் மகனையும் குணசிலனென்னும் சேவகனையும் கொலை செய்து தகனித்து வரும்படி உத்திரவிட்டுப் பின்பு மந்திரி முதலானவர்களுக்கு ரணங்கள் ஆறக்கூடிய சிகிச்சைகள் செய்ய ஆரம்பித்தான். கொலையாளர்கள் இவர்களையெல்லாம் அழைத்துச் சென்றார்கள் பட்டினத்திலுள்ள ஆண்களும் பெண்களும் இதைக் கண்டு ஐயோ ஐயோ என்று கண்ணீர் சொரிய அழுதுகொண்டு கூட்டங்கூட்டமாகக் நின்றார்கள்.

இராணியானவளும் மகளுக்கு ஏற்பட்டதை அறிந்து ஓவென்று அலறிப் புலம்பி அழ ஆரம்பித்தாள். குடியானவனும் அவன் மனைவியும் மற்றோரும் அழுது புலம்பினார்கள். இவர்களைக் கொலைக்களத்திற்குக் கொண்டு போகும் பொழுது எதிராக நரைத்துப்பழுத்து மிகவும வயது சென்ற ஓர் சாமியார் ஒரு கையில் கெண்டிச்செம்பும் மற்ற கையில் ஓர் தடியும் ஊன்றிக்கொண்டு தள்ளாடித்தள்ளாடி நடந்து வந்தனர். கொலையாளர்களை நோக்கி ஐயா இவர்கள் யார்? இவர்களை எங்கே கொண்டு செல்லுகின்றீர்கள்? என்றனர். அதற்கு அவர்கள் அரசன் உத்தரவுப்படி கொலை செய்யக் கொண்டு போகின்றோமென்றவுடன் சிவ சிவ வென்று கரங்களால் காதுகளை மூடிக்கொண்டு ஏ, ஈசசுரா இதென்ன அனீதம நான் இவ்வூரிலேயே பிறந்து சிறுவயதிலேயே யாத்திரை சென்று காசி, இமயகிரி முதல் கன்னியாகுமரி வரை எல்லா யாத்திரைகளும் செய்து என்னுடைய பாவங்களை நீக்கிக்கொண்டு இப்பொழுது வீட்டுக்கு வரும்பொழுது இதைப் பார்க்கவும் கேட்கவும் ஏற்பட்டதே. பெரும் பாபம்

பற்றிக்கொண்டதே. பருவமும தள்ளாமையாகி விட்டதே என்ன செய்வேன். ஐயா இவர்களைக்கொலை செய்யக்கூடாது. எனக்காக விட்டுவிடுங்கள். இல்லையேல் என்னை முன்பு கொலை செய்து பின்பு அவர்களைச் செய்யுங்கள் என்று வெகு நேரம் வரை இருவருக்கும் தர்க்கம் நடந்தது. அப் பொழுது இவர்கள் சுவாமி நீங்கள்ஏன் எங்களுக்காக கஷ்டப் படுகின்றீர்கள். நாங்கள் மகா பாவிகள். மேலும் இத்தேகம் என்றும் அழிவது நிச்சயம். இக்கொடிய உலகில் வாழ்வதி லும் இப்பொழுதே அழிவது உத்தமம். ஆகவே உங்களுக்கு இதனால் பாபம் ஒன்றும் சேராது. நீங்கள் செல்லுங்கள் என்றார்கள். அடே உங்களை யார் கேட்டது நான் விட மாட்டேன். இதை அரசனிடம் போய்த்தெரிவிக்கட்டு மென்றனர். இதைக்கேட்ட கொலையாளர்கள் இதென் னடா தொந்தரவாக இருக்கிறதென்று ஒருவன் ஓடி வந்து அரசனிடம் நடந்த விஷயங்களைக் கூறினன்.

இதைக்கேட்டவுடன் மிகுந்தகோபமுற்று அடேஅந்தச் சாமியாரையும் கொன்று தகனித்து வாராமல் என்னிடம் சொல்லவா வந்தாயென்று அவனை அடிக்கச சிம்மா சனத்தை விட்டுப் பதட்டமுடன் எழுந்தான். உடனே படி தவறி வேகமுடன் கீழே குப்புற்றவண்ணமாக வீழ்ந் தான். பற்களெல்லாம் உதிர்ந்து போயின. முகம், மூக்கு, நெற்றியெல்லாம் அடிபட்டு உடைந்து உதிரம் பெருகி வடிந்தது. இதற்குள் கொலையாளி வேகமுடன் பயந்து ஓடி இங்கு நடந்ததைக் கூறினன். அடே என்னையும் கொல்லவா சொன்னன். கொல்லுங்கள் பார்க்கலாமென்று கைத் தடியால் நிமிஷ நேரத்திற்குள் பட்பட்டென்று கால்முட்டி களிலும் கைமுட்டிகளிலும் அடித்து எல்லோரையும் கீழே வீழ்த்தினர். அதில் ஒருவன் தப்பி ஓடிநடந்த விஷயங் களைச் சேனாதிபதிக்குச் சொன்னன். உடனே அவன் ஆச் சரியமுற்றுப் பலவீரர்களை ஆயுதங்களுடன் அனுப்பினன். அவர்களையும் இவ்விதமாக அடித்து வீழ்த்தினர.

இதனை அறிந்த சேனாதிபதி சேனைகளுடன் வந்தான். உடனே தடியைச் சுழற்றி எறிந்தார். அது அநேகம் தடிகளாக பட்பட்டென்று அடித்து வீழ்த்தியது. மணலையும் கற்களையும் வாரி வாரி வீசினர். அவைகள் பட்டதைடன் அம்புகள் மாதிரியாகப் பாய்ந்து வருத்தின, இதனால் எல்லோரும் பட்டினத்திற்கும் கொலைக்களத்

திற்கும் நடுவில் விழுந்து கிடந்தார்கள். இதனைக் கேள்வியுற்ற அரசன் உபாதியுடன் உபாதியாகப் பெற்று எதுவும் செய்வதின்றி மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்து கிடந்தான். அதன் பிறகு அச்சாமியார் அவர்களுடைய கட்டுகளையெல்லாம் அவிழ்த்து அவர்களைக் கூட்டிக்கொண்டு பட்டினத்திற்கு வந்தார். இவைகளையெல்லாம் அறிந்த ஜனங்கள் எல்லோரும் மிகுந்த சந்தோஷமும் ஆச்சரியமுமுடையவர்களாய் இவர்களைப் வணங்கிப் பின் தொடர்ந்தார்கள. அதன் பிறகு அவர் நான் என்னுடைய விட்டுக்குச் செல்லுகின்றேன் இனிமேல் உங்கள் பாடுஎன்று கோவிலுக்குள் நுழைந்தனர். பின்பு காணமுடியவில்லை. இதனை அறிந்த எல்லோர்களும் ஆனந்தப் பிரவாகத்தினுல் ஆடிப் பாடிக்குதித்து ஏ பரமேஸ்பரா நீதானு இவ்விதம் வந்து இத்தனை வேடிக்கைகள் செய்தனை என்பதாக இன்னும் பலவிதம் போற்றித் துதித்து வணங்கினர்கள். சூரியனும் அஸ்தமனமாயிற்று. இவர்கள் அன்றிரவு அங்கேயே தங்கி முன் போன்று பூசை முதலியவைகளும் நடத்தித் தெரிசித்து அரசனும் மந்திரி முதலானவர்களும் சேனைகளும் அடைந்திருக்கின்ற நிலமைக்காக வருந்திச் சாப்பிடாமல் படுத்திருந்தார்கள். அப்பொழுது ஈச்சுரன், அரசகுமாரன், மந்திரிகுமாரன் இருவருடைய கனவிற்தோன்றி உங்களுடைய கரம்பட்டவுடன் எல்லோர்களுக்கும் ரெணங்களும் உபாதையும் நீங்கி எழுந்திருப்பார்கள். அவயவப் பழுதுமட்டும் மீண்டும் ஏற்படாது என்று கூறி மறைந்தனர்.

பின்பு இருவரும் மிகுந்த சந்தோஷமுடன் காலையிலெழுந்து ஸ்நான முதலிய கருமங்களை முடித்துக்கொண்டு எல்லோருமாக அரண்மனைக்கு வந்து அரசன் மந்திரி முதலானவர்களைக் கரத்தால் தடவி சுகமடையச் செய்து பின்பு சேனைகளையும் எழுப்பினர்கள். இதை அறிந்த அரசன் முதல் எல்லோர்களும் மிகுந்த சந்தோஷமுடனும் அன்பு பத்தியுடனும் இவர்களையும் ஈச்சுரனையும் போற்றி வணங்கினர்கள். அதன் பிறகு குடியானவன் மகன் நித்தியானந்தனுக்கு அரசன் மகள் பூரண அம்பாளையும் குணசிலனென்னும் சேவகனுக்கு அமிர்தம், புஸ்பம் என்னும சேடிகளையும் திருமணம் முடித்து அவனை அரசனுகப் பட்டம் சூட்டிக் குணசிலனை மந்திரியாக ஏற்படுத்தி மற்ற அரசன் மந்திரி

முதலானவர்களை எவ்வித விபகாரமுமற்று ஈச்சுர தியானம் செய்து கொண்டு சுகமாக இருக்கும்படியாக ஏற்படுத்திப் பின்பு எல்லோரிடத்திலும் சந்தோஷமாக விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

அது முதல் அத்தேசமும் ஆட்சியும் தேவர்களும் கண்டு வியந்து புகழக்கூடியதாய் செழிப்புற்று எக்குறைவு மற்று ஆனந்தமாக நிலவப்பெற்றது.

இப்படியிருக்க அரச குமாரனும் மந்திரி குமாரனும் பல இடங்களும் சென்று எக்குறைவுமின்றி ஆனந்தமாக யாத்திரை செய்து வரும்பொழுது ரத்தினபுரி என்னும் ஒரு பட்டிணத்தில் குஞ்சரமென்னும் ஒரு தாசி இருந்தாள். அவள் மிகுந்த அழகு வாய்ந்தவள். அவளுக்கு ஒரே கர்ப்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் உற்பவித்தன. அவைகளுக்கு ஆனந்தவல்லி அமிர்தவல்லி என்று நாமமிட்டாள். அவைகளும ஒப்பற்ற அழகுடையவைகளாய் விளங்கின. இதைக்கண்டு மிகுந்த சந்தோஷமுடன் வளர்த்து வந்தாள். இக்குழந்தைகள் சிறு வயதிலேயே அறிவு, அன்பு, பத்தி, ஒழுக்கம் காருண்யம் முதலியவைகளுடன் கூடியவைகளாய், பிரதி தினமும் காலை மாலையில் பயபத்தியுடன் புட்ப மெடுத்து ஈச்சுரனைப் பூசிப்பதும், சத்விஷயங்களை அன்பாகக் கேட்பதும், அன்பின் மிகுதியால் ஈச்சுரனை நினைந்து உருகி அழுவதும், ஆடம்பரமான ஆடை ஆபரணங்களை மறுத்துச் சாதாரண உடையும் திருநீறும அணிந்து கொண்டு மற்ற பெண்களுடன் சேராமலும் பேசாமலும் தனியாகவே வசித்து வந்தார்கள். இதனை அறிந்த தாயானவள் மிகவும் வருத்தமுற்று எவ்வளவோ போதித்தும் கேட்கவில்லை. பின்பு தக்க பருவம் வந்தால் எல்லாம் சரிப்பட்டுவிடுமென்பதாகச் சமாதானத்துடன் இருந்து வந்தனள். அதன்பிறகு இருவரும் ஒரே சமயத்தில் புட்வதியானுர்கள். இதனை அறிந்த தாயானவள் அளவிறந்த சந்தோஷமுற்றனள். மற்ற தாசிகளெல்லாம் வந்து உனக்கு இனிமேல் என்ன குறைவு நீயே இராசாத்தியென்று கூறிப் பொருமைப்பட்டார்கள். பின்பு சிலநாள் சென்று செய்யவேண்டிய சடங்குகளை முடித்து இவர்களுக்குப் பல சந்தோஷ வார்த்தைகளைப் போதித்தும் ஆடை ஆபரணங்களை அணிவித்தும் தன்னுடைய தொழிலில் ஈடுபடுத்த முயன்றுள். இவர்கள் உடன்படாது முன்

போலவே பிரதி தினமும் ஈச்சுரனைப் பூசிப்பதும் அன்புருகப் பாடுவதும் சத்விஷயங்களைக் கேட்பதும், இரவில தங்கள் அறையை உட்தாழப் போட்டுக்கொண்டு தூங்குவதுமாக இருந்து வந்தார்கள். இவர்களுக்கு உயர்ந்த ஆடை ஆபரணமில்லாவிடினும் இயற்கை அழகே சிறந்து விளங்கிற்று. இதைக்கண்ட பல செல்வந்தர்களும் மற்ற வாலிபர்களும மோகமுற்று உயர்ந்த ஆடை ஆபரணங்களும திரவியங்களும்கொண்டு தேடிவர ஆரம்பித்தார்கள். இவைகளைக் கண்டு மற்ற தாசிகளெல்லாம பொறுமையுற்றார்கள். தாயானவள் மிகுந்த சந்தோஷமுடன் அவர்களை உட்காரச் செய்து, அவைகளை வாங்கித் தன குழந்தைகளுக்குக் காட்டிப் பல உபசார வார்த்தைகளும் கூறி மன்றாடுவாள். கெஞ்சுவாள் முகவாய்க் கட்டையைப் பிடிப்பாள். இவைகளை யெல்லாம் மறுத்து விட்டு அறையைய பூட்டிக்கொள்வார்கள். உடனே வயிரெரிவாள் தலையில் அடித்துக் கொள்வாள் பின்பு இவர்களை நாளைக்கு வாருங்களென்று அன்பாக அனுப்பி விடுவாள. மறுதினமும் இவ்விதமே நடைபெறும. இதைக் கண்டு மனம் சகிக்காது வருந்தி மற்ற தாசிகளையும் வாலிபப் பெண்களையும் கூட்டிவந்து புத்தி புகட்ட ஆரம்பித்தாள்.

இவர்களுக்கும் மற்றபுருடர்களுக்கும் அந்தப் பெண்கள் வேண்டிய பத்திமதிகளை விரிவாகக் கூறி இனிமேல் ஒழுக்கமாகவும அன்பு புத்தியுடனும இருக்குமபடி சொல்லி அனுப்பினார்கள். பின்பு அவர்களிருவரும் இவர்களை நோக்கி ஐயோ இதென்ன அனிதமாக இருக்கின்றது. இத்தேகம அனித்தியமானது. நிச்சயமற்றது மிக்க ஆபாசமானது. இதைப் போஷிக்கும் நிமித்தமாகப் பலவித உபாயங்களினால் ஆடவர்களை மயக்கி திரவியங்களைப்பறித்து ஓட்டாண்டி ஆக்கி அவர்கள் குடும்பத்தையும் அவர்களையும் பாழாக்குவது தருமமாகுமா? இதுவும ஒரு தொழிலா? இப்போகமும் ஒரு இன்பமா? வெட்கமில்லையா? மானமில்லையா? உயிரினும மானம் பெரிதல்லவா? மானத்திற்கு அன்றே ஆடை அணிவது? ஆடையில்லாத பிராணிகள் கூட எததகைய முறையில் வாழுகின்றன? உலகில் புருஷன், மனைவி யென்னும குடும்பத்துடன் வாழுவதே துன்பமென்று பெரியோர்கள் கூறி இருக்க, இவ்விதம வாழ்வது அனிதமல்லவா? அப்படியாவது விருப்பமுடைய ஆடவர்களை மணந்து குடும்பமாக வாழக்கூடாதா? என்று

இன்னும் பலவிதமாக எடுத்துக் கூறினர்கள். இவைகளைக் கேட்டு அவர்கள் வெட்கமும் நாணமும கோபமு முடையவர் களாய ஒன்றும் பேசாது எழுந்து போய்விட்டார்கள்.

பின்பு தாயை நோக்கி அம்மா நீ எங்களையும் மற்ற ஆடவர்களையும கெடுத்துப பொருளைச் சேர்த்து என்ன செய்யப் போகின்றாய்? உனக்கு வேண்டியது உணவும் உடையும் தானே உன்னிடம மிருக்கும் ஆடை ஆபரணங் களையும பாத்திரங்களையும் ஒவ்வொன்றாக விற்று ஆயுள் பரியந்தம் நன்றாகச் சாப்பிடு எங்களுக்கு ஒன்றுமே வேண் டாம். விரைவு எங்களைத் தொந்தரவு செய்யாதே என்று கூறினர்கள.

மறுநாட்காலையில் இவர்கள் இல்லாத சமயம் வீட்டி லுள்ள எல்லாவற்றையும எடுத்துப் பக்கத்து வீட்டிற் கொண்டுபோய் வைத்துவிட்டு வெளியில் இருந்தனள். இவர்கள் வந்தவுடன நான் சம்பாதித்ததெல்லாம என் சிவனத்திற்கு எடுத்துக் கொண்டேன். இனிமேல் நீங்கள் சம்பாதித்துச் சாப்பிடுங்கள் என்றனள். நல்ல வேலை செய்தாய்! மிக்கச்சந்தோஷமென்று உள்ளே வந்து பார்த் தார்கள். எதுவுமில்லை. மண்பாண்டந்தான் இருந்தன. அதில் தண்ணீர் மொண்டு வந்து கொஞ்சம் தண்ணீரைக் குடித்து விட்டு, இருவரும் ஈச்சுரனைப் பாடித் துதித்துக் கொண்டிருந்தார்கள். அன்று பகலும் இரவும் ஆகாரமில்லை.

இப்படி இருக்க கோவில் குருக்கள் இப்பெண்களிடத் தில் பலநாள் இச்சையுற்றவராயிருந்து அன்றையத்தினம் ஞாபகம் ஏற்பட்டுத் திவ்யமான பிரசாதங்களும் பண்டு பலகாரங்களும் புஷ்ப மாலைகளும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவந்து கதவைத் தட்டினர். திறக்கவில்லை. பின்பு மெதுவாகத் தன் பெயரைக் கூறினர். உடனே திறந்து சுவாமி ஐயோ இந்நேரத்தில் எங்கு வந்தீர்கள்? என்பதாகப் பயபக்தியுடன் கூறினர்கள். அதற்கு அவர் ஏதோ உங்கள் ஞாபகம் ஏற்பட்டுச் சுவாமி பிரசாதம் கொஞ்சம் கொண்டு வந்தேன். இதைச் சாப்பிடுங்கள் என்றார், எதற்காகக் கொண்டு வந்தீர்கள் என்றார்கள். வேறு ஒன்றுமில்லை சாப்பிடுங்கள் என்றனர். இதைக்கேட்டு வஞ்சகமின்றிச் சுவாமி பிரசாதத்தை மறுக்கக் கூடாதென்பதாக அன் புடன் வாங்கி இருவரும் சாப்பிட்டு தட்டைச சுத்தம்

செய்து அவரிடம் கொடுத்துச் சுவாமி போய் வாருங்களென்று அன்பு பக்தியுடன் வணங்கி கூறினர்கள். அவர் பல்லை இழித்துக் கொண்டு முன்னும் பின்னும விழித்தார். இதை அறிந்து சுவாமி என்ன என்ருர்கள். நான்சொல்ல வேண்டுமா தெரியாதா என்றனர். இவருடைய கெட்ட குறிப்பை அறிந்து சுவாமி இது உங்களுக்குத்தகுமா இது தர்மந்தானு. நீங்கள் முன் பூர்வீக புண்ணிய வசத்தால் பிராமண குலத்திற் பிறந்தும் ஈச்சுரனுடைய பூசைத் தொழிலும் செய்யப பெற்றிருக்கின்றீர். அப்படி இருக்க கேவலம ஈ, எறும்பு, முதல் சர்வ சிவராசிகளும் அனுபவிக்கக் கூடிய போகத்தையா இன்பமாகக் கொண்டு இங்கு வந்தீர்? ஐயோ! உம்முடைய கெட்ட எண்ணத்தை அறியாதல்லவா, வாங்கிச் சாப்பிட்டு விட்டோம்! என்று இன்னும் பலவிதமாகக் கூறினர்கள். இதைக்கேட்டு வெட்கமும் நாணமும் உடையவராய் ஒன்றும் பேசாது போய் விட்டார்.

மறுதினம் இவர்களுடைய தாயிடம் மற்ற தாசிகளெல்லாம் வந்து உங்களால் எங்களுடைய பிழைப்பும் போய்விடும் போலிருக்கின்றது. ஆகையால் வேறு தெருவிலாவது போயிருங்கள் என்று கூறிபின்பு எல்லோரும் கலந்து பேசி ஓர் தரகர் மூலமாக அப்பட்டினத்தில் பிரபல போக்கிரித்தன முடைய போக்கிரிகளை இவர்களிடம் வரும்படி ஏற்படுத்தி இவர்கள் கதவின் உள்பூட்டையும் உடைத்து விட்டார்கள். அன்றிரவு அவ்விதமேவந்து உள்ளே சென்றவுடன் இவர்களைக் கண்டு மிகுந்த பயமுடன் ஐயா நீங்கள் எங்கே வந்தீர்கள்? என்ருர்கள். நாங்கள் சொல்ல வேண்டுமா? உங்களுக்குத் தெரியாதா? என்று கூறினவுடன், மனவருந்தி, அவர்களுக்கு வேண்டிய சமாதானங்களெல்லாம் கூறியும் கேட்காது இந்த விண்வார்த்தைகள் வேண்டாம். நாங்கள போகமாட்டோம என்ருர்கள். இவர்கள் திகிலடைந்து ஏ, ஈச்சுரா நாங்கள என் செய்வோம் நீயே காப்பாற்ற வேண்டுமென்பதாக உருகிநிற்கும் பொழுது திடீரென்று ஒன்று புலப்பட்டு ஐயா நீங்கள் எங்களை வருந்தச் செயகின்றீர்கள். உங்கள மனைவிகளில் ஒருவரை ஒரு புருடன் கூடி இருவரும் சம்போசிக்கிறார்கள-மற்றவளை ஒரு புருடன் தெரியாது வந்து வம்பு செயகின்றான். இவள் மறுத்தும் கேட்கவில்லை, ஐயோ அழுது வாடுகின்றாள். நீங்கள் சிக்கிரம் செல்லுங்களென்ருர்கள்.

இதைக் கேட்டுச் சிரித்துப் பலே கெட்டிக்காரிகள்தான் நீங்கள்! எங்கள் மனைவிகளிடம் எமனும் வரமாட்டான். பொய் சொல்லி ஏமாற்றவா பார்க்கின்றீர்கள்? அது முடியாது என்றார்கள். ஐயா ஒருவராவது சென்று உண்மையாவென்று பார்த்து வாருங்களென்றவுடன், சரி யென்று ஒருவன் போய்ப் பார்த்தபொழுது அப்படியே தன் மனைவியிடம் ஒருவன் வம்பு செய்வதைக் கண்டுபிடித்து அடித்துக்கட்டித் தன் மனைவியுடன் அவனையும் இங்கே கொண்டுவந்தான். இதை அறிந்த மற்றவனும் உணமை தானென்று வேகமுடன் ஓடி அவர்கள் இருவரையும் பிடித்து அடித்துக்கட்டி இங்கே கொண்டுவந்து அம்மா நீங்கள் சொன்னது உண்மையே. நீங்கள் கற்புடைய தெய்விகப் பெண்கள். நாங்கள் அறியாமற் செய்ததைப் பொறுத்துக்கொள்ளுங்களென்று வணங்கினார்கள்.

இதை அறிந்த அப்பெண்கள் இவர்களை நோக்கி உலகிற் தோன்றக் கூடிய எறும்பு முதல் மற்ற பிராணிகள், பட்சிகள், மிருகங்கள் முதலாக எல்லாம் ஆடையோ ஆறறிவோ இல்லாதிருந்தும் மனைவி, புருடன் என்னும் முறையில் எவ்வளவு கற்புடனும், பரஸ்பர அன்புடனும் வாழுகின்றன. முக்கியமாக ஓர் பெண் அணில் பிள்ளையை எத்தனையோ ஆண் அணில்கள் விடாது ஒருநாள் முழுதும் துரத்தித் துன்புறுத்தினும் தன் புருஷனை அணில் தவிர மற்றவைகளுக்கு உடன்படுவதில்லை. மற்றும் ஓர் ஆண் சிங்கமானது தன் மனைவி தவிர மற்ற பெண் சிங்கங்களை சேருவதில்லை. இதேமாதிரியாக மற்ற பிராணிகளும் இருக் கின்றன. மேலும் அந்தந்தப் பருவகாலமன்றிக் கூடுவது மில்லை. இப்படியிருக்க ஆறறிவோடும் கூடிய மாந்தர்களாக இருந்தும் தன் மனைவியை விட்டுப் பிறர் மனைவியை இச்சை யுற்று அலைவதும் பெண்கள் தன் புருஷனை விட்டுப் பிறர் புருஷர்களை இச்சித்து அலைவதும் பொருத்தமாகுமா. மேலும் நூதனமான வேறு இன்பம் என்ன அடைவார்கள். எல்லாம் ஒன்றுதானே. வஸ்திரம் ஏன் அணியவேண்டும். மானத்திற்கல்லவா அணிகின்றார்கள். அணிந்தும் மானம் கெட்டு அலைவது மனிதத் தன்மையாகுமா. அற்பமான எறும்பு முதல் சர்வ உயிர்களும் விரும்புகின்ற இந்த சிற்றின்பத்தை மாந்தர்களும் விரும்பி இல்லறம் கொள்வதே கேவலமாகும். அப்படியிருக்க அதிலும் விபசாரம் செய்வ

தென்றால் இது என்ன அவிதம் இவர்கள் மனிதராகுமா? அன்பு, பத்தி, ஒழுக்கம், கற்பு, ஜீவகாருண்யம், தருமம் முதலிய நற்குணங்களுடன் வாழப்பெறுவது அல்லவா மனிதர்களுக்கும் இல்லறத்திற்கும் பொருத்தமாகும் என்பதாக இன்னும் பலவிதமாக எடுத்துக் கூறி இனிமேல் நீங்கள் இவ்விதமான முறையில் இருக்கவேண்டுமென்று கூறி அனுப்பினர்கள். அது முதல் இவர்களிடம் மிகுந்த அன்பு பத்தியுடன் வேண்டிய அரிசி பருப்பு முதலிய சாமான்களைக் கொடுத்து வந்தார்கள். பின்பு ஈச்சுரன் மன்மதனைப் போன்ற ஒரு அரசகுமாரன் வடிவமுடன் இரண்டு முத்து மாலைகளைக் கையில் வைத்துக்கொண்டு தாசிகளின் வீதியில் வந்தார். இவரைக் கண்டு இவருடைய அழகிற்கும் முத்துமாலைக்கும் ஆசையுற்று என் வீட்டுக்கு வருவார். உன் வீட்டுக்கு வருவாரென்று ஏங்கி நின்றார்கள். அப்போது வந்த பேர்வழியான இவர் அந்தப் பெண்களுடைய வீட்டில் நுழைந்து தாய்த் தாசியிடம் முத்து மாலையைக் கொடுத்தார். இதைக் கண்டவுடன் மிகுந்த ஆசையுடன் வாங்கி அவரையும அழைத்துக்கொண்டு அம்மா இவருடைய அழகைப் பாருங்கள். இந்த முத்து மாலையைப் பாருங்கள். இவருக்கு மட்டிலும் உடன்படுங்கள். போதும் என்று பலவிதம் கெஞ்சினாள். அவர்கள் இவரும் இம்மாலையும எங்களுக்கு விருப்பமில்லை என்று மறுத்துவிட்டார்கள். இவள் வயிரெரிந்தாள். அப்பொழுது அவர் புன்முறுவலாகச் சிரித்துக்கொண்டு அம மாலையை அவளிடமே கொடுத்து அவர்களைச் சமாதானப்படுத்தி வைக்கும்படியாகவும் மீண்டும் தாம் வருவதாகவும் கூறிச் சென்றனர்.

பின்பு சில நாட்சென்று ஒரு வித்வான் இங்கே வந்தனர். அவருக்கும் பல வாக்கியங்களைக் கூறியும் இகழ்ந்தும் மறுத்தார்கள். இதைக் கேட்டு வெட்கமும் நாணமும் கோபமுடையவராய்ச் சென்று இவர்களைப்பற்றி ஒரு அழகான கவி வரைந்து இதை அப்பட்டினத்திலுள்ள விக்கிரமனென்னும் அரசனுடைய சபையிற் படித்து வியாக்யானம் செய்தனர். இதைக் கேட்ட அரசன் இத்தகைய பெண்களும் இருக்கின்றார்களா? என்றனன். ஆமென்று இவர்களை எடுத்துக் கூறினர். அரசன் கேட்டு அளவு மிகுந்த இச்சையுடையவனாய் அன்றிரவில் அவர்

களுக்கு வேண்டியதெல்லாம் கொடுப்பதாகக் கூறி அழைத்து வரும்படி ஆள் அனுப்பினன். இதைக் கேட்ட தாசி சந்தோஷமும் பதட்டமுமாகச் சென்று இதற்கு அவசியம் போகவேண்டும. இல்லாவிடில் பெரும் அபாயம் ஏற்படும் என்று வேண்டினள். அவர்கள் சேவகரை நோக்கி ஐயா நாங்கள் இரவில் வரவேண்டிய அவசரம் ஒன்றுமில்லை. ஆகையால் காலையில் நாங்கள் வருகின்றோ மென்று கூறி மறுத்துவிட்டார்கள்.

இதனைக் கேட்ட அரசன் மிகுந்த கோபமுற்று அடே அந்தப் பெண்களுக்கு எவ்வளவு தைரியம பார்த்தீர்களா. காலையில் அவர்களைக் கட்டி அடித்து இங்கே கொண்டு வாருங்கள் என்று கூறினன. மறுதினம காலையில் சேவகர்கள் அங்கே சென்று இதைக் கூறினவுடன் கேட்டு மனம நடுங்கினர்கள. இதனை அறிந்த மற்ற தாசிகளுக்கு ஒரே கொண்டாட்டமாக இருந்தது. இதற்குள் முத்துமாலையை அளித்த அரசகுமாரன் வந்தனர். இவ்விஷயத்தைக் கேட்டு இவர்கள் எனக்குரிய பெண்கள். ஆகவே கொலை செய்தார்களா, திருடினர்களா? ஏன் இவர்களைக் கட்டி அடித்துக் கொண்டு வருமபடி அரசன் கூறினன். என்பதாகப் பெரும் தர்க்கம் வெகு நேரம் நடந்தது. பெரும் கூட்டமாயிற்று. பின்பு கட்டாமலும் அடிக்காமலும் அரசனிடம் போகும் படியாக முடிவு செய்து எல்லோர்களும் அரசனிடம் சென்று இவ்விஷயங்களை சேவகர் கூறினர்கள். இதைக்கேட்டுக் கோபமுடன் அரசகுமாரனை நோக்கி அடே! இந்தப் பெண்கள் என்னுடைய பட்டிணத்தில் இருப்பதால் எனக்குச் சொந்தமாவார்கள். நான் அவர்களை எது வேண்டுமானாலும் செய்வேன். நீ இதைக்கேட்க அவசியமில்லை யென்றன.

ஓ அரசனே! பொதுமகளென்றால் எல்லோருக்கும் சொந்தம். பொருள் எவர் முன்னதாகக் கொடுத்து விரும்பினர்களோ அவர்களுக்கே முன் சொந்தமாகும. ஆகவே நான் முன்னதாகவே முத்துமாலையைக கொடுத்திருக்கின்றேன். எனக்கே இப்போது சொந்தமாகும் என்றனர். இதைக்கேட்ட அரசன் இந்த விபகாரம் வேண்டியதில்லை. மூவரையும் பிடித்துக்கட்டு என்று கூறினன். உடனே சேவகர் வந்தார்கள. உடனே இருவரையும இரு காங்களால் அடித்து வீழ்த்தினர். அரசனுடைய சிம்மாசனத்தை ஒரு உதை கொடுத்தார். அது நொருங்கி அரசன் கீழே

விழுந்தான். உடனே தன்னுடைய விஸ்வரூபத்துடன் நின்றார். அக்கினிச்சுவாலையையுடைய வடிவமும் அனேகம் ஆயுதங்கள் கொண்ட கரங்களும் அகோரமான முகமும் விளங்கத் தோன்றிற்று.

இதைக்கண்ட அரசன் முதல் எல்லோர்களும் பயந்து நடுங்கி மறைந்து நின்றார்கள். பின்பு அவ்வடிவம் மறைந்து விட்டது. அதன் பிறகு அங்கு வந்திருந்த பெரியோர்க ளெல்லாம் இவர்களுடைய பெருமைகளை எடுத்துக் கூறி னர்கள். இவைகளையெல்லாம் கேட்ட அரசன் மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷமுமுற்றவனாய் எழுந்து அப்பெண் களை வணங்கிப் போற்றி நீங்கள் சாதாரண மாதர்களல்ல. தெய்விகத் தாய்மார்களென்பதாகக் கூறி இவர்களுக்கு ஆலயத்திற்குப் பக்கத்தில் தனியாக ஒரு விடுதி அமைத்து இவர்களுக்கு வேண்டிய உணவு உடைகளையும் பணிவிடை பெண்களையும் ஏற்படுத்தி அங்கே வசிக்கும்படி செய்தான். அது முதல் ஈச்சுரனிடத்தில் மிகுந்த அன்பு பக்தியும் ஒழுக் கம் தருமமு முடையவனாய் இருந்ததுடன் தாசிகளை யெல்லாம் வருவித்து வயது சென்ற தாசிகளுக்கு உணவு உடைக்கு ஏற்பாடு செய்து மற்றவர்களை யெல்லாம் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தில் ஒழுக்கமாக வாழும்படி ஏற்படுத்தினன்.

அந்தப்பெண்களிருவரும் வழக்கம்போல் பிரதினமும் ஈச்சுரனைப் பூசித்துக் கொண்டும் மற்ற பெண்களுக்கும் ஆடவர்களுக்கும் அன்பு, பக்தி, ஞானம், ஒழுக்கம், தருமம், கற்பு முதலிய சத்விஷயங்களைப் போதித்துக்கொண்டும் ஆனந்தமாக இருந்து வந்தார்கள். அரசன் முதல் எல்லோரும் பயபக்தியுடன் தெய்விகத்தாயென்பதாகப் பாவித்து வந்தார்கள்.

இப்படியிருக்க அங்கே சூதமகா முனிவர் தன் சிட ர்களுடன் யாத்திரையாக வந்து சேர்ந்து ஈச்சுரனை தெரிசித் துக் கொண்டு ஆலயத்தில் ஒரு புறம் அமர்ந்திருந்தனர். இதை அறிந்த இப் பெண்களும் சென்று பயபக்தியுடன் பிரதக்ஷிணமாக வந்து வணங்கி நின்ற பொழுது இவர்களைப் பற்றி விசாரித்து மிகுந்த சந்தோஷமுடன் பக்கத்தில் அமரச் செய்தார். இதற்குள் அரசனும் கேள்விப்பட்டு மந்திரி முதலானவர்களுடன் வந்து அன்பு, பக்தியுடனும் சோடச உபசாரங்களுடனும் வணங்கி நின்றான். இவர்

சந்தோஷமுற்று அவர்களையும் அமரச்செய்து பின்பு எல்லோர்களுக்கும் ஈச்சுரனுடைய பெருமைகளையும் சத்விஷயங்களையும் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் அரச குமாரனும் மந்திரி குமாரனும் யாத்திரை செய்து கொண்டு இவ்விடத்தை அடைந்து சுவாமி தெரிசனம் செய்து கொண்டு பின்பு சூதமகா முனிவர் முதலானவர்களைக் கண்டு அளவிறந்த ஆனந்தமுடன் பிரதக்ஷணமாக வந்து வணங்கி நின்றார்கள். இவர்களுடைய வடிவையும் அன்பு பத்தியையும் அரசன் முதலிய எல்லோரும் கண்டு வியப்பும் சந்தோஷமுடையவர்களாய் இவர்களைப் பார்த்த வண்ணம் இருந்தார்கள். அப்பொழுது சூதமுனிவரும் மிகுந்த களிப்புடன் இவர்களைச சிறிது நேரம் நோக்கிப்பின்பு இவர்களுடைய சரிதங்களை விசாரித்து மிகுந்த அன்பும் ஆனந்தமும் கொண்டு பக்கத்தில் அமரச் செய்தார். அதன் பிறகு எல்லோர்களும் அரசனால் அளிக்கப்பட்ட அறுசுவையோடும் கூடிய பந்தி போசனமுண்டு பின்பு மாலையிலும் எல்லோருமாக சுவாமி தெரிசனம் அன்புடன் செய்துகொண்டு ஆகார முண்டு அவரவரிடத்திற்குச் சென்று கண்துயின்றார்கள்.

இவர்கள் எல்லோருடைய சொர்ப்பனத்திலும் பரமேச்சுரன் தோன்றி இந்த ஆத்மானந்தன், அறிவானந்தன் என்னும் இருவரும் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் என்றும் ஆனந்தவல்லி அமிர்தவல்லி என்னும் இருவரும் அவர்களின மனைவியரென்றும் உலகில் ஆடவர்களுக்கு அன்பு, பத்திஞானம், ஒழுக்கம், தருமம், ராசநீதி இவைகளை விளங்கச் செய்ய இவர்களும் பெண்களுக்கு அன்பு, பத்தி ஒழுக்கம், கற்பு முதலியவைகள் விளங்கச் செய்ய இப்பெண்களும் விரும்பி என்னைத் துதித்தபடியால் இவர்கள் இவ்விதம் உற்பவித்தார்கள். ஆகவே இவர்களுக்கு எல்லோருமாக இருந்து சந்தோஷமுடன திருமணம் செய்யக்கடவீர்கள் என்று கூறி மறைந்தனர்.

மறுநாள் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு எல்லோர்களும் வந்து ஓரிடத்தில் அமர்ந்தார்கள். சூத முனிவரும் அரசன் மந்திரி முதலானவர்களும் ஆனந்தமாகவும் இவர்கள் நால்வரும் இதென்ன விபரீதயாக இருக்கின்றது. நாம் உலக வாழ்வை வெறுத்திருந்தும் ஈச்சுரன் இப்படிக்

கூறிவிட்டார் என்பதாகக் கவலையுடனும் இருந்தார்கள். பின்பு சூதமுனிவர் தாம் கண்ட கனவையும் கூறி இவர்களுக்கும் பல சமாதானங்களைக் கூறினர். அதற்குள் ஈச்சுரன் அசரீரிவாக்காக ஓ குழந்தைகாள்! அப்படியே திருமணம செய்து கொள்ளுங்கள. யாதொரு பந்தமும் துன்பமுற்றும் இன்புடன் நம் பதவியை அடையப் பெறுவீர்களெனறு கூறினர். இதைக்கேட்ட எல்லோரும் அளவிறந்த ஆனந்தமுற்று முடிவு செய்து இவர்களுடைய தாய் தந்தையரை அழைத்து வரும்படியாக அரசன் தன் மந்திரியை அனுப்பினன. அங்கே அவர்கள தங்கள் பிள்ளைகள் இனனும் வரக்காணேமேயெனறு மனம்வருந்தி இருக்கும்பொழுது மந்திரி போய்ச் சேர்ந்தான. இவைகளைக் கேட்டவுடன் அளவில்லாத ஆனந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய் சேனு சைன்யங்களுடன் புறப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்து சூதமகா முனிவரையும் வணங்கிப் போற்றிப் பின்பு எல்லோர்களுமிருந்து முறைப்படி திருமணம் செய்து பின்பு தான தருமங்களும் பந்திபோசனங்களும் செய்து முடித்தனர்.

அதன் பிறகு சூதமகா முனிவர் முதலானவர்களையும் அந்த அரசன் மந்திரி முதலானவர்களையும் அழைத்துக் கொண்டு தங்களுடைய தேசத்திற்கு வந்து முப்பத்திரெண்டு தான தருமங்களும பிரதிதினமும ஈச்சுர தோத்திரங்களும பூசைகளும உபந்நியாசங்களும நடைபெறச் செய்து பின்பு இவர்களை அரசன் மந்திரி என்னும் பட்டம் சூட்டிச் சூத முனிவர் முதலானவர்களுக்குச் சோடச உபசாரங்களும் செய்து பின்பு அவர்களை யெல்லாம் சந்தோஷகரமாக அனுப்பிவிட்டு அதன் பின்பு இவர்கள் அத்தேசத்திற்கு தந்தையரைப்போன்றும் தாய்களைப் போன்றும் குருவைப் போன்றும் அரசனைப்போன்றும் அரசபோகங்களையும் பற்றுகளையும் அற்றுச்சாதாரண குடும்பஸ்தர்களைப் போன்றும் துறவிகளைப் போன்றும் அரசாட்சி செய்து கொண்டு மறறும் தன் தேச முதல் மற்ற தேசங்களிலும் அங்கங்கே நாடு நகரங்கள் தோறும் மனிவிகளுடன் சென்று பெண்களுக்கும் ஆண்களுக்கும் அரசர்களுக்கும சத்விஷயங்களையும் அரச நீதிகளையும் போதித்துச் சிரஞ்சீவித்திருக்கொண்டும் ஆனந்தமாக வாழப்பெற்று பின்பு சிவலோக பதவியை அடையப்பெற்றார்கள்.

சுபம்

திருச்சிற்றம்பலம்

(2-வது)

மதிமுகன் சரிதம்

முன்காலத்தில் உதயபுரியென்னும் பட்டினத்தில் சூரசேனன் என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் மிகுந்த பலமும் ஆடம்பரமும் பெருமையும் பிடிவாதமும் மகாலோபமும் சிறிதும் கருணையுமில்லாதவனாய் இருந்தனன் தருமம் என்பதைக் கனவிலும் அறியான். ஏரி, குளம், கால்வாய் முதலிய மராமத்துக்களைக்கூட குடிசனங்களையே வெட்டிக்கொள்ளும்படி வருத்துவான் தன்னுடைய உத்தியோகஸ்தர் முதல் வேலைக்காரர்களுக்கெல்லாம் சம்பளங்கள் மிகக்குறைவாகத்தான் கொடுப்பான். குடிகளிடத்தில் பகுதிகளையும் வரி வசூல்களையும் தேதிப்பிரகாரம் சிறிதும் விடாது வற்புறுத்தியும் தண்டித்தும வாங்கிவிடுவான். இவ்விதமாக நாளுக்கு நாள் பணத்தைச் சேர்த்துப் பெருமைக்காகப் பொற்களஞ்சியங்களும் வெள்ளிக் களஞ்சியங்களும் நெல் முதலிய தாலியக்களஞ்சியங்களும் அரண்மனைக்குள் வரிசையாக ஏற்படுத்தினன். இவ்விதமாக எந்த அரசர்களுக்கும் இல்லாதபடியால் எல்லா அரசர்களும் கண்டு இவனைப் புகழ்ந்து பெருமை பாராட்டினார்கள். இவன் மகிழ்வுற்று இன்னும் பல ஆடம்பரமான காரியங்களும் செய்வான். இப்படி இருக்க அத்தேசத்தில் குடிகளெல்லாம் நாளுக்கு நாள் பலவித கஷ்ட நஷ்டங்களாலும் சரிவர மழையில்லாத பஞ்சகாலக் கொடுமையாலும் மிகுந்த தரித்திரப்பிணியும் துக்கப்பிணியும் மூடப்பெற்று சில பேர் வீடுகள் இல்லாமலும் சிலபேர் ஏர் மாடுகள் இல்லாமலும் உணவு உடைகள் இல்லாமலும் வருந்தி வாடியும் இந்தக் களஞ்சியங்களைக் கண்டு யேங்கியும் ஐயோ! இந்தச் சண்டாள அரசன் இப்படிச் செய்கின்றானே இவன் என்று ஒழிவாளென்பதாகத் தூசித்துக் கொண்டும அவனுக்குப் பயந்து கொண்டும் வாழ்ந்து வந்தார்கள் இப்படி இருக்க அவ்வரசனுக்கு ஆறு மந்திரிகள் உண்டு. அவர்களுள் முதல் மந்திரி, மதிநயன் என்பவனொருவனிருந்தான். அவன் மிகுந்த அன்பு, பத்தி, ஒழுக்கம், கருணை, தருமம், நீதி முதலிய நற்குணங்களும் சாதுக்களிடத்தில் மிகுந்த அன்பு பக்தியும் உடையவனாகவும் இருந்தனன். இவன் சதாத்திருநீற்றை அணிந்திருப்பதாலும் சாதுக்களுடன்

கூடியிருப்பதாலும் உலகவாழ்வுகளே நினைத்து இகழ்வதாலும் எல்லோரும் இவனைச்சாமியார் மந்திரி என்றே கூப்பிடுவார்கள். இவனுக்கு அரசன் செய்வதும் மற்ற மந்திரிகள் செய்வதும் ஒன்றுமே பிடிக்காது எல்லா விஷயத்திலும் மறுத்தே பேசுவான் தர்க்கம் செய்வான் களஞ்சியங்களைப் பார்த்து வயிரெரிவான் சனங்கள் படும் துன்பங்களைக் கண்டு மனம் வருந்துவான் அழுவான் கடவுளிடம் முறையிடுவான். இவனுடைய வார்த்தையை அரசனும் மற்ற மந்திரிகளும் கேட்கமாட்டார்கள். மிகுந்த கோபமுடன் சிறுவார்கள் பாவம் என்செய்வான் இப்படி இருக்க ஒரு நாள் உத்தமமான சாது ஒருவர் இம் மந்திரியினுடைய வீட்டுக்கு வந்தார். உடனே எழுந்து பயபக்தியுடன் வணங்கிப் பின்பு அவருக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்து இருவரும் உட்கார்ந்து சம்பாஷிக்கும் பொழுது மந்திரியை நோக்கி இத்தேசத்தில் ஜனங்கள் படும் துன்பங்களைப் பற்றியும் அரசனுடைய நிலமையைப் பற்றியும் விசாரித்தார். இதைக் கேட்டு எல்லா விஷயங்களையும் எடுத்துக் கூறி இந்தக் களஞ்சியங்கள் இருப்பதையும் எடுத்துக் கூறினான். இவைகளையெல்லாம் செவியுற்ற சாதுவானவர் மிகுந்த பரிதாபமும் துக்கமுமுடையவராய் ஐயோ! இந்தச் சண்டாள அரசனும் மந்திரிகளும் இப்படியா செய்கின்றார்கள். இதென்ன அநீதம் இந்த பணத்தைச் சேர்த்துக் காக்கும் பேய்களுக்குச் சிறிதும் கருணையில்லையா. நெஞ்சமானது வன்கல்லா என்பதாக இன்னும் பலவிதம் தூசித்துப் பின்பு மாலையில் நானும் உன்னுடன் அரசனிடம் வருகின்றேன். இனிமேலாகிலும் அறிவுக்கும் மனிதத்தன்மைக்கு மேற்ற முறையில் இருக்கும்படியாகவும் தானியக் களஞ்சியங்களையாவது திறந்து அவன் தேசத்தில் பசியால் வாடுபவர்களுக்குக் கடனுகவாவது கொடுக்கும்படியாகவும் வேண்டிக் கூறுகின்றேன்.

அதற்கு மேல் ஆனது ஆகட்டு மென்று கூறிமாலையில் அவ்விதமே இருவரும் அரசனிடம் சென்றார்கள். சிறிது நேரம் சென்று சாதுவானவர் அரசனுக்கும் மந்திரிகளுக்கும் பல சத்விடயங்களையும் ராசநீதிகளையும் ஜீவ காருண்ய விடயங்களையும் எடுத்துக் கூறினார். இவைகளைக் கேட்ட அரசனும் மந்திரிகளும் மிகுந்த கோபமுற்று ஓ. சந்நியாசியே பேயந்து கொண்டு எல்லாம் விட்டு வீடுகள் தோறும் பிச்சை

வாங்கி வயிறு வளர்க்கும் உமக்கு அரசாங்க விடயம் என்ன தெரியும். இப்படி இல்லாவிட்டால் நிர்வகிக்க முடியாது. நீரெங்களுக்குப் புத்தி புகட்ட வேண்டியதில்லை. எழுந்து போகலாமென்று கடிந்து கூறினார்கள். பின்பு இந்த மந்திரியை நோக்கி நீ இனிமேல் எந்தச்சந்நியாசிகளையும் இங்கே கூட்டிவரக்கூடாது. மற்றும் நீ ராசவிரோதியாயிருக்கின்றாய். எந்த யோசனையும் எங்களுக்குக் கூறக்கூடாது. வாயை மூடிக்கொண்டு இருந்து போகவேண்டும். இல்லையேல் கடும் தண்டனை ஏற்படுமென்று கூறினார்கள். சரி அப்படியே செய்கின்றேனென்று கூறிவிட்டு இருவரும் எழுந்து வந்தார்கள். அந்தச் சாதுவானவர் நான் என்னுடைய சங்கல்பத்தின்படி நடத்தாமல் இப்பட்டினத்தை விட்டுப் போவதில்லை யென்பதாகக் கூறிச் சிறிது தூரத்தில் ஒரு குளத்தின் அருகிலுள்ள மண்டபத்தில் தங்கி ஈச்சுரனுடையதியான நிலையில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு வேண்டிய உணவு உடைகளைச் சாமியார் மந்திரியே அளித்து வந்தான். இப்படி இருக்க இவ்வரசனுக்கு ஒரே ஆண்குழந்தை உண்டு. அவனுக்கு **மதிமுகன்** என நாமம் வைத்து அதை மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தான். அக்குழந்தையும் கல்வி, அறிவு, ஒழுக்கமும், அழகும் வாய்ந்ததாய் வளர்ந்து வந்தன. அதற்கு வயதும் ஒன்பது ஆயிற்று. ஒரு நாள் அப்பட்டினத்தைச் சுற்றிப்பார்க்க விரும்பி அரசனிடம் சென்று இதைக் கூறினன். இதைக்கேட்டு மந்திரிகள் எவர்களுமில்லை சுற்றுப் பிரயாணம் போயிருக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் வந்தவுடன் அவர்களுடன் போய்ப் பார்க்கலாமென்று கூறி அனுப்பினன். இந்தச் சாமியார் மந்திரியை எங்கும் அனுப்புவதில்லை. இம்மந்திரி அரண்மனையில் இருப்பதைக்கண்ட அரசகுமாரன் இவ்விடயத்தைக் கூறி தன்னுடன் வரும்படி அழைத்தான். எவ்வளவோ மறுத்தும் கேட்கவில்லை. பின்பு உடன்பட்டு இருவரும் முதலில் அரண்மனையைச் சுற்றிவரும்போது களஞ்சியங்களைக் கண்டு இது என்ன என்று கேட்டான். அவைகள் ஒவ்வொன்றையும் விபரமாகக் கூறினன். இதைகேட்டு இவ்வளவும் ஏது, யார் கொடுத்தது என்றான். இவையெல்லாம் நம் தேசக்குடி சனங்கள் கொடுத்தது என்றான். அப்படியானால் அவர்கள் ஒவ்வொருவர்களுக்கும் இவ்விதமிருக்கக் கூடுமே என்றான். ஐயோ பாவம் அவர்களெல்லாம் பட்டினியால் வருந்தி வாடி அழுகின்றார்கள் என்றான்.

அப்படியா ஐயோ இதென்ன அநியாயம். இதைத்திரந்து ஏன் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. அவர்கள் கேட்க வில்லையா என்றான். ஐயோ அவர்கள் எல்லாம் வந்து அழுது பல தடவை கேட்டார்கள். அரசன் கோபித்து மறுத்து விட்டுப் பெருமைக்காக வைத்திருக்கின்றானென்றான். ஐயோ சனங்கள் சாகும் பொழுது பெருமைக்காகவா வைத்திருக் கின்றார், இது நன்றாயிருக்கின்றதென்று கூறி மனக்கிலே சமுடன் பின்பு வெளியில் வந்து பட்டினத்திலுள்ள சனங் களின் பரிதாப நிலைமைகளையும் மற்றும்பல அதிசயங்களையும் காட்டிக் கொண்டே சாதுவானவர் தங்கி இருக்கும் மண்ட பத்திற்குக் கூட்டி வந்து இருவரும் அன்பு பக்தியுடன் வணங்கி நின்றார்கள். அப்பொழுது சாதுவானவர் மிகுந்த சந்தோசமுடன் குழந்தையைத் தழுவி குழந்தாய் நீ அரசனு டைய குமாரனு என்றார். ஆம்மென்றான்.

மந்திரியை நோக்கி நம் கோரிக்கையைப் பூர்த்தி செய்வ தற்கே ஈச்சுரன் இக்குழந்தையை அளித்திருக்கின்றார். ஆகையால் இதை அடிக்கடிக் கவனித்துக் கொள் என்றனர் மந்திரியும் சந்தோஷ முற்றான். பின்பு இருவரும் விடைபெற் றுக் கொண்டு வரும்பொழுது அவர் யார் ஏன் அங்கே தனி மையாக இருக்கின்றார் என்று வினவினான். அதற்கு இந்த உலகமும் இவ்வுலக வாழ்வும் சுத்தப் பொய்மையும் துன்ப மும் எனக்கொண்டு எல்லாம் துறந்து ஈச்சுரனும் இன்ப சுக முத்தியுமே உண்மையும் இன்ப மெனக் கொண்டு அவ்விச்சு ரனையே தியானித்து மூவாசையற்று ஞான நிலையைப்பெற்று முத்தியை அடையும் பெரியோர்கள் என்றும் கூறிப் பின்பு இவருக்கும அரசனுக்கும் நடந்த விடயத்தையும் கூறினான். இதைக் கேட்டு சந்தோஷமுற்று அப்படியா நாம் இனம் அவரிடம்.போய் வரலாமென்று கூறினான். சரி அப்படியே போய் வரலாமென்று பேசிக்கொண்டே அரண்மனையிற் கொண்டு போய்ச சேர்த்து விட்டு மந்திரியானவன் வீட்டுக் குச்சென்றான். ராசகுமாரன் அரண்மனைக்குட் சென்று அன்றிரவில் இதே சிந்தனையிலிருந்து மறுநாட்காலையில் தந்தையை வரும்படி அழைத்தான. அடே எங்கே கூப்பிடுகிறாயென்று அவன் பின்னல் வந்தனன். களஞ்சியங்களின் முன் வந்து நின்று அப்பா எல்லா சனங் களும பசிப் பிணியால் வருந்தி இறக்கின்றார்களே அபபடி யிருக்க இவைகளைப் பெருமைக்காக வைத்துக்கொண்

டிருப்பது ஞாயமாகுமா ஐயோ இது பாவமில்லையா இவை களைத்திறந்து எல்லோர்களுக்கும் கொடுங்கள் என்றனன். இதைக் கேட்டவுடன் திகிலடைந்து இந்த வயதில் இவ்வளவு தூரம் சொல்வதற்கு எப்படித் தெரியும். இதென்ன விந்தையாக இருக்கின்றது. இதை யாரோ போதித் திருக்கவேண்டு மென உத்தேசித்து அவனுக்குச் சமாதானமாக அடே அப்படியே செய்யலாம். வாவென்று கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். பின்பு சேவகனை அழைத்து என்குமாரனுடன் நேற்றையதினம் யாராவது சேர்ந்து சம்பாஷித்தது தெரியுமா என்றான். வேறு எவர் களும் சேரவில்லை. தங்கள் குழந்தையும் சாமியார் மந்திரியுந் தான் அரண்மனையும் பட்டினத்தையும் சுற்றிப் பார்த்து வந்தார்கள் என்றான். இதைக் கேட்டவுடன் மிகுந்த கோபமுற்றுச் சரி சரி அவன் செய்த வேலைதான் உடனே அவனைக் கூட்டி வாருங்கள் என்றனன். அப்படியே கூட்டி வந்தார்கள். அடே மடையா என் குமாரனை நீயேன் கூட்டிச் சென்றாய் என்று கடுரமாகக் கூறினன். மகா ராசாவே! தங்கள் குழந்தைதான் நீங்கள் தெரிவித்ததாகக் கூறி என்னைப் பல தடவை வற்புறுத்தமாகப் பிடித்துக் கூப்பிட்டது. நான் மறுத்தும கேட்கவில்லை. பின்பு தொந்தரவுக்காகக் கூடப்போய் வந்தேன் என்றனன். அடே என்னைக் கேட்காமல் ஏன் கூட்டிச் சென்றாய் என்று கூறி செயிலில் அடைத்துவிடும்படி உத்தரவிட்டான். அப்படியே அடைத்துவிட்டார்கள். அதன் பிறகு இதனை அறிந்த அரசகுமாரன் மிகுந்த துக்கமுடன் ஓடிவந்து சேவகரை அழைத்து மந்திரியைத் திரந்துவிடும்படியாகவும் நான்தான் அவரை வற்புறுத்தி அழைத்துச் சென்றேன். ஆகையால் என்பேரில்தான் குற்றமன்றி அவர் பேரில் குற்றமன்று என்னைப் பூட்டிவிடுங்களென்று கூறினன். இதைக் கேட்ட சேவகர் அரசனிடம் தெரிவித்தார்கள். அரசனும் மற்ற மந்திரிகளும் வந்து சமாதானமாகவும் கடுரமாகவும் பல தடவை கூறியும் மறுத்துவிட்டு நான் உணவு கொள்ளவே மாட்டேன். இறப்பது நிச்சயம் என்று கூறினன். இதைக் கேட்டு உடனே மந்திரியை விடுவித்து இனிமேல் என் குமாரனுக்கும் உனக்கும் எவ்விதப் பேச்சு வார்த்தைகளோ சினேகமோ இருக்கக்கூடாது. ஜாக்கிரதை யென்று கூறி அனுப்பினன். அதன் பிறகு மந்திரியானவன் இவ் விஷயங் களைச் சாதுவிடத்திற் கூறினன். இதைக் கேட்ட அச் சாது

வானவர் அப்பா ஒருவன் உலகிற்கு உபகாரம்செய்ய விரும்பி னால் பலவித கஷ்டங்களை அனுபவித்துத்தான் செய்ய முடியும். சுகமாக இருந்துகொண்டே செய்ய முடியாது. ஆகவே நீ இதற்காக வருந்த வேண்டாம். முன்போலவே ஒன்றும் பேசாமலும் பொறுமையாகவும் இருந்து வருவா யாகயென்பதாகக் கூறி அனுப்பினர். பின்பு அரசகுமாரனும் அது முதல் மந்திரியிடத்திலும் சாதுவிடத்திலும் மிகுந்த அன்பும் அபிமானமும் கொண்டான். ஆனால் சந்திக்க முடிவதில்லை. அரசனில்லாத சில சமயம் எவர்களுக்கும் தெரியாது. சிறிது நேரம் சந்தோஷமாகப் பேசுவார்கள். அச்சாதுவையும் விசாரிப்பான். இப்படி இருக்க நாளுக்கு நாள் சத்விடயங்களிலேயே சதா மனம் சிந்திக்கப்பெற்று அறிவின் விளக்கமும் மனத்தெளிவும் ஏற்பட்டு மற்றவை யெல்லாம் அனித்தியமாகவும் வெறுப்பாகவும் தோன்றின. உடனே ஆடை ஆபரணங்களை யெல்லாம் நீத்தான். சதா ஏகாந்தநிலையை அடைந்து ஈச்சுர தியானத்திலேயே இருக்க ஆரம்பித்தனன். அப்பொழுது அவனுக்கு வயது பதினெரு யிற்று. அரசன் இவனுக்குக் கல்யாணம் செய்து பட்டமும் சூட்டுவதற்குத்தகுந்த ஏற்பாடுகளும், பெண்ணும் பார்த்து முடிவு செய்திருந்தனன். இவ்விஷயத்தைக் கேட்டவுடன் மனம் பதறி மற்ற மந்திரிகளுடன் வந்து அடா குழந்தாய் நான் உனக்குத் திருமணம் செய்து பட்டமும் சூட்ட எத்த னித்திருக்கின்றேன், அதைப்பெற்று ராஜபோகத்தில் ஆனந்தமாக வாழ்வதை விடுத்து பிச்சை வாங்கி உண்டு அலையும் சந்நியாசிகள் மாதிரியாக இப்படி இருப்பது பொருத்தமாகுமா என்று இன்னும் பலவிதம் கூறினன்.

இதைக் கேட்ட அரசகுமாரன் எனக்கு இவ்வுலக போகத்திற் சிறிதுகூட மனம் விரும்பவில்லை. எல்லாம் வெறுப்பாகவே புலப்படுகின்றன. நீங்கள் விஷயத் தொந்தரவு செய்யவேண்டாமென மறுத்தனன். பின்பு பிரதிதினமும் பல அரசர்களையும் பெரியோர்களையும் கூட்டிவந்து சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. அரசன் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தான். அழுதான் வயிரெரிந்தான். இதனை அறிந்த மந்திரிகளும் மனவருந்திப் பின்பு அரசனை நோக்கிச் சாமியார் மந்திரியின் மூலமாகச் சமாதானப்படுத் தினால் ஒரு சமயம் நடைபெற்றக்கூடும் என்றார்கள். சரி அப்படியே செய்யலாமென்று அம்மந்திரியை அழைத்து

இவ்விடயத்தைக்கூறினர்கள். சரி அப்படியே கூடுமானல் செய்கின்றேன். ஆனல் என்னுடன் கூட்டிச்சென்று பட்டினத்தில் பலவிடயங்களைச் சுற்றிக் காண்பித்து உற்சாகப் படுத்த வேண்டு மென்றான். அப்படியே செய்யென்றார்கள். உடனே சென்று அரசகுமாரனையும் அழைத்துக்கொண்டு இருவரும் எல்லாம் சுற்றிப் பார்த்துப் பின்பு அந்தச்சாது வினிடத்தே சேர்ந்து மிகுந்த அன்பு பக்தியுடன் வணங்கி நின்றார்கள். அவர் மிகுந்த சந்தோஷமுடன் அரசகுமாரனைத் தழுவி பக்கத்தில் அமரும்படி செய்தனர். அதன் பிறகு மந்திரி இந்த விடங்களை எடுத்துக் கூறினன். அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு அவனை வினவினர். சுவாமி இது உண்மைதான். எனக்குச் சிறிதும் உலக வாழ்வில் இச்சை உண்டாகவில்லை. தங்களைப் போன்று ஆனந்தமாகவும் ஏகாந்தமாகவும் இருக்கவே விரும்புகின்றேன் என்றனன். அப்பா குழந்தாய் நீசொல்வது உண்மையே ஆனல் உலகில் மானிடர்களாகப் பிறப்பது அரிது. அதிலும் அரசர்களாகப் பிறப்பது மிகவும் அரிது. அதிலும் கல்வி, அறிவு ஒழுக்கம், அன்பு பக்தி, ஞானம், தருமம், நீதி இவைகளுடன் உன்னைப்போன்று பிறப்பது அரிதினும் அரிது. ஏனெனின் இப்பொழுது உன்னுடைய தந்தை ஒருவராலேயே இத்தேசம் பூராவும் பாழடைந்து துன்பத்தால் வாடுகின்றார்கள் இனிமேல் நீ ஒருவனலேயே இத்தேசமும் மற்ற தேசங்களும் செழிப்புற்று ஆனந்தமாக வாழப்பெறுவதற்குக் காரணமாக இருக்கின்றது. அப்படி இருக்க நீ தன்வரையில் சுகத்தையும் முத்தியையும் விரும்பினல் இவ்வளவு ஆன்மகோடிகளும் கொடிய கஷ்ட நஷ்டங்களை அடைவார்கள். இதற்கு நீயே காரணமாகின்றாய், நான் அப்படி அன்று மற்ற மனிதர்களின் தன்மையிலிருந்தே அதை விடுத்துத் துறவை அடைந்துள்ளேன் மேலும் எனக்கும் இம்மந்திரிக்கும் ஏற்பட்டுள்ள சங்கல்பத்தினிமித்தமாக உன்னை அரசனுக்காமல் நாங்களும் விடப்போவதில்லை. இதற்காகவே உன்னை ஈச்சுரன் அளித்துள்ளாரென்பதாக இன்னும் பல விதம் கூறி உடன்படச் செய்து திருமணமும் பட்டமும் பெற்றவுடன் தன்னிடம் வருமபடியாகக் கூறி அனுப்பினர். பின்பு இருவரும் அரசனிடம் வந்து சரியென்பதாகக் கூறி அரசன் முடிவு செய்திருந்த பெண்ணை மறுத்து விட்டு இந்த மந்திரியின் மூலமாகத் தேடி உத்தமமான அரசனுடைய மகளும்

இவனுக்குப் பொருத்தமான பெண்ணுகவும் பார்த்துப் பேசினன். அவ்வரசன் கேட்டு அந்தச் சண்டாளனுடைய மகனுக்குக் கொடுக்கமாட்டேன். இவனும் அப்படித்தான் இருப்பானென்று கூறி மறுத்தான். பின்பு இவனுடைய பெருமைகளையும் மற்றும் அந்தரங்க விடயங்களையும் கூறிச் சமாதானப்படுத்தி முடிவு செய்து பின்பு சந்தோஷகர மாகத் திருமணமும் பட்டமும் நிறைவேறியது. அரசன் முதல் எல்லோர்களும் மிகுந்த ஆனந்த சாகரத்தில் மூழ்கினர்கள் பின்பு தான தருமங்களும் பந்திபோசனங்களும் முடிந்து அவரவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

அதன்பிறகு அரசகுமாரன் தந்தையினுடைய ராஜரீகப் பதவியைபபெற்று மந்திரிகளுடன் பார்த்து வந்தனன். ஒரு மாதகாலம் ஆயிற்று பின்பு சாமியார் மந்திரியுடன் அந்தச் சாதுவைத் தெரிசிக்கச் சென்று வேண்டிய பண்டு பலகாரங் களும் புஷ்பங்களும் வைத்து மிகுந்த அன்பு பத்தியுடன் வணங்கி நின்றார்கள். அவர் மிகுந்த சந்தோசமுடன் எல்லாக் காரியங்களும் சந்தோஷகரமாக பூர்த்தி அடைந் தனவா என்றார். ஆம் சுவாமி கடவுள் அனுக்கிரகத்தாலும் தங்களுடைய ஆசிர்வாதத்தாலும் நிறைவேறின என்றார் கள். சரி, இனிமேல் உங்களுடைய அதிகார ராச்சியமா யிற்று. ஆகவே நீங்கள் எவ்விதம் நடத்தப் போகின்றீர் கள் என்றனர். சுவாமி தங்கள் அபிப்பிராயம் எவ்விதமோ அப்படியே நடத்த உத்தேசித்திருக்கிறேமென்றார்கள். சரி அப்படியானால் நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்க ளென்பதாகச் சொல்ல ஆரம்பித்தார். முதன்மையாக உன்னுடைய தந்தையை ராச்சிய விஷயங்கள் எதிலும் தலையிடக்கூடாதென்றும் சரீர ஆன்ம சுகவழியில் நின்மதியாக இருக்கும் படியாக ஏற்படுத்த வேண்டும். மற்ற மந்திரிகள் ஐவரையும் அவர்களுக்கு இப்பொழுது ஏற்பட் டுள்ள அந்தஸ்தும் சம்பளமும் நடந்து வருமென்றும் நீங்கள் பிரதி தினம் என்னிடம் வரவேண்டியதில்லை, நான் வரும்படி அழைக்கும் பொழுது மட்டும் நீங்கள் வந்து போக வேண்டும் என்று கூறி அவ்விதம் ஏற்படுத்த வேண்டும். பின்பு உன்னுடைய தேசத்திலுள்ள இந்த நகர முதல் எல்லா நகரங்களும் சர்வ கிராமங்களிலுமுள்ள எல்லோர் களையும் தண்டோரா மூலம் வருவித்து அவர்களுக்கு உணவுக்குப் போதிய தானியங்களையும் வீடுகள் கட்டிக்

கொள்வதற்கும், ஏர் மாடுகள் வாங்கிக்கொள்வதற்கும் போதிய பணங்களையும் சந்தோஷமாக அளிக்கவேண்டும். மற்றும். இதைக் கடனுக்கொண்டு வருந்தாமல் அவரவர் கள் இஷ்டமான போது முடிந்தளவிற் கொடுக்கும்படி யாகவும் சொல்லவேண்டும். பின்பு இம்மந்திரியை அனுப்பி ஒவ்வொரு நகரங்களிலும் ஒவ்வொரு கிராமங்களிலும் தக்க வாறு நிகாயில், குளம், அன்னச் சத்திரம், ஆச்சிரமம், வைத்தியசாலை, பள்ளிக்கூடம். கிணறு அறுதை விடுதி முதலியவைகள் ஏற்படுத்துவதற்குத் தக்க இடங்களைப் பார்த்துவரச் செய்து அவ்விதமே அங்கங்கே ஏற்படுத்தி அவைகள் கிரமமாக நடக்கும்படியும் ஏற்படுத்த வேண்டும். ஏரி, குளம், கால்வாய் முதலியவைகளும் நிலங்களும் மரா மத்துகள் நன்றுகச் செய்தும் வேண்டுமானால் புதிதாகவும் இவைகள் ஏற்படுத்த வேண்டும் இன்னும் மாந்தர்களுடைய சரீர ஆன்ம சுகத்திற்கு வேண்டியது எது எதுவோ அவைகளையெல்லாம் ஏற்படுத்தியும பிரதி தினமும் காலை மாலையில் என்ன வேலைகள் இருப்பினும் கெட்டுப்போயினும் எல்லா ஆண்களும் பெண்களும் ஈச்சுர வழிபாடு செய்து ஆகவேண்டு மென்பதையும் மற்றும் அன்பு, பத்தி, ஒழுக்கம், சிவகாருண்யம், தருமம், ஒற்றுமை முதலிய இன்னும் மற்ற நற்குணங்களை யெல்லாம் யெங்கும் நிலவித்தும் தியவைகளை யெல்லாம் அறவே ஒழித்தும் உன் சேத்தில் எல்லோர்களும் எக்குறைவுமற்று சரீர ஆன்ம சுகத்துடன் ஆனந்தமாக வாழும்படி செய்ய வேண்டும் அதன் பிறகு நான் வந்து இவைகளையெல்லாம் கண்டு ஆனந்திப்பதுடன் உன் தாய் தந்தையரையும் மற்ற மந்திரிகளையும் அழைத்துச் சென்று காண்பித்து இதைப் பற்றிச் சந்தோஷமும் முன்பு அவர்கள் நடந்ததைப்பற்றி வெட்கமும் நாணமும் மிகுந்த துக்கமும. அடையுமபடி செய்து நான் காணவேண்டுமென்றனர். சுவாமி அப்படியே செய்கின்றே மென்பதாகக்கூறி வணங்கி விடை பெற்றுக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். மறு தினம் அரசகுமாரனும் சாமியார் மந்திரியும் தனிமையாக இருந்து அவர் கூறியதெல்லாம நன்றுகயோசித்து மிகுந்த சந்தோஷ முற்று அவ்விதமே செய்ய முயன்றார்கள் மறுதினம் அரச குமாரன் தன் தந்தையிடம் சென்று இனிமேல் நீங்கள் அரசாங்க விஷயங்கள் எதிலும் தலையிடக்கூடாது. அக் கவலை உங்களுக்கு வேண்டியதில்லை. நான் பார்த்துக் கொள்வேன் நீங்கள் சரீர ஆன்ம சுகத்துடன் ஆனந்தமகா

இருங்களென்று கூறினன். இதைக் கேட்டு மனம் கலங்கிப் பலவாறு சிந்தித்துக்கொண்டும் சபைக்கு அதுமுதல் வராமலும் இருந்தான்.

மற்ற மந்திரிகளையும் அழைத்து உங்களுக்கு இப்பொழுது நடக்கிற பிரகாரம் சம்பளமும் அந்தஸ்தும் நடந்து வரும். நீங்கள் பிரதினமும இங்கே வரவேண்டியதில்லை. நான் அழைக்கும்பொழுது மட்டிலும் வரலாமென்று கூறினன். இதைக்கேட்ட அவர்களும மனம் கலங்கிப் பல விதச் சிந்தனையிலிருந்தார்கள். அவர்களும் சபைக்கு வருவதில்லை, சாமியார் மந்திரியும் அரசகுமாரனுமே அங்கே அமர்ந்து எல்லாம் நடத்தினர்கள். அச்சாதுவானவர் தெரிவித்த பிரகாரமே தன் தேசத்திலுள்ள எல்லோர்களையும் தண்டோரா மூலம் வரும்படியாக ஏற்பாடு செய்தான். இவ்வார்தையைக் கேட்டவுடனே ஆண் பெண் முதல் எல்லோர்களுக்கும் பசிப்பிணி முதலியது எல்லாம. நீங்கினவர்களாய் ஆனந்தப்பிரவாகமுற்று அத்தேச முழுதும் ஆனந்தமயமாக விளங்கிற்று. உடனே எல்லோர்களும். வந்து சேர்ந்தார்கள். இவர்களைக்கண்ட அரசகுமாரனும் மந்திரியும் சந்தோஷமுற்றுப் பின்பு நெற்களஞ்சியங்களையும் பணக்களஞ்சியங்களையும் திறந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவுக்கு வேண்டிய தானியங்களையும் வீடு, ஏர், மாடு முதலியவைகள் ஏற்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய பணங்களையும கிரமமாகக்கொடுக்க ஆரம்பித்தார்கள். இதனை அறிந்தவுடனே அரசன் திடீரென்று ஏங்கினன். மனங்கலங்கினன். வயிரெரிந்தான். அதிவேகமுடன் தலைவிரிகோலமாய் ஓடி வந்து அடே சண்டாளா, அடே பாவி, நான் எவ்வளவோ காலமாகக் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்ததெல்லாம் சிறிதும் மனங்கோணாது வீணுக்கிறைக்கின்றாயே சூறையாடுகின்றாயே சாமியார் பயல்கள்மாதிரியாக எல்லாம் இழந்து பிச்சையெடுத்து அலையப்பார்க்கின்றாயா. உனக்குப புத்தியில்லையா இந்தச் சண்டாளப் பயல் மந்திரியல்லவா என் குடும்பத்திற்கும் என்னுடைய அரசாட்சிக்கும் சனியனாக வந்திருக்கின்றான். இவனல்லவா என் மகனுக்கும் எனக்கும் ஆதிமுதல் விரோதியாகவே இருந்து இப்பொழுது இவ்வளவு காரியங்களும் செய்து ஓட்டாண்டியாக்க உத்தேசித்துவிட்டானென்று இன்னும் பலவிதமாகத் திட்டினன். வயிற்றில்

அடித்துக்கொண்டான். வாயிலும் தலையிலும் அடித்துக் கொண்டான், அழுதான். பெருமூச்சுவிட்டான். பின்பு ஓடிப்போய் கொடுக்காதபடி மறித்துக் கதவைச் சாத்தினான். கொடுக்கும் வேலைக்காரர்களையும் வாங்கக்கூடிய சனங்களையும் திட்டினான். அதன் பிறகு அரசகுமாரன் அப்பா நீங்கள் ஏன் கஷ்டமடைகின்றீர்கள். கொஞ்சம் தான் கொடுக்கப் போகின்றோம். மேலும் இவைகள் இருந்தால் கெட்டுத்தானே வீணுகப் போய்விடும். மீண்டும் நமக்குக் கொடுத்து விடுவார்களென்பதாகச் சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. பின்பு சேவகர்களும் தானுமாக வற்புறுத்தலுடன் பிடித்துக்கொண்டு போய் அரண்மனைக்குள்ச் சேர்த்து வெளிக் கதவுகளைப் பூட்டிவிட்டார்கள். இவன் தட்டியும் கத்தியும் பார்த்துப் பின்பு வயிறெரிந்து துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடந்தான். இவ விஷயங்களை அறிந்த மற்ற மந்திரிகளும் வயிறெரிந்து துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடந்தார்கள். அதன் பிறகு எல்லோர்களுக்கும் வேண்டிய அளவு பணமும் தானியமும் கொடுத்தனுப்பினான். நெற்களஞ்சியம் ஒன்றும் பொற்களஞ்சியம் வெள்ளிக் களஞ்சியம் இவைகள் இரண்டும் தவிர மற்ற தெல்லாம செலவாகிவிட்டன. பின்பு மந்திரியை அனுப்பி எல்லாம் சுற்றிப் பார்த்து வரும்படி செய்து அதன் பிறகு அங்கங்கே நாடு நகரங்கள் தோறும் தக்கவாறு ஈச்சுர ஆலயங்களும் குளங்களும் நந்தவனங்களும் வாவிகளும கிணறுகளும் மடாலயங்களும் அன்னச் சத்திரங்களும் ஏழை விடுதிகளும் பாடசாலைகளும் வைத்திய சாலைகளும் சத் விஷயங்களைப் போதிக்கும் மண்டபங்களும் ரோட்டுகளும் ஏரிகளும் கால்வாய்களும் நிலங்களும் புதியதாக ஏற்படுத்தியும் பழமையாகயுள்ளவைகளை யெல்லாம் நன்றுகச் சீர்திருத்தியும அமைத்தும் அவைகள் நடைபெறும்படியாகவும் அங்கங்கே ஏற்படுத்தினன் இதற்காக வெள்ளிக் களஞ்சியங்களும் பொற்களஞ்சியத்திற் பாதியும் செலவாகிவிட்டன. பின்பு அரசகுமாரனும் மந்திரியும் மிகுந்த சந்தோஷமுற்று இவையெல்லாம் சுற்றிப் பார்க்க விரும்பி இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள் இவர்களுடைய வரவை அறிந்த ஆண், பெண் குழந்தைகள் முதல் எல்லோர்களும் அளவில்லாத சந்தோஷமுற்று மிகுந்த அன்பு, பத்தியுடனும் மேள வாத்தியங்களுடனும் அங்கங்கே எதிர் கொண்டழைத்துப் போற்றித் துதித்து வணங்கினார்கள்.

இவைகளை அறிந்த அரசகுமாரன் மிகுந்த சந்தோச முற்று அவர்களுக்கு நல்விஷயங்களைப் போதித்துக் கொண்டும் அவைகளை யெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டும் வந்து மிகுந்த சந்தோஷமுற்று மந்திரியைப் புகழ்ந்து பின்பு அரண்மனைக்கு வந்துசேர்ந்தான் அவ்வரசன் இத்துக்கத்தில் ஆழ்ந்து அன்ன ஆகார மின்றிக கிடந்தான் இதனால் பைத்தியம் பிடித்துப் பலவிதம் கத்துவதும் அழுவதும் திட்டுவதும் தானியம் பணமெல்லாம் போச்சோ போச்சே யென்று வயிற்றில் அடிப்பதும் கடிப்பதும் மலம், மண் முதலியவைகளைத் தின்பதுமாக இருந்து அவனைப் பிடித்துச் சங்கிலியால் கட்டி வைத்துத் தக்க சிகிச்சைகள் செய்தும் பலிக்கவில்லை. மந்திரிகளுக்கும் இக்கவலையாலும் மனைவி மக்கள் இறந்தும் மற்றும் பல விதக்கஷ்ட நஷ்டங்களாலும் அவர்களுக்கும் கொடிய வியாதிகள் ஏற்பட்டுத் தீராதபடி அன்ன ஆகாரமின்றி இரவும் பகலும் வாடினார்கள். இதனை அறிந்த சாதுவானவர் அரசகுமாரனை நோக்கி இவர்களுக்கு இப்பொழுது நிவர்த்தியாகாது. இவர்கள் செய்த அனீதமும் சனங்களின் தூஷணையும் பணம், தானியம் செலவழிந்த ஏக்கமும் சேர்ந்து இவர்களுக்கு இவ்விதம் ஏற்பட்டிருக்கின்றன. இவை நிவர்த்தியாக இன்னும் ஒரு வருடம் ஆகக்கூடும். அதற்குமேல் ஈச்சுரர். அனுக்கிரகத்தால் நிவர்த்தியாகக் கூடும். இதை பற்றி ஈகவலைப்பட வேண்டியதில்லை என்ப தாகக் கூறி அனுப்பினர்.

இப்படி இருக்க அவ்வருடத்தில் சரிவர மழை பொழிந்து செழிப்புற்று எவ்விடத்திலும் எக்காலத்திலும் விளைந்திலா தபடி அமோகமாக விளைந்து அறுவடைக் காலமாயிற்று. இதனை அறிந்த அரசன் சந்தோஷமுற்று மந்திரியை நோக்கி மந்திரி நம் தேசத்திலுள்ள யெல்லோர்களும் இதற்குமுன் எத்தனையோ வருடகாலமாகக் கொண்டுள்ள துன்பமும் தரித்திரமும் பசியும் ஏக்கமும் ஆவலும் இவ் வருடத்திற் தீர்ந்து செழித்து இன்புறட்டும், ஆகவே அவர்களுக்கு வேண்டியது போக மீதம், எவ்வளவு நமக்குக் கொடுக்க இஷ்டமோ அதைக் கொடுக்கட்டும். இதற்காக முன்போன்று வேலைக்காரர்களும் பாராப்பந்தோபஸ்துகளும் வேண்டாம். முனிசிப் கர்ணம் தலையாரி இம் மூவர்களும் போதும் என்று கூறி மேலும் நம் செலவிற்கு வேண்டிய

நெல்லும் திரவியமும் இருக்கின்றன. இதனால் நமக்கு கஷ்ட மில்லை என்றனன். மந்திரி சந்தோஷமுற்று அப்படியே செய்கின்றேன் என்பதாகக் கூறினன். இவ் விஷயத்தைக் கேட்ட குடிசனங்களெல்லோர்களும் அளவிறந்த சந்தோஷ முற்று எல்லோரும் ஒன்று கூடிப் பேசி நாம் ஒவ்வொரு வரும நம் குடும்பச் செலவுக்கு வேண்டியவைகள் போக மீதியைச் சிறிதும் மறைக்காமல் நம் அரசனுக்குச் சேர்த்து விடவேண்டும். இதைக் கண்டு அரச குமாரனும் மந்திரியும் சந்தோஷிக்கவேண்டும். அந்தச்சண்டாள அரசனின் வயிற் றெரிச்சல் தீரவேண்டும். அங்கிருந்தாலும் இனிமேல் நம்முடைய தானியந்தான் என்பதாகப் பேசி அவ்விதமே சேர்த்துவிட்டார்கள், இதற்குமுன் நன்றாக விளைந்தால் ஐந்து வருடத்தில் பாராப் பந்தோபஸ்துடன் வந்து சேரக் கூடிய தானியம் ஒரே வருடத்தில் எக்காவலுமின்றி வந்து குவிந்தன. முன்பு காலியாயின களஞ்சியங்களில் நிறைப்பினர்கள். இதை அறிந்த அரசகுமாரனும் மந்திரியும் சந்தோஷப்பட்டார்கள், பின்பு வரி வசூல்களும் அவ்விதமே வந்து சேர்ந்தன. அதன் பிறகு இருவரும் அந்தச் சுவாமிகளைத் தெரிசிக்க விரும்பி பண்டு, பலகாரம், புட்பம் முதலியவைகளுடன் சென்று மிகுந்த அன்பு பத்தியுடன் வணங்கி நின்றார்கள். சுவாமியானவர் மிகுந்த சந்தோஷமுடன் அமரச்செய்து நாம் தெரிவித்த பிரகாரம் எல்லாம் செய்து முடித்தீர்களா என்றனர். ஆம். சுவாமி அப்படியே செய்து முடித்தோமென்பதாக எல்லாவற்றையும் விபரமாகக் கூறினர்கள். இதைச் செவியுற்று உளம் மகிழ்ந்து இவைகளையெல்லாம் நாம் நேரிற் கண்டு ஆனந் தித்தும் உன்தந்தையருக்கும் மற்ற ஐந்து மந்திரிகளுக்கும் இவைகளைச் சுற்றிக்காண்பித்து, இவர்கள் வெட்கமும் நாணமும் துக்கமும் அடைந்து முன்பு தாங்கள், செய்த தீய நடத்தையும் லோபத்தன்மையும் மூடத்தன்மையும் குற்றத்தையும் மற்றும் இம்மந்திரியைச், செய்த அக்கிர மத்தையும் தாங்களே உணர்ந்து வருந்துவதுடன் வயிற் றெரிச்சலும் துக்கமும் நீங்கி அவர்கள் இன்புறவேண்டு மென்றனர். இதைக்கேட்டு இருவரும் சந்தோஷித்து அப்படியே செய்யலாமென்பதாக ஒரு நாட் குறிப்பிட்டுத் தன் தந்தையைப் பல சமாதானம் செய்து அழைத்துக் கொண்டு மற்ற மந்திரி பிரதானிகளுடன் எல்லோர்களும் புறப்பட்டுச்சென்றார்கள். இவர்களுடைய வரவை முன்னமே

அறிந்த அந்தக்குடிஜனங்களெல்லாம அளவிறந்த ஆனந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய் அங்கங்கே நாடு நகரங்கள் தோறும் வீடுகளையும் வீதிகளையும சுத்தம் செய்து வாழை மரங்களும் பாக்குமரங்களும் மாவிலைத்தோரணங் களும் கட்டி அலங்கரித்தும் ஆண் பெண் குழந்தைகள் எல்லாம் குளித்து நல்ல ஆடை ஆபரணங்களும் திருநீறு குங்கமம் சந்தனம் முதலியவைகள் அணிந்துகொண்டும் பலவிதக் கனிவகைகளும் புட்பங்களும் கற்பூரம், தாம்பூலம், மஞ்சள் முதலிவைகளும் தட்டுகளில்ஏந்திக்கொண்டும் மேளவாத்தியங்களுடனும் வாழ்த்துப்பா, பல்லாண்டு இவைகளுடனும் அளவிறந்த அன்பு, புத்தி, ஆனந்த முடன் எதிர்கொண்டழைத்துச் சென்றார்கள்.

ஒவ்வொரு வீடுகள் தோறும் தூபதீபமுடன் பூசை களும் செய்தார்கள். பழங்களும் சந்தனமும் சர்க்கரையும் அங்கங்கே வழங்கினர்கள். சிறு ஆண்குழந்தைகளும் பெண்குழந்தைகளும் ஈச்சுரர் பாடல்களைப்பாடி கோலாட் டங்களும் கும்மி ஆட்டங்களும் ஆடினர்கள். பல இடங் களில் ஈச்சுர பஜனைகள் பாடுவதும் அவருடைய பெருமை களையும் சத்விஷயங்களையும் பற்றி வெகுவாகப் பிரசங்கத் தார்கள் பின்பு ஆலயங்களில் மேளவாத்தியங்களுடன் பூசைகள் நடைபெறுவதும் பிராமணர்களெல்லாம் வேத பாராயணங்கள் செய்வதும் ஆச்சிரமங்களில் சாதுக்களெல் லாம் ஈச்சுர தோத்திரங்களைப் பாடுவதும், ஜெபம், தவம், தியானம், நிட்டை முதலியவைகள் செய்வதும் அன்னச் சத்திரங்களில் வயது சென்ற அனுதைகளுக்கும் அங்க ஈனர்களுக்கும் யாத்திரை வாசிகளுக்கும் குறைவின்றி அன்னமளிப்பதும் அவர்களெல்லாம் அரஅரவென்று பெரும் கோஷ்டமுடன் பாடுவதும் மற்றும் பாடசாலைகளையும் வைத்தியசாலைகளையும் வாவி, ஏரி, திருக்குளம், சாலை, சோலை இவைகளையும் எவ்விடத்தும் பயிர்கள் வளர்ந்து செழிப்புற்று ஆனந்தமாக இருப்பதையும் சனங்களெல்லாம் செழிப்புற்று ஆனந்தமாக இருப்பதையும் கண்டு மிகுந்த வியப்பும் பிரமையும் அளவிறந்த சந்தோஷமும் அடைந் தவர்களாய் பின்பு தாங்கள் கொண்டு சென்றிருந்த வஸ்தி ரங்கள், பழங்கள், கற்கண்டு, சர்க்கரை முதலானவைகளை யெல்லாம் அங்கங்கே குழந்தைகளுக்கும் அனுதைகளுக்கும் சாதுக்களுக்கும் பிராமணர்களுக்கும் அளித்துக் கொண்டும்

மற்ற எல்லோர்களுக்கும் பல புத்திமதிகளையும் நன்மார்க்கங்களையும் போதித்துக் கொண்டும வந்து பின்பு மிகுந்த சந்தோஷமுடன் எல்லோர்களும் அரண்மனையைச் சார்ந்து சபாமண்டபத்திலிடத்தே அமர்ந்திருந்தார்கள். மற்றும் பல பெரியோர்களும் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அரசனையும் மற்ற ஐந்து மந்திரிகளையும் நோக்கி அந்தச் சாதுவானவர் கூறத்தொடங்கினர்.

அரசனே நான் யார் தெரிகின்றதா என்றனர். சுவாமி தெரியவில்லையே என்றார்கள். அதற்குள்ளாகச் சாமியார் மந்திரி எழுந்து சில வருடங்களுக்கு முன் என்னுடன் இவ்விடத்தில் வந்து அமர்ந்து தங்களிடம் சில நன்மார்க்கங்களைக் கூறியவரும் அதற்காகத் தாங்கள் கோபித்துப் பல விதம் திட்டி அனுப்பப்பட்டவரும், பின்பு நான் தெரிவித்த பிரகாரம் அவைகளை நடைபெறச் செய்து இரு கண் கொண்டு பார்த்து உளம் பூரிக்காமல் இப்பட்டினத்தை விட்டுப்போவதில்லையென்பதாகச் சிறிது தூரத்திற் குளக்கரையிலுள்ள மண்டபத்திற் தங்கி இருந்தவரும், தங்கள் குமாரனைத் திருமணமும் பட்டமும் பெற்றுக் கொள்ளும்படி செய்தவரும், இத்தேசம் இவ்வளவு செழிப்புற்று தேவர்களும் கண்டு வியக்கும்படி எல்லாம் ஆனந்தமயமாய் விளங்குவதற்கும் காரணகர்த்தாவுமான, துறவிகளிற் சிறந்த மகானுபெரியார் இவர் என்றனன். இவைகளைக் கேட்டவுடன் சிறிது நேரம் யோசித்து பின்பு வெட்கமும் நாணமும் மிகுந்த துக்கமும் உடையவர்களாய் தலையைக் கவிழ்ந்து ஒன்றும் பேசாது அசைவற்றிருந்தார்கள். அப்பொழுது சாதுவானவர் அவர்களை நோக்கி நீங்கள் செய்தது அனீதமல்லவா. கொடிய மிருகத்தன்மையும் மூடத்தன்மையுமல்லவா. உம்முடைய தேசமும் குடி ஜனங்களும் உன்னுடைய காலத்தில் எப்படி இருந்தன. இப்பொழுது எப்படி இருக்கின்றன. பார்த்தீர்களல்லவா. இகத்திற்கும் பரத்திற்கும் இது பெருமையா. நீங்கள் வைத்திருந்தது பெருமையா தானியத்தையும் பணத்தையும் உம்முடைய குமாரன் எல்லோர்களுக்கும் அளிக்கும் பொழுது எவ்வளவு திட்டினீர். என்ன பாடு பட்டீர். வயிறெரிந்தீர். இப்பொழுது என்ன குறைந்து போயிற்று. ஒரே வருஷத்தில் எவ்விதப் பாராப்பந்தோபஸ்து மின்றி ஐந்து வருஷத்தில் வரக்கூடிய தானியமும் பணமும் ஒரே வருஷத்தில் வந்து சேர்ந்திருப்

பதைப் பார்த்தீரா. இன்னும் ஒரு வருஷத்தில் எல்லாக் களஞ்சியங்களும் நிறம்பிவிடும் அல்லவா.

குடிசனங்களின் அன்பும் பத்தியும் அபிமானமும் உண்மையும் பார்த்தீரா. அங்கே அங்கே நடந்துள்ள மரியாதைகளையும் பார்த்தீரா. மற்றும் தர்ம கைங்கரியங்களையும் பார்த்தீரா. இப்படிச் செய்ய வேண்டியதிருக்க சூடி ஜனங்களை வருத்தித் தானியத்தையும் பணத்தையும் சேர்த்து பெருமைக்காக வைத்துக்கொண்டு ஜனங்கள் வருந்தி வாடுவதைக் கண்டும் சிறிதும் கருணையின்றி வாழ்ந்ததுடன் நன்மை கூறிய என்னையும் இம்மந்திரியையும் கோபித்துத் திட்டி அனுப்பினீர் அல்லவா வென்று இன்னும் பலவிதம் கூறினர். இவைகளை யெல்லாம் கேட்ட அரசனும் மந்திரிகளும் எழுந்து சுவாமி நாங்கள் அறிவின்றிச் செய்த குறறங்களை யெல்லாம பொருத்தருளவேண்டுமென்று வணங்கினர்கள். மறறுமுள்ள பெரியோர்களும் எழுந்து வணங்கி நின்றார்கள். அதன் பிறகு இவர்களும் அரசகுமாரனும் சாமியார் மந்திரியும் ஒன்று கூடிப்பேசி இவருக்கு அபிஷேக அலங்காரம் செய்து ஊர்வலம் செய்து வைக்க விரும்பி இவரிடம் எல்லோர்களும் பலதரம் மிகவும் வேண்டி வற்புறுத்தமாக அரண்மனையிலேயே எல்லோர்களையும் வரும்படி செய்து சந்தோஷமுடன் அபிஷேக அலங்காரம், தூபதீப முதலியவைகள செய்து ரதத்தின் மீது ஊர்வலமும் செய்து வைத்தார்கள் விடுகள் தோறும தூபதீபம், பூசை முதலியவைகள் செய்து தெரிசித்து ஆனந்தித்தார்கள். அதன் பிறகு அரசனுல் தக்க இடத்திற் பெரிய ஆச்சிரமம் ஒன்று ஏற்படுத்தி அங்கே அமரச்செய்தார்கள். அது முதல் பிரதி தினமும அரசன் முதல் எல்லோர்களும் சென்று அன்பு பத்தியுடன் தெரிசித்து வந்தார்கள். அத்தேச முழுதும் செழித்து எக்குறைவுமற்று ஆனந்தமயமாய் விளங்கியதுடன் ஆண் பெண் முதலாக எல்லோர்களும் மிகுந்த அன்பு, பத்தி, ஒழுக்கம், தர்மம், சத்தியம், ஒற்றுமை முதலிய எல்லாக் குணங்களும் பெற்றுக் கடவுளிடத்தும் சாதுக்களிடத்தும் அரசகுமாரனிடத்தும் மந்திரியிடத்தும் அளவிறந்த அன்பு, பத்தி, உடையவர்களாய் மனத்துள் இரவும் பகலும் பிரியாது சிந்தித்து வந்தார்கள்.

மற்றும் அரசகுமாரனைத் தங்கள் உயிரினும் உயிராய்ப் பாவித்தார்கள். அரசகுமாரனும் அவ்விதமே தன்னுயி

ராகவே சனங்களைப் பாவித்து வாரம் ஒரு முறை தன் பட்டினத்தைச் சுற்றிப்பார்த்து வருவான். அவரவர்கள் தங்கள் குடும்ப சகிதம் ஆடை ஆபரணங்களும் திருநீறு குங்குமம் அணிந்தும் சந்தோஷகரமாக வணங்கி நிற்பார்கள். இவர்களைக்கண்டு ஆனந்தமுறுவான். ஒருவாரம் வராவிடில் ஆண்பெண் முதல் யெல்லோர்களும் அரண்மனைக்கு வந்து கூடி அரசனுக்கு உடம்பிற்கு என்ன என்ன என்று. கூறிப் பெரிய கோஷ்டமிட்டுச் செல்வார்கள், சரீர சுகமில்லாவிடில் வருந்துவார்கள். வருடம் ஒரு முறை தன் தேச முழுவதும் சுற்றி எல்லோர்களையும் சந்தோஷகரமாகக்கண்டு இவனும் ஆனந்தித்து வேண்டிய புத்திமதிகளையும் கூறி வந்து பின்பு அரண்மனை சேர்வான். இத்தகைய முறையில் இத்தேசம் செழிப்புற்று ஆனந்தமாக இருப்பதை அறிந்த சுற்றிலு முள்ள தேசங்களின் குடி சனங்கள் அந்த அரசர்களால் ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களையும் அனீதங்களையும் சகிக்க முடியாது. இத்தேசத்தில் வந்து குடியேறினர்கள். இதனை அறிந்த அரசகுமாரனும் மந்திரியும இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்து கொடுத்து மற்ற குடிகளைப் போன்றும் பாவித்தார்கள். பின்பு நாளுக்கு நாள் எல்லாக் குடிசனங்களும் இங்கே வரும்படி ஏற்பட்டது. இதனை அறிந்த அத்தேசத்து அரசர்கள் மிகுந்த கோபமுற்று தக்க ஆட்கள் மூலமாக எங்களுடைய தேசத்துக் குடிசனங்கள் அவ்விடம் வராதபடி மறுத்துவிட வேண்டும். முன்வந்துள்ள சனங்களையும் அனுப்பிவிடவேண்டும. என்பதாகச் சொல்லி அனுப்பினர்கள். இதனைக் கேட்ட அரசகுமாரன் ஐயா நான் அவர்களை அழைக்கவில்லை. அவர்களே கஷ்டத்தினால் இவ்விடம் வந்தபொழுது நான் எப்படி மறுக்க முடியும். அது கூடியதன்று. மேலும் என்னைக்கூடிய உபகாரமும் செய்யவேண்டியதாகத்தான் இருக்கின்றது அவர்கள் வராதபடியும் வந்தவர்கள் மீண்டும் வரும்படியும் நீங்கள் அதற்குத் தகுந்தபடி அன்புடன் ஏற்பாடு செய்வதுதான் உத்தமம் என்பதாகக் கூறி அனுப்பினன். இதனைக்கேட்ட வுடன் அவர்கள் மிகுந்த கோபமுற்று உடனே நால்வரும் ஒன்று சேர்ந்து சேனைகளுடன் புறப்பட்டு வந்து சிறிது தூரத்தில் நின்றுகொண்டு இவ்வரச குமாரனை யுத்தத் திற்கு வரும்படியாகக் கூறித் தூதுவரை அனுப்பினர்கள். இதனைக் கேட்ட அரசகுமாரனும் மந்திரியும் ஐயா நீங்கள் எங்களுக்கு முன்னதாக எச்சரிக்கை செய்யாது திடீரென்று

வந்து கொண்டு யுத்தத்திற்கு அழைப்பது ராசநீதியும பொருத்தமுமன்று என்பதாகச்சொல்லி அனுப்பினன். இதைக்கேட்டவுடன் அவர்கள் ராசநீதியும் தர்மமும் பின்னுற் பார்க்கலாம். இபபொழுது வருகின்றீயா அல்லது நாங்கள் வந்து பட்டினத்திற் பிரவேசிக்கவா என்பதாகச் சொல்லி அனுப்பினர்கள். இதைக் கேட்டவுடன் மனம் மிகவும் வருந்தினன். இவனுக்கு யுத்தப்பயிற்சி யென்பது கனவிலும் தெரியாது. சேனைகளும் மிகக் குறைவாகவே வைத்திருக்கின்றன். என் செய்வான் பலவிதம் சிந்தித்தான். பின்பு மந்திரியை அழைத்துக் கொண்டு அந்தச் சுவாமிகளிடம் சென்று வணங்கி இவ்விஷயத்தைக் கூறினர்கள். இதைக்கேட்டு அப்பா அவர்கள் வந்திருப்பது அனீதம் தான் நீங்களும் போக வேண்டியது ராசகிரமந்தான். இதற் கிடையில் ஈச்சர தருமம் ஒன்றிருக்கின்றது. அது அறிந்து கொள்ளும், ஆகவே நீங்கள் பயப்படாது செல்ல வேண்டியதுதானே என்பதாகக்கூறி அனுப்பினர். அவ்விதமே இவர்கள் வந்து புறப்படத் தயாரானர்கள். இவ்விஷயத்தை மற்றயெவர்களுக்கும் தெரிவிக்கக்கூடாதென்பதாக அரசன் கூறி யிருந்தான். ஆகையால் எவர்களுக்கும் தெரியாது. சேனுபதிக்கும் சேனைகளுக்குந்தான் தெரியும். இவ்விதம் இவர்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது அங்கே திடீரென்று பெரும் சுழல்காற்று ஏற்பட்டுச் சேனை சைன்யங்களையெல்லாம் கால் மாடு, தலைமாடாக அடித்து வீழ்த்தியும் பிறட்டியும் ரத முதலியவைகளெல்லாம் வீழ்ந்து உடைந்தும் பலவிதமான கஷ்ட்ட நஷ்ட்டங்களுடன் அல்லோல கல்லோலமாகத் தப்பி ஓடிச்சென்றார்கள்.

பின்பு சிறிது நேரத்திற்குள் இவ்விஷயத்தை அறிந்த அரசகுமாரன் முதல் எல்லோர்களும் அங்கு சென்று பார்த்து மிகுந்த ஆச்சரியமும் பிரமையும் கொண்டு ஈச்சரனைப் போற்றித் துதித்துப் பின்பு வந்து இதனைச் சுவாமிகளுக்கும் தெரிவித்து எல்லோர்களும் ஈச்சரனுடைய செயலையும் கிருபையையும் பற்றிப் பேசிப்புகழ்ந்து சந்தோஷித்தார்கள். அதன் பிறகு ஒரு வருடம் சென்று மீண்டும் அவ்வரசர்கள் கோபம் கொண்டு ஒன்று கூடிப் பேசி இதற்கு முன் நாம் தெரிவிக்காமல் சென்றது தவறும். ஆகவே தற்செயலாக ஏதோ சுழற்காற்று ஏற்பட்டு விட்டது. ஆகவே இப்பொழுது ஒருவாரத்திற்கு முன்ன

தாகவே தெரிவித்துப் பின்பு போய் அவ்வரசனை எவ்விதத்திலும் ஒழித்து அத்தேசத்தை நாம் கைப்பற்ற வேண்டுமென்பதாகப் பேசி அவ்விதமே சொல்லி அனுப்பினர்கள். இதனைக்கேட்ட அரசகுமாரன் அப்படியே வரத் தயார் என்பதாகக்கூறி அனுப்பினன், இதனை அறிந்த அரசனும் மற்ற மந்திரிகளும் திகிலடைந்து துக்கமுற்று இதற்கென் செய்வது சேனைகளும் அதிகமில்லையே. இவன் நம்முடைய வார்த்தையை கேட்கவுமில்லையே என்பதாக அரசகுமாரனையும் சாமியார் மந்திரியையும் பலவிதம் திட்டினர்கள். இவனுக்குத் தெரியாதபடி இவனுடைய மாமனாகிய அரசனுக்குச்சொல்லி அனுப்பினர்கள். இப்படி இருக்க இவ்விடயம் அப்பட்டின முதலாக அத்தேசம் முழுவதும் பரவிவிட்டது. இதைக்கேட்டவுடன் ஆண், பெண் குழந்தைகள் முதல் எல்லோர்களும் அளவிறந்த துக்க சாகரத்தில் மூழ்கி ஐயோ நம் உயிருக்குயிராகிய அரசனுக்கு அபாயம் ஏற்பட்டு விட்டதே. இவருக்கு யுத்தம் என்பதே தெரியாதே. சாதுவாயிற்றே. மேலும் சேனைகளும் அதிகமில்லையே இந்த ஒரு ஆன்மாவினாலன்றே நாம் எல்லோர்களும் எக்குறைவுமற்று ஆனந்தமாக வாழப் பெற்றோம், இவருக்கு அபாயம் ஏற்பட்டால் நம்முடைய நிலைமை என்ன ஆகும. மேலும் நம்முடைய மனந்தான் யெப்படிச் சகித்திருக்கமுடியும். அவரினும் நம்முயிர் பெரிதா. அவர் ஒருவர் இருந்து நாம் எல்லோர்களும் இறந்து விட்டாலும் நம் குழந்தைகளையும் குடும்பங்களையும் ஆதரிப்பாரன்றே. அவர் இறந்து நாம் இருந்து மற்ற கொடும்பாவிகளையா அரசனாகக்கொண்டு வருந்துவது யென்பதாக இன்னும் பலவிதம் பேசிப் பின்பு அத்தேசத்திலுள்ள எல்லோர்களும் ஒருமித்துப் பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளும் அறுபது வயதிற்கு மேற்பட்ட விருத்தர்களும் தவிர மற்ற ஆண், பெண் முதலாக எல்லோர்களும் அரிவாள், தடி, உலக்கை, வில், கட்டப்பாறை, கற்கள் முதலியவைகளை ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு அரசனுடைய பட்டினத்தின் புறத்திற் சுற்றிலும் வந்து கூடினர்கள், அப்பட்டினத்திலுள்ள சனங்களும் இதே மாதிரியாகப் புறப்பட்டு அரண்மனையைச் சுற்றிலும் வீதிகளிலும் நிறைந்து நின்றார்கள். மற்றும் பிராமணர்களும் சாதுக்களும் அனைதகளும் வந்து ஒருபுறம் கூடினர்கள். இவ்விடயங்களெல்லாம் அரசன் முதலானவர்களுக்

குக் தெரியாது. அரசகுமாரன் யுத்தத்திற்குத் தயாராக இருக்கின்றான். மந்திரியும் தயாராக இருக்கின்றான்! அரசனும் மற்ற ஐந்து மந்திரிகளும் வந்து போகக்கூடாதுயென்பதாக மறுத்து அவர்களிடம் சமாதானம் பேசி அவர்களுடைய குடிசனங்களை அனுப்பிவிடலாமென்பதாகக் கூறிப் பல தரம் மன்றாடியும் இவன் கேட்கவில்லை.

உடனே மந்திரியுடன் ரதத்தின் மீது ஏறினான். இதை அறிந்த அரசன் கீழே விழுந்து ஓவென்று அழுது கதறினான். தாய், மனைவி முதலானவர்களும் விழுந்து கதறி அழுதார்கள். இதற்குள் சேனாதிபதியும் மற்றும் எல்லாப் பெரியோர்களும் வந்து நீங்கள் வரவேண்டாம். நாங்கள் சென்று போர் புரிகின்றோமென்று எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. அதன் பிறகு புறப்பட்டு அரண்மனைவாயிலை அடைந்தார்கள். அதைவிட்டு ஓரடி கூட வைப்பதற்கு வழி இல்லையெங்கு பார்த்தாலும் ஆண்களும் பெண்களும் நிறைந்து நிற்கின்றார்கள். சென்ற சேனைகளும் மத்தியில் அகப்பட்டுக்கொண்டு முன்னும் பின்னும் செல்லமுடியாது தத்தளிக்கின்றன அரசனைக்கண்டவுடன் ஆண். பெண் முதல் எல்லோர்களும் சிரசின்மீது கரங்களைக் கூப்பிக் கொண்டு கண்ணீர் சொரிய ஓவென்று அழுது தேம்பி ஏ எங்கள் உயிரினுக்குயிராகிய பிரபுவே எங்களுடைய துன்பங்களையெல்லாம் நீத்து இன்பத்தை அளித்த செல்வமே. எங்கள் குல தெய்வமே எங்கள் நிமித்தமாகவல்லவா உங்களுக்கு இத்துன்பங்களெல்லாம ஏற்படுகின்றன. நாங்கள் இருக்கும்பொழுது நீங்கள் யுத்தத்திற்கு வருவது தருமமாகுமா நாங்கள் தாம் எப்படி உங்களைவிடுவோம். உங்களுக்கு ஓர் அபாயம் ஏற்படில் நாங்கள் எல்லோர்களும் எப்படி உயர்தரித்து வாழ்வோம். நாங்களெல்லாம் இறந்து நீங்கள் ஒருவர் இருந்தால் போதுமன்றே. நாங்கள் அந்தச் சண்டாளர்களை ஒருகை பார்க்கினறோம்விடுவதில்லை. நீங்கள் வரக்கூடாது. வருவதானால் எங்களையெல்லாம் நீரேகொன்று விட்டு அப்பால் செல்லுங்கள் என்பதாக இன்னும் பல விதம் கூறி அழுது மறித்துக் கொண்டார்கள். இவர்களையும் இவர்கள் கூறிய வாக்கியங்களையும் கேட்ட அரசகுமாரனுக்குப் படபடவென்று சரீரம் துடித்தது. இரு கண்களிலும் நீர் அருவிபோல் வடிகின்றது. மனம் பதறுகின்றது. ஓவென்று அலறினான், அழுதான். கீழே குதித்தான்.

புறண்டான். உருண்டான். தலையிலும் முகத்திலும் அடித்துக்கொண்டான். ஐயோ இந்தச் சண்டாளன் ஒருவனுக்காகவா இவ்வளவு ஆண்களும் பெண்களும் தங்களுடைய உயிர்கள் முதல் சர்வ பற்றுகளையும் நீத்து யுத்தம் செய்ய வந்து நிற்கின்றீர்கள். ஐயோ இதென்ன அனீதமாக இருக்கின்றது.

இவர்களெல்லாம் அழியவும் இதைக் கண்கொண்டு பார்த்து மனம் சகித்து எப்படி வாழ்வேன் என்பதாக இன்னும் பலவிதமாய்க் கூறிப் பரதவித்துச் சனங்களைச் சுற்றிலும் பார்த்துப் பார்த்து மனங்கலங்கி அழுது பின்பு ஏ என் உயிர்க் குயிராகிய சனங்களே உங்கள் எல்லோர்களையும் வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். நீங்கள் எல்லாம் வீட்டுக்குச் செல்லுங்கள். நான் சென்று ஈச்சர அனுக்கிரகத்தால் ஜெயம் பெற்று வருகின்றேன். உங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டாமென்றனன். இதைக்கேட்டு எல்லோர்களும் வணங்கி மறுத்துவிட்டார்கள். இப்படி இருக்க அங்கே அவ்வரசர்கள் இவர்கள் வராததைக் கண்டு உடனே வீரர்களை அனுப்பினார்கள் அவர்கள் வந்து பார்த்தார்கள். அரசனையோ சேனைகளையோ காண முடியவில்லை. எங்கு பார்த்தாலும அளவிடப்படாத ஆண்களும் பெண்களும் பலவித ஆயுதங்களை வைத்துக்கொண்டு நிற்பதைக் கண்டு மனங் கலங்கி வியப்புடன் ஓடிச்சென்று அரசனே அந்தத் தேசத்திலுள்ள சர்வ ஆண்களும் பெண்களும் ஆயுதங்களுடன் வந்து நிற்கின்றார்கள். அவ்வரசனையோ சேனைகளையோ காண முடியவில்லை என்றார்கள் இதைக் கேட்டு மிகுந்த வியப்பும் பயமும் உடையவர்களாய் யோசித்துக் கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் இங்கே பழுத்து நரைத்துத் தளர்ந்த ஒரு பெரியவர் தடியை ஊன்றித் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தனர். அவருக்குப் பின்னுக அனேகம பறையர்கள் மிகக் கருமையான நிற முடன் ஆடிப்பாடிச் சிரித்துக் கொண்டும் பறைகளையும் கொம்பு வாங்கா தாளம் முதலியவைகளை முழக்கிக் கொண்டும் குடிவெறியர்கள் போன்று தள்ளாடி ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டும் வந்து ஜனங்கள் நிற்கும் முகப்பில் ஆடியும் பாடியும் சிறிதுநேரம் நின்றார்கள். பின்பு வேகமுடன் யுத்தகளத்தை நாடிச் சென்றார்கள். அங்கே நான்கு அரசர்களும் அணிவகுத்து மத்தியில் அரசர்களும்

முன்புறத்தில் சேனைத் தலைவர்களும் நின்று கொண்டு இப் பறையர்கள் வரும் கோலத்தைக் கண்டு வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஆடிப்பாடிக் கொண்டு சேனைகளுக்குள் நுழைந்து அவர்கள் மீது விழுவதும் ஆடுவதுமாக இருப்பதைக்கண்ட வீரர்கள் கோபித்து அடே பறையர்களே உங்களுக்குக் குடிவெறி கண் தெரியவில்லையா என்று கத்தியை ஓங்கி வெட்டச் சென்றார்கள். இதற்குள் தங்களுடைய சுயவடிவமாகிய பூதவடிவங்கள் தோன்றப்பெற்றன. இதைக் கண்டவுடன் எல்லோர்களும் மனம் கலங்கி நடுக்கமுற்றார்கள். இதற்குள் அவர்களை அடித்தும் உதைத்தும் ரதங்களையெல்லாம் தகர்த்தும் ஆயுதங்களைப் பறித்து ஒடித்தும் யானை சூதிரைகளை அடித்தும் அதனால் கதறிக் கொண்டு ஓடச் செய்தும் வீரர்களைப் பிடித்து வீரர்கள் மீது தாக்கியும் இவ்விதமாகக் காலாலும் கரத்தாலும் தாக்கியவுடன் சேனைகளெல்லாம் அடிபட்டுப் பயந்து நாலா பக்கங்களிலும் பறிபட்டு ஓடினார்கள். சில பேர் பிணம் போல் கண்களை மூடிப் படுத்துக் கொண்டார்கள் சில பேர் வணங்கி அழுதார்கள். சில பேர் நடுக்குற்று மரம்போல் நின்றார்கள். இவ்விதமாக எல்லோர்களையும் அல்லோல கல்லோலப் படுத்திப் பின்பு அந்த நான்கு மந்திரிகளையும் நான்கு அரசர்களையும் பிடித்துக் கட்டி அவர்களை மொட்டை அடித்துக் கௌபீணம் மட்டிலும் தரித்துப் பல கோலங்கள் செய்து ஒவ்வோர் பெரும் கல்லித் தலையிற் சுமத்தி மற்றும் ஓடிச் சென்ற சேனை சைன்யங்களையெல்லாம் சேர்த்து வளைத்துக் கூட்டிக் கொண்டு முன் போன்ற பறையர்களின் வடிவமுடன் இப் பெரியவரிடம் வந்து வணங்கி நின்றார்கள், பின்பு எல்லோர்களும் புறப்பட்டு அப்பெரியவர் முன்னும் அதன் பின் அரசன் மந்திரி முதலானவர்களும் அதன் பின் சேனைகளையும் நடத்திக் கொண்டு முன்போன்று ஆடிப்பாடிப் பறைகளை முழக்கிக்கொண்டும் இப்பட்டிணத்தை நாடி வந்தார்கள். இங்கே அரச குமாரனும் குடிசனங்களும் ஒருவருக்கொருவர் பரதவித்து அழுது வருந்தி நிற்கும்பொழுது சாதுக்களும் பிராமணர்களும் பெரியோர்களும் வந்து அரச குமாரனை பல விதம் தேற்றிச்சமாதானப்படுத்தி நீங்களும் போகவேண்டிய தில்லை. மற்றபெண்களும் போவது சரியில்லை. மற்ற ஆடவர்களெல்லாம் நம் சேனைகளுடன் சென்று யுத்தம் செய்யட்டும். ஈச்சுர அனுக்கிரகத்தால் இவர்களுக்குச்

சிறிதும் காயமின்றி நமக்கே ஜெயம் ஏற்படக்கூடும். இது உண்மை என்பதாகக் கூறி முடிவு செய்து அவ்விதமே எல்லோரும் புறப்பட்டார்கள். இதற்குள் அவர்களும் வந்து விட்டார்கள். இவர்களைக்கண்ட எல்லோர்களும் வியப்பும் பிரமையும் கொண்டு பின்பு பரிகாசமாகச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அரசர்கள் முதல் எல்லோர்களும் அளவிறந்த வெட்கமும் நாணமும் துக்கமும உடையவர்களாய் தலை கவிழ்ந்து உயிர்ப்பிணம் போன்று நடந்து வந்தார்கள். முன்னதாக அப்பெரியவர் அரச குமாரனெங்கே எங்கேயென்று சனங்களுக்குள் நுழைந்தார். எல்லோரும் விலகினர்கள். இதை அறிந்த அரசகுமாரன்முதல் எல்லோர்களும் மிகுந்த பதஸ்டமுடன் இவரிடம் ஓடி வந்து இவர்களைப் பார்த்தனன். வியப்பும் பிரமையுமுடையவர்களாய் ஒன்றும் பேசாது நின்றார்கள். அப்பெரியவர் அரச குமாரனை நோக்கி உன்னுடைய குடிசனங்களைப் போன்று நாங்களும் எங்களுடைய கடமையைச்செய்து முடித்தோம். இனி மேல் உன்னுடைய இஷ்டம் இவர்களையும் இவர்களுடைய சேனைகளையும் நீ ஒப்புக்கொள். நாங்கள் வீட்டுக்குச செல்லுகின்றோமென்றனர். அப்பொழுது அரசகுமாரன் பதஸ்ட்டமுடன் நீங்கள் எங்கே இருக்கின்றது, என்றனன். இங்குதான் உன்னுடைய பட்டினத்திலேயே இருக்கின்றோமென்பதாகக் கூறிக்கொண்டேசென்றார்கள்.

உடனே ஆலயத்திற்குள் அவர்கள் வேகமுடன் சென்றதும் கதவுகள் சாத்திக்கொண்டன. இதைக் கண்ட எல்லோர்களும் ஆனந்தப்பிரவாகத்திலுல் ஆடிப்பாடிக் குதித்து, ஏ பரமேச்சுரா, ஏ கருணைகரா, ஏ கைலாசவாசா, ஏ பிரபு என்று இன்னும் பலவிதமாகப் போற்றித் துதித்து வணங்கி, ஏ கடவுள நீதானு இவ்வித வடிவமுடன் வந்து இத்தனை காரியங்களைச் செய்து மறைந்தனை. நினது திருவிளையாடல்தான் என்னே என்னே. நின்பெருமை தானென்னே என்னே. சண்டாளர்களாகிய எங்கள் நிமித்தமாகவாஅரி, அயன் முதலாகத் தேவர்களும் மற்றும் சித்தர் முனிவர்களும் முடி தீண்டத் தேடியும் அறியாத நின்திருப்பாதங்கள் மண் தீண்ட இவ்வடிவுடன் வந்தீர் என்பதாக ஆனந்த அருவி சொரிய அழுதும் சிரித்தும் வெகு நேரம் எல்லோர்களும் நின்று அதன் பிறகு மிகுந்த சந்தோஷமுற்று எல்லோர்களுமாக அந்தச் சுவாமிகளிடத்திற்

சென்று சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து இவ்விஷயங் களையெல்லாம் கூறினர்கள்.

இவைகளைச் செவியுற்றுப் புன்முறுவலுடன் சிரித்துப் பின்பு எல்லோர்களையும் அமரச்செய்து அந்த அரசன் மந்திரி முதலானவர்களுக்கும் அந்தக் கோலத்தை நீக்கி ஆடைகள் அணியச்செய்து சந்தோஷமுடன் அமரும்படி செய்தார். எல்லோர்களும் பயபத்தியுடன் அமைதியாக இருந்தார்கள். அப்பொழுது சுவாமியானவர் அவ்வரசர் களை நோக்கி ஐயா நீங்கள் மேலான அறிவோடும் கூடிய மனிதர்கள்தானே நீங்கள் செய்ததெல்லாம் அனீதமும் மிருகத்தன்மையும் சண்டாளத்தன்மையுமல்லவா உலகில் அரசரென்றால் தன்னுயிர்போல் மண்ணுயிரையெல்லாம் பாவித்துத் தம் குழந்தைகளைப் போன்றும் பிரிய அன்பர் களைப்போன்றும் கருதி அன்புடன் ஆதரிப்பதும் அவர் களும் அரசர்களைத் தாய் தந்தையராகவும் குருவாகவும், தெய்வமாகவும் பாவித்து அன்பு பத்தியுடன் நடப்பதும் கிரமமாகும். அப்படி இருக்க நீங்கள் சிறிதும் கருணை யின்றிக் குடிஜனங்களை அனீதமாக வருத்தி அதனால் அவர் கள் பலவிதக் கஷ்ட நஷ்டமடைந்து சகிக்காது இவ்வரச குமாரனுடைய தேசத்தில் வந்து குடி புகுந்தால் அவர்களை இவன் ஆதரிப்பது குற்றமா.

இதற்காக முன்பு ஒருசமயம் திடீரென்று யுத்தத்திற்கு வந்தீர்களல்லவா அப்பொழுது உங்களுடைய கெதியென்ன ஆயிற்று. அபபொழுதாவது புத்தி வரவில்லையா ஈசசரனுடைய பெருமையும் சக்தியும் இவ்வரச குமார னுடைய அன்பு, பத்தியும் பெருமையும் நீங்கள் அறியாது மீண்டும் இப்பொழுதும் யுத்தத்திற்கு வந்தீர்களல்லவா இப்பொழுதும் என்ன ஆயிற்று. உங்களுடைய பலமெங்கே. வீரமெங்கே சாமர்த்தியமெங்கே யுத்தப் பயிற்சி யெங்கே ஆயுதமெங்கே வெட்கமெங்கே மானமெங்கே அரசனென் னும் நிலையெங்கே, இவையெல்லாம் எங்கு போயிற்று. இவ்வரசகுமாரனுடைய அரச நீதியும், அன்பும், சத்தியமும், பத்தியும் இதனால் அவனுக்கு ஏற்பட்டுள்ள பெருமையும் இப்பொழுதாவது அறிந்தீர்களா மேலும் உங்களுக்கு நீங்கள் சம்பளம் கொடுத்து வைத்திருக்கும் வீரர்கள் தவிர வேறு எவர்கள் வந்துள்ளார்கள். இதோ சுற்றிலும் எழுந்து பாருங்கள். இத்தேசத்திலுள்ள சர்வ ஆண்களும் பெண்

களும் தெரிவிக்காமல்இருந்தும் கேள்வியுற்றுஎல்லோர்களும் ஆயுதங்களுடன் தங்களுடைய உயிர்முதற் சர்வ பற்றுகளையும் விடுத்துவந்தும் அரசகுமாரனையும் யுத்தத்திற்குச் செல்லாதபடி அழுது வணங்கித் தடுத்துத் தாங்களே புறப்பட்டார்கள். என்ன அன்பு எவ்வளவு அபிமானம் பார்த்தீர்களா, இதுவல்லவா அரசனுக்கும் குடிகளுக்கும் பொருத்தமாகும். உங்களுடைய குடிஜனங்களெல்லாம் நீங்கள் எப்பொழுது ஒழிவீர்களென்றல்லவா பிரார்த்திக்கின்றார்கள். இதற்குக் காரணம் நீங்கள் தானே. இது ஒரு அரசாட்சியாகுமா நீங்கள் தான் இன்னும் எத்தனை நாள் வாழப்போகின்றீர்கள் என்பதாக இன்னும் பல வாக்கியங்களை யெடுத்துக்கூறி இனிமேலாவது அன்பு, பத்தி, ஒழுக்கம், தருமம், சத்தியம், நீதி, பொறுமை முதலிய நற்குணங்களைப் பெற்று உங்களுடைய குடிஜனங்களுக்கு இதனைப் போதித்து நிலவச் செய்து மற்றும் பல சீர்த்திருத்தங்களும் செய்து இவ்வரசகுமாரனையும் இத்தேசத்தையும் போன்று நீங்களும் உங்களுடைய தேசமும் செழிப்புற்று எக்குறைவு மற்று ஆனந்தமாக வாழப்பெறவும் நாங்கள் எல்லோர்களும் வந்து அதனைக்கண்டு இன்புறவும் வேண்டுமென்றனர் இதனைக்கேட்ட அரசர்களும் மந்திரிகளும் சேனாதிபதிகளும் எழுந்து வணங்கி அப்படியே செய்கின்றோமென்றார்கள். பின்பு அவர்களை ஒருவாரம் அங்கே இருக்கும்படிகூறி அவர்களுடைய சேனைகளுக்கும் அரசகுமாரனுடைய தேசத்திலிருந்து வந்திருந்த எல்லா ஆண் பெண்களுக்கும் சந்தோஷகரமாக ஆகிர்வாதம் செய்து அங்கங்கே செல்லும்படியாக அனுப்பிவிட்டு இவர்களை ஒரு வாரம் வைத்திருந்து அவர்களுக்கு ஈச்சுரனுடைய ஜெபம், தபம், பூசை, தியானம் முதலியவைகளைக் கூறி ஈடுபடுத்தி மற்றும் பல சத்விஷயங்களையும் போதித்துப் பின்பு அரசகுமாரனையும் சாமியார் மந்திரியையும் அழைத்து இவர்களையெல்லாம் கூட்டிச் சென்று உன்தேசத்தில் ஒவ்வோரிடங்களிலும் ஏற்பட்டு நடைபெறக் கூடிய எல்லா விஷயங்களையும் காண்பித்து வரும்படி செய்து இவ்விதமாகவே உங்களுடைய தேசமெங்கும் ஏற்படுத்தி நடைபெறச் செய்து பின்பு என்னிடம் வந்து தெரிவிக்க வேண்டுமென்று கூறி விடை கொடுத்து அனுப்பினர். அதன் பிறகு அவ்வரசர்களும் அவ்விதமே உத்தம நிலையை அடைந்து அவர்கள் தேசமுழுதும் மாதமும்மாரி பெய்து அமோகமாக விளைந்து செழிப்புற்றன. குடிகளிடத்

தில் மிகுந்த அன்பும் அபிமானமும் கொண்டார்கள் அவர்களும் மிகுந்த அன்பும் அபிமானமும கொண்டு நடந்தார்கள். சில வருடத்திற்கெல்லாம் இங்கே ஏற்பட்டுள்ள பிரகாரம் அங்கங்கே ஆலயங்களும் திருக்குளங்களும் மடாலயங்களும் அன்னச் சத்திரங்களும், மண்டபங்களும், வைத்தியசாலைகளும், பாடசாலைகளும், தண்ணீர்ப்பந்தல்களும், வாவிகளும், சாலைகளும், சோலைகளும் யெங்கும் ஏற்படுத்தி அவைகள் நடைபெறும்படியாகவும் செய்து பின்பு இவர்களிடம் வந்து அன்பு, பதியுடன் வணங்கி இதைத் தெரிவித்துச் சுவாமிகளையும் அரசகுமாரனையும் மந்திரியையும் அங்கே அழைத்துச் சென்று சோடச உபசாரங்களும் அபிஷேக அலங்காரம், தூபம், தீபம், பூசை முதலியவைகளும் செய்வித்து வணங்கிப் போற்றிப் பின்பு இவைகளையெல்லாம் அங்கங்கே அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்து மிகுந்த ஆனந்தம் அடையச் செய்தார்கள். அங்கே உள்ள எல்லாக் குடிஜனங்களும் இவர்களை அன்பு, பத்தியுடன் வணங்கி யேற்றிப் போற்றினர்கள்.

அதன் பிறகு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்தார்கள. இத்தேசங்களெல்லாம் செழிப்புற்று ஆனந்தமாக நிலவுகின்றதைப் பற்றி நாரதர் மூலமாகக் கேள்வியுற்ற இந்திரன் முதற் தேவர்களெல்லாம் வியப்புற்றுக்காண விரும்பிப் புறப்பட்டு வந்து எல்லாம் சுற்றிப்பார்த்து மிகுந்த வியப்பும் சந்தோஷமுமடைந்து இதற்குக் காரணமாக உள்ள அந்தச் சுவாமிகளையும் வணங்கிப் போற்றித் துதித்து அரசகுமாரனையும் சாமியார் மந்திரியையும் புகழ்ந்து கொண்டாடி விடைபெற்றுச் சென்றார்கள். அதன் பிறகு சில வருடம் சென்று சுவாமிகள் முத்திப் பதவியை அடையப் பெற்றனர். பின்பு அரசகுமாரனும் மந்திரியும் சில காலம் ஆனந்தமாக வாழப் பெற்று பற்றற்ற ஆத்மஞான நிலையும் சதாத்தியானநிலையும் அடையப்பெற்று பின்பு சிவலோக பதவியை அடையப் பெற்றார்கள்.

சுபம்

திருச்சிற்றம்பலம்.

———

(3-வது)

சிவானந்தன் சரிதம்

முன் ஒரு காலத்தில் மருவூர் என்னும் ஓர் கிராமத்தில் மலை அப்பர் யென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிறு வயதில் கெட்டநடவடிக்கைகளும் போக்கிரித்தனங்களும் பல அக்கிரமங்களும் உடையவராக இருந்தார். அவ்வூர் கர்ணம், வேலையும் இவர் பார்த்து வந்தார். பல திருட்டுக்கணக்கு களும் உருட்டுப்பிரட்டுகளும் பொய்ச் சாட்சிகளும்கூறி மிக ஆடம்பரமாக வாழப்பெற்றார். இவரைக்கண்டால் எல்லோர் களுக்கும் பயமாகவும் வெறுப்பாகவும் இருக்கும். அதன் பிறகு முனிசீப் வேலையும் இவருக்கே ஏற்பட்டது. ஆனால் இவருக்கு சாதுக்களிடத்தில் மட்டும் ஒரு வகையில் பிரிய முண்டு. இப்படி யிருக்க யாத்திரை வாசியாக் அங்கே ஒரு உத்தமமான சாதுவானவர் வந்தார். இவருக்கு ஆடம்பர மாக உணவு முதலியவைகள் அளித்துப் பின்பு சுவாமி தங்களுக்கு ரசவாதம், மந்திரம், சோதிடம், வைத்தியம் முதலியவைகள் ஏதேனும் தெரியுமா என்று கேட்டார். இதைக்கேட்டவுடன் ஐயா நமக்கு இவைகள் ஒன்றும் தெரியாது என்றனர். பின்பு என்ன தான தெரியும் என்றார். ஐயா எங்களுக்கு எத்தொழிலும் எந்த விபகாரமும எதற்கு வேண்டும். சதா ஈச்சர தியானத்தோடும் கூடிய நிட்டையே எங்களுடைய தொழிலாகு மென்றனர். அடடே இது தான சாதுக்கள் வேலை. இதனல் என்ன அடைவார்கள் என்றார். இதனல் துன்பங்களுக்குக் காரணமாகிய பவப்பிணியை நீத்து ஈச்சரனே அடையப்பெறுவார்கள். என்பதாகக்கூறிப் பின்பு அவரைப்பல விதமாகச்சமாதானப்படுத்தி அன்பு பத்தி,ஞானம், ஒழுக்கம், தருமம், பொறுமை, சத்தியம், நீதி முதலியவைகளையும் உலகில் நித்திய அனித்தியங்களையும் இவருக்கு விளங்குமாறு மிகச்சுலபமாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினர்.

இவைகளையெல்லாம் மிகுந்த கவனமாக ஏகமனதுடன் கேட்டபடியால் அறிவின் விளக்கமும் உண்மையும் உடனே விளங்கப் பெற்று மிகுந்த சந்தோஷமுடன் அச்சாதுவை ஒருவாரம் வரையில் வைத்திருந்து மற்றும் பல சத்விடயங் களையும் பகரக் கேட்டுப் பின்பு அவரை அனுப்பிவிட்டு

இவர் கூறியவைகளையெல்லாம் தனிமையாக இருந்து யோசித்தார். இவருடைய நடத்தையெல்லாம் இவருக்கே வெட்கமாகவும் கேவலமாகவும் புலப்பட்டது.

ஐயோ நான் இதுவரையில் மிருகத்தனமாகவும், மூடத்தனமாகவும் குருட்டுத்தனமாகவுமல்லவா வாழ்ந்திருக்கின்றேன். எவ்வளவு திருட்டுக்கணக்குகள் எழுதினேன். எவ்வளவு குடும்பங்களைக் கெடுத்தேன். எத்தனை பெண்களைக் கற்பழித்தேன். எத்தனை பொய்ச்சாட்சிகள் புகன்றேன். எத்தனை பெயர்களை அடித்து வருந்தச் செய்தேன். எவ்வளவு லஞ்சம வாங்கினேன். இன்னும் என்னென்ன தீய காரியங்கள் உண்டோ எல்லாம் செய்தும் இதுவரை நான் என்ன அடைந்திருக்கின்றேன்? உண்டதும உறங்கியதும எல்லோரும் என்னைக்கண்டால் தூஷித்து வெறுப்பதும் தான் கண்டிருக்கின்றேன் என்பதாகப் பலவிதம் சிந்தித்து, மனம வருந்தி அழுது தன்னுடைய ஆடம்பரமான வேடத்தையும் நீத்து வைதிகமான வேடத்தைக் கொண்டார் கர்ணம், முனிசிப் உத்தியோகத்தையும் ராஜிநாமாச் செய்தார். பல பேர்கள் மறுத்தும் கேட்க வில்லை பின்பு முன்னிருந்த வீடு தவிர தான் அக்கிரமாகச் சம்பாதித்தவையெல்லாம் தானதருமங்களுக்கு எழுதிவிட்டார். நடையுடை வார்த்தை முதலியவையெல்லாம மிக எளிய நிலைமையாகக் கொண்டார். வீதியில் நின்று ஏ பரமேச்சுரா நீயும் ஏ சனங்களே நீங்களும் நான் இது வரையில் அறியாமற் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளுங்களெனபதாகக் கீழே விழுந்து வணங்கினர்.

பின்பு வீட்டுக்கு வந்து முத்தம்மாள் என்னும் தன் மனைவியை நோக்கி நீயே அறிவும் கண்ணும் மனிதத் தன்மையும் உடைய உத்தமமான பெண். உன் பெருமையை அறியாது நான் பாவி. உன்னுடைய நன்னடத்தைகளையெல்லாம் தீயதாகக்கொண்டு வெறுத்தேன் பலவிதம் திட்டினேன். அடித்தேன். இதையெல்லாம் பொறுத்துக்கொள்ளென்று வணங்கினர். இதைக்கண்டு அவள் பிரமித்து நின்றாள். அவள் ஏற்கனவே மிகுந்த அன்பு, பத்தி, ஒழுக்கம், தருமம், பொறுமை, கற்பு முதலிய எல்லா நற்குணங்களும் வாய்ந்தவள். இவருடைய நடத்தைகள் சிறிதும் பிடிக்காது. மனம் வருந்திக்கொண்டும் ஈச்சுரனைப்

பிரார்த்தித்துக் கொண்டுமிருந்தாள் பின்பு இதைக்கண்ட வுடன் மிகவும் சந்தேகித்தும் சந்தோஷித்தும் அது முதல் இருவரும் ஈச்சுரனே அன்பு, பக்தியுடன் பூசிப்பதும் ஆனந்த மாகவும் உருக்கமாகவும் பாடுவதும் சதா சிவசிவ பென்றே சிந்திப்பதும், சாதுக்களுக்கோ ஏழைகளுக்கோ முன்னதாக அன்னமளித்துப் பின்பு தாங்கள் சாப்பிடுவதும் எறும்பு முதல் எல்லாச் சிவரிடத்தும் மிகுந்த கருணை வைத்து நடக்கும்பொழுது கீழே பார்த்து மெதுவாக் நடந்து செல் வதும் எவர்களிடத்தும்சேராது தனிமையாகவே வசிப்பது மாக இருந்து வந்தார்கள். இவைகளை அறிந்த அவ்வூரி லுள்ள எல்லோர்களும் மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தார்கள்.

அதன் பிறகு இவர்களுக்குச் சிவனத்திற்குக் கஷ்ட மாயிற்று. எல்லாம் ஈச்சுரன செயல் என்பதாகத் திட முடன இருந்து வரும் பொழுது அவ்வூரில் ஒரு பெரியவர் வெகுநாளாகப் பளளிக்கூடம் வைத்து நடத்தி வந்தார். பினபு அவருக்கு வயதான படியால் இவரிடம வந்து ஐயா என்னால் முடியவில்லை. நீங்களே இதை நடத்துங்கள். இது உத்தமமான வேலை உங்களுக்கும சிவனத்திற்கு உதவும். உலகிற்கும் பெரும் உபகாரமாகவும் இருக்கின்றது என்ப தாகக் கூறி வற்புறுத்தலாக ஏற்படுத்தினர். இவரும் சரியென்று ஒப்புக்கொண்டு குழந்தைகளுக்கு மிகுந்த அன்புடன் உண்மையாகப் போதித்தும் காலை மாலையில் ஈச்சுரனைப் பூசிக்கும்படியாகவும் சுத்தமாகவும் ஒழுக்கமாக வும் இருக்குமபடியாக ஏற்படுத்திப் பல தோத்திரபாடல் களையும் கற்றுக்கொடுத்து வந்தனர். இந்தக்குழந்தைகளுக் கும் மற்ற சனங்களுக்கும மிகுந்த சந்தோஷகரமாக இருந்தது.

இப்படியிருக்க அவ்வூரிலுள்ள ஒருபணக்காரன் இவரை ஒரு பொய்ச் சாட்சி கூறும்படிக்கு ஏற்படுத்தினன், இவர் இதைக்கேட்டு சிவ சிவ வென்று காதை மறைத்துக் கொண்டு மறுத்தும் கேட்காது பிடித்து இழுத்துச் சென்று சபையில் விட்டான். இவர்எனக்கு ஒன்றும தெரியாது, என்பதாகக் கூறி உடனே வந்துவிட்டார். இதனால் அவ னுக்கு தோல்வி யுற்று இவர்பேரில் மிகுந்த கோபமுற்று அவ்வூரில் இலவசமாக ஓர் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி வேறு உபாத்தியாயர்களை ஏற் படுத்தினன். எல்லாப்பிள்ளைகளும

அங்கே சென்றன. இரண்டு மூன்று பிள்ளைகளே வந்தன. இவர் அறிந்து ஈச்சுரா! இதுவும் உன் திருவிளையாடல் தான் எல்லாம் ஒரு நன்மைக்காகவே தான் செய்கின்ரு யென்பதாகத் துதித்துத் திடமுடன் இருவரும் இருக்கும் பொழுது இவருக்கு ஓர் ஆண் குழந்தை நல்ல தினத்தில் உற்பவித்தன. இதனைக் கண்டு இதுவும் ஒரு நன்மைக் கென்றே சந்தோஷித்திருந்து பின்பு அக்குழந்தைக்கு சிவானந்தன் என்பதாக நாமகரணமும் சூட்டிக் குழந்தைப் பருவத்திலேயே தங்களைப் போலவே எல்லா வழிகளிலும் பழக்கி வந்தார்கள்.

இவ்விதமிருக்கச் சிறிது தூரத்திலுள்ள கோசரமென் னும் பட்டினத்திலிருந்து இவருடைய சினேகிதர் ஒருவர் பார்ப்பதற்காக வந்து இவர்களுடைய நிலைமையைக்கண்டு மனம் வருந்தி அவ்விட்டை விற்கிரயம் செய்துவிட்டு இவர் களை அழைத்துச் சென்று அப்பட்டினத்தில் ஓர் சிறிய விடு ஒன்று ஏற்படுத்தி இவரை ஓர் பெரிய தனவந்தரிடம் கணக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தார். இதைக் கேட்ட வுடன் சிவ சிவ வென்று செவியை மூடிக்கொண்டு ஐயா போதும் போதும் அச்சண்டாளத் தொழிலும் வேண்டாம். வேறு தொழிலும் வேண்டாம். நான் வீடுகள் தோறும் ஈச்சுரனை ஆனந்தமாகப் பாடிக்கொண்டு அன்புடன் அவர் கள் அளிக்கும் அரிசியை வாங்கி அதைக்கொண்டு சிவிப் பதே உயர்ந்த தொழிலும் மிகுந்த செல்வமுமாகக் கொண் டிருக்கின்றேன். இவ்வார்த்தைகளை விட்டு விடுங்கள் என்றனர்.

ஐயா இந்த வேலையில் பொய், பிறட்டுப் பித்தலாட்டம் ஒன்றுமில்லை. வரவு செலவை அவர்கள் கூறுவார்கள். அதையெழுதிவைக்க வேண்டியதுதான். வேறு வேலை ஒன்றுமில்லை. இன்னும் சில கணக்கப் பிள்ளைகளும் மானேஜருமிருக்கின்ருர்கள் என்பதாக இன்னும் பல சமா தானங்களைக் கூறி சில நாள் இருங்கள். பிடிக்காவிடில் நீங்கிவிடலாமென்று பலாத்காரமாகக் கொண்டு போய் ஏற்படுத்தினர். இவரும் ஈச்சுரா இதுவும் ஒரு நன்மைக்கே செய்கின்ருயென்பதாக அவ்விதமே அவ்வேலையைப் பார்த் துக் கொண்டும் ஈச்சுரனைப் பூசித்துக் கொண்டும் அன்புருகப் பாடிக்கொண்டும் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்புடன்

அன்னம் நீராகார முதலியவை அளித்துக் கொண்டும் தன் குமாரனையும் தங்களைப் போலவே நல்வழிகளிலேயே பழக்கி அவனுக்கும் இனிமையான தோத்திரப் பாடல்களையும் கற்றுக்கொடுத்து மேலும் அக்குழந்தையிடம் அப்பா நீ கடவுளைப் பூசிக்கவேண்டும். சதாச்சிந்திக்க வேண்டும். எவ்வுயிர்களுக்கும் தீங்கோ அல்லது மனம் வருந்தவோ செய்யக் கூடாது. அவர்கள் வருந்தக்கண்டால் நீயும் துக்கித்து உன்னால் ஆன உதவியைச் செய்யவேண்டும். பொய் புகலக்கூடாது. கொலை, களவு, காமம் முதலிய கெட்ட நடத்தை உடையவர்களிடத்தும் அன்பு, பத்தி. ஒழுக்கமில்லாத சோம்பேறிகளிடத்திலும் சேரக்கூடாது, எவர்கள் உன்னைத்திட்டினும் அடிக்கினும் அல்லது கெடுதி செய்யினும் பொறுத்துக் கொள்ளல் வேண்டும் பதிலாக எதுவும் செய்யக் கூடாது. எது கிடைக்கினும் அதைச் சந்தோஷமாகக் கொள்ள வேண்டும். ஆடம்பரமாக இருக்கவோ நடக்கவோ கூடாது. எல்லோரிடத்தும் அடக்கமாகவும் நடக்கும்பொழுது கீழே பார்த்து எறும்பு முதலிய பிராணிகளை விலக்கி மெதுவாகவும் நடக்கவேண்டும். சாதுக்களையோ பெரியோர்களையோ கண்டால் பாதத்தில் விழ்ந்து வணங்கி அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய வேண்டுமென்பதாக இன்னும் பல வாக்கியங்களையெல்லாம் போதித்தும் பின்பு ஒரு ஓலையில் வரைந்து கொடுத்து இதை எப்பொழுதும் உன்னுடைய மடியிலேயே வைத்துக்கொள் என்பதாகக் கூறினர். இவனும் அவ்விதமே நடந்துகொண்டும் இவ்வோலையை அடிக்கடி வாசித்து ஞாபகப்படுத்திக் கொண்டும் வந்தனன். இப்படி இருக்க.

நாகபுரி யென்னும் பட்டினத்தில் ஒரு மண்டபத்தினிடத்தே ஓர் சாதுவானவர் வசித்துக்கொண்டு நடையுடை பாவனை முதலியவைகளில் மற்ற மாந்தர்களைப்போலவே இருந்து கொண்டும் சதாத்தனிமையாகவே எவர்களிடத்தும் எதுவும் பேசாது ஈச்சர தியானத்திலேயே இருந்து வந்தனர். இவரை எவர்களும் விரும்புவதில்லை. அவ்வூரிலுள்ள அரசன் மட்டிலும் எவ்விதமாகவோ இவருடைய பெருமையை அறிந்து இவரை அழைத்துச்சென்று இவர் மறுத்தும் கேட்காது அபிஷேகம், அலங்காரம், ஊர்வல முதலியவையெல்லாம் அன்புடன் செய்து வைத்துப் பின்பு தன் அரண்மனையிலேயே சப்ரமஞ்சத்தினிடத்தே படுக்க

வைத்து அவருக்கு இராஜபோஜனங்களும் வேண்டிய பணி விடை ஆட்களும் ஏற்படுத்தி அத்துடன் தன் மனைவி, மகன், மகள் இவர்களையும் தினம் வணங்கிக் கால் கை பிடித்து வரும்படியாகவும் ஏற்படுத்தித்தானும் அவ்விதம் செய்து வந்தான். இவைகளைக்கண்ட எல்லோர்களும் ஐயோ இதுவரை இச்சாதுவினுடைய பெருமையை அறியாது போனேமே யென்பதாக ஒவ்வொருவரும் வருந்தினார்கள். இப்படி இருக்க இச்சாதுவானவருக்கு இவைகளெல்லாம் பெரும் தொந்தரவாகப் புலப்பட்டது. இதனைக் குறிப்பால் அறிந்த அரசன் வணங்கிச் சுவாமி தங்களுக்கும் இச்சரீரத்திற்கும்என்ன சம்பந்தமிருக்கின்றது. நீங்கள் பரமார்த்த நிலையில் இருக்கின்றீர்கள். எங்களுடைய கடமை இச்சரீரத்தைத் தெய்வமாகப் பாவித்து அதைப் போற்றி ஆதரித்துப் பணிவிடை செய்து அதனால் எங்களுடைய பாப கருமங்களை போக்கிப் புண்ணிய கருமங்களை அடையப் பெறுகின்றோம். இதைப்பற்றித் தாங்கள் கிலேசிக்க வேண்டாமென்றனன.

அப்பா நீ சொல்வது உண்மையே. உன்னுடைய அரண்மனைக்குள் ஒரு குளம் இருப்பின் அது உங்களுக்கே உபயோகப்படும். அக்குளம் ஊருக்குப் பொதுவில் ஏற்படின் எல்லோர்களுக்கும் எச்சிவர்களுக்கும் உபயோகப்படுமல்லவா அதைப்போன்று இச்சரீரத்தையும் கருதுவாயாக என்றார் இதைக்கேட்டுச் சுவாமி இது உண்மையே. ஆனால் எங்களுடைய ஆவலும் ஏக்கமும தீரும்வரை சிறிதுநாள் இருக்க வேண்டு மென்பதாக வேண்டிக்கேட்டனன். சரியென்று அப்படியே சிலநாள் இருந்தும் பின்பு எவர்களுக்கும் தெரியாது புறப்பட்டு ஆடை முதலிய வேடங்களையெல்லாம் நீக்கி எல்லோர்களும் பைத்தியக்காரன் என்று வெறுக்கக் கூடிய வேடத்தைக்கொண்டு யாதுமின்றிப் பல ஊர்களிலும் திரிந்து பின்பு இந்த கோசரம் என்னும் பட்டினத்தை அடைந்து பல வீதிகளிலும் திரிந்து குழைந்தைகளால் பைத்தியக்காரனென்பதாகப்பல தொந்தரவுகள் ஏறபட்டுப் பின்பு அரண்மனையின கோட்டை வாசலின் பக்கத்தில் அமர்ந்திருந்தனர். ஒரு நாள் தற்செயலாக இவரையும் குழந்தைகளின் கூட்டத்தையும் கண்ட அரசன் அப்புறப்படுத்தும்படி ஏற்படுத்தினன். அதன் பிறகு பட்டினத்திற்கு அருகிலுள்ள ஓர் பெரிய ஆலமரத்தடியில் அமர்ந்து சதாநிட்டையில் மூழ்கி இருந்து வந்தனர்.

இவரைத் தற்செயலாக ஒருநாள் சிவானந்தன் கண்டு இதைத் தாய் தந்தையருக்குத் தெரிவித்தான். அவர்களும் மிகுந்த சந்தோஷமுடன் வந்து பிரதக்ஷணமாக வந்து தெரிசித்து இவர் பெரிய மகான் என்பதாக உணர்ந்து அதுமுதல் பிரதி தினமும் அவரைத் தெரிசிப் பதும் பின்பு தினம் அன்னம் பட்சணம் முதலிய ஆகாரங் களை முன்னதாகவே எடுத்து வைத்திருந்து மிகுந்த அன் புடன் சிவானந்தனிடம் கொடுத்தனுப்பிச் சாப்பிடச் செய் வதுமாக இருந்தார்கள். அவனும் தாத்தாச் சாமியென்றே கூப்பிடுவான். சில சமயம் அவர் நிட்டையில் இருந்தால் சிறிது நேரம் நிற்பான். பின்பு மெதுவாகப் பாடுவான். அதற்கும் நீங்காவிடில் தாத்தா தாத்தா என்று கையை மெதுவாகத்தட்டுவான். பின்பு விழித்து அடேசிவானந்தமா வாவென்று தழுவித் தடவிகொடுத்துப் பின்பு ஆகாரத்தை உண்பார். அதன் பிறகு வணங்கிப் போகின்றேன. தாத்தா வென்று இனிதுடன் கூறித் திரும்பி வருவான். சில சமயம் இவனை ஆனந்தமாகப்பாடச் சொல்லிக் கேட்டுச்சந்தோஷிப பார். அடே சிவானந்தம் உன் நடத்தையும் உன்னுடைய இனிய வார்த்தையும் உன் அன்பு, பத்தியோடும கூடிய உருக்கமான பாடலும் எவர்களையும் மயக்கிவிடும் போலிருக் கின்றதே யென்பதாகக் கூறி அவனைத் தழுவுவார்.

இவ்விதமாக மிகுந்த அன்பும் சந்தோஷமும் வைத் திருந்தார். இவர்களும் பிரதி தினமும் என்ன இடையூறு கள் ஏற்படினும் இவரைத்தரிசிக்காமலும் ஆகாரம அளிக் காமலும் இருப்பதில்லை. இதைக்கண்ட எல்லோர்களும் யாரோ ஒரு பைத்தியக்காரனுக்கு இவர்களும் பைத்தியக் காரத்தனமாக வணங்குவதாகப் பரிகாசம் செய்வார்கள். இப்படி இருக்க இவர் அத்தனவந்தனிடம் கிரமமாகக் கணக்கு வேலை செய்து வந்தார். இவருக்கு எவ்விதத் தொந் தரவுமில்லை. அவர்கள் கூறும் வரவு செலவுக் கணக்குகளை உள்ளபடி எழுதுவதும், மற்ற நேரங்களில் சிவ சிவ வென்று சிந்தித்துக்கொண்டு தன்னை மறந்தும் இருப்பார். மற்ற வேலைக்காரர்களுடன் பேசுவதோ வேறு எந்த விப காரமோ இல்லாமல் தனிமையாகவே அவருடைய அறை யில் இருப்பார். அங்கே உள்ள மானேஜர் மிகுந்த ஈச்சுர பத்தியும் ஒழுகுகமும் உடையவர். இவருடைய நடவடிக் கையை அறிந்து இவர் மிகுந்த உத்தமரென்பதாக மிகுந்த

அன்பாகவும் வேறு எந்த வேலை இடாமலும் இவருக்கு கஷ்டமில்லாதபடி ஏற்படுத்தி மற்றவர்களுக்கும் இவரை எதுவும் சொல்லாதபடி அன்புடனிருக்கும்படியாகவும் ஏற்படுத்தினர். இவரும் அவரிடத்தும் மற்றவரிடத்தும் மிகுந்த அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து வந்தனர்.

இவ்விதமாகச் சில வருடங்கள் சென்றன. பின்பு அந்த மானேஜர் இறந்து விட்டனர். அவருக்குப்பதிலாக வேறு ஒருவரை ஏற்படுத்தினர்கள். அவர் உருட்டுப் பிரட்டும் லஞ்சமும் திருட்டுக்கணக்கும் ஆடம்பரமும் உடையவர். ஆகையால் இவருடைய கணக்குகள் அவருக்குப் பிடிக்க வில்லை. நேர் விரோதமாகப் பல வித்தியாசங்கள் ஏற்பட்டன. இதைக்கண்ட மானேஜரும் மற்றவர்களும் இவரை ரகசிய மாக அழைத்து ஐயா நீர் எழுதுவது சரியில்லை. எந்தெந்த இடங்களில் எதை எதைக்கூட்டிக்குறைத்து ஏழுத வேண் டுமோ அப்படி எழுத வேண்டும். இந்த முதலாளி கொடுக் கும் சம்பளத்தைக்கொண்டு ஜீவிக்க முடியாது. மேலாக ஏதாவது வருமானம் வந்தால்தான் முடியும். உனக்கும் ஒரு பாக்ம் தருகின்றோம் என்பதாகக் கூறினர்கள். இதைக் கேட்டவுடன் சிவ சிவ வென்று செவிகளை மூடிக்கொண்டு அவர்களை வணங்கி ஐயா நான் எப்பொழுதும் எழுதுவது போன்றேதான் எழுதி வருகின்றேன் ஒருவருடைய உணவை உண்டு கொண்டு அவருக்குக் கெடுதி செய்ய லாமா. மனந்தான் எப்படித்துணியும். இவருக்குத் தெரியா விடினும் கடவுளுக்குத் தெரியாதா. இவ்விதம் அநீதமாகத் திருடிச் சம்பாதித்து ஆடம்பரமாகச் சிவிப்பதிலும் உள்ள சம்பளத்தைக்கொண்டு சுருக்கமான முறையில் சிவிக்கக் கூடாதா. நான் ஒருக்காலும் உடன்படேன். என்க்கு ப்பணமும் வேண்டாமென மறுத்து விட்டனர்.

அதுமுதல் இவரை ஒழித்துவிட வேண்டுமென்பதாகக் கருதி இவரைப்பற்றிப்பல குற்றங்களும் கோள்களும் தன வந்தனிடம் கூறுவார்கள். அவன் இவரைக் கண்டபடி திட் டுவான். பின்பு சில சமயம் தாங்கள் வரவு செலவை உள்ளபடி எழுதிக்கொண்டு இவரிடம் கூடுதல் குறைவாகக் கூறுவார்கள். இவர் இது உண்மையாக நம்பி அவ்விதமே எழுதிவிடுவார். உடனே இதைக்கொண்டு போய் முதலா ளியிடம் காண்பித்து இவரைத் திருடனுக்குவார்கள். அவனும் நம்பி இவரைத்திருடன், மடையன் என்பதாகத்

திட்டிப் புத்தகங்களைத் தூக்கி முகத்தில் எரிவான். இவை களை யெல்லாம் பொறுத்துக்கொள்வார். இவர்கள் செய் யும்திருட்டுத்தனங்கள் தனக்குத் தெரிந்தும் இவர்கள் அறிவில்லாது செய்கின்றார்கள். நாம் ஏன் கெடுக்க வேண்டும். இவர்களின், மனோவிமக்கள் கஷ்டப்படு மல்லவா. உண்மையும் பொய்யும் ஒரு நாள் வெளி வரு வது நிச்சயம் அப்பொழுது அந்த இன்பதுன்பத்தை அவர் கள் அனுபவிக்கட்டும் என்பதாக ஒன்றும் கூறாது இருந்து வந்தனர்.

ஒரு நாள் இவரைப்போய் வரக் கஷ்டமான ஓர் கிராமத் திற்கு வட்டி வசூலுக்கு அனுப்பினன். இவர் என்றும் போனதில்லை. சரியென்று புறப்பட்டுச் சென்று அங்கே அவர்களின் கஷ்ட நிலைமையைக் கண்டு பரிதாபமுற்று ஐந்நூறு ரூபாய்க்கு இருநூறு ரூபாயை வாங்கிக் கொண்டு அன்று அங்கேயே தங்கி இருந்தனர். சிறிது தூரத்தில் ஆற்றோரத்திலுள்ள ஓர் கிராமத்தை வெள்ளம் அடித்து வீடுகள் முதல் எல்லாம் இழந்து ஆண்களும் பெண்களும் ஓடி வந்து இவ்வூரை அடைந்தார்கள். இதைக் கண்ட இவர் மனம வருந்தி ஐம்பது ரூபாயைக் கொடுத்து எல்லோர் களும் அரிசி முதலியவைகள் வாங்கிச் சாப்பிடும்படி கொடுத் துப் பின்பு அவ்வூரில ஓர் சிறிய சிவாலயத்தில் சுவர் ஒன்று இடிந்து போய்விட்டது. இதைக்கட்டும்படி நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டு இங்கே வந்து இவ்விஷயங் களைக் கூறி மீதியான ஐம்பது ரூபாயைக் கொடுத்தார். இதைக்கேட்டவுடன் மிகுந்த கோபமுற்று அடே யார் அப்பா வீட்டு ரூபாயைத் தருமம் செய்தாய். உடனே அதை யும் கொடு என்றான். ஐயா என்னுடைய வீடு இருக் கின்றது. அதை எழுதித் தருகின்றேனென்றனர். சரி யென்பதாக அந்த வீட்டை இருநூறு ரூபாய்க்கு கிரயமாக மதித்து 150 போக மீதம் ஐம்பது ரூபாயைக் கொடுத்து இன்னும் ஒரு மாதத்திற்குள் கால செய்யும்படிக்குக் கூறினன். சரி யென்பதாக இந்த ஐம்பது ரூபாய்க்குள் வேறு ஒரு சிறிய இல்லம் ஏற்படுத்தி அங்கே சென்று வசித் தார்கள். பின்பு இவர் வேலைக்கு ஒன்பது மணிக்கு வருவ தாகவும் வந்து எப்பொழுதும் தூங்கித் தூங்கி விழுவ தாகவும் கோள் மூட்டினர்கள்.

தனவந்தன் கோபித்து இவரை ஏன் அப்படிச் செய் கின்றாயென்றான். இவர் வணங்கிக்காலையில் தன் பணிகளைத்

தெரிவித்தார். அவன் சிரித்துக் கொண்டே அடே மடையா வயிற்றுச் சோற்றுக்கு வழி இல்லை. இதில் விட்டிற் பூசை பின்பு கோவிலிற் பூசை. அதன்பிறகு சாமியாருக்கு பூசை மேற்கொண்டும் தான தருமங்களா? அதனால் தான் ராசாதி ராசனுக இருக்கின்றாயோ நாங்களெல்லாம் செய்யாதபடியால் இந்த நிலைமையில் இருக்கின்றோமோ அடே பைத்தியக்காரா சரி, சரி. ஏதோ நீ என்னமும் செய். நாளை முதல் தினம் இங்கே எட்டுமணிக்கு வரவேண்டும். சாக்கிரதை யென்று கூறினன். மறுதினத்தில் இவர் சீக்கிரமாக எழுந்து எல்லாம முடித்தும் கோவில் திறக்க நேரமாகிவிட்டது. இதனால் மணி ஒன்பதிக்கு மேலாகி விட்டது. இவரைக் கண்டவுடன் அளவிறந்த கோபமுடன் திடீரென்று எழுந்து அடே மடையா நேற்று நான் கூறி இருந்தும் அலட்சியமாக இந்நேரமா வந்தாயென்று ஓர்அறை கொடுத்துக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி வரவேண்டாம். போ என்றனர். ஐயா என்னால் தங்களுக்கு மிகுந்த கோபமும் மனக்கஷ்டமும் கரமானது நேரும்படிக்கும் ஏற்பட்டது. இது என் குற்றந்தான். இதைப் பொறுத்துக் கொளளுங்கள நான் போய் வருகின்றே னென்பதாக வணங்கிப் பின்பு விட்டுக்கு வந்து மனைவியிடம் இதைக் கூறி ஈச்சுரன் இன்றைக்கு ஒரு நன்மை செய்தார், இனிமேல் அச்சமும் அவசரமுமில்லாது பொறுமையாக ஈச்சுரனைப் பூசிக்கலாம் ஆனால் சிவனத்திற்குத் தான் இடையூருகும், அதற்கும் ஈச்சுரன் இருக்கின்றார். பயம் வேண்டியதில்லை, என்பதாகச் சந்தோசமுடன் ஒரு வாரம் வரையில் விட்டிலுள்ளதைக் கொண்டு சிவித்தார்கள்.

அதற்குமேல் ஒன்றுமில்லை. வேறு ஆடை ஆபரணங்களோ, பண்ட பாத்திரங்களோ எதுவும் இல்லை. என் செய்வார்கள். அரிசியாவது கடன் வாங்குவ தென்றால் மீண்டும் எப்படிக் கொடுப்பது என்று யோசித்துத் தாங்கள் மூன்று நாள் வரையில் நீராகாரத்தையே உட்கொண்டு சுவாமிக்கு மட்டிலும் சிறிது உணவு அனுப்பி வந்தார்கள். பின்பு சனங்கள் அதிகமாக வந்தபடியால் நீராகாரமும் செலவாகி விட்டது. அரிசியுமில்லை. ஒரு செம்பு நீராகாரமட்டிலும் சுவாமிகளுக்காக எடுத்து வைத்திருந்தார்கள். இவர்களுக்குச் சுரமும குளிரும் மிகுதியாக ஏற்பட்டுப் படுத்துக்கொண்டு சிவானந்தனிடம் நீராகாரத்தைக் கொடுத்து

அன்புடன் சுவாமிகளுக்கு அளித்துத் தங்கள் நிலைமையும் கூறி வரும்படி தெரிவித்தார்கள். அவனும் அப்படியே சென்றான். அவர் நிட்டையில் இருந்தார். பக்கத்தில் ஓர் இலையிற் பிரசாதங்களும் மற்றோர் இலையில் பழங்களும் இருந்தன. இவன் கரத்தை மெதுவாகத் தட்டியெழுப்பினான் அவர் விழித்து சிவானந்தமா வாவென்று அதை வாங்கி மடமட வென்று சாப்பிட்டுவிட்டு அடே சிவானந்தம் இது ஏது? இவ்வளவு திவ்யமாக இருக்கின்றதே பசியெல்லாம் பறந்து போயிற்றே என்று அவனைத் தழுவினார்.

இவன் தன் தகப்பனாரை வேலையை விட்டு அடித்துத் துரத்தியதையும் கஷ்ட நிலைமையையும் தாய் தந்தையர் குளிரும் சுரமுமாக இருப்பதையும் கூறினான். இதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டு அப்படியா சரி சரி அடே இது என்ன இங்கே இருக்கின்றது என்றனர். சுவாமி இது முன்னதாகவே இருக்கின்றது என்றனன். ஓகோ எவர்களோ வைத்திருக்கின்றார்கள். எனக்குப் பசி போய்விட்டது. நீ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் பாடு பார்க்கலாம் என்றனர். அவ்விதமே சிறிது சாப்பிட்டு விட்டு இனிமையுடன் பாடினான். அவர் மிகுந்த சந்தோஷமுடன் கேட்டுக்கொண்டிருந்தார். இங்கே இவர்கள் மிகுந்த குளிர்சுரமுடனும், பசியுடனும், படுத்திருக்கும் பொழுது பழுத்து நரைத்த சாது ஒருவர் ஓர் தடியை ஊன்றிக்கொண்டும் ஓர் செம்பும் மூட்டையும் வைத்துக்கொண்டும் இவர்கள் வீட்டில் வந்து அம்மா பிச்சை போடம்மா என்று பல தடவை கூறினார்.

இதைக்கேட்டு இவர்களுக்கு மனம் வருந்தியது. எழுந்திருக்கவும் கூடவில்லை. மற்றும் இவருக்கு என்ன சொல்லி அனுப்புவது என்றும் வருத்தமுடன் பேசாது படுத்திருந்தார்கள். பின்பு இவர் மீண்டும் உறக்கப் பல தடவை கூவினார். இதைக்கேட்ட பக்கத்துவீட்டுச்சனங்கள் வந்து ஏ சாமியாரே நீ கிழவனாக இருந்தும் புத்தி இருக்கா இல்லையா? அவர்கள் பாபம் மூன்று நாளாகப் பட்டினியாக இருக்கின்றார்கள். அத்துடன் குளிர் சுரமும் ஏற்பட்டு வருந்தும்பொழுது உனக்குக்கொண்டாட்டமாகவா இருக்கின்றது வந்து நின்று நின்று தான் அவர்களைப் பாழாக்கினீர்கள். இப்பொழுதும் வந்து பெரும் கூச்சல் போடுகின்றாயே அப்புறம் போ என்பதாகக்கோபமுடன் கூறினார்கள்

இதற்குள் அவர்கள் மெதுவாக எழுந்து வந்து கதவடியில் நின்று இவரை வணங்கிச் சுவாமி தாங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டு மென்பதாகத் தங்களுடைய நிலைமையைக் கூறினர்கள். இதைக்கேட்டவுடன் அடா பாவிகளே இதை அப்பொழுதே சொல்லக்கூடாதா என்னே இவ்வளவு நேரம் தொண்டை நோகக் கத்தவைத்தும், பக்கத்திலுள்ள ஆண் களும் பெண்களும் வந்து,கண்டபிடி திட்டியும் தாஷித்ததின் பிற்பாடு வந்தா தெரிவிக்கின்றீர்கள். அடே சண்டாளர் களே இந்த அனீதம் செய்யலாமா, இப்படித்தான் நீங்கள் தர்மஞ் செய்தீர்கள். என்பதாக இன்னும் பலவிதம் கூறி ஏதோ கொடுத்து இழந்தவர் மாதிரியாகக் கோபமுடனும் அதிகாரமுடனும் பெரும் கூச்சலுடன் பேசினர். பெரும் கூட்டமாக எற்பட்டது.

இப்படி இருக்க அங்கே சுவாமியானவர். சிவானந்தனை நோக்கிப் பாடியது போதும் இதை எடுத்துக் கொண்டு போய் உன் தாய் தந்தையர்களுக்குக் கொடு என்பதாகக் கூறி அனுப்பினர். அவ்விதமே அதையெடுத்துக் கொண்டு வரும் பொழுதே சிலவு செய்து விட்டு மீதியைக் கையிற் கொண்டு வந்தனன் இங்கே இந்தச் சுவாமிகள் நிற்பதைக் கண்டு பதஸ்ட்டமுடன் கீழே விழுந்து வணங்கி இரு பாதங் களையும் பிடித்த வண்ணம் கிடந்தான். உடனே இவர் அடே திருடா எழுந்திரு என் கால்களை விடு விடு யென்று கூறிக் கோபமுடன உதறினர். இவன் எழுந்து கைகளைக் கட்டிக் கொண்டு பயபக்தியுடன் நின்றான். அடே நீயார் என்றார் சுவாமி இவ் விட்டுக்காரரின் குமாரன் என்றான். ஓகோ சரி சரி நீயும் பலே திருட்டுப்பையன்தான். ஏமாற்றியா கும்பிடுகிறாய் என்று பலவிதம் கூறினர். பின்பு இங்கு நடந்த விஷயங்களை விசாரித்து இவரை நோக்கி சுவாமி நாங்கள் செய்யும் குற்றங்களை யெல்லாம் தாங்கள் பொறுக் காது வேறு எவர்கள் பொறுக்க முடியுமென்பதாக இவனும் பின்பு அவர்கள் இருவரும் சாஷ்ட்டாங்கமாக வணங்கினர் கள். பின்பு கோபம் சிறிது தீர்ந்தவர் போல் திருணையில் உட்கார்ந்தார்.

அதன் பிறகு அடே என்னிடத்தில் பிச்சை வாங்கிய அரிசி கொஞ்சமிருக்கின்றது. அதையாவது சமைத்துக் கொடுக்க முடியுமா என்றனர். சரி அப்படியே செய்து தருகின்றேமென்றார்கள். அடே சுளித்துச் சுத்தமாக

எனக்கு வேறு உங்களுக்கு வேறுகச் சமைக்க வேண்டு மென்பதாக உள்ளே வந்து அரிசியைக் கொடுத்தார். அன்புடன் வாங்கி சுளிர் சுரத்தையும் பாராது சுளித்து விட்டுச் சமைக்க ஆரம்பித்தார்கள் அப்பொழுது இவர் உட்கார்ந்து சிவானந்தனை நோக்கி நீ நல்ல பையனுக இருக் கின்றயென்பதாகத் தடவிக் கொடுத்து உனக்கு பாடத் தெரியுமா என்றனர். ஆம் சுவாமி பாடுவேனென்று அன்பும், பத்தியும் ததும்ப உருக்கமுடன் இனிமையாகப் பாடினான். இதைக்கேட்டு மிகுந்த சந்தோஷமுற்றுப் பின்பு மூட்டையை அவிழ்த்து ஒரு பொன் முடிப்பையும், மற்றொரு பண முடிப்பையும் எடுத்து இவர்கள் மூவரையும் நோக்கி இதை இரண்டு தனவந்தர்கள் மடம் கட்டுவதற்காகக் கொடுத்தார்கள். பின்பு மடம் கட்டினால் பெரும் விவகார மும் சூடும்பமாகவும் ஏற்படுவதால் கட்ட இஷ்டமில்லை. ஆகையால் இதைச் சுமந்துகொண்டும் பாதுகாத்துக் கொண்டும் திரிவது கஷ்டமாக இருக்கின்றது. இதை நீங்களே வாங்கிக் கொள்ளுங்களென்று தூக்கிக்கொடுத் தார். அவர்கள் கேட்டு மூவரும் கீழே விழுந்து வணங்கி மறுத்து விட்டார்கள்.

உடனே இவர் எழுந்து வெளியே வந்து பக்கத்திலுள்ள வர்களைக் கூவி அழைத்து நீங்கள் இவர்களை ஏழை யென்றும் மூன்று நாள் பட்டினியென்றும் கூறி என்னைத் திட்டினீர்களே. இதோ பாருங்கள், இதைக் கொடுத்தும் வாங்காது மறுக்கின்றார்கள். இவர்கள் திருட்டுத்தனம் எனக்கல்லவோ தெரியுமென்பதாகப் பலவிதம் உறக்கக் கூவினர். இதைக் கேட்ட எல்லோரும் ஓடி வந்து ஏ, பைத்தியக்காரர்களே ஏன் கொடுப்பதை மறுக்கின்றீர்கள். வாங்கிக் கொள்ளுங்களென்று பலவந்தப் படுத்தினர்கள்.

ஐயோ இது மடம் கட்டுவதற்காக வாங்கியது. நமக்கு வேண்டாமென்று பல சமாதானங்களைக் கூறினர்கள். எல்லோரும் மிகுந்த ஆசையுடனும் வயிற்றெரிச்சலுடனும் போய்விட்டார்கள் அதன் பிறகு அம்முடிப்புகளைத் தன் னுடைய மூட்டையில் கட்டிவைத்து மற்ற செம்பு தடி முதலி யவைகளையும் அங்கே வைத்து அடே சிவானந்தம் நீ இதைப் பார்த்துக்கொள். நான் குளத்திற்குச் சென்று ஸ்நானம், பூசை முதலியவைகளை முடித்துக்கொண்டு வருகின்றேன், அதற்குள் சமையற் செய்து நீங்கள் மூவரும் திருப்தியாகச்

சாப்பிட்டுவிட்டு என்னுடைய சோற்றை வைத்திருங்கள். நீங்கள் சாப்பிடாது வயிற்றெரிச்சலுடன் எனக்குப் படைக்கக் கூடாது என்பதாகக் கூறிச் சென்றனர்.

அதன் பிரகாரம் இவருக்குத் தனியாகச் செய்து வைத்து விட்டுப் பின்பு தங்களுக்குச் செய்து தாத்தாச் சுவாமிகளுக்கு முன்னதாகவே எடுத்து வைத்தும் பின்பு இவர்கள் மூவரும் உண்டு அதன் பின்பு தாத்தாச்சுவாமிக்குக் கொண்டு வந்து கொடுத்து உண்ணச் செய்து இங்கு நடந்துள்ள விடயங்களையெல்லாம் கூறினர். இதைக் கேட்டு அளவில்லாச் சந்தோஷமுடன் வெகு நேரம் வரை சிரித்தார். இவனும் சிரித்தான் பின்பு அடே சிவானந்தம் சிக்கிரம் போ யென்பதாக அனுப்பினர். அவ்விதமே வந்து சேர்ந்தான். இவர்களுக்குக் குளித்தவுடன் குளிர் சுரமும் போய்விட்டது. பின்பு மூவரும் அந்தச் சாமியானவர் வருவாரென்பதாக வெகு நேரம் வரை பார்த்திருந்தும் அவர் வரவில்லை. பின்பு இவர்கள் தேடிச் சென்று கோவில், குளம், சத்திரம், மடம், மண்டபம் முதலிய மற்ற இடங்களெல்லாம் தேடியும் காணவில்லை மிகுந்த கவலையுடன் விடு வந்து அவர் எங்கு சென்றாரோ மிகுந்த பசியுடன் இருந்தாரே காணுமே. இந்த மூட்டையும் இருக்கின்றதே இதை என்ன செய்வது என்று கூறிப் பின்பு மறுபடியும் தேடினர்கள் காணவில்லை.

மறுநாள் இந்தப் பணம், பொன் முடிப்புகளையும், செம்பு, தடி இவைகளையும் மூவரும் எடுத்துக் கொண்டு இவைகளைச் சனங்களுக்குக் காண்பித்துக் கொண்டே இதை எங்களிடம் வைத்துவிட்டுப் போன சுவாமியைக் காணுமே. நீங்கள் யாராவது பார்த்தீர்களாவென்று கேட்டுக் கொண்டே எல்லா இடங்களிலும் தேடியும் காணவில்லை. இதைக்கண்ட சனங்களெல்லாம் அடா பைத்தியகாரர்களே நீங்கள் அழுது கொண்டு ஏன் தேடி அலைகின்றீர்கள் அவர் வந்தால் வாங்கிச் செல்லட்டும இல்லையேல் உங்களிடம் இருக்கட்டுமே யென்பதாகத் திட்டியும் கேட்காது தேடிப் பின்பு வீட்டுக்கு வந்து இவைகளைப் பந்தோபஸ்தாக வைத்திருந்தார்கள். இதை அறிந்த சில கள்வர்கள் அன்றிரவில் மெதுவாக வீட்டினுள் இறங்கி இதைத்தேடிப் பார்த்தார்கள். இவர்களுக்குப் புலப்படவில்லை. பின்பு வருத்தமுடன் வெளியில் வந்து அம் முடிப்பைச் சாமியார்

வாங்கிப் போய்விட்டார் போலிருக்கின்றது என்பதாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இச்சந்தடியை அறிந்த இவர்கள் எழுந்து அவைகள் இருப்பதைக்கண்டுச் சந்தோஷித்து ஐயோ பாவம் இவர்கள் கண்விழித்துக் கஷ்டப்பட்டதிற்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்று வீட்டிலுள்ள செம்பை எடுத்து ஐயா இது தான் எங்களிடம இருக்கின்றது. இதையாவது கொண்டு செல்லுங்களென்று வெளியில் வைத்துக் கதவை பூட்டிக்கொண்டு படுத்திருந்தார்கள். இதைக் கள்வர்கள் கண்டு மிகுந்த ஆச்சரியமும் அன்பும் ஏற்பட்டுப் பின்பு வேறு ஒரு தனவந்தன் வீட்டில் திரவியத்தையும் பணத்தையும் திருடி வந்து ஒரு பணப்பையும் இச் செம்பையும் வீட்டுக்குள் மெதுவாகப் போட்டுச் சென்றார்கள். இதைக்கண்டு மனம் பதறிக் காலையில் இப்பையை எடுத்துக்கொண்டு இது யாருடையது என்று கேட்டுக் கொண்டே வந்தார்கள். பின்பு அத்தனவந்தன் ஓடி வந்தான். அவனிடம் கொடுத்து நடந்ததையும் கூறினார்கள். இதைக்கேட்டு அவனும் மற்ற எல்லோர்களும் இவர்களே வணங்கிப் போற்றிப் புகழ்ந்தார்கள். அதன் பிறகு வீடு வந்து சேர்ந்தார்கள்.

இப்படி இருக்க இந்நகருக்குச் சிறிது தூரத்திலுள்ள நல்லூர் என்னும் கிராமத்திலுள்ள ஓர் ஜமீன்தார் இந்நகரில் பெரிய விடுதி ஏற்படுத்தி இங்கே வந்து சில மாதங்கள் தங்குவது வழக்கம். இவர் மிகுந்த உத்தமர். இவர் ஆலயத்திற்கு வேலைக்காரனுடன் வந்து கொண்டிருக்கும்பொழுது சிவானந்தன் தெரிசிக்க முன்னதாகப் போய்க்கொண்டிருந்தான். அங்கே ஒரு பெரியவர் திருணையைவிட்டு இறங்கிச் சலபாதைக்கிருந்து பின்பு எழுந்திருக்க முடியாது தத்தளிப்பதைக் கண்டவுடன் பதஸ்ட்டமுடன் ஓடி அவரைத் தூக்கி மெதுவாக நடத்திப் படுக்கவைத்துச் சென்றான். அங்கே ஒரு நாய் ஒரு பூனைக்குட்டியை விரட்டிக் கடித்தது. இதைக் கண்டு வேகமுடன் ஓடி அதை விலக்கி வருத்தமுடன் தூக்கித் தன் வேட்டியிற்கிழித்து அக்காயத்திற் கட்டினான். இதற்குள் அவ்வீட்டுக்காரர் கண்டு கோபமுற்று அந்நாயை அடிக்க ஓடினார்கள். இவன் தடுத்து ஐயா ஆறறிவுடைய மனிதர்களுக்கே சிறிதும் கருணையின்றி ஒருவரை ஒருவர் கொலை செய்கின்றார்களே அதற்கு என்ன தெரியும். இந்தப் பூனைக்குட்டியைக் காப்பாற்றுங்கள் என்பதாகக் கூறி

அவர்களிடம் ஒப்பித்துச் சென்றான். இவ்விடயங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே வந்த இச்சமீன்தாருக்குக் கால் இடறி நகம் பயர்ந்து உதிரம் வடிந்தது. உடனே உட்கார்ந்து கஷ்டப்பட்டார். இதைக் கண்டவுடன ஓடி வந்து பார்த்துத் தன்னுடைய வேஷ்ட்டியிற் கிழித்து வேக மூடன் கட்டினான்.

இதைக்கண்ட ஜமின்தார் அளவிறந்த சந்தோஷமும் அன்பும் உடையவராய் இவனைக் கட்டிப்பிடித்துத் தழுவி அப்பா நீ மனித வடிவமா கருணையே உருவாக வந்திருக் கின்றாயா அல்லது தெய்வீக வடிவமா, உன்னைப்பெற்ற புண்ணிய ஆன்மாக்கள் மனிதர்கள்தானா என்ன, அன்பு என்ன கருணை என்ன சாந்தம் இச்சிறு வயதில் இவைகள எப்படி ஏற்பட்டது என்பதாக இன்னும் பலவிதம் கூறித் தன்னுடன் அழைத்துச் சென்று ஈசுவரனைத் தெரிசித்துக் கொண்டு பின்பு இவன் ஆனந்தமாகப் பாடினான். இதை யும் கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்தனர். அதன் பிறகு தாத்தாச் சுவாமிகளிடம் சென்றான். இவர்களும் சென்றார் கள். அவரையும் தெரிசித்துக் கொண்டு திரும்பி வரும் பொழுது அப்பா உன் தாய் தந்தையரைக் காணவேண்டு மென்றனர். ஐயா வாருங்கள் என்று அழைத்து வந்து காட்டினான். இவர் மிகுந்த அன்பு பத்தியுடன் கீழே விழுந்து வணங்கினர். அவர்களும் பதட்டமுடன் கீழே விழுந்து இவரை வணங்கினார்கள். பின்பு அவர் எழுந்து நீங்கள் மகாப்புண்ணிய ஆன்மாக்கள் கிடைத்தற்கரிய இக்குழந் தையைப் பெற்றிருக்கின்றீர்கள். உங்களுக்கு என்ன குறைவு இருக்கின்றது என்பதாகக் கூறிப் புகழ்ந்து இவர் களுடைய நிலைமையை அறிந்து ஐயா தாங்கள் இனிமேல் எனனுடைய விடுதியில் வந்து இருக்கவேண்டும. உங்க ளுக்கு வேண்டியதெல்லாம் நான் அளிக்கச் சித்தமாக இருக் கின்றேன். மேலும் அதன் பக்கத்தில் அன்னச் சத்திரமும் பாடசாலையும் வைத்தியசாலையும ஆச்சிரமமும் ஏற்படுத்த உத்தேசித்திருக்கின்றேன். அவைகளையும் தாங்கள்தான் மேற்பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கூறி மிகவும் வேண்டி வணங்கினர்.

இதைக்கேட்டு ஐயா அப்படியே செய்யலாம். இம் மாதம் கடந்து வருகின்றேமென்றார்கள். சரியென்பதாகச் சிவானந்தனை அழைத்துச்சென்று இவர்களுக்கு வேண்டிய

வேஷ்டி, புடவைகளும் அதுவரை வேண்டிய அரிசி, பருப்பு முதலிய பொருள்களும் வாங்கி வேலையாட்களிடம் கொடுத்துச் சிவானந்தனையும் அனுப்பினர். இவர்களும் இவைகளை அன்புடன் பெற்றுத் தாங்களும் உண்டு தாத்தாச் சுவாமி முதலாக மற்றும சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அளித்து வந்தார்கள். இப்படி இருக்க இதற்கு முன் ஒரு சமயம் இவர் வீதியிற் செல்லும்பொழுது அங்கே ஓர் கிழவரும் கிழவியும் உணவுக்கு வழியின்றித் தங்களுடைய வீட்டை அடமானமாக வைத்துப் பணம் வாங்கிச் சாப்பிட்டார்கள். பின்பு அத்தனவந்தன் வந்து அவ்வீட்டைத் தன்னிடம் கொடுத்து விடும்படி துன்புறுத்தினன். இவர்கள் இன்னும் ஒரு மாதத்திற் கொடுத்துவிடுவதாகக் கூறியும் கேட்கவில்லை. இதை இவர் அறிந்து மனம் வருந்தி, ஐயா அவர்கள் அப்படியே கொடுப்பார்கள். விட்டு விடுமென்றனர். அப்படி அவர்கள் கொடாவிடில் உன் வீட்டை எழுதிக் கொடுப்பீரா என்றனர். சரியென்றனர் அவன் போய் விட்டான். பின்பு அவர்கள் அவ்விதம் கொடுக்க முடியவில்லை.

பங்காளிகள் தகராறு ஏற்பட்டன. அத்தனவான் இவரிடம் வந்து இதைக்கூறி நீ சொன்னபடி உன் வீட்டை எழுதிக் கொடு என்றனன். சரியென்பதாகப் பல பேர் மறுத்தும் கேட்காது எழுதிக் கொடுத்து இன்னும் ஒரு மாதத்தில் காலி செய்து விடுகிறேன் என்பதாகக் கூறி அனுப்பினர். அதன் பிறகு அக்கிழவர், கிழவியின் மகன சிறு வயதிலேயே தேசாந்திரம் சென்றிருந்தான. அங்கே ஒரு பெரிய தனவானை அடுத்துப் பல தொழில் முறைகள் செய்து லட்சக் கணக்கான பணங்களைச் சம்பாதித்துக் கொண்டு இங்கே வந்து சேர்ந்தான. இதைக் கண்டு இவர்கள் சந்தோஷித்துத் தாங்கள் பட்ட கஷ்டங்களையும பின்பு இவர் தங்களை விடுவித்த விடயங்களையும் கூறினார்கள். இதைக்கேட்டு மிகுந்த ஆச்சரியமுற்று இவரைக் காண விரும்பிப் பண்டு, பலகாரங்களுடன் மூவரும் வந்து இவர்களை வணங்கிப் புகழ்ந்து ஐயா, நான் ஒரு பெரிய பங்களாக் கட்டப்போகின்றேன் அங்கேயே உங்களுக்கும் தக்க கட்டிடம் ஏற்படுத்துவேன். நீங்கள மூவரும் அவ்விடம வந்து என் தாய் தந்தையரைப் போன்று எக்குறைவு மற்று ஆனந்தமாக வசிக்க வேண்டுமென்பதாகக் கூறி வணங்கினன்.

இவர்களும் வணங்கி அப்பா, ஈச்சுர கிருபை எப்படியோ அப்படிச் செய்யலாமென்பதாகக் கூறி அனுப்பினர்கள். பின்பு அவர்களும் அடிக்கடி வந்து போக ஆரம்பித்தார்கள். அந்தச் சமீன்தாரும் பணப்பையைப் பெற்ற தன வந்தனும் மற்றும் எல்லோர்களும் அன்பு, பக்தியுடன் வந்து போக ஆரபித்தார்கள்.

இப்படி இருக்க இவர் முன்பு கணக்கு வேலை பார்த்த தனவந்தன் அவனுடைய மானேஜர் முதல் எல்லோர்களும் செய்து வந்த மோசடியை அறிந்து அவர்களை நீக்கிவிட்டான் இதனால் அவர்கள் இவனைக் கொல்வதற்காக ஆள் ஏற்படுத்தினர்கள். இதை இவன் அறிந்து அவனுக்கு வேண்டிய பணத்தை அளித்து அவர்களையே கொல்லும்படி செய்தான் அவன் அவர்களைக் கொல்லாமல் கால், கை முதலியவைகளை அடித்து ஒடித்துவிட்டான். பின்பு இக்குற்றத்தால் இத்தன வந்தனை அரசன் செயிலில் அடைத்தான். உடனே இவனுக்கு பைத்தியம் ஏற்பட்டு ஓவென்று கத்துவதும குதிப்பதுமாக இருப்பதை உணர்ந்து வெளியிற் திறந்து விட்டுவிட்டார்கள். பின்புப் பல சிகிச்சைகள் செய்தும் தீரவில்லை. வீதிகளிற் சுற்றிக் கொண்டு எச்சில் இலை, மலம் முதலிய வைகளைத் தின்பதும் பிள்ளைகளெல்லாம் கூடி இவனைக் கற்களால் அடிப்பதுமாக இருக்கும்பொழுது ஒரு நாள் இவர்களுடைய வீட்டிற்கு முன் வந்தனன. இவனைக் கண்டவுடன் இவர்கள் மூவரும் ஓடிப்பிடித்து ஓவென்று அலறி அழுது ஐயோ. உங்களுக்கு இப்படியா ஏற்பட்டது. எங்களை அனேக வருடமாக ஆதரித்த புண்ணியவானுயிற்றே என்று பரதவித்துப் பின்பு இவனை அழைத்துக் கொண்டுபோய்ச் சுவாமி களிடம விட்டு வணங்கச் செய்து சுவாமி இவர் எங்களைப் பல வருடம் காப்பாற்றிய புண்ணியவான். இவருக்குஇவ்விதம் ஏற்பட்டது என்று வணங்கினர்கள்.

அவர் சிரித்துக் கொண்டு குளத்தில் ஐந்து தடவை சிவ சிவவென்று மூழ்கச் சொல்லி திருநீற்றை அணி என்றார். அப்படியே செய்தவுடன் நீங்கி விட்டது. பைத்தியம் நீங்கியவுடன் மிகுந்த சந்தோஷமுடையவனுய் சுவாமிகளை பிரதக்ஷணமாக வந்து கீழே விழுந்து வணங்கிப் போற்றிப் பின்பு இவர்களைப் பிரதக்ஷணமாக வந்து காலில் விழுந்து ஓவென்று கதறி அழுது ஐயோ நான் கண்டாளன். கொடிய

பாவி. உங்களைத் திருடனென்று கண்டபடி திட்டினேன். ஹாஷித்தேன். மற்றும் அடித்தேன் இன்னும் பல தகாத காரியங்களும் செய்தேன். வேலையை விட்டு நீக்கிப் பிடரியைப் பிடித்துத் தள்ளினேன். ஐயோ ஐயோ வென்று வாயிலும் தலையிலும் அடித்துக் கொண்டான் பின்பு இம்மகானையும் தூஷித்தேன் ஈச்சுரனையும் தூஷித்தேன். கான தருமங்களையும் தூஷித்தேன் உங்களுக்குச் செய்த பாபத்தாலன்றே நானும் இவ்விதமானேன். அந்த பாவிகளும் கால், கை இழந்து அலைகின்றார்கள். தங்களுடைய பெருமையை முன்னமே அறியவில்லையே, என் குற்றங்களையெல்லாம் நீங்களும் அம்மகானுகிய பெரியோர்களும் பொறுத்தருள வேண்டுமென்பதாக வணங்கிப் பின்பு வேகமுடன் ஓடிச்தன்னுடைய மனைவி, மக்கள் முதலானவர்களையும் கூட்டி வந்து இவர்களுடைய காலில் விழ்ந்து வணங்கும்படி செய்து யானும் என் குடும்பத்தார்களும், என் செல்வமும் தங்களுடையதே நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள் என்னுடைய வீட்டிலே வந்து வசிக்க வேண்டுமென்பதாக வேண்டி அழுது வணங்கினன்.

பின்பு இவர்கள் வேண்டிய சமாதானங்களைக்கூறி அனுப்பினர்கள். அதுமுதல் மிகுந்த அன்பு, பக்தி, ஒழுக்கம், தருமம் உடையவனுகவும் இவர்களைப் பிரதினம் வந்து தெரிசித்துக்கொண்டு மிருந்து வந்தனன். இப்படி இருக்க அசோகபுரியென்னும் பட்டினத்தில் வசிக்கும் அரசகுமாரனும் மந்திரி குமாரனும் ஒரு நாள் சந்தோஷமாக வனச்சிங்காரம் பார்க்கச்சென்று அங்கே உதியமகாமுனிவரானவர் ஆச்சிரமம் ஏற்படுத்திக்கொண்டு தவம் செய்வதைக்கண்டார்கள். அவர் சரீரம் மிகவும்பருத்து உயர்ந்து இருப்பதைக்கண்டு சிரித்துப்பரிகாசமாக ஏ, பூத முனிவரே! என்று கூவிப் பல தொந்தரவு செய்தார்கள். அவர் அறிந்து கண்களை மூடிக்கொண்டே கரத்தால் போகும்படி சைகை காட்டினர். இவர்கள் போகவில்லை. மறுபடியும் காட்டியும் போகாது பரிகசிப்பதை அறிந்து கோபித்து அடே நீங்கள் பூதமாகக்கடவது என்று சாபமிட்டார். இதைக்கண்டு பயந்து வணங்கி மன்னிக்கும்படி வேண்டினர்கள். அடே இது நீங்காது. பெரிய மகானகளாகிய ஞானிகள் வசிக்கும் இடத்தில் வசிக்கப்பெற்று அவர்களுடைய தெரிசனமும் அவர்களுக்கு அன்னம்

அளித்துப் பணிவிடை செய்யக்கூடிய உத்தமர்களுடைய தெரிசனமும் பன்னிரெண்டு வருடம் வரை செய்தால் இந்தச்சாபமானது நீங்கி முன்னிருந்த வடிவத்தை அடைவீர்களென்று கூறினர்.

சுவாமி. இத்தகைய மகானை நாங்கள் எப்படிக்காண்போமென்றார்கள். அவர் ஞானதிருஷ்டியால் உணர்ந்து இந்தச் சுவாமிகளையும் இந்த ஆலமரத்தையும் இந்நகரத்தையும் தெரிவித்து அனுப்பினார். அவ்விதமே இவ்விடம் தேடிவந்து இப்பெரியாரையும் இவருக்கு அன்னமளிக்கும் இவர்களையும் கண்டு ஆனந்தமுற்று அமமரத்தின்மீது எவர்களும் அறியாதபடி பூதவடிவமாக இருந்துகொண்டும் பிரதி தினமும் இவர்களைத் தெரிசித்துக்கொண்டு மிருந்து வந்தார்கள். இவர்களுக்குத்தெரியாது, ஆனல் சுவாமிகளுக்கு மட்டிலும் தெரிந்தும் தெரியாதவர்போல் இருந்து வந்தனர். இவர்களுக்கு பன்னிரெண்டு வருடம் பூர்த்தியாக இன்னும் ஒரு நாள் இருந்தது. அப்பொழுது அவர்கள் ஐயோ நமக்கு ஏற்பட்டுள்ள சாபம் நீங்குவதற்குக்காரணமாக இருந்துள்ள இந்த உத்தமர்களுக்கு நாம் ஒரு உபகாரமும் செய்யவில்லையே. இவர்கள் மிகுந்த ஏழையாகவுமிருக்கின்றார்கள் ஆகையால் இப் பூத வடிவமுடன் ஓர் உபகாரம் செய்ய வேண்டுமெனபதாக இருவரும் அன்றிரவில் அரசனுடைய அரண்மனையுட் சென்று உயர்ந்த ஆடை ஆபரணங்களையெடுத்து வந்து இவர்களுடைய வீட்டின் கதவைத் தட்டினர்கள். இவர் ஓடிவந்து கதவைத் திறந்தனர்.

இவர்கள் அவைகளைக் கீழே வைத்து ஐயா இவை உயர்ந்த ஆடை ஆபரணங்கள், இதை யெடுத்துக்கொண்டு போய்ச் சீவியுங்களென்றார்கள். இச்சப்தமும் ஆபரணங்களும புலப்பட்டன. இவர்களுடைய உருவம் தெரியவில்லை. ஐயா எங்களுக்கு வேண்டாம் எடுத்துச்செல்லுங்களென்று கதவை மூடிவிட்டு வந்து படுத்துக்கொண்டார். இவர்கள் கேட்டுப் பின்பு இவர்கள் தூங்கினவுடன் உள்ளே இறங்கி ஓர் பெரிய மண்முடாவில் வைத்து மூடிவிட்டு வந்து சேர்ந்தார்கள் இவர்கள் அறியவில்லை. பின்பு மறுநாள் இவர்களுடைய சாபம் நீங்கப்பெற்று முன்னிருந்த வடிவத்தைப் பெற்று மிருந்த அன்பு, பத்தியுடன் சுவாமிகளைப் பிரதக்ஷிணமாக வந்து சாஷ்டாங்கமாக வணங்கிப் போற்றித் துதித்துப் பின்பு தங்களுடைய விருத்தாந்தங்களையும் ஆதியோ

டந்தமாகக் கூறினர்கள். இதைக்கேட்டு மிகுந்த சந்தோஷ முற்றனர். இதற்குள் இவர்கள் மூவரும் வந்துவிட்டார் கள். இவர்களையும் போற்றித் துதித்துக் கீழே விழ்ந்து வணங்கிப் பின்பு தங்களுடைய சரிதங்களையும் கூறி வணங்கி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென் ருர்கள்.

இங்கே அரசன் ஆடை ஆபரணங்களைக் காணமல் எங்கெங்கும் தேடியும் அகப்படவில்லை. கள்வரும் தெரிய வில்லை பின்பு ஒருநாள் தற்செயலாக இப்பாண்டத்தைத் திறந்தபொழுது இவைகளைக் கண்டு மனம் பதறிப் பயந்து ஐயோ இங்கே இது எப்படி வந்தது என்று மூவரும் யோசித்துப் பின்பு இதை அரசனிடம் போய்த் தெரிவித் தார். இதைக் கேட்டவுடன் சேவகர்களை அனுப்பி அவை களை எடுத்துக்கொண்டு இவர்களையும் பிடித்துக் கட்டி வரும்படி அனுப்பினன் உடனே ஓடி வந்து இவைகளையும் மற்றுமுள்ள சுவாமியாருடைய பணம், பொன் முடிப்பையும் எடுத்துக்கொண்டு இவர்களையும் கட்டிக்கொண்டு வந்தார் கள். இதைக்கண்ட ஜனங்களெல்லாம் ஐயோ ஐயோ என்பதாகப் பரதவித்து அழுதார்கள். இவ்விடயத்தைக் கேள்வியுற்ற ஜமின்தாரும் பைத்தியம் பிடித்து நீங்கிய தனவந்தனும் பணப்பையை இழந்தும் பெற்ற தனவந்த னும் இவர்கள் வீட்டை எழுதிக்கொடுத்து விடுவித்த குடும்பத்தார்களும் மற்றும் தக்க பெரியோர்களும் மனம் வருந்தி இவர்களுடைய பெருமையை அரசனிடம் கூறி விடுவிப்பதற்காக வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் நிற்கும் நிலைமையை அறிந்த ஜமீன்தாருக்கு மனம் வருந்தி மிகுந்த பதட்டமுடன் அரசனே, இந்த மகா உத்தமர்களை இப்படிச் செய்வது அனீதமாகும். ஆகவே அவர்களுடைய கட்டுகளை அவிழ்த்து உட்காரச் செய்து விசாரிப்பது பொருத்தமென்றார். இவர் பெரிய ஜமீன்தா ராக இருப்பதால் இவ்வார்த்தையை ஏற்று அவ்விதமே அவிழ்த்து உட்காரச் செய்து இவருக்கும் ஆசன மளித்து விசாரித்தார்கள். இவர்கள் நடந்த உண்மைகளையும் மற்றும் சுவாமியாருடைய பணம், பொன் முடிப்பின் விஷயங் களையும் கூறினர்கள். இதை அரசனும் மந்திரியும் நம்ப வில்லை. இதற்குள் இத்தனவந்தர்களும் மற்றும் பெரியோர் களும் எழுந்து அரசனை வணங்கி இவர்கள் சுவாமியாருடைய

முடிப்புகளை யெடுத்துக் கொண்டு வீதிகள் தோறும் தேடியதையும் பின்பு கள்வர்கள் திருடி வந்து இவர்களுக்காக வீட்டுள் போட்டுச் சென்ற பணப்பையைக் கொண்டு வந்து தேடிக்கொடுத்ததையும் இவர்களுடைய வீட்டை எழுதி வைத்து மீட்டிக் கொண்ட விஷயங்களையும் பைத்தியம் ஏற்பட்டு நீங்கிய விஷயங்களையும் இவர்களுடைய தான தருமங்களையும் எடுத்துக் கூறினர்கள். இதற்குள் அந்த ஜமீன்தாரும இவர்களுடைய அன்பு, பக்தி, ஒழுக்கம், காருண்யம் பெருமைகளையும் கூறி இவர்கள் மகா உத்தம புண்ணிய ஆன்மாக்கள் இவர்களுக்காக யாரோ கள்வர்கள் தாம் இவ்விதம் செய்திருக்க வேண்டுமென்றனர், இங்கே இப்படி இருக்க.

பூதவடிவமாக இருந்த அரசகுமாரனும், மந்திரி குமாரனும் தங்களுடைய பட்டினத்தை அடைந்த உடன் இவர்களைக் காணாது அழுது வருந்திப் பல தேசங்களும் தேடிப் பின்பு ஜோதிடம், மந்திரம், ஆரூடம், சூறி முதலியவைகளைப் பார்த்துக் கொண்டு துக்கமுடன் ஈச்சுரனையும் பிரார்த்தித்துக் கொண்டிருந்த தாய்தந்தையர்கள் இவர்களைக் கண்டு அளவிறந்த சந்தோஷமுடன் ஓடி வந்து பிடித்துத் தழுவி அழுதுப் பின்பு இவர்களுடைய விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாகக் கேட்டுச் சந்தோஷித்து, அப்பா குமாரர்களே! அந்த மகானுகிய பெரியாரையும் அந்த உத்தமர்களையும் மற்றும் இந்த முனிவரையும் இங்கே அழைத்து வந்து அவர்கள் முன்புதான் உங்களுக்கு மகுடாபிஷேகமும் திருமணமும் முடிக்க வேண்டும். மேலும் நம் பெண்ணையும் அந்த உத்தம குமாரனுக்கே திருமணம் செய்ய வேண்டுமென்றார்கள். இதைக் கேட்டு மிகுந்த சந்தோஷமுடன் சேனை சைன்யங்களுடன் எல்லோரும் புறப்பட்டு இம் முனிவரிடம் வந்து அவரைப் பிரதக்ஷணமாக வந்து வணங்கிப் போற்றித் துதித்துப் பலவிதமாக வேண்டி அவரையும் அழைத்துக் கொண்டு இங்கே சுவாமிகளிடம் வந்து எல்லோரும் மிகுந்த அன்பு, பக்தியுடன் பிரதக்ஷிணம் செய்து சாஷ்ட்டாங்கமாக வணங்கி அழுது போற்றித் துதித்துப் பின்பு தங்களுடைய உத்தேசத்தைக் கூறினர்கள்.

இதற்குள் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட்ட நிலைமையைக் கேள்விப்பட்டவுடன் எல்லோர்களும் வருந்தி

னுர்கள். அரசகுமாரனும் மந்திரிகுமாரனும் ஐயோ எங்களா லேயே இவர்களுக்கு இத்தீமை ஏற்பட்டது. என்பதாகச் தாங்கள் செய்துள்ள விடயங்களையும் கூறிப் பின்பு முனி வரை மட்டும் அங்கே நிறுத்தி மற்றெல்லோர்களும் இங்கே வந்தார்கள். இதைக்கண்ட ஜனங்களெல்லாம் வேற்றரசன் படையெடுத்து வந்ததாகக்கருதி பயந்து ஓடி ஒளிந்தார்கள். அந்த அரசனும் இதைக்கேட்டு மிகுந்த பயமுடன் இருக் கும்பொழுது இவர்கள் வேகமுடன் சென்று இவர்களுடைய காலில் வீழ்ந்து வணங்கி ஓவென்று அழுது ஐயோ மகா உத்தமர்களாகிய உங்களுக்கு எங்களாலல்லவா இந்நிலைமை ஏற்பட்டது. இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டு மென்றார்கள். இதைக்கண்ட அரசன் முதல் எல்லோர்களும் பிரமித்து மரம் போல் அசைவற்றிருந்தார்கள். பின்பு அரசனே நோக்கி ஓ அரசனே நீர் இதுவரையில் இவர்களு டைய பெருமையை அறியவில்லையா யென்பதாகக் கூறி மற்றும் தங்களுடைய விருத்தாந்தங் களையும் தாங்களே இக்காரியம் செய்ததையும் எடுத்துக் கூறினர்கள்.

இதைக் கேட்டவுடன் அரசன், மந்திரி முதலாக எல்லோர்களும் ஓவென்று அலறி அழுது ஓடிவந்து இவர்க ளுடைய கால்களில் வீழ்ந்து உருண்டு, புறண்டு ஐயோ நாங்கள் கொடும்பாவிகள் சண்டாளர்கள் உங்கள் பெரு மையை அறியாது இவ்விதம் செய்தோமே யென்பதாக வாயிலும் தலையிலும அடித்து மோதிப் பின்பு ஏ. புண்ணிய ஆன்மாக்களே இக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுங்க ளென்பதாக வணங்கிப் பின்பு அரசன் முதல் எல்லோர் களும் சுவாமிகளிடம் வந்து பிரதெக்ஷ்ணமாக வந்து சாஷ் டாங்கமாக வணங்கி ஓவென்று அழுது ஏ. பகவான் தங்க ளுடைய பெருமையை அறியாது முன்பு என் கோட்டை வாசலின் பக்கமாக நீங்கள் இருக்கும் பொழுது நான் பாவி யாரோ, பைத்தியகாரனென்றும் ஊமையன் என்றும் திட்டி அப்புறப்படுத்தும்படி செய்தேனே. ஐயோ ஐயோ வென்று வாயில் அடித்துப் பின்பு வணங்கிக் இக்குற்றங்களை யெல் லாம் பொறுத்தருள வேண்டு மென்பதாக வேண்டிப் பின்பு அம் முனிவரையும் பிரதெக்ஷ்ணமாக வந்து போற்றிப் புகழ்ந்து சாஷ்டாங்கமாக வணங்கிநர்கள்.

இப்படி இருக்க, இம்மகானுகிய சுவாமிகளை ஆதியில் தன்னுடைய அரண்மனையில் வைத்து மிகுந்த அன்பு

பத்தியுடன் பணிவிடை செய்த அரசன் இவர் தெரியாதபடி வந்து விட்டதை அறிந்து மனம் வருந்திப் பல இடங்களிலும் தேடிக்காணுமல் பின்பு இவர் இங்கே இருப்பதையும் இவருக்குப் பணிவிடை செய்யும் இந்த உத்தமர்களின் பெருமைகளையும் கேள்வியுற்று இவர்களைத் தெரிசிக்க விரும்பி உடனே சேனைகளுடன் புறப்பட்டு இங்கே வந்து சேர்ந்தான். இதைக்கண்ட எல்லோரும் பிரமித்து ஒன்றும் தோன்றுது அசைவற்றிருந்தார்கள். இந்த அரசன், மந்திரி முதலானவர்கள் மிகுந்த அன்பு, பத்தி, ஆவலுடன் சுவாமிகளைப் பிரதக்ஷணமாய் வந்து சாஷ்டாங்கமாக வணங்கிப் போற்றித் துதித்து அழுது நாங்கள் மகாப்பாவிகள். தங்களுடைய தெரிசனம் இதுவரையிற் கிடைக்காமற் போயிற்றே யென்பதாக அழுது பின்பு அம்முனிவரையும் இவ்விதமாக வணங்கிப் போற்றினர்கள். அதன் பிறகு சுவாமியானவர் எல்லோருக்கும் ஆசீர்வாதம் செய்து அமரும்படி செய்தார்.

அப்பட்டினத்திலுள்ள ஜனங்களும் சுற்றுக்கிராமங்களிலுள்ள ஜனங்களும் மற்ற சேனைகளுமாக யெங்கும் நிறைந்திருந்தார்கள். இப்படி இருக்கும் சமயத்தில் முன்பு இவர்களிடம் பணம், பொன் முடிப்புகளை வைத்துச் சென்ற விருத்தப்பருவமுடைய சுவாமியானவர் ஓர் ஏழ்மையான ஆடவரையும் அவருடைய மனைவியையும் அவர்கள்மகளான மிகுந்த அழகும், பரிபக்குவமும் வாய்ந்த ஓர் பெண்ணையும் கைகளைச் சேர்த்துக்கட்டி இழுத்துக்கொண்டு மிகுந்த கோபமும் பதஸ்ட்டமும் உடையவராய் ஓர் தடியை ஊன்றிக் கொண்டு தடதட வென்று ஜனங்களை விலக்கிக்கொண்டே வந்து அரசன் முதலானவர்கள் இருக்கின்ற இடத்தை அடைந்து இவர்களை யெல்லாம் மிகுந்த கோபமுடன் சிலுத்துப் பார்த்தனர். இதைக்கண்ட எல்லோர்களும் ஒன்றும் தோன்றுது பிரமித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி ஓ அரசர்களே இந்த அநியாயம் எங்கேயாவது கேட்டதுண்டா இந்தச் சண்டாளர்கள் மிகுந்த அன்பு, பத்தி உடையவர்களாகவும், சாதுக்களுக்குச் சாப்பாடு போடுவதாகவும் ஏமாற்றி அவர்கள் பிச்சையெடுத்துப் பணம், காசு வைத்திருந்தால் அவைகளை வாங்கிக் கொண்டு மோசம் செய்கின்றார்களே. இது நியாயமா. கேள்வி கேட்பாரில்லையா. இந்தப் பாவிகளிடம் நான் மடம் கட்டுவதற்காகப் பிச்சையெடுத்து வைத்திருந்த பொன் முடிப்பை

நம்பிக்கொடுத்து வைத்திருந்து மீண்டும் வந்து கேட்டால் அது காணமற் போயிற்றென்று ஏமாற்றி என்னே மோசம் செய்கின்றார்களே. பின்பு பஞ்சாயத்து வைத்தால் அந்தக் கூட்டுத் திருடர்களும் ஐயோ இவர்கள் மகா உத்தமர்கள்; புண்ணிய ஆன்மாக்களென்பதாக ஏமாற்றுகிறார்களே அதன் பிறகு தான் இவர்களைக்கட்டி அரசனுன உன்னிடம கொண்டுவந்தேன் அதை வாங்கிச் கொடுப்பாயாக வென்று கூறிப் பின்பு அவர்களைக் பார்த்து ஓகோ சரி, சரி. அந்தச் சண்டாளர்களும் வந்திருக்கின்றார்களா இவர்களிலும் அவர்கள் பலே ஆசாமிகள் என்பதாக ஓடிப்பிடித்து இழுத்து இவர்கள் வீட்டிற்கு உணவுக்காகச் சென்றால் என்னைக் கத்தவும் பல பேர் திட்டவும் வைத்துப் பின்பு என்அரிசியை வாங்கிச் சமைத்து மூவரும் விழுங்கி விட்டுப் பின்பு ஓர் பொன் முடிப்பும், பணமுடிப்பும் செம்பும் தடியும் வைத்து விட்டுப் போய் மீண்டும் வந்து பார்த்தால் வீட்டைப் பூட்டி விட்டு ஒளிந்து கொண்டு என்னை அலைய விட்டு ஏமாற்றி விட்டார்கள். இதுமட்டுமா அதோ அந்தத் தனவந்தனிடத்தில் திருட்டுக் கணக்கு எழுதி அதனால் அவன் அடித்துத் துரத்தினன். இதோ இருக்கும் தனவானுடைய பணப் பையைத் திருடி வைத்திருந்து பின்பு பயந்து கொண்டு வழியக் கொடுத்திருக்கின்றார்கள். அதோ இருப்பவருக்காக ஓர் சிறிய கூரை வீட்டை எழுதிக்கொடுத்து ஏமாற்றி ஓர் பெரிய பங்களாவைக் கைப்பற்றப் பார்க்கின்றார்கள். இதோ இருக்கும் ஜமீன்தாரை இந்தத் திருட்டுப்பையன் எப்படியோ வயப்படுத்தி ஏமாற்றி அவருடைய விடுதியைக் கைபற்றி விட்டார்கள். இந்தப் பாவிகள் இவ்விதம் செய்கின்றார்களே இந்த அநியாயம் எங்கினும் உண்டா நான் வாங்காமல் இவர்களை விடுவேனு வென்று படபட வென்று மிகுந்த கோபமுடன் பேசினர். அப்பொழுது இவர்கள் காலில் வீழ்ந்து வணங்கிச் சுவாமி நாங்கள் தங்களைப் பல இடங்களிலும் தேடியும் காணமுடியவில்லை. இதோ தருகின்றோம் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்கள். ஓகோ என்னையா காணமுடியவில்லை. உருவத்தைப் பார்த்தால் பைத்தியக்காரர்கள் போலவும் மிகுந்த ஏழ்மையானவர்கள் போலவும் உத்தமர்கள் போலவும பொய் வேடம் பூண்டு கொண்டு இவ்வளவா மோசடி செய்கின்றீர்கள். உண்மையான உத்தமர்களுக்குக் காலமில்லை. அவர்களைத் தேடுவாரில்லை. உங்களைப் போன்ற பாவிகளை அல்லவா உலகம்

புகழ்ந்து கொண்டாடுவதும் அவரவர்கள் வீட்டுக்கு அழைப்பதுமாக இருக்கின்றது இது யென்ன. அநியாயம் நான் உங்கள் ஆறு பேர்களையும் சும்மா விட்டுச் செல்வேனு அடித்து உதைத்துக் கொன்று தான். செல்வேன் என்பதாகத் தடியை ஓங்குவதும் காலை ஓங்குவதுமாக அட்டகாசம் செய்தனர் இவரைக் கண்ட சுவாமியானவர் இவர் ஈச்சுரன் யென்பதாக உணர்ந்து உடனே பதஸ்ட்டமுடன் எழுந்து வந்து ஏ பரமேஸ்பரா, ஏ ஜெகதீஸ்பரா, ஏ கருணாகரா, ஏ கைலாஸவாசா, அயன், அரி முதலாகத் தேவர்களும் மற்றும் யாவர்களும் காண்பதற்கரிய நின் திருவடிகள் நோக அன்பர்கள் நிமித்தம் இவ்விதமாக வந்து இவ்வளவு திருவிளையாடல்களைச் செய்கின்றீர் என்பதாகத் துதித்துச் சாஷ்டாங்கமாக அவருடைய பாதத்தில் வீழ்ந்தனர்.

இதைக்கண்ட அரசர்கள் முதல் எல்லோர்களும் அந்தந்த இடங்களில் விழுந்து வணங்கி அடியற்ற மரம்போற் கிடந்தார்கள். இதற்குள் இவர் மறைந்து விட்டனர். அவர்களுடைய கட்டும நீங்கியது. பின்பு எழுந்து பார்த்துக் காணமல் அழுதும் தொழுது அர அர, சிவ சிவ சம்போ மகாதேவா சங்கரா, சர்வேசா வென்று எல்லோர்களும் பெரும் கோஷ்டமுடன் போற்றித் துதித்து வணங்கி ஆனந்தப் பிரவாகத்தினுல் ஆடிப்பாடிக் குதித்து எல்லோரும் ஆனந்த அருவி சொரிய நின்று பின்பு இவர் செய்த வேடிக்கைகளையெல்லாம் பேசிப் பேசிக் கரகோஷம் செய்து பல தரம் சிரித்து அதன் பிறகு இந்த அறுவர்களையும் வணங்கிப் போற்றித் துதித்துத் தங்களுடைய பெருமையாலன்றே பாவிகளாகிய நாங்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் வரை அரிய தவம் செய்தும் காண்பதற்கரிய பரமேஸ்வரனைக் கண்டு தெரிசிக்கவும் அவருடைய ஆனந்தத் திருவிளையாடலைக் கண்டு களிக்கவும் பெற்றோம் என்பதாகப் புகழ்ந்து வணங்கினர்கள். அதன் பிறகு எல்லோர்களையும் அமரச் செய்து சுவாமிகளும் அம முனிவரும் ஈச்சுரனுடைய பெருமைகளையும் அவருடைய திருவிளையாடல்களையும் கருணையோடும் கூடிய பேரன்பையும் சங்கோப சங்கமாக எடுத்துக் கூறினர்கள். எல்லோர்களும் கேட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கித் தன்னை மறந்திருந்தார்கள். பின்பு சுவாமியானவர் சிவானந்தனையும் அந்தப் பெண்ணையும் அழைத்துத் தழுவி இருபுறத்திலும்

நிற்கச் செய்து பாடும்படியாகக் கூறினர். இதைக் கேட்டு மிகுந்த சந்தோஷமுடன் வணங்கி ஈச்சுரனுடைய அன்பும், பத்தியும் ததும்பக்கூடிய பாடல்களை மிகுந்த உருக்கமுடன் இனிமையாகப் பாடினர்கள் இதைக்கேட்ட எல்லோர்களும் ஆனந்தக் கண்ணீர் ஒரு புறம சொரியவும அன்பின் உருக்கமான அழுகைக் கண்ணீர் ஒரு புறம் சொரியவும் இன்பே உருவமாய் அசைவற்றிருந்தார்கள.

அப்பொழுது எங்கும் பரிமளவாடையானது விசிற்று. இது ஏது என்பதாகப் பார்க்கும்பொழுது இவர்கள் இருவருடைய கழுத்திலும் தெய்வலோகப் பாரிசாத மலர் மாலையானது துலங்கிற்று. இதைக்கண்டுஎல்லோர்களும்ஆனந்தமுடன் கரகோஷம் செய்து வணங்கினர்கள். அதன் பிறகு சுவாமியானவர் அரசர்கள் முதல் எல்லோர்களையும் நோக்கி இந்தச்சிவானந்தன் முதல் இவனுடைய தாய் தந்தையர்களுடைய சரிதங்களையும் பெருமைகளையும் நீங்கள் ஏறக்குறைய அறிந்திருக்கக் கூடும். இப்பெண்முதல் இதன் தாய் தந்தையர் களுடைய சரிதங்களையும் பெருமைகளையும் நீங்கி அறிந்திருக்க மாட்டீர்கள். அவைகளைக் கூறுவ தென்றல் மிக அற்புதமாகவும் வேடிக்கையாகவும் பெரும் வியாசமாகவும் இருக்கக்கூடும். நேரங் காலமும் அதிகமாகக் கூடும. ஆகவே முக்கியமாக இரண்டொரு விடயத்தை மட்டிலும் கூறுகின்றேன். என்பதாக இவர்கள் வசிபபது இப்பட்டினத்திற்குச் சுமார் எட்டு மைல் தூரத்திலுள்ள சோலையூர் என்னும் பெரிய கிராமம். இதில் பயிர்தொழில் செய்யும ஏழைக் குடியானவர்கள் இவர்களுடைய பெருமையை அவ்வூர் ஜனங்கள் அறியாது பைத்தியக்காரர்களென்றே பரிகசித்தும் தூஷித்தும் இருந்து அதன் பிறகு அறிந்து அன்பு, பத்தியுடன் போற்றி வணங்கப் பெற்றார்கள். இவர்களிடத்தில் ஈச்சுரனுக்கு அளவிறந்த அன்பும் சந்தோஷமும் பைத்தியமுமுண்டு. பல வேடிக்கையெல்லாம் செய்திருக்கின்றார். இவர்களிடம் நான் இங்கே வருவதற்கு முன்பு தற்செயலாக ஒருவாரம் வரை அகப்பட்டுக் கொண்டேன். எனக்கும் இவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள அன்பும் சந்தோஷமும் தாங்கமுடியவில்லை. பைத்தியம ஏற்பட்டுவிடும் போலிருந்தன. உடனே தெரியாதபடி ஓடிவந்து தான் இங்ஙகரை அடைந்தேன். இவர்கள் இப்பெண்ணை எத்தகைய புருடனுக்குத் திருமணம்

செய்ய உத்தேசித்திருக்கின்றீர்களோ அப்புருடன் இச் சிவானந்தனன்றி வேறொருவர் கிடைப்பது துர்லபம். அதற்காகவும் இவர்களுடைய பெருமைகளை எல்லோர் களுக்கும் தெரிக்கவும் வேண்டி ஈச்சுரன் இங்கே கொண்டு வந்து சேர்த்தனர். பொதுவாக இவர்கள் அவர்களிலும் பதின்மடங்கு மேம்பாடாகவே சொல்ல வேண்டும். அவ்விதமே இருவருக்கும் தெய்வீக மாலைகளும் அளித்தனர். யென்பதாகக்கூறிப் பின்பு அதோ இருக்கக் கூடிய அரசர் சிறந்த உத்தமர். ஆதியில் இச்சரீரத்தின் பேரில் மிகுந்த அன்பின் மிகுதியால் அபிடேக அலங்காரம், ஊர்வலம் முதலியவைகள் செய்து தன் அரண்மனையில் வைத்துக் குடும்பத்துடன் எல்லோர்களும் பணிவிடை செய்தார்கள். எனக்குத்தொந்தரவாக இருந்தது. உடனே தெரியாது ஓடி வந்து விட்டேன். பின்பு பல இடங்களிலும தேடிக் காணாது இப்பொழுது தெரிந்து காண்பற்காக வந்திருக்கினரர். மறறும் தன குமார்த்தியை இச்சிவானந் தனுக்குத் திருமணம் செய்ய மிகுந்த ஆவல் கொண்டிருக் கின்ரர். இதோ இருக்கும் இப்பட்டினத்து அரசனும் மிகுந்த உத்தமர். இவருக்கு ஆண் குழந்தை இல்லை. ஒரே பெண் குழந்தை தான். அக்குழந்தையை இச்சிவானந்த னுக்குத் திருமணம் செய்து பட்டாபிஷேகமும் சூட்டு வதற்கு மிகுந்த ஆவலுடன் இருக்கின்றனர். அதோ இருக்கின்ரர்களே பூத வடிவமாக இருந்த அரச குமாரனும் மந்திரி குமாரனும் அவர்களும் தாய் தந்தையரும் தங்க ளுடைய மகளைத் திருமணம் செய்விப்பதற்காக அழைத்துப் போக வந்திருக்கின்ரர்கள். இதோ இங்கே இருக்கும் ஜமீன்தார் சிறந்தஉத்தமர். இவருக்கு ஒரே ஆண் குழந்தை உண்டு. அவருக்கு ஒரே பெண் குழந்தை தான் இருக் கின்றது. அக்குழந்தையை இச் சிவானந்தனுக்குத் திருமணம் செய்து இவருடைய வீடுதியிலேயே வசிக்கும்படி ஏற்படுத்துவதற்காக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே தயாராக இருக்கின்ரர். ஆகவே அடே சிவானந்தம் உன்னுடைய அபிப்பிராயம் என்ன சொல் என்றனர். இதைக்கேட்டு வணங்கிச் சுவாமி அநித்தியமாயும் பெருந் துன்பமாயுமுள்ள மூவாசைகள் முதற் போகங்களையெல் லாம் நீத்து நித்தியமாயும் சதா ஆனந்தமாயுள்ளதும் தாங் கள் அடைந்துள்ளதுமான மேலான ஆத்மஞான நிலையும் அதற்குரிய அத்துவித முத்தியும் அடைய வேண்டுமென்

கிற பூரண ஆவல் என்னுள்ளத்தில் இருப்பது தங்களுக்குத் தெரியாததன்று. இதற்கு மேல் நான் என்ன சொல்லப் போகின்றேன். தங்களுடைய திருவுளச்சித்தப்படி நடக்கத் தயாராக இருக்கின்றேனென்பதாகக் கூறி வணங்கினன். இதைக்கேட்டவுடன் மிகுந்த சந்தோசமுடன் வெகு நேரம் சிரித்து அடே சிவானந்தம். நீ சொல்வது உண்மையே. அந்த ஆத்மஞான நிலையின் சாதனையாகிய அப்பியாசத்திலேதான் இதுவரையில் நீ இருந்து அந்த உண்மையை உணர்ந்தனை இனிமேல் அந்த ஆத்ம ஞான நிலையில் ஆனந்தமாக வாழப் போகின்றாய் ஆத்மா என்பது. சிவன். அது நித்தியமாயும். ஆனந்தமாயும் என்றும், இறப்புப் பிறப்பும். இன்ப துன்பமும் அற்றதாயும் விளங்கக்கூடியது. ஞானம் என்பது அறிவு. அந்த ஆத்மாவாகிய சிவனை விளக்கிக் காட்டக்கூடிய போத ஒளியாகும் நிலை என்பது-அந்தச் சுக போகத்தில் வாழக்கூடியதேயாம். ஆகவே உன்னை இவ்வுலக பந்தமும் மாயையும், இருவினையும் சிறிதும் பற்றாது பற்றற்ற ஆத்மஞான நிலையில் ஆனந்தமாக வாழப் பெற்றுப் பின்பு அத்துவித முத்தியை அடையப் பெறுவாய் நீ பயப்படாதே என்று கூறி மேலும இவ்வரசர்களெல்லாம் உத்தமர்கள் அவர்களுடைய பெண்களும் உத்தமமான பெண்கள் ஆகவே அவர்களுடைய பூரண இச்சைக்கும் ஈச்சுரனுடைய சங்கல்பத்திற்கும் விரோதமாக இருக்கும் மேலும் இவர்களையெல்லாம் ஈச்சுரனே கொண்டு வந்து சேர்த்திருக்கின்றார். ஆகையால் மறுக்காது இவ்வைந்து பெண்களையும் திருமணம் புரிந்து உலகில் இல்லற ஒழுக்கங்களையும், ராசநீதி, நெறிகளையும் அன்பு, பத்தி, ஞானம், காருண்யம் முதலிய நன் மார்க்கங்களையும் நிலவச் செய்து ஞானசூரியன் போல் உலகில் விளங்கி நின்று ஆனந்தமாக வாழப்பெற்றுப் பரலோக முத்திப் பதவியை அடையப பெறுவீர்களாக. என்பதாகக் கூறினர். இதற்குள் அடே சூழ்ந்தாய் அவர் கூறியபடியே செய்வாய் என்பதாக விண்ணில் அசரீரி வாக்காகக் கேட்டது.

இதைக் கேட்டவுடன் எலலோர்களும் அளவில்லாத ஆனந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய் கரங்களைக் கொட்டியும் சிரித்தும் ஈச்சுரனையும் சுவாமிகளையும் பலவிதமாகப் போற்றித் துதித்தும் வணங்கினர்கள். அதன் பிறகு

அவ்விதமே செயவதற்கு எல்லோர்களும் சம்மதித்து இப் பட்டிணத்திலேயே செய்வதாகவும் முடிவு செய்து அரண் மனை முதல் பட்டிணமுழுதும் மிகுந்த அழகாகவும் அற்புத மாகவும் பந்தல், தோரண முதலிய பல அலங்காரங்களும் செய்து சர்வ தேசத்து அரசர்களையும் மற்றும் பெரியோர் களையும் வரவழைத்து இந்த அரச குமாரத்திகளையும் இங்கே அழைத்துவந்து பிரதம மனைவியாக அந்தக் குடியானவருடைய குமாரத்தி ஞானம்பாளென்னும் பெண் ணைத் திருமணஞ் செய்து அதன் பிறகு மற்ற அரசகுமா ரத்திகளைத் திருமணஞ் செய்தார்கள். எங்கு பார்த்தாலும் ஒரே ஆனந்த மயமாக இருந்தன. ஒருபுறம் வேத பாரா யணங்களும் ஒருபுறம் மங்கள வாழ்த்துப்பாக்களும் ஒரு புறம் ஈச்சர தோத்திரங்களும் ஒருபுறம் பஜனைக் கோஷ்டி களும் ஒருபுறம் சிறு பெண்கள் கோலாட்டம், கும்மி முதலியவைகள் ஆடிப் பாடுவதும் ஒருபுறம் பதிவெண் மேளவாத்தியங்கள் முழங்குவதும் ஒருபுறம் ஈச்சரனுடைய பெருமைகளையும் அற்புதத் திருவிளையாடல்களையும்பற்றிப் பிரசங்கிப்பதும் இவ்விதமாக ஒப்பற்ற ஆனந்த வைபவத் துடன் திருமணமும், பட்டாபிஷேகமும முடிவுபெற்றுப் பின்பு முப்பத்திரெண்டு தானதருமங்களும், சந்தனம், தாம்பூல முதற் பந்திபோசனங்களும செய்து முடிவு பெற்று எல்லோர்களும் அளவிறந்த சந்தோஷமுற்றார்கள். அதன் பிறகு சுவாமிகள் முனிவர் சிவானந்தன் முதலாக மற்றெல் லோர்களும் புறப்பட்டுப் பூத வடிவமாக இருந்த அரச குமாரன், மந்திரி குமாரனுடைய பட்டினத்தை அடைந்து அவர்களுக்கும் தகுந்த உத்தமப் பெண்களை இவ்வித முறை யில் விமரிசையாகத் திருமணம் செய்து பின்பு பட்டமும் சூட்டி எல்லோர்களும் ஆனந்திக்கப் பெற்றார்கள். அதன் பிறகு எல்லா அரசர்களும் சுவாமி. முனிவர். சிவானந்தன் முதலாக மற்றெல்லோர்களையும் வேண்டி வணங்கித் தங்கள் தங்கள் பட்டினங்களுக்கு எழுந்தருளவேண்டுமென்பதாகக் கூறி அவ்விதமே அங்கங்கே அழைத்துச் சென்று சோடச உபசாரங்களும் அபிஷேக அலங்கார தூபதீப முதலிய பூசைகளும் செய்து இவர்களைப் போற்றித் துதித்து இச் சுவாமிகள். முனிவர். சிவானந்தன். ஞானம்பாள் முதல் அவர்களின் தாய்தந்தையரின் பெருமைகளையும் அங்குள்ள எல்லோர்களுக்கும் எடுத்துக் கூறிப் பூசித்து வணங்கச் செய்து பின்பு இவர்களால் அங்கங்கே அன்பு, பத்தி,

ஞானம், ஒழுக்கம், தருமம், பொறுமை, கற்பு, ராஜநீதி முதலிய நன்மார்க்கங்களையும் ஈச்சரனுடைய பெருமைகளையும் எடுத்துக் கூறி எல்லோர்களுக்கும் இன்புறச் செய்து பின்பு இவர்கள் எல்லோர்களும் இப் பட்டினத்திற்கு வந்து சேர்ந்து பின்பு அவரவர்கள் தங்கள் தங்கள் தேசங்களுக்கு விடை பெற்றுச் சென்றார்கள். முனிவரும் தன் ஆச்சிரமத்திற்குச் சென்றனர். சுவாமிகள் முன்னிருந்த ஆனந்த நிலையிலேயே சிலகாலம் இத்தேகத்துடன் வசிக்கப்பெற்றுப் பின்பு பரமசுகப் பேரின்ப முத்திப் பதவியை அடைந்தனர். சிவானந்தனும் அவன் மனைவிகள் முதற் தாய்தந்தையர்களும் ஆனந்தமாக எக்குறைவுமின்றித் தெய்விகத் தன்மை வாய்ந்த உத்தமர்களாய் வாழப் பெற்றும் அங்கங்கே சென்று நன்மார்க்கங்களைப் போதித்துச் சிரிருத்தி இன்புறச் செய்தும் உலகிற்குத் தாய் தந்தையரைப் போன்றும் குருவைப் போன்றும் ஞான சூரியனைப்போன்றும் நிலவி நின்று பின்பு சிவலோகபதவியை அடையப் பெற்றார்கள்.

சுபம்

திருச்சிற்றம்பலம்.

(4-வது)

அம்பலவாணர் சரிதம்

முன் காலத்தில் தஞ்சையூர் என்னும் ஓர் பெரிய கிராமத்தில் அகம்படியர் குலத்தில் அம்பலவாணன் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆதிமுதல் மிகவும் ஏழ்மையானவர். இவருக்குச் சிறு வயதிலேயே தந்தையார் இறந்து விட்டார். தாயார் கூலி வேலை செய்து இவரைக் காப்பாற்றி வந்தனள். தாயார் பெயர் தங்கம்மாள். இவளுக்குக் கடவுளிடத்திலும் சாதுக்களிடத்திலும் மிகுந்த அன்பு, பக்தி உண்டு. இவரையும் சிறுவயதிலேயே கூலி வேலையிற் பழக்கி இருவரும ஜீவித்து வந்தார்கள். ஒரு நாள் ஒரு உத்தமமான சாதுவானவர் மிகுந்த பசியினால் தற்செயலாக இவர்கள் வீட்டுக்கு வந்தார். அவரை இருவரும் வணங்கி அமரும்படி செய்து கூழ் இருந்ததை அன்புடன் அளித்துப் பின்பு அவரை வேண்டி இருக்கும்படி கூறிச்சமையல் செய்து சாப்பாடும் அளித்து அந்த அம்மாள் வணங்கிச் சுவாமி நாங்கள் மிகவும் ஏழைகள். கூலி வேலை செய்து ஜீவிக்கின்றோம் புருடனுமில்லை. பிள்ளையும் இந்த ஒரே பையன்தான். இவனுக்கும் படிப்பில்லை. மிகுந்த பைத்தியக்காரனுகவும் மூடனுகவும் இருக்கின்றன். இட்டதைச் செய்வான். போட்டதைச் சாப்பிடுவான். வேறு கவடு, சூது ஒன்றும் தெரியாது. ஈச்சுரன் எங்களை இப்படி அமைத்திருக்கின்றார், தாங்கள் ஏதாவது நல்ல புத்திமதிகளைக் கூறிச் செல்ல வேண்டும் என்பதாக வணங்கினள்.

இதற்குள் அடுத்த விட்டிலுள்ள, கல்வி, அறிவுடைய ஓர் பெரியவரும் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது சாதுவானவர் அம்மா உங்கள் குழந்தை இருப்பதே உத்தமமான நிலைமையாகும்.

மேலும் இவன் எல்லாவகையிலும் உலகமே போற்றிப் புகழும்படியான நிலைமையில் வாழ்வான் இதைப்பற்றிக் கவலை வேண்டாம். என்பதாகக் கூறி, அப்பா : குழந்தாய் ! நீ கடவுளிடத்திலும் சாதுக்களிடத்திலும் பெரியோர்களிடத்திலும் மிகுந்த அன்பு, பக்தியுடன் இருக்கவேண்டும் காலை மாலையில் ஈச்சுரனைப் பூசிக்க வேண்டும். எறும்பு முதல் எல்லா ஜீவரிடத்திலும அன்பும கருணையும் வேண்டும். எவ்வுயிரையும் கொல்லவோ, வருந்தவோ செய்யக்கூடாது.

எவர்கள் என்ன செய்கினும் என்ன சொல்லினும் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஒழுக்கமாகவும் அடக்கமாகவும் இருக்கவேண்டும். பொய், களவு, வஞ்சம், சூது, கெடுதி, காமம் முதலிய தீய நடத்தைகள் கூடாது. இந்நடத்தைகளையுடைய தீயவர்களின் சினேகமும கூடாது என்பதாக இன்னும் பல நன் மார்க்கங்களை யெல்லாம் மிகச் சுலபமாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறி அப்பா குழந்தாய் இப்பெரியவர் மிக உத்தமமான வராகக் காணப்படுகின்றனர் இனிமேல் இவரையே சினேகமாகக் கொண்டு அவர் கூறிய படி செய் என்பதாகவும் கூறி அய்யா தாங்கள் இக்குழந்தையைக் கவனித்துக் கொள்ளவேண்டுமென்பதாக அவரிடமும் கூறினர். அப்பெரியவர் வணங்கிச் சுவாமி தங்களுடைய ஆசீர்வாதமும கடவுள் கிருபையும் இருந்தால் எல்லாம் தானே ஏற்படும் நான் செய்வது என்ன இருக்கின்றது. என்றனர். அதன் பிறகு விடை பெற்றுக் கொண்டு அச் சாதுவானவர் சென்றவுடன் இப்பெரிய வரும் தாயாரும் அப்பா குழந்தாய் அவர் கூறிய தெல்லாம தெரிந்ததா. இனிமேல் அதன்படி நடக்கவேண்டும் என்றார்கள். இவரும் சரியென்பதாகக் கூறினர். அதுமுதல் வேலைசெய்யும் நேரம் தவிர மற்ற நேரமுழுதும் இப்பெரியவருடனேயே இருக்க ஆரம்பித்தான்.

அவ்வூரில் பெரிய மடம் ஒன்றிருந்தது அங்கே பிரதினமும் அம்மடத்திலுள்ள சாது ஒருவரும் பிரபல வித்வான் ஒருவரும் இரண்டு பிராமணர்களும் புராண இதிகாசங்களையும பல சத்விடயமான நூல்களையும் படித்துப் பிரசங்கிப்பார்கள். அதை எல்லா ஆண்களும் பெண்களும் வந்து அன்புடன் கேட்டு வந்தார்கள. இப் பெரியவரும் போவது வழக்கம். ஒரு நாள் இவரையும் கூட்டிச் சென்றனர் இவர் மிகுந்த வெட்கமும் பயமும் கொண்டு ஓர் மூலையில் இருந்தார் முதல் நாள் ஒன்றும் தோன்றவில்லை. அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியப்பெற்று மிகுந்த சந்தோஷமும் ஆவலும் ஏற்பட்டு ஆஹா சுவாமியானவர் தெரிவித்ததற்கும் இதற்கும் பொருத்தமாக இருக்கின்றதே என்பதாக யோசித்து இனிமேல் நாம் இவ்விதமே நடக்க வேண்டும். இல்லாவிடில் பெரும் குற்றமும் பாவதோஷமும் ஏற்படுமல்லவா என்பதாக அது முதல் காலை மாலையிலும் ஈச்சுரனைப் பூஜிப்பதும் அன்பின் மிகுதியால் உருகி அழுவ

தும் சாதுக்கள் முதல் எல்லாப் பெரியோர்களிடத்திலும் பயபத்தியாக நடப்பதும் எல்லாச் சிவரிடத்தும் அன்பு பாராட்டித்தான் செய்யக்கூடுமானதை உண்மையுடன் செய்து சந்தோஷப்படுத்துவதும் முன்னதாகவே எறும்பு, பட்சி, நாய், பூனை முதலிய பிராணிகளுக்கோ அல்லது சாதுக்களுக்கோ ஏழைகளுக்கோ வீட்டிலுள்ள ஆகாரத்தில் கூடுமானது அளித்துப் பின்புதான் உண்பதும் கூலி வேலை செய்தால் வஞ்சகமின்றி உண்மையுடன் செய்வதும் எவர்கள் எது செய்யினும் எது திட்டினும் பொறுத்துக் கொள்வதும் இப்படியாக இன்னும் மற்ற எல்லா நற்குணங்களையும் அவர் கூறிய பிரகாரம் முறட்டு வைராக்கியமுடன் குரங்குப் பிடியாகப் பிடித்து நடக்க ஆரம்பித்தார்.

தியவைகளை யெல்லாம் அறவே மறுத்துவிட்டார். இதனால் பல இடையூறுகளும் கஷ்ட நஷ்டங்களும் அடிதடிகளும் பலநாள் பட்டினியும் இன்னும் பலவிதங்கள் ஏற்பட்டும் விடவில்லை. மென்மேலும் அதிகமாகவே கைக்கொண்டார். இவருடைய தாயாருக்கும் அந்தப் பெரியவருக்கும் மிகுந்த சந்தோஷமாகவே இருந்தது இவ்விதமிருக்க நாளுக்கு நாள் அவ்வூரிலும் மற்ற ஊர்களிலும் இவரைப்பற்றி பிரபல்யம் உண்டாயிற்று. இவைகளை அறிந்து அந்தச்சாது, வித்வான், பிராமணர். முதலியவர்களுக்கு உண்மை, அறிவும் உண்மையான உள்ளமும் ஏற்பட்டு நாணமும் பயமும் ஏற்பட்டது. ஒரு நாள் வித்வான் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். ஜனங்கள் பெரும் கூட்டமாக இருந்தார்கள். இவரும் போயிருந்தார் இவரைப் பார்த்தவுடன் நாணமுற்று புத்தகத்தை மடக்கி வைத்து விட்டுத் தலை குனிந்து விசனமாக இருந்தனர். அப்பொழுது மற்றோர்கள் புலவரை விசாரித்தாகள். அதற்குப் புலவர் எழுந்து நின்று நான் பாவி. நான் சண்டாளன். கண்ணிருந்தும் குருடன் படித்திருந்தும் மடையன் மனிதனாக இருந்தும் கொடிய மிருகம நான். இது வரை வயிற்றுப் பிழைப்பிற்கும் மதிப்பிற்கும் கற்றும் கேட்டும் தெரிந்தும பிரசங்கித்தும் அலைந்தேனே அல்லாமல் உண்மையில் அவ்வழியும் அதன் பயனும் அடைந்தவனல்ல. பாமரர்களைப் போலவே நானும் எல்லாத் தீய நடத்தைகளையும் கொண்டிருக்கின்றேன். நான் மற்றவர்களுக்குக் கூற தக்கவனல்ல. யோக்கியனுமல்ல நாணமுண்டாகின்றது. அதோ இருக்

கும் உத்தமபுத்திரனே எனக்கும் மற்றோர்களுக்கும் கூறக் கூடிய யோக்கியதை உடையவன். அவனுலேயே எனக்கு உண்மை அறிவின் விளக்கமும் என் குற்றமும் தானே தோன்றிற்று என்பதாக இரு கண்களிலும் நீர் சொரிய அழுதுகொண்டு தலையிலும வாயிலும் இருதயத்திலும் அடித்துக்கொண்டு ஓடி வந்து இவரைப்பற்றி இழுத்துத் தன் இருப்பிடத்தில் உட்கார வைத்தார். இதற்குள அம் மடத்துச் சாதுவும் பிராமணர்களும் எழுந்து தாங்கள் சொன்னது உண்மையேயாகும். எங்களுக்கும் இரண்டு மூன்று நாளாக இதே எண்ணமும் நாணமும் உண்டா யிற்று. ஆனல் நாங்கள் வெளியிற் கூற நாண முற்றேம் எல்லாம் நீத்து நிற்கக் கூடிய துறவியாக வந்தும அவர்கள் மேலான கல்வி அறிவிற் சிறந்த பிராமணர்களாக இருந்தும் அங்நிலைகளில் நிற்க முடியவில்லையே. வேடமும் வித்தையும் கொண்டும் வாயாற் கூறியும் அலகின்றேமே. இந்த உத்தமனுக்குக் கல்வியோ, அறிவோ, வயதோ சேர்க் கையோ தக்கபடி இல்லாது இருந்தும் இவ்வழிகளில் நிற்பது என்ன அற்புதம், என்ன, திடம், எவ்வளவு வைராக் கியம் இவனலன்றே எங்களுக்கும உண்மை அறிவும் எங்களுடைய குற்றமும் தோன்றப் பெற்றது. இந்த உத்தமனே எல்லோர்களுக்கும் புத்தி புகட்டத் தகுந்தவ னென்று புகழ்ந்து கூறினர்கள். இதை அறிந்த கல்வி அறிவிற் சிறந்தவர்களும் மற்ற எல்லோர்களும் பிரமித்துச் சிறிதுநேரம் இருந்து பின்பு அவர்களும் புகழ்ந்து பேசினர் கள். மற்றும் சில கல்வி அறிவிற் சிறந்தவர்களும் தங்க ளுடைய குற்றங்களை உணர்ந்து நாணமடைந்தார்கள். இவைகளை யெல்லாம் அறிந்த இவருக்கு மனம் பதைக் கின்றது. சரீரமெல்லாம் நடு நடுங்குகின்றது. கண்களில் நீர் சொரிகின்றது. சுபீரென்று எழுந்திருந்து கல்வி அறிவிற் சிறந்த பெரி யோர்களே மகா உத்தமர்களே. சிறிதும் கல்வி அறிவில்லாத மூடனுகிய நான் தங்கள் கிருபையால் இந்நிலைமையில் மனிதனென்னும் முறையில் இருக்கும்பொழுது தாங்களெல்லாம், இச்சிறியேனை இவ் விதம் புகழ்வதும், சொல்வதும் தகுமா. இது தர்மந்தானு கடவுளுக்குச் சம்மதமாகுமா என்பதாக ஓவென்று அழுது கீழே விழுந்து வணங்கினர்.

எல்லோர்களும வந்து எழுந்திருக்கச் செயது அப்பா குழந்தாய் உன்னைக் கடவுள் கல்வி அறிவில்லாத மூடத்

தன்மையுடன் படைத்துக் கற்றும் மூடர்களாய் அறிவிருந்தும் குருட்டு மடையர்களாய் பிதற்றி அலையும் எங்களைப் போன்றவர்களுக்கு அறிவுறுத்திச் சிர்ப்படுத்தும் பொருட்டே கடவுள் உன்னை அனபும். கருணையும். பொறுமையும், சத்தியமும் அடக்கமும் ஒரே உருவாய் உலகில் ஏற்படுத்தி இருக்கின்றார் என்பதாகக் கூறி அமரச் செய்து அதுமுதல் இவர்களும நல்வழிகளில் நடக்க ஆரம்பித்து இவரிடத்திலும் மிகுந்த அன்புடன் நடந்துகொண்டு பின்பு மூன்போல் பிரசங்கமும் செய்து வந்தார்கள். இவருடைய பெருமை அங்கங்கே பிரபல்யமாயிற்று. அவ்வூரில் சுந்தரம் பிள்ளை என்னும் ஓர் பெரிய விவசாயி. இருந்தார் அவரும் மிகுந்த அன்பு, பத்தி உடையவர். அவர் குடும்பத்துடன் காசி, கன்னியாகுமரி முதற் சர்வ யாத்திரைகளும் செய்து வர விரும்பித் தன் வீடு, நிலம், பொருள்களையெல்லாம் வரும்வரை பார்த்துக கொள்வதற்காகத் தகுந்தவர்கள் புலப்படாது இருந்து பின்பு இவரை அழைத்துத் தங்கள் கருத்தையும் கூறித்தாங்கள் வரும்வரை எங்கள் வீட்டில் நீங்கள்வசித்துக் கொண்டு நிலம், பொருள், மாடுகள் முதல் எல்லாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதில் ஏற்படும் தானியம் முதல் எல்லாப்பல்களும் உன்னைச்சார்ந்தது, என்னுடைய தன்று என்றனர். இவர் கேட்டுத்திகிலடைந்து அய்யா நான் கூலி வேலை செய்யக் கூடியவன். இவைகளையெல்லாம் பாதுகாக்கவோ, பயிரிடவோ தன்மையில்லாதவன். வேண்டுமானால் தங்கள் வீட்டையும் மாடுகளையும் பார்த்துக்கொள்ளுகிறேன். என்பதாக வணங்கினர். இவர் மறுபடியும் வேண்டி அவர் தாயாரையும் அந்தப் பெரிய வரையும் அழைத்து வந்து அவர்கள் மூலம் வற்புறுத்தமாக ஏற்படுத்தி இவர்களையும் விட்டிற்கு வந்து இருக்கச் செய்து யாத்திரை சென்றார்கள். பின்பு இவர் இதுவும் ஈச்சுரன் செயல் என்பதாக அவைகளைப் பாதுகாத்துக் கொண்டும் பயிர் வேலையும் நடத்தினர், என்றும் விளைந்திலாதபடி அமோகமாக விளைந்தன. மூன்று வருடம் வரை அவர்கள் வரவில்லை.

இவர் தாம் கூலிவேலை செய்யும் பொழுது எந்த உணவும் உடையும் தர்மமும் செய்த துண்டோ அவ்வளவிற்கு நடத்திக்கொண்டு மற்றவை யெல்லாம விற்க வேண்டியதை விற்றுப் பணமாகவும் மற்ற நெல்லையெல்லாம் வீடு நிறைம்ப

வும் வெளியில் களஞ்சியமாகவும் கொட்டி வைத்திருந்தார். பசுவின் பாலையெல்லாம் குழந்தைகளுக்குக் காய்ச்சிக் கொடுப்பதும் மீதியான பாலை மோராகக் கடைந்து ஏழை களுக்கும் சாதுக்களுக்கும் அளித்து வந்தனர், கொள் ளையில் சுவர் வைக்க வெட்டிய பொழுது ஓர் புதையல் கிடைத்தன. அதையும் உடைக்காதபடி கொண்டு வந்து வீட்டில் வைத்திருந்தனர். வீடு நிலங்கள், மாடுகள் மற்றும் பொருள்களையெல்லாம் மிக நன்றாக வைத்திருந்தார். பின்பு இவர்கள் வந்து சேர்ந்து இவைகளையெல்லாம் கண்டு மிகுந்த பிரமை யுற்று ஒன்றும் தோன்றாது சிறிது நேரம் நின்று அப்பா இது யாருடையது. வீடு நிறைந்தும்அப்புறத் திலும் இருக்கின்றதே என்றார்கள். இவரும் தாயாரும் வணங்கி அய்யா தங்களுடையதே என்றார்கள். அப்படியா என்பதாகக் கூறிப் பின்பு இவர்களுக்கும் மற்றும் வந்துள்ள எல்லோர்களுக்கும் பிரசாதங்கள் அளித்தார்கள்.

அதன் பிறகு தாங்கள் யாத்திரை செய்தவைகளையும் அங்கங்கே நடந்துள்ள விடயங்களையும் எடுத்துக் கூறி னர்கள். எல்லோர்களும் கேட்டு ஆனந்தித்தவுடன் இவர் எழுந்து அய்யா இதோ பணங்களும் தங்கள் கொள்ளையில் கிடைத்த புதையலும் தானியம், வீடு, மாடுகள், நிலங்கள், பொருள்கள் முதல் எல்லாம் இருக்கின்றன. அன்புடன் ஒப்புக்கொள்ளுங்கள். நாங்கள் எங்களுடைய வீட்டிற்குச் செல்கின்றோமென்று வணங்கினர். இதைக் கேட்டவுடன் மற்றவர்களெல்லாம் பிரமித்து நின்றார்கள், அவர் மனம் பதறி அப்பா என்ன தெரிவித்தாய். நான் சர்வ பாவங் களும் தீரும் பொருட்டுக் காசி முதலிய யாத்திரை செய்து வந்தும் மீண்டும் என்னைப் பெரும் பாவத்திற்கும் பொய்மைக்கும் ஈடுபடுத்துவது உனக்கு தர்மந்தானா. இது முறையா. ஆதியில் நான் என்ன சொல்லிச் சென்றேன். இந்தப் பொருள்கள் என்ன தென்றும் இதில் ஏற்படும் பலன்கள் பூராவும் உம்முடைய தென்றும் கூறியிருக்கின்றே னல்லவா. ஆகவே அவை யெல்லாம் உம்முடையதே என்றனர். இவர் வணங்கி அய்யா தாங்கள் அப்பொழுது ஆத்திரத்தின், நிமித்தம் இவ்வித மாகக் கூறினீர்கள். இது கடவுளுக்கும் நியாயத்திற்கும் மற்றோர்களுக்கும் பொருந்தாது. என்பதாக மறுத்தனர். பின்பு சரி அது எப்படியோ இருக்கட்டும். பார்க்கலாம். நீங்கள் இப்பொழுது

போகமுடியாது இன்னும் சிலநாள் இருந்து நாங்கள் போகச் சொல்லும்பொழுது தான் போகவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டார். அதற்கு ஒப்புக்கொண்டு அவ்விதமே இருவரும் இருந்து வந்தார்கள்.

இப்படி இருக்க இவர்களுக்குத் தெரியாமலே இவர் பெயரால் நிலங்களும் மாடுகளும் பித்தளைப் பாத்திர முதலிய வேண்டிய பொருள்களும் பக்கத்திலேயே தன் வீடுபோன்று ஓர் மெத்தை விடும் வாங்கிக் கட்டி முடித்து இவருக்குத் திருமணமும் செய்து அதன் பிறகு குடியேற்ற வேண்டுமென்பதாக உத்தேசித்துத் தகுந்த உத்தமமான பெண் ணைத் தேடினர். எங்கும் கிடைக்கவில்லை. இப்படி இருக்க இவ்வூருக்குப் பக்கத்திலுள்ள எல்லைப்புரம் என்னும் நகரத் தில் இவருடைய இனத்தவரான வீரப்பர் என்னும் ஓர் பெரிய தனவந்தர் இருந்தார். அவருக்கு இரண்டு மூன்று தாரங்கள் செய்தும் குழந்தையில்லை, வயதும் மிகுதியாகி விட்டது. பின்பு இவர் சுவிகார புத்திரனாவது கொள்வதற் காக உத்தேசித்திருந்தனர். இந்த அம்பலவாணருடைய பெருமைகளை யெல்லாம் பலதரம் கேள்வியுற்றும் பின்பு பிராமணர்கள், புலவர் முதலியவர்கள் மூலமாகவும் கேள்வி யுற்று மிகுந்த ஆச்சரிய முடையவராய் இவர்கள் மூலம் அழைத்து வரும்படி செய்தனர். அவ்விதமே சுந்தரம் பிள்ளை முதல் எல்லோர்களும் சென்றார்கள்.

இவருடைய நிலமையை அறிந்து அளவிறந்த சந்தோஷமுற்று இவரையே புத்திரனாகக் கொண்டும் இவருக்குத் தம்மினத்திலுள்ள உத்தமமான பெண்ணையும் திருமணம் செய்து தன் வீட்டிலேயே வைத்துக் கொள்வ தாகக் கூறினர். மற்ற எல்லோர்களும் சந்தோஷித்தார் கள். இவர் பதஸ்டமுடன் எழுந்து வணங்கி அய்யா தாங் கள் சொல்வது இந்தக் கூலிக்காரனுக்குத் தகுமா, பொருந் துமா. மேலும் செல்வமென்றால் பெரும் சுமையாகவும் பயமாகவும் இருக்கின்றது. மற்றும் திருமண முதல் உலக இன்பங்களிலும் கனவிற்கூட எனக்கு விருப்பமில்லை. ஆகவே இது தர்மமன்று நான் எறும்பு முதல் எல்லா ஜீவர்களுக் கும் சூழ்ந்தையாகவும வேலைக்காரனாவும் இருக்கின்றேன். தங்களுக்கும் செய்ய வேண்டிய பணிவிடைகள் முதல் கருமங்களும் அன்புடன் செய்யத் தயாராக இருக்கின்றேன் என்பதாக வணங்கினர். இதைக்கேட்ட எல்லோரும்

இவரைப் பலவித்தத்திலும் சமாதானப்படுத்தி வற்புறுத்த மாக அவருக்குப் புத்திரனுக முடிவு செய்து பரிமள காந்தி என்னும் தகுந்த உத்தமமான பெண்ணையும் பேசி எல்லோர் களும இருந்து ஆனந்தமாக முறைப்படி சிறப்பாகத் திருமணமும் முடித்து அங்கேயே வசிக்கும்படி ஏற்படுத் தினர்கள்.

இங்கே இவருக்காகக் கட்டிய வீட்டில் இவருடைய தாயாரையும் சில வேலையாட்களையும் இருக்கும்படி செய்து இதை அன்னச் சத்திரமாக ஏற்படுத்தி அந்த நிலம், பொருள் முதலியவைகளைக் கொண்டு பிரதி தினமும் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அனுதைக் குழந்தைகளுக் கும் அங்க ஈனர்களுக்கும் அன்புடன் அன்னம் அளிக்கும் படி ஏற்படுத்தினர்கள். அவர்கள் இருவரும் மிகுந்த அன் பாகவும் ஒற்றுமையாகவும் இல்லறம் நடத்தினர்கள. நாளுக்கு நாள் அளவிறந்த அனபும் பத்தியும் ஒழுக்கமும் கருணையும் தருமமும் பொறுமையும் அடக்கமும் சத்தியமும் இன்னும் மற்ற எல்லாக் குணங்களும் நிறைந்து விளங் கினர்கள். இதைக்கண்ட அத்தனவந்தருக்கு உண்மை அறிவின் விவாக்கமும் தான் லோபித்தனமாகப் பொருள் சேர்த்து வந்த குற்றமும புலப்பட்டு மிகுந்த நாணமுற்றுப் பின்பு அளவிறந்த சந்தோஷமுடன் ஈசுவரனே இவரை நமக்குப் புத்திரனுக ஏற்படுத்தி இருக்கின்றார். இவரால் நம் குற்றமும அறிந்தோம். நம்முடைய செல்வமும் வீணுக மல் தர்ம வழியிலேயே செலவாகக் கூடியதாக இருக்கின் றது. நம் பாவமும் நிவர்த்தியாகக் கூடும், என்பதாக உத்தேசித்து மற்ற பெரியோர்களிடம் கூறுவார். இவ்வித மாக இருந்து ஐந்து வருடத்திற்குள் அவர் இறந்தனர்.

பின்பு அவருக்குச் செய்ய வேண்டிய கருமங்களை யெல்லாம் முறைப்படி செய்து முடித்து அவர் பெயரால் அன்னதான முதல் எல்லாத்தான தருமங்களும் செய்து பின்பு தானும் மனைவியுமாக எல்லாக் காரியங்களையும கவனித்துக் கொண்டு மற்ற மானேஜர், கணக்கப்பிள்ளை முதலிய வேலையாட்களுடன் வசித்து வந்தார்கள். இவர்களை வேலையாட்களாகப் பார்ப்பதில்லை. சகோதரராகவே பாவித்து அய்யா, அப்பா என்றே அழைப்பார். அன்பாகப் பேசுவார். இவர்கள் கணக்கைக் காண்பிக்க வந்தால் அய்யா, இது என்னுடைய சொத்தும் கணக்குமல்ல.

எறும்பு முதல் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவானது. அதில் எனக்கும் உங்களுக்கும் பொதுவானது. இது நம் எல்லோர்களுக்கும் தந்தையாகிய ஈச்சுரனுடைய சொத்து. ஆகையால் நானும் உங்களைப்போல் ஓர் வேலைக்காரனும் குழந்தையுமாகும். ஆகையால் நீங்கள் வரவு செலவுகளையும் மற்றும் உங்கள் குடும்பங்களுக்குக் கிரமமாக வேண்டிய அளவு செலவாகக் கூடியதையும் எழுதி வைத்து உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாது மற்ற விஷயங்களையும் கவனித்துக்கொண்டு உங்களுடைய சொத்தாகவே பாருங்கள் என்பதாகக் கூறுவார். இவர்களும் அப்படியே நடந்தார்கள்.

இவரும் மனைவியும் சதா ஈச்சுரனையே தியானித்துக் கொண்டிருப்பதும் சிறிய குழந்தைகளுக்குப் பண்டு பலகாரங்களை அளித்து ஆனந்தமாக ஆடவும் பாடவும் விளையாடவும் செய்து பார்த்துச் சந்தோஷிப்பதும், எறும்புகள், பட்சிகள், நாய், பூனை முதலிய பிராணிகளுக்குப் பிரியமான உணவுகளை அளித்து உண்ணச் செய்து பார்த்துச் சந்தோஷிப்பதும் புலவர்களையும் பாவலர்களையும் பெரியோர்களையும் சாதுக்களையும் அன்புடன் அழைத்து வந்து ஈச்சுரனுடைய பெருமைகளைப் பற்றிப் பிரசங்கிக்கவும் மிகுந்த அன்பும் பக்தியும் ததும்பக்கூடிய இனிய பாடல்களைப் பாடச்செய்து கேட்டு உருகி அழுதும் ஆனந்திப்பதும் மற்றும் பிரதினமும் உபந்நியாசம் செய்வித்து எல்லா ஆண் பெண் முதலிய எல்லோர்களும் வந்து கேட்டு ஆனந்திக்கச் செய்வதும் பண்டு, பலகாரம், சுண்டல் முதலியவைகள் செய்து வழங்குவதும் குழந்தைகளுக்குப் பாலைக்காய்ச்சி அளிப்பதும் பல இடங்களில் தண்ணீர்ப் பந்தலும் அன்னச் சத்திரமும் ஏற்படுத்தி ஏழைகளுக்கும் சாதுக்களுக்கும், அனுதையான முதியோர்களுக்கும் அங்க ஈனர்களுக்கும் அன்னம், நீராகாரம், கூழ் முதலியவைகள் அளிக்கச் செய்வதும்கோவில். மடம், வைத்தியசாலை, பாடசாலை முதலியவைகள் ஏற்படுத்துவதும் எப்பிராணிகளோ, எம்மனிதர்களோ வருந்தக் கண்டாலும் கொல்லக்கண்டாலும உடனே தான் வருந்தி அதை நிவர்த்தி செய்து இன்புறுவதும் எந்தப் பயிர்களோ செடி, கொடிகளோ வாடக்கண்டால் மனம் பதறி உடனே அதற்கு எவ்விதத்திலும் தண்ணீர் பாயச் செய்து இன்புறுவதும் எவர்கள் என்ன செய்தாலும்

இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும், பூஜித்தாலும் தூஷித்தாலும் சந்தோஷப்படுவதும் சரீரமுதல் எதிலும் பற்றே., பேதா பேதமோ, துவேசமோ,, அபிமானமோ, இல்லாமலும் இவ் விதமாக இன்னும் எல்லாக் குணங்களும் நடத்தையும் உடையவர்களாய் இருந்து வந்தார்கள்.

இதை அறிந்த அந்நகரிலும் சுற்றுக் கிராமங்களிலும் உள்ள சர்வ ஆண், பெண்குழந்தைகள் முதல் எல்லாம் இவர் களிடம் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டு தாய் தந்தை யராகவும், தெய்வங்களாகவும கருதினர்கள். இவர் வீதியிற் சென்றால் எல்லோர்களும் எழுந்து வணங்கி நிற்பார்கள். இவர் மேல் சுட்டையை இடையில் அணிந்து கொண்டு இரு காங்கேயும் சிரசின்மீது கூப்பிக் கொண்டே செல்வார். எவர்கள் வீட்டில் நன்மை தீமை நடந்தாலும் தான் முன்பு சென்று நடைபெறச் செய்து இன்புறுவார். இவைகளை அறிந்த தாயாரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கப் பெற்றும் அன்னச்சத்திரத்தைச் சில வருடங்கள் அன்புடன் நடத்தி யும் இன்புடன் வாழ்ந்து பின்பு சிவலோக பதவியை அடைந் தனள். அவளுக்குச் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்து மற்றும் தான தருமங்களும் செய்து முடித்து அங்கே வேறு தக்கவர்களை ஏற்படுத்தினர். பின்பு அந்தப் பெரியவரும் சுந்தரம் பிள்ளையும் இறந்தார்கள் அவர்களுக்கும் தானே முன்னின்று எல்லாம் செய்து முடித்து அவர்கள் தனக்குச் செய்த பெரும் உபகாரங்களையும் அவர்கள் குணங்களையும் எல்லோர்களுக்கும் எடுத்துக் கூறினர். அவர்கள் குழந்தை களையும் அன்புடன் கவனித்து வந்தார்.

இவ்விதமிருக்க அத்தனவந்தருடைய காலத்தில் கொடுக்கப்பட்டிருந்த கடன், வட்டிப் பணங்களை கணக்கப் பிள்ளைகள் தான் வாங்குவது வழக்கம். இவர் எவைகளையும் கவனிப்பதில்லை. ஒரு நாள் இவரும் கூடச் சென்றார். பணம் இல்லாதபடியால் இவர்களைக் கண்டவுடன் சிலர் பயந்து ஒழிந்து கொண்டார்கள். சிலர் அஞ்சிப் பயந்து ஓடுங்கி வணங்கித் தவணை கூறினர்கள். சிலர் பயந்து ஒன்றும் சொல்ல முடியாது பதுமைபோல் நின்றார்கள். சிலர் கொண்டு வந்து அஞ்சி நின்று கொடுத்தார்கள். சிலர் திட்டினர்கள். இரண்டொருவர் கண்டபடி திட்டிக்கணக்கப் பிள்ளையை அடிக்கவும் வந்தார்கள். இவைகளெல்லாம் பார்த்த இவருக்கோ பரிதாபமும் துக்கமும் அழுகையும்

அளவுக்கு மீறி ஏற்பட்டும் அடக்கிக் கொண்டு வாங்கிய பணத்தையும் அவர்களிடமே கொடுத்து வைத்திருக்கும்படி கூறித் திரும்பி வீட்டுக்கு வந்து மனம் வருந்தி ஐயோ இந்த பணத்தாலல்லவா நம்மைக் கண்டவுடன் அஞ்சிப் பயந்து ஒழியவும் ஓடவும் மனம பதைக்வும் துன்புறவும் நமமையே திட்டி அடிக்க வருவதற்கும் காரணமாக இருக்கின்றது. கடன் பட்டவர்கள் எவர்களாக இருப்பினும் இங்கிலமை ஏற்படுகின்றதே அவர்கள் மனம் என்ன பாடு பட்டிருக்கக் கூடும். ஐயோ ஐயோ என்பதாக வருந்தி மானேஜர், கணக்கபபிள்ளை முதலியவர்களை அழைத்து இங்ஙகரிலும் மற்றகிராமஙகளிலும் கடன் கொடுக்கவேண்டியவர்களையெல்லாம் இன்றைக்கே கையுடன் அழைத்து வரும்படியாகக் கூறினார். அவ்விதமே அழைத்து வந்தார்கள். அடிக்க வந்தவர்கள் மட்டிலும் வரவில்லை. பின்பு தானே சென்று வண்டியில் அழைத்து வந்து எல்லோர்களுக்கும் அறுசுவையுடன் போஜனம செய்வித்து ஒரு ஜோடி வஸ்திரமும கொடுத்து அணியச் செய்து அவர்கள எழுதிக் கொடுத்திருந்த கடன் பத்திரம் நோட்டு முதலியதெல்லாம் எடுத்து இந்தப் பணங்களையெல்லாம் சுஸ்பர அர்ப்பணம் செய்துவிட்டேன்.

நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டியதில்லை. இனி மேல் எங்களைக்கண்டு அஞ்சிப் பயப்படவும் வேண்டியதில்லை. சந்தோஷமாக இருக்கலாம் என்பதாக எல்லாம் கிழித்து எரிந்தனர். மற்றவர்கள் தடுத்தும் கேட்கவில்லை. இவைகளை அறிந்த கடன்காரர்களெல்லாம் மனம் பதறி நடுங்கி அன்பின் மிகுதியால் ஒவென்று அழுது அவர் பாதத்தில் வீழ்ந்து ஏ பிரபு இப்படிச் செய்யலாமா. நாங்கள் நன்மை அடைய முடியுமா. இது தருமமாகுமா என்பதாக வேண்டி அழுதார்கள். திட்டியும அடிக்கவும் வந்தவர்கள் தங்கள் தலையிலும் வாயிலும் அடித்தும் பிரண்டும் அழுது நின்றார்கள். பின்பு வேண்டிய சமாதானங்களைக் கூறி அனுப்பினார். இதை அறிந்த எல்லோர்களும் பிரமித்து இப்படியும உலகில் மனிதர்கள் உண்டா என்பதாகப் போற்றிப் புகழ்ந்தார்கள், மறுதினத்தில் அவர்கள் எல்லோரும் தங்கள் மனைவி மக்களுடனும் பழம புஸ்பங்களுடனும் வந்து இவரையும் இவர் மனைவியாரையும் அன்பு பதியுடன் போற்றி வணங்கி நின்றார்கள். இவர்களும மிகுந்த அன்

புடன் வணங்கி நீங்கள் எல்லோர்களும் கடவுளிடத்திலும் சர்வ சிவர்களிடத்திலும் அன்பு பத்தியும், கருணை, தருமம், ஒழுக்கம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்களுடன் இன்புடன் வாழுங்கள் என்பதாகக் கூறி அனுப்பினர்கள். அதன்பிறகு இரண்டு மூன்று வருடத்திற்குள் பயிர்கள் அமோகமாக விளைந்து செழிப்புற்றது. இவர்களெல்லாம் ஒன்று கூடி அந்த வட்டியும் முதலுமாகச் சேர்த்து வாங்கி எல்லோர்களுமாக வந்து இவருடைய பாதத்தில் வைத்து வணங்கினர்கள். இவர் மறுத்து ஐயா இது ஈச்சுரனுடைய பணம். ஆகையால் நான் தொடேன். வேண்டுமானால் உங்கள் பெயராலேயே ஏதாவது தருமம் செய்து கொள்ளுங்கள் என்றனர். சரியென்பதாக ஓர் பெரிய ஈச்சுர ஆலயம் ஏற்படுத்தி அதற்குச் சொத்துக்களும் வாங்கி ஏற்படுத்தி இவருடைய பெயரையே கல்லில் வரைந்து வைத்துப் பின்பு இவரை அழைத்துச் சென்று சும்பாபி ஷேகமும் நடைபெற்றது. இவர் தன் பெயரைக் கண்டு மனம் பதறி அதை அழித்துவிடும்படியாகச் செய்தனர். இவைகளை எல்லாம் கேள்வியுற்ற பல முனிவர்களும் சாதுக்களும் வித்வான்களும பெரியோர்களும் பிரமமணர்களும் வந்து பார்த்து ஆனந்தமுற்று ஐயா உமமைக் கடவுள். அனபும். பத்தியும. கருணையும். தருமமும், பொறுமையும். சத்தியமும். அடக்கமும். ஞானமும். சேர்ந்த ஒரே உருவமாக உலகில் படைத்திருக்கின்ரூர். சரீர முதல் எல்லாவற்றிலும் பற்றற்ற இல்லற ஞானிகள் என்பதாகக் கற்றும் கேட்டதேயல்லாமல் நேரிற்கண்டிலோம். இப்பொழுது உம்மையே நேரக்க் கண்டோம். இத்தகைய தூய்மையான உள்ளமும் இங்கிலேயும் எவ்விதம் ஏற்பட்டதோ என்பதாகப் போற்றிப் புகழ்ந்து செல்வார்கள். இப்படி இருக்க முன்னிருந்த ரொக்கப் பணத்தில் இவர் தருமம் செய்தது போக மீதிப் பணம் பெட்டியில் இருந்தன. இதைக்கண்ட கணக்கப் பிள்ளை முதலியவர்கள் இந்தப் பணத்தையும் செலவு செய்து விடுவார். ஆகையால் இதற்கு ஒரு கிராமமாவது வாங்கி வைத்தால் அழியாது இருக்கும் என்பதாக உத்தேசித்துச் சிறிது தூரத்திலுள்ள ஓர் கிராமத்தை விலைக்குப் பேசி முடிவு செய்து கொண்டு இவரிடம் கூறினர்கள். இவரும் சரி அப்படியே செய்யுங்கள் என்றனர். இதை மறரெரு ஜமீன்தார் வாங்குவதற்கு முற்பட்டான். அதற்குமுன் இவர்கள் வாங்கி முடித்துக்கொண்டு பின்பு இவரை அழைத்

துச் சென்று அக்கிராமத்தைக் காட்டினார்கள் அங்கே குடிஜனங்கள் இருக்கும் கொடிய தரித்திர நிலைமையை அறிந்து மனம் வருந்தி அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக கொள்ளவும் நல்ல ஏர் மாடுகள் வாங்கிக் கொள்ள வும் பணம் கொடுக்கும்படி செய்து பக்கத்திலுள்ள பறைச் சேரிக்கு வந்து அவர்கள் நிலைமையைக் கண்டு அழுது உடனே வேண்டிய வஸ்திரங்கள் வாங்கிவரச் செய்து அணி யும்படி கூறி வீடுகள் கட்டிக்கொள்ள பணமும் கொடுத்துப் பின்பு ஏரி, கால்வாய், குளம் முதலிய மராமத்துக்களும் உடனே செய்யும்படி ஏற்படுத்தி நீங்கள் எல்லோர்களும் மூன்று வருடத்திற்கு நமக்கு எதுவும் கொடுக்கவேண்டாம். நன்றுகப் பயிரிட்டு எல்லாம் நீங்களே திருப்தியாக அனுப விக்துச் செழிப்படையுங்கள். அதன் பிறகு நமக்குக் கொடுக்கலாம் என்பதாகக் கூறிப் புறப்பட்டு வந்தனர்.

வீட்டுக்கு வந்தவுடன் கணக்குப்பிள்ளைகள் வணங்கி அவ்விதம் செய்யக்கூடாது. நான்கில் ஒரு பாகமாவது வாங்கவேண்டும். இல்லையேல் பின்பு நமக்குக் கஷ்டநஷ்டங் கள் ஏற்படக்கூடும் என்று மறுத்தார்கள். இவர் ஐயா நாம் வாங்கி என்ன செய்யப்போகின்றோம். ஏழைகளுக்கே அன்புடன் அளிக்கப்போகின்றோம். அவர்களும ஏழைகள் தானே. அவர்களும் என்ன கொண்டு போகப்போகின்றார் கள். மற்றும் பின்பு நமக்குக் கொடுக்கத்தவறினால் அவர் களே என்றும் அனுபவிக்கட்டுமே. நமக்கெனன நஷ்டம். இப் பணத்தை நாம் சம்பாதித்தோமா. அவர் சம்பாதித் துப் பூட்டிவைத்துச் சென்றார். இப்பொழுதும் பெட்டியில் பூட்டி இருப்பதாகவே நினைத்துக் கொள்ளுவோமே. நமக்கு வேண்டியதெல்லாம் குறைவின்றி இருக்கின்றதல்லவா. ஆகவே இதைப்பற்றிக் கவலைப்படவேண்டா மென்பதாகச் சமாதானப்படுத்தினர். அவர்களும் மிகுந்த துக்கமாகவே இருந்து வந்தார்கள். அக்கிராமத்தில் அது முதல் அமோகமாக விளைவு ஏற்பட்டு மூன்று வருடத்தில் எல்லோர் களும் மிகுந்த க்ஷேமத்தை அடைந்தது பற்றி இவர் கேள்வி யுற்று மிகுந்த சந்தோஷமுற்றனர். பின்பு மறு வருடத்தில் பாதிவாரம் வாங்கவேண்டாம். நான்கில் ஒரு பாகம் வாங்கும் படியாக கணக்கப்பிள்ளைகளிடம் கூறி அனுப்பினர்.

இப்படி இருக்க அந்த ஜமீன்தார் இவர் பேரில் கோப மும் பகையும் கொண்டிருந்தார். இக் குடிகளிடத்தில் வந்து

கூட்டம் கூட்டி எல்லோர்களும் அவனுக்கு ஒன்றும் கொடுக்காதீர்கள். முன் போன்று நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் வந்தால் திட்டி அடித்துத் துரத்திவிடுங்கள். அவன் பைத்தியக்காரன். மிகுந்த பய முடையவன். பின்பு உங்களுக்கே சுவாதீனமாகிவிடும் என்பதாகப் போதித்திருந்தான். அவர்களும் உடன்பட்டு இந்தக் கணக்குப்பிள்ளைகள் வந்தவுடன் கண்டபடி திட்டி இங்கே என்ன வேலை. ஏன் வந்தீர்கள். கிரமமாகப்போய் விடுங்கள் என்பதாகத் துரத்தி அடிக்க வந்தார்கள். இவர்கள் மிகுந்த பயமும் துக்கமுமுடன் திரும்பி வந்து நடந்த விடயங்களையும் கூறி முன்னமே நாங்கள் கூறியும் தாங்கள் மறுத்தீர்கள் என்பதாக வருத்தமுற்றார்கள். மறுநாள் அவர்களையும் அழைத்துக் கொண்டுதான் சென்றார். எவர்களும் பேசவில்லை. சிலர் வந்து இவரைக் கண்டபடி திட்டினார்கள். அப்பொழுது கணக்கப்பிள்ளை சகிக்காது அவர்களைத் திட்டினார். உடனே ஒருவன் ஓடி வந்து கத்தியால் வெட்டினான். இவர் ஓடி அதைத் தன் கையால் மறித்தார். இவருடைய கையில் வெட்டுப்பட்டு உதிரம் வடிந்தன. உடனே இவர் மயங்கிக் கீழே விழ்ந்தனர். எல்லோர்களும் ஓடிவிட்டார்கள். எவர்களும வரவில்லை. முத்தன் என்னும் ஓர் உத்தமக் குடியானவன் மட்டும் தன் மனைவியுடன் அழுது கொண்டு ஓடிவந்து பார்த்து வருந்திப் பின்பு தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து மயக்கம தீர வைத்துக் கணக்கப்பிள்ளையும் தானுமாகத் தூக்கி வண்டியில் ஏற்றி அனுப்பினன்.

இதை அறிந்த எல்லோர்களும் இவனை அடித்துக் குடும்பத்துடன் ஊரைவிட்டுத் துரத்தி விட்டார்கள். பின்பு அவர்கள் வீட்டுக்குச் சென்றவுடன் இவர் நிலைமையைக் கண்ட எல்லோர்களும் ஓடிவந்து அழுது உருண்டு புரண்டு பரதவித்து ஐயோ இதென்ன அவீதமாக இருக்கின்றது. நன்மை செய்தால் தீமையாக விளைகின்றதே. இவர்கள் விளங்குவார்களா. இப் புண்ணியவானை வெட்டத்தான் மனம் வந்ததா. கல்மாரி, மண்மாரி பெய்து அழியார்களா. அந்தச்சண்டாளர்கள் மனிதர்கள்தானு. மனம் கல்லா இரும்பா என்பதாக இன்னும் பலவிதம் கூறிப் புலம்பி அந்நகரிலுள்ள ஆண் பெண் குழந்தைகள் முதல்யெல்லாம் அழுது மிகுந்த கோபமுடன் ஒன்று சேர்ந்து பல ஆயுதங்

களுடன் அவர்களை அடிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றார்கள். இதை அறிந்த சுற்றுக் கிராம ஜனங்களும் மனம் பதறி அழுது ஓடி வந்து இவரைக் கண்டு 'ஐயோ ஐயோ என்று தலையிலும் வாயிலும் அடித்துப் புலம்பிப் பின்பு அவர்களும் ஆயுதங்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். இதை அறிந்தவுடன் இவர் மனம் நடுங்கிக் குபீரென்று எழுந்து தலைவிரி கோலமாக ஓடி அவர்கள் முன்பு கீழே விழுந்து பிரண்டு ஐயோ அவர்கள் கவடு, சூது அறியாதவர்கள். பைத்தியக்காரர்கள் அறிவில்லாதவர்கள் தெரியாதபடி ஏதோ செய்து விட்டார்கள். அவர்கள் பேரில் குற்றமன்று. ஈச்சுரனே செய்திருக்கின்றார். அவர்களை அடிக்க நான் மனம் சகிக்கேன். இதோ இறந்து விடுவேன். இப்படியே திரும்புங்கள் என்பதாகக் கூவி அழுதார். அவர்களும் கண்டு பின்பு பார்க்கலாம் என்பதாக இவரையும பிடித்துக் கொண்டு திரும்பி வந்தார்கள். பின்பு இக்காயத்திற்குத் திருநீற்றையும் துணியும வைத்துக் கட்டும்படி கூறினர். அவ்விதமே கட்டினார்கள். மறுநாள் இவர் பல பெரியோர்களை அவர்களிடம் சென்று அவர்களே எல்லாம் சுவாதீனமாக எவ்விதக் கவலையும் பயமும் இல்லாது இன்புடன் அனுபவித்துக் கொண்டு வாழும்படியாகவும் தனக்கு இதனல் எவ்விதக் கஷ்ட நஷ்டமுமில்லை யென்றும் கூறி வரும்படி ஏற்படுத்தி இருந்தார். இதற்குள் அந்தப் பறைச்சேரியிலுள்ள ஆண், பெண் குழந்தைகளெல்லாம இதைக் கேளவியுற்று அழுது பரதவித்துக் கொண்டு எவர்களுக்கும் தெரியாதபடி அன்றிரவிலேயே புறப்பட்டு ஓடி வந்து இவரைக்கண்டு அழுது உருண்டு பிரண்டு ஐயோ ஏ புண்ணியவானே ஏ தர்மப் பிரபு உங்களையா அக் கொடிய பாவிகள் இவ்விதம் செய்தார்கள். செய்ய மனமும் வந்ததா. அவர்கள் வாழ்வார்களா. பேதி அம்மை வந்து ஒழியார்களா. கல்மாரி, மண்மாரி பெய்யாதா என்று பலவிதம் கூறி அழுதார்கள். இதைகண்டு மற்றோர்களும் அழுது வருந்தினர்கள். பினபு அவர்களுக்குச் சமாதானம் கூறிச் சாப்பாடும செய்வித்து உடனே அனுப்பி வைத்தனர். இப்படி இருக்க இவைகளை அறிந்த அந்த ஜமீன்தார் மிகுந்த சந்தோஷமுற்று அன்றிரவில் அந்த ஊருக்கு வந்து தங்கி எல்லோர்களையும வருவித்து இதுதான் சரி. இனிமேல் எவர்களும் வந்தால் கொன்று தகனித்து விடுங்கள். அதற்கு மேல் நான் பார்த்துக் கொள்கின்றேனென்றனன்.

இவர்களும் சரியென்றார்கள். இவனுக்கு வேண்டிய உபசாரங்கள் நடந்தன அங்கேயே படுத்திருந்தான் நடுராத்திரியில் திடீரென்று பூகம்பம் ஏற்பட்டு பூமியானது பிளந்து அவ்வூரிலுள்ள வீடுகள் முதல் சர்வ ஜீவர்களும் ஒன்றும் தவறாது பூமிக்குள் ஆழ்ந்து ஒழிந்தார்கள்.

பறைச்சேரி மட்டும் தென்பக்கம் தப்பி அழியாது இருந்தன. காலையில் இதைக்கண்ட சேரிச்சனங்களெல் லாம மிகுந்த சந்தோஷமுடன் ஆடிப்பாடிப் பாவிகள் ஒழிந் தார்களா என்பதாகக் கூவிக்கொண்டே இவருக்குத் தெரி விப்பதற்காக ஓடி வந்தார்கள். இதை அறிந்த ஜனங்க ளெல்லாம மிகுந்த ஆனந்தமுறறு அவர்களும கூட இவரிடம் ஓடி வந்தார்கள. இவர் உபாதியுடன் படுத்திருந் தார். இதைக்கேட்டவுடன் இரு செவிகளிலும் சிவ சிவ வென்று கரங்களால் மூடினார். மனம் பதறினர். சரீரம் நடுங்கினர், ஓவென்று கதறினர். உருண்டார். புரண்டார். அழுதார். தலையிலும் முகத்திலும் அடித்துக் கொண்டார். ஏ புண்ணிய ஆன்மாக்களே ஏ உத்தமர்களே உங்களை எல்லாம் கொல்வதற்காகவா. நான் உற்பவித்தேன். நான் கொடும் பாவியானேனே. சண்டாளனானேனே. உங்கள் உயிர் என்ன பாடுபட்டதோ மனம் எவ்விதம் துடி துடித்து இறந்திர்களோ. எவ்வளவு ஆசாபாசங்கள் இருந்தனவோ. ஏ ஈச்சுரா ஏ பரமேச்சுரா ஏ கடவுள் இவ்விதம செய்யலாமா. இது முறையா. இது தர்மந்தானு. என்னைக் கொடும் பாவியாக்கலாமா. நான் எப்படிச் சகிப்பேன் என்பதாக இன்னும் பலவிதமாகப் புலம்பி அழுது குபீரென்று எழுந் துத் தலைவிரி கோலமாக அதிவேகமுடன் ஒன்றும் தோன்றாது ஓடினர். எல்லோர்களும் மறுத்தும் கேட்க வில்லை. மற்ற ஜனங்களும் இவருடன் தொடர்ந்து ஓடினர்கள். இதற்குள் அங்கே சுறறுக் கிராமங்களிலுள்ள ஜனங்களும் அந்த ஜமீன்தாருடைய மனைவி மக்கள், பந்துக்கள் முதல் எல்லோர்களும் அறிந்து ஓடி வந்து பார்த்து அழுது, பிரண்டு கத்திக்கதறிக் கொண்டு பெரும் கூட்டம் கூட்டமாக நின்றார்கள். இவரும் போய்ச் சேர்ந்து ஓவென்று அலறி ஏ புண்ணிய ஆன்மாக்களே. உங்களுடன் இந்தப் பாவியாகிய நானும் வருகின்றேன் என்பதாக வேகமுடன் ஓடி அந்தப் பெரும் குழியில் விழுகச் சென்றார். அதற்குள் எல்லோர்களும் பிடித்துக் கொண்டார்கள்.

இவர் அவர்களைத் திமிறி என்னை விட்டு விடுங்கள். நான் இனிமேல் கணமும் வாழமாட்டேன். மனம் சகிக்கேன் என்பதாகப் பலதரம் முயன்றும் அவர்கள் விடவில்லை. இதை அறிந்த ஜமீன்தார் மனைவி, மக்கள் முதலாக மற்ற எல்லா ஆண் பெண்களும வந்து சாஷ்டாங்கமாக விழ்ந்து எங்களையெல்லாம் காப்பாற்றுங்கள்.

நீங்கள் இறந்தால் நாங்களும் இறப்போம். ஏ புண்ணியவானே, ஏ தர்மப்பிரபு மகா உத்தமரே உங்களுக்குச் செய்த அனித்தன்மையாலன்றே இந்தப் பாவிகளை ஈச்சுரன் இவ்விதமாக ஒழித்திருக்கின்றார். இச்சண்டாளர்கள் இனனும் இருந்தால் உலகமே பாழடைந்துவிடும். ஒழிந்ததே உத்தமமாகும் என்பதாகத் கூறி வணங்கி எல்லோர்களும இவரை அழைத்து வந்து வீட்டிற்கொண்டு போய்ச் சேர்த்து அவரவர்கள் ஊருக்குச் சென்றார்கள். இவர் அதன் பிறகு அந்தப் பறைச்சேரிக்குப் பக்கத்தில் புதிதாக ஓர் கிராமமும கோவில், குளம், பள்ளிக்கூடம் முதலியவையெல்லாம் ஏற்படுத்தி அங்கே எல்லா ஏழைச் சனங்களையும் குடி புகச்செய்து இங்கிலங்களையும் பயிரிடும்படி ஏற்படுத்தி வருடம் ஒரு முறை அங்கே இறந்தவர்களெல்லாம் நற்கெதி அடையும்படிக்குத் திதி, தெர்ப்பணமும் ஈச்சுர தோத்திரங்களும் பூசைகளும், பிராமணர், சாதுக்கள், ஏழைகள் முதல் எல்லோர்களுக்கும அன்னதானம், வஸ்த்திரதானம் கொடுக்கும்படியாகவும் ஏற்படுத்தி முன் அவ் வூரைவிட்டுத் துரத்தப்பட்ட முத்தன் என்பவரையே இவைகளையெல்லர்ம் பார்த்துக்கொள்ளும்படியாகவும் செய்து அவ்விதமே நடந்து வந்தன. இவைகளையெல்லாம் அறிந்த அத்தேசத்து அரசன் மிகவும ஆச்சரியமும் பிரமையும் கொண்டு இப்படியும் உலகில் ஓர் மனிதர் உண்டுமா என்பதாக இவரையும் அந்த ஊரையும் காண விரும்பிச சேனை சைன்யங்களுடன் புறப்பட்டு வந்து அந்த ஊரையும் கண்டு ஆச்சிரிய முற்றுப் பின்பு இவரிடம் வந்தான். இவரும் எதிர்கொண்டு அழைக்க வந்தார். இவரைக் கண்டதும் அரசன், மந்திரி முதலியவர்கள் சுபீரென்று தேரில் நின்றும் குதித்து வந்து இவருடைய பாதத்தில் வீழந்து வணங்கினர்கள். இவர் மனம் பதறித்தானும் விழ்ந்து வணங்கினர் மற்றெல்லோர்களும் அப்படியே விழ்ந்து பணிந்தார்கள். பின்புஇவர்எழுந்துஅரசனைத்தூக்கி அழுதுகொண்டுஏபிரபு

ஏ மகாராஜாவே ஏ வேந்தே இது தகுமா. இது தர்மந்தானு இது முறையா. நான் தங்களுடைய குடியானவனும் கூலிக் காரனுமாயிருக்க எனக்குப் பொருந்துமா பெரும்பாவ மல்லவா. கடவுளுக்கும் நீதிக்கும் சம்மதமாகுமா என்பதாகக் கூறி வணங்கினர். அரசன் கேட்டு ஏ தெய்வீகத்தன்மை வாய்ந்த மகா உத்தமரே, ஏ புண்ணியவானே. என்னிலும் என்போன்ற சர்வ அரசர்களிலும் உலகிலுள்ள சர்வ மாந் தர்களிலும் நீர் மேன்மையுற்றவர், சிறந்தவர். ஆகையால் நான் வணங்கியது குற்றமும ஆச்சரியமுமன்று கடவுள் உம்மை அன்பும். பத்தியும். கருணையும். தருமமும். பொறுமை யும். அடக்கமும். சத்தியமும். ஞானமும். சேர்த்து ஒரே உரு வகமாக உற்பவித்து எங்களுக்கும் மற்றோர்களுக்கும் அறி வுறுத்தி நன்மை அடையும் பொருட்டே ஏற்படுத்தி இருக் கின்றார் என்பதாகப் போற்றிப் புகழ்ந்து பினபு சோடச உபசாரங்களும் பெற்றுத் தன்னிருப்பிடம் சென்றான். இவ ருடைய பெருமையானது எங்கும் பரவிற்று. அங்கங்கே இருந்து பல பேர்கள் வந்து பார்த்து இவரை வணங்கி இன் புடன செல்வார்கள். இவரும் மனுவியரும் முன்போலவே இருந்து வந்தார்கள்.

இப்படி இருக்க இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை உற்பவித்தது, இதைக் கண்ட எல்லோர்களும் அளவிறந்த ஆனந்தமுற்றார்கள். இவர்களும் மிகுந்த சந்தோஷமுற்றுச் செய்ய வேண்டிய சடங்குகளையும் அன்னதான முதற் முப் பத்திரண்டு தான தருமங்களையும் செய்து பெரியோர்களால் அக்குழந்தைக்குப் பஞ்சாட்சரம் என்னும் நாமம் சூட்டப் பெற்று அன்புடன் வளர்த்து வந்தார்கள். இவ்விதமிருக்க அத்தேசத்து அரசனுக்குச் சினேகிதனான மற்றொரு அர சன் அவ்வரசனைக் காண வந்திருந்தான். அவனிடம் இவ்வரசன் இவருடைய பெருமையைப் பற்றிப புகழ்ந்து கூறினன். அவனுக்குச் சந்தேகம ஏட்பட்டது. பின்பு இவரைச் சோதிக்க விரும்பி இருவரும இவருக்குப் பிரி தி யான ஈச்சரனுடைய தோத்திரப பாடல்களையும பெருமை களையும் அன்பு பத்தியுடன் இனிமையாகப் பாடக்கூடிய தக்க ஓர் பிராமணரை வருவித்து நீர் சென்று அவரை மகிழ்வித்து அவருடைய சொத்துக்கள் முழுதும் தானம் செய்யும்படி வாக்குமூலமாகப் பெற்று வரும்படி அனுப்பி னர்கள். அவரும் புறப்பட்டு இவரிடம் வந்து சேர்ந்தார்.

இவரைக்கண்டவுடன் மிகுந்த அன்புடன் வணங்கி ஆசனத்தில் அமரச்செய்து விசாரித்துப் பாவலர் என்பதாக உணர்ந்து மிகுந்த சந்தோஷமுடன் மனைவி முதல் மற்ற பெரியோர்களையும் வருவித்து பின்பு இவரைப் பாடும் படியாகக் கூறினர். இவரும் மிகுந்த அன்பும் பத்தியும் ததும்ப இனிமையுடன் அழகாகப் பாடினர். இதைக்கேட்டு அளவிறந்த சந்தோஷமடைந்து சுவாமி தங்களுக்கு வேண்டியது எதுவோ அதைக் கேளுங்கள். அப்படியே கொடுக்கின்றேன் என்றனர். ஐயா நான் கேட்பதைத் தவறாது கொடுப்பீரா என்றனர். சுவாமி என்னிடம் இருப்பதை எது கேட்கினும் அப்படியே கொடுக்கினறேன் என்றவுடன் ஐயா உமக்குரிய சொத்துக்களையெல்லாம் எனக்குத் தானம் செய்யும் என்றனர். இதைக்கேட்டவுடன் மிகுந்த சந்தோஷமுடன் சிரித்துக்கொண்டு ஐயா தாங்கள் என்னிடம் இல்லாத பொருளைக்கேட்டு விடுவீர்களோ என்பதாகக் கவலையுடன் கடவுளை வணங்கிக் கொண்டிருந்தேன். இருப்பதையே கேட்டீர்கள் மிகுந்த சந்தோஷம். அவ்விதமே உங்களுக்கு எல்லாம் அளித்தேன் ஒப்புக்கொள்ளுங்கள். எழுதித்தர வேண்டுமா என்றனர். ஐயா நீங்கள் சொன்னதே போதுமானது நான் ஒரு வாரம் சென்று இவையெல்லாம ஒப்புக்கொள்ளுகின்றேன். அதுவரையில் தங்களுடையதாகவே இருக்கட்டும் என்பதாகக் கூறிப் போய் விட்டனர்.

இவரும் மனைவியரும் சந்தோஷித்து நமக்கு ஈச்சுரன் நல்லகாரியம் செய்தார். பெரும சுமையானது நீங்கியது. நாம் அணிந்துள்ள ஆடையுடன் ஊருக்குப் பொதுவான அந்தச் சத்திரத்தில் போய் நினமதியாக ஈச்சுரனைத் தியானித்துக் கொண்டு வசிக்கலாம் என்பதாக உத்தேசித்துத் தயாராக இருந்ததுடன் மானேஜர் முதல் வேலைக் காரர்களையெல்லாம் அழைத்து ஐயா இனிமேல் என்னைப்போன்று அவரையும் பார்த்து அன்பாகவும் உண்மையாகவும் நடவுங்கள் என்றனர். இதைக் கேட்டவுடன் எல்லோர்களும் மிகுந்த துக்கமுடன அழுது பரதவித்தார்கள், இதை அறிந்த அந்நகரிலும் சுற்றுக் கிராமங்களிலுமுள்ள ஆண், பெண் முதல் எல்லோரும் அழுது பரதவித்து மிகுந்த துக்கமுடன் இவரிடம் வந்து அழுது எவ்வளவோ கூறி மறுத்தும் கேட்கவில்லை. பின்பு இவருடைய பந்துக்களும் பல போக்கிரிகளும் ஒன்று சேர்ந்து அந்தப் பிராமணன் வந்தால் அடித்துக்

கட்டி வைத்துத்துரத்தி விடவேண்டு மென்பதாகப் பேசி இருந்தார்கள். இவருக்குத்தெரியாது அவ்விதமே அந்தப் பிராமணர் வந்தனர் வழியிலேயே அவரை மறித்து அடே சண்டாளப் பிராமண உனக்கு இது முறையா இது தகுமா. உன் ஜீவனத்திற்கு வேண்டியதை யாசிக் காமல் இவ்விதம கேட்கலாமா அடேமடையா என்று பல விதம் திட்டி அடித்துப் பிடித்து கட்டி வைத்தார்கள். இவ விஷயத்தை இவருடைய மனைவியார் கேள்வியுற்று மனம பதஸ்ட்டமுடன் இவரிடம் வந்து கூறினள். இதைக் கேட்ட வுடன் மிகுந்த துக்கமும் பதஸ்டமுமாக எழுந்து அதிக வேகமுடன் ஓடி அடாப் பாவிகளே சண்டாளர்களே இந்தப்புண்ணியவானை இவ்விதம் செய்யலாமா. ஐயோ ஐயோ என்பதாக அழுதுகொண்டு அவிழ்க்கச் சென்றார். இவர்கள் மறுத்தார்கள். இவருக்கும் அவர்களுக்கும் வெகு நேரம் தர்க்கம நடந்தன. பின்பு அவர்களுக்குக் கோபம ஏற்பட்டு இவரைப் பலமுடன் பேசாது போ என்பதாகத் தளளினர்கள் இவர் கீழே விழுந்து மயக்கமுற்றுக் கிடந் தனர். இதற்குள் அந்தப் பிராமணரை அவிழ்த்து இனி மேல் இங்கே வந்தால் கொன்று விடுவோம் ஓடிப் போ என்பதாகத் துரத்தி விட்டார்கள். பின்பு இவரைத் தூக்கிச் சென்று மயக்கம தீர வைத்தார்கள்.

இவர் ஒன்றும் தோன்றாது மிகுந்த துக்கமுடன் ஓர் அறையில் படுத்துக்கொண்டு ஏ ஈச்சுரா என்னை இவ்விதம் சோதிக்கலாமா, இதென்ன அனீதமாக இருக்கின்றது. உலகில் நன்மை செய்யினும் தீமை செய்யினும் எல்லாம் தொந்தரவாகவும், துன்பமாகவும் ஏற்படுகின்றதே. வேறு எப்படித்தான் உலகில் வாழ்வது. இவை களையெல்லாம அறிந்தல்லவா பெரியோர்கள் சர்வமும் விடுத்துத் துற வடைந்து ஆனந்தமாக வாழப் பெற்றிருக்கின்றார்கள். நான் பாவி அறியாமற் போனேனே. ஐயோ நான் ஆதியில் கூலி வேலை செய்து கொண்டு எவ்வளவு ஆனந்தமாக இருந் தேன். ஈச்சுரன செல்வத்தையும மதிப்பையும் அளித்து இப்படிக் கெடுத்து விட்டாரே. என் சத்தியமும் பொய்யா கின்றதே. நான் கொடும்பாவியானேனே என்பதாகப் பலவிதம் சிந்தித்துப் புலம்பி நாம் கூறிய பிரகாரம் இன் றோடு இவ்வீடு முதல் சொத்துகளுக்கும் நமக்கும் பாத்தி யதை நீங்கி விட்டது. ஆகையால் இன்றிரவிலேயே நீங்கி

விடவேண்டும். என்பதாக முடிவு செய்து நடுராத்திரியில் எழுந்து எவர்களுக்கும் தெரியாது அணிந்துள்ள ஓர் வஸ்திரத்துடன் புறப்பட்டு அதிவேகமுடன் சூறுக்கு வழியாக வனத்தை நாடிச் சென்றார்.

சூறுக்கே ஆற்று வெள்ளம் வந்தன. இந்தப்பாவியைக் கொன்றுவிடு என்பதாக அதில் இறங்கினர். அது முழங்கால் அளவுத் தண்ணீராக ஏற்பட்டது. இவர் முன் ஒரு பணப்பெட்டியும் வந்தது. இதைக்கண்டு மனம் பதறி ஐயோ இதனால் அல்லவா நான் இபபடியானேன் என்பதாக விலகிச் சென்று அக்கரை ஏறினர். அங்கே காலியில் ஓர் சற்பம் புத்தின் மீது ஆடிக் கொண்டிருந்தது. அதனிடம் கையை நீட்டி இந்தப் பாவியைக் கடித்துக்கொல் என்றனர். அது ஒரு ரத்தினத்தைக்கக்கி விட்டு உள்ளே சென்றது. இதைக் கண்டு ஐயோ இதென்ன அநியாயமென்பதாக அதை எறிந்து விட்டு அப்பால் வனத்திற் சென்று, யானை, புலி, சிங்கம் முதலியவைகளைக் கண்டு அவைகளிடம் ஓடி இந்தப் பாவியைக்கொன்று சாப்பிடுங்கள் என்றனர். அவைகள் இவரைக்கண்டு ஓட்டம் பிடித்தன. இவர் மனம் வருந்தி ஏ கடவுள் இன்னும் கருணையில்லையா. நின் திருவுள்ளம் இரங்க வில்லையா. என்னைச் சோதிக்கலாமா என்பதாகப் புலம்பி மயங்கி ஓர் மரத்தடியில் உட்கார்ந்து தன்னை மறந்து இருந்தனர். அங்கே வெகுநாளாகத் தவம் செய்த பானு என்னும் ஓர் முனிவர் ஈச்சுரனைத் தெரிசிக்க முடியாது, மனம் சலித்துப் பின்பு எழுந்து தேச சஞ்சாரம் செய்து மீண்டும் வரலாம் என்பதாகக் கருதிப் புறப் பட்டு வரும் பொழுது இவரைக் கண்டு எழுப்பி விசாரித்தனர். இவர் அவரைச் சாஷ்ட்டாங்கமாக வணங்கி அழுது ஒன்றும் கூறுது நின்றனர். அவர் கண்டு பரிதாபமுற்றுத் தரித்திரப் பிணிக்காற்றுது இங்கே வந்ததாகக் கருதி அவரையும் அழைத்துக் கொண்டு ஓர் நகரத்தை அடைந்து அங்கே பஞ்ச லோகங்களைப் பொன்னாகச் செய்து வேண்டியது சேர்த்து இவரிடம கொடுத்து அய்யா இதைக் கொண்டு போய் தான தருமங்களும் செய்துகொண்டு நீயும் குடுமபத்துடன் சுகமாக வாழ்வாயாக என்றனர். இவர்கண்டு மனம் நடுங்கிச் சுவாமி நல்ல காரியம் செய்தீர்கள். போதும் போதும் இதற்காகவா தங்களிடம் வந்தேன் மூவாசை முதல் உலக போகங்களை எல்லாம் விட்டு ஈச்சுர

தெரிசனத்தையும் மேலான ஆத்மஞான நிலையும முத்தியும் அடைவதற்கே வந்துள்ளேன். என்பதாக மறுத்து வணங்கினர். இதை அறிந்த முனிவர் மனம் பதறி இவருடைய பற்றற்ற மேலான நிலையை உணர்ந்து நாணமுற்று இவரை வணங்கிப் பின்பு அவைகளைக் குளத்திற்குள் எறிந்து விட்டு இருவரும் ஓர் சத்திரத்தில் வந்து தங்கினர்கள். இம்முனிவரைக் கண்ட ஜனங்களெல்லாம் ஓடி வந்து பணிந்து வேண்டிய உபகாரங்களைச் செய்தார்கள். இபபடி இருக்க அங்கே இவருடைய மனைவியானவள் இவரைக் காணுமல் மனம் நடுங்கி அங்குமிங்கும் ஓடித்தேடினாள். விசாரித்தாள். கூவினாள். அலறினாள். தலையிலும் முகத்திலும் அடித்துக் கொண்டாள். உருண்டாள். பிரண்டாள். ஏ பிரபு, ஏ புண்ணியவானே எங்கே சென்றீர். இருக்கின்றீரா அல்லது இறந்து விட்டாரர. இந்தச் சண்டாளியைப் பரதவிக்க விட்டுப் போகலாமா. இது முறையா இது தருமமா நான் எப்படி வாழ்வேன் என் செல்வமே. என உயிரே என்பதாக இன்னும் பலவிதம் புலம்பி ஓவென்று அழுதனள். இதைக் கண்ட அந்நகரிலுள்ள ஆண், பெண் குழைந்தைகள் முதல் எல்லோர்களும் அலறிக்கொண்டும் தலையிலும் முகத்திலும் அடித்துக்கொண்டும் ஓடி வந்து ஏ புண்ணியவானே ஏ கருணைவடிவே. ஏ கருமவடிவே ஏ அன்பின் உருவமே, ஏ சத்தியப்புருடரே ஏ சாந்தக்கடலே எங்கு சென்றீர்? எங்கிருக்கின்றீர்? இவ்விதம் எங்களை வருந்த விட்டுப்போகலாமா. எப்பொழுது காணப் போகின்றோம் என்பதாகப் புலம்பி அழுதார்கள். பெண்களெல்லாம் அந்த அம்மையாரைக்கட்டிப் பிடித்து அழுது கூவினர்கள். இதைக்கேட்ட இவருடைய மாமன், மாமி முதலியவர்களும சுற்றுக்கிராமங்களிலுள்ள சர்வ ஜனங்களும் அலறிக்கொணடு ஓடி வந்து அழுது புலமபினர்கள். பல பேர் அங்கங்கே ஓடித் தேடித்திரிந்தார்கள்.

இப்படி இருக்க அந்தப் பிராமணர் தன்னுயிர் தப்பிப் பிழைத்ததே போது மென்பதாக ஓடி இங்கு நடந்துள்ள விடயங்களை யெல்லாம் கூறினர். இதைக்கேட்ட அந்த இரண்டு அரசர்களும் மந்திரி முதலானவர்களும் மனம் பதை பதைத்து நடுங்கி ஐயோ நாம் விளையாட்டாகச் செய்தது விணையாக முடிந்ததே. தெய்வ மகா உத்தம புருடருக்குப் பெரும கஷ்டங்களைக் கொடுத்து விட்டோமே.

கொடும் பாவிகளானேமே என்பதாக மனம் வருந்தி மறு நாள் சேனை சைன்யங்களுடன் பிராமணரையும் அழைத்துக் கொண்டு இங்கே வந்தார்கள். எங்கு பார்தாலும துக்ககர மாகவும் அழுகையும கூக்குரலுமாக இருக்கக் கண்டு விசாரித்து இவர்களும் ஓவென்று அலறி அழுது கொண்டு இவருடைய வீட்டுக்கு வந்தார்கள். இங்கே ஒரே கூட்ட மாகவும் அழுகையுமாகவும் இருந்தன. ஐயோ நாங்கள் தாம் இப்புண்ணிய புருடருக்குச் சனியனுகவும் எமனுகவும் இருந்தோம். இவரைச் சோதிக்கும் பொருட்டு விளை யாட்டாக இப்பிராமணரை அனுப்பிவைத்தோம். இது விணையாக முடிந்தது. பெரும்பாவிகளானேம். இனி யென செய்வோம் என்பதாக எல்லோர்களிடமும் கூறிப் பின்பு சேவகர்களை அழைத்துத் தேடி வரும்படியாக அனுப்பி னர்கள். எங்கும் தேடி அகப்படவில்லை.

அதன் பிறகு மிகுந்த துக்கமுற்று அவர் வந்து சேரும் வரையில் அவரைப்போன்று ஓர் உருவம் செய்து வைத்து அதன் முன்னிலையில் முன்னிருந்த வேலைக்காரர்களுடன் அவர் கூறிய வாக்கியம் பொய்யாகாதபடி அந்தப் பிராமணரையும் இருந்து எல்லாக்காரியங்களையும் முன் போல் நடக்கும்படி ஏற்படுத்தி அந்த அம்மையாரை வணங்கித் தாங்கள் இவையெல்லாம் மேல் பார்த்துக் கொள்ளவேண்டு மெனபதாகக் கூறினர்கள். இதைக் கேட்டவுடன் அலறி அழுது நான் என் பர்த்தாவைக்காணுது உயிருடன் வாழ்வேனு. மேலும நேற்றையத்தினமே அச் சொத்துகள் முழுதும இப்பிராமணருக்குச் சொந்தமாகி விட்டதே. நான பாவி. சத்தியம் கெட்டு இன்னும இவ் வீட்டில் இருக்கின்றேன். இதோ செல்கின்றேன் என்பதா கக் கடகட வென்று உருண்டு வீதியில் வந்து வீழ்ந்தனள். இதைக்கண்ட அரசர்கள் முதல் எல்லோர்களும் ஓவென்று அழுது ஓடி வந்து தூக்கி வணங்கி வேண்டிய சமாதானங் களைக் கூறி எவ்விதத்திலும் கூடிய சிக்கிரம் தேடிக்கொண்டு வந்து சேர்க்கின்றோமென்பதாக அந்த அம்மையாரையும் குழந்தையும் அவர்கள் தாய் தந்தையருடன் அவர்கள் வீட்டுக்கு எல்லோர்களும் கூட்டி வந்து சேர்த்துப் பின்பு தங்கள் இருப்பிடம் சென்று அங்கங்கே தேடும்படி ஏற்படுத் தினர்கள்.

இந்த அம்மையார் உண்ணுமலும் உறங்காமலும் சூளிக் காமலும் கலை முடியாமலும் முன் அணிந்துள்ள வஸ்திரத்

துடனேயே இருந்து கொண்டு இவரை நினைந்து நினைந்து அழுவதும் புலம்புவதும் எழுந்து ஓடுவதும் உருளுவதும் இவ்விதமாக இரவும் பகலும் இருந்தனள். இதைக் கண்ட தாய் தந்தையரும் மற்றெல்லோர்களும் அழுது எவ் வளவோ சமாதானம் கூறியும் கேட்கவில்லை. ஒரு நாள் நடுராத்திரியில் கனவு கண்டு எழுந்து குழந்தையும் தூக்கிக் கொண்டு அவர்களுக்கும் தெரியாமல் புறப்பட்டு ஊரைக் கடந்தனள். அங்கே ஓர் மரத்தடியில் மிகுந்த விருத்தப பருவமுடைய பண்டாரக் கிழவா படுத்திருந்தனர். இவளைக் கண்டவுடன் எழுந்து அடிப்பாவி நீ யார். பேயாப் பூதமா ராட்சசியா எனறனர். ஐயா நான் ஒரு சண்டாளி என்னு டைய பர்த்தாவைத் தேடிச் செல்லுகின்றேன என்றனள். இவர் கேட்டு இதென்ன அநியாயம். மானம், வெட்கம். பயம், மடம, கற்பு இவையெல்லாம் விட்டு இந்த நடுநிசியில் இப்படித் தனிமையாகச் செல்லுகின்றுயே அப்படிப் புருடனு அவன. அவன் பேரில் பைத்தியம் பிடித்து விட்டதா. நீ தாசியும் காட்டேரியும் ராக்ஷசியும் போன்றிருக்கின்றுயே. குலஸ்திரீ அல்லவே என்பதாகப பலவிதம் இழிவாகக் கூறினர். இவள் இவைகளை யெல்லாம் கவனிக்காது போய்க்கொண்டிருந்தாள். இவர் தடியை ஊன்றிக்கொண்டு முன்னதாகச் சென்று அடிப்பாவி நான் கூறுவதைக் கவ னிக்காது இப்பொழுது எந்த ஊருக்குச் செல்லுகின்றுய். இதோ நானும் வருகின்றேன். எனக்கு வழி தெரியும். எதோ பெண்ணாக இருக்கின்றுய். என் பின்னாலேயே வா என்பதாகக் கூட்டிக் கொண்டு அன்றிரவு முழுதும் நடந்து காலையில் செல்லும் பொழுது சுறுக்கே ஆற்றில் வெள்ளம் நிறையச் சென்றது. இவர் முனனதாக இறங்கிச் சென்றார். இவளும் பயமினறி இறங்கிச் சென்றாள். முழங்கால் தண்ணீராக இருந்தன. அக்கரையிலுள்ள ஊர் ஜனங்க ளெல்லாம் இவரைக்காணவில்லை.

இவளைக்கண்டு மிகுந்த ஆச்சரியமும் பிரமையுமுற்று ஓடிவந்தார்கள். இதற்குள இப்பெரியவரைத் தண்ணீர் முழுகி இழுக்க ஆரம்பித்தது. அடிப்பாவி நான் சாகின்றேனே. முழுகி விட்டதே என்பதாக அலறினர். இந்த அமமையார பதட்டமுடன் ஓடிக் கையைப்பிடித்துத் தூக்கினள். தண்ணீர் வேகமாக இருக்கின்றது. அந்த ஜனங்களும் வர முடியவில்லை, இவரும கத்திக் கூவுகின்றார். இவள அழுது

கொண்டும் பலமுடன் விடாது இழுத்துக்கொண்டும் குழந்தையும் தூக்கிக்கொண்டும மிகுந்த கஷ்டமுடன் சுச்சுரூனையும் நீனைந்து உருகி அழுது கொண்டும் கரையில் சேர்ந்தாள். அப்பொழுது ஜனங்களெல்லாம் ஓடி வந்து வணங்கி அம்மா நீங்கள் யார் என்றார்கள். ஐயா நான் ஒரு சண்டாளி, என் பர்த்தாவைத் தேடிச் செல்கின்றேன். வழியில் இப்பெரியவரும் துணையாக வருகின்றார் என்றனள், அம்மா தாங்கள் கற்பிற் சிறந்த உத்தமி போன்றிருக்கிறது. ஆற்று வெள்ளமும் பணிந்து தங்களை மூழ்விக்காது இப் பெரியவரை மூழ்கி இழுத்ததே என்றார்கள். இதற்குள் இப் பெரியவர் அழுது கொண்டு நான் பாவி சண்டாளன், ஆகையால் என்னை மூழ்கி இழுத்தது. இப்பெண் கற்புக் கரசியானபடியால் மூழ்கி இழுக்காது. முழங்கால் தண்ணீ ராக இருந்தன. ஏதோ அவள் புண்ணியத்தால் நானும் பிழைத்தேனென்று தலையில் அடித்துக்கொண்டார். பின்பு எல்லோர்களும் இவர்களை ஆகாரம் உண்ணவும் தங்கிச் செல்லவும் தாங்கள் துணையாக வருவதாகவும் பலவிதம் வேண்டிக் கூறியும் மறுத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார் கள். போகும்பொழுது பட்சிகளையும் மிருகங்களையும் வழிப் போக்கர்களையும் என பர்த்தாவைக் கண்டீர்களா என் கொழுனரைக் கண்டீர்களா என் புருடனைக் கண்டீர்களா என்பதாகப் புலம்பிக்கொண்டே அந்த நகரத்தை அடைந்து வீதியிற் தலைவிரி கோலமாக அழுதுகொண்டு ஆண்களை யும் பெண்களையும் என் பர்த்தாவைப் பார்த்தீர்களா, என் புருடரைப் பார்த்தீர்களா, என் உயிரைக் கண்டீர்களா எங்கே இருக்கின்றா ரென்பதாகப் புலம்பிக்கொண்டே சென் றாள். சில வாலிபர்களும் பெண்களும் யாரோ பைத்தியக் காரி என்பதாகச் சிரித்தார்கள். சிலர் ஐயோ பாவம் புருடன் இறந்துவிட்டான்போ லிருக்கின்றது. அழுதுகொண்டு போகின்றாளென்பதாக இவர்களும் பின்தொடர்ந்து வந்தார் கள். அங்கே அந்த முனிவருடன் இவரும் மற்றும் பல பெரியோர்களும் இருந்தார்கள். இப் பெரியவரும் அச் சத்திரத்திற்கே அழைத்துச் சென்று உள்ளே போன வுடன் இவள் தன் புருடனைக் கண்டதும ஓவென்று அலறி அழுது கீழே விழுந்து உருண்டு, பிறண்டு புலம்பினாள். இதற்குள் இப்பெரியவர் தடியை ஊன்றிக்கொண்டு குடுகுடு வென்று ஓடி வந்து இவர் முன் நின்று, 'அடே சண்டாளா, அடே பாவி, அடே மடையா, அடே முட்டாளப் பயலே

கூலிக்காரப் பயலே' இப்படியா செய்தாய். அங்கே எல்லா ஜனங்களையும் அழுது பரதவிக்கவிட்டு இந்த பெண்ணும் பிள்ளையும் அழுது வருந்தவிட்டுத் திருட்டுத்தனமாகப் பயந்துகொண்டு ஓடி வந்துவிட்டாயே. என்னையும் ஊண் உறக்கமின்றி நடந்து வாடி வருந்த வைத்தாயே. அடே உனக்குப் படிப்புத் தெரியுமா தான தருமம் தெரியுமா தவம் பூசைகள் தெரியுமா, ஒன்றும் தெரியாத கூலிக்காரப் பயல், இவ்விதம் செய்துவிட்டாயே. ஐயோ என் கால்களெல்லாம நோகின்றதே, ஆற்றிலும் சாகத் திரிந்தேனே. இந்தப் புருடனைக் காணுமல் இவள் உண்ணுமலும் உறங்காமலும் அழுது ஓடி வந்து என்னையும் வாடச் செய்தாளே. ஐயா எல்லோரும் கேளுங்கள். நான் ஒரு யாத்திரை வாசி. திக்கற்ற அனுதிக்கிழவன். அந்த நகரத்தை அடைந்து பசியால் உணவுக்குச் சென்றால் வீடுகள்தோறும் சாவு ஏற்பட்ட வீடுகள்போன்று அழுகையாகவே இருந்தன. அதை விட்டுப் பக்கத்து ஊருக்குச் சென்றால் அவ்வூரிலும் இப்படியே இருந்தன. உணவு கிடைக்கவில்லை. பின்பு பசியால் ஓர் மரத்தடியில் படுத்திருந்தால் இவள் நடுராத்திரியில் அழுதுகொண்டு பேய் மாதிரி மானம், பயம முதல் எல்லாம் விட்டுத் தேடி வந்தனள். என்ன பாருங்கள். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை, என்னையும் கொல்லப் பார்த்தாள. என் செய்வது ; பெண்பிள்ளையான படியால் கூட்டி வந்து சேர்த்தேன். இந்தத் திருட்டுப்பயல் இவ்விதமாக வந்து தடியன் மாதிரியாக இருபபதைப் பார்த்தீர்களா, என் கால்களெல்லாம் நோகினறதே என்பதாகக் கோபமுடன் அவர் தலையில் எட்டி உதைத்தார்.

இதைக் கண்ட எல்லோர்களும் மெய்மறந்து ஒன்றும் தோனருது இருந்தார்கள். சிலருக்கு இப் பெரியவாபேரில் மிகுந்த கோபமும் வெறுப்புமாக இருந்தன. சிலர் கோபமுடன் ஓய் சாமியார்க கிழவா. உனக்கு என்ன புத்தி இருக்கின்றதா இல்லையா. கிழவனுக இருந்தும அவரை இவ்விதம் திட்டி உதைக்கினருயே எனறனர். உங்களுக்கு என்ன தெரியும் பட்டவனுக்கல்லவா தெரியும் என்றனர். ஓய் உன்னை யார் வரும்படி கூறியது. பேசாது போகின்றதானே என்பதாக எதிர்த்தார்கள். இவர் எழுந்து வணங்கி ஐயா அவர் உபாதியாலும் கோபத்தாலும செய்கின்றார். பால்யக் குழந்தையைப் போன்றவர். அவர் எது செய்யி

னும் சந்தோஷமல்லவா என்பதாகச் சமாதானப்படுத்தி இவரையும் பாதத்தில் வீழ்ந்து வணங்கி நான் செய்த குற்றங்களைப் பொறுத்தருளவேண்டும் என்பதாக அழுது நின்றனர் அடே திருடா நீயும் உன் மனைவியும் உங்கள் ஊருக்குச் செல்லுங்கள். இல்லாவிடில் இங்கேயாவது வசியுங்கள் என்பதாகக் கூறிப் பின்பு முனிவரை நோக்கி நீர் அநேக வருடம் வனத்தில்த் தவம் செய்தும் ஈச்சுரனைத் தெரிசிக்காது சலிப்புற்றுத் தவத்தை விடுத்து தேச சஞ்சாரம் செய்துவரவா புறப்பட்டிருக்கின்றீர் சரி, சரி அப்படியே போய் வாரும் எனபதாகக் கூறி அடே எனக்கு மிகுந்த மயக்கமாக இருக்கின்றது என்பதாக ஓர் அறையுள் படுத்துக் கதவை சாத்திக்கொண்டனர். முனிவர் பிரமித்து ஒன்றும் தோன்றாது இருந்தார். பின்பு மற்றோர்கள் இந்த அம்மானையும் இவரையும் அழுகையை நிறுத்திச் சமாதானம் செய்தார்கள். இதற்குள் இவர்களுக்கு ஆகாரம் கொண்டு வந்தார்கள். முனிவரும் இவரும் எழுந்து அப் பெரியவரைச் சாப்பிட அழைத்தார்கள். ஒன்றும் பேச வில்லை. பின்பு மெதுவாகத் திறந்து பார்த்தார்கள். அவரைக் காணவில்லை. எல்லோர்களும் ஆச்சரியமுற்றார்கள். சிறிதுநேரம் யோசித்து இவர் ஈசுரன் என்பதாகப் புலப் பட்டுத் தங்களை அறியாது ஓவென்று அலறிக் கதறி அழுது ஏ பரமேஸ்பரா, ஏ ஜகதீஸ்பரா, ஏ கருணாகரா, ஏ லகலாசவாசா, ஏ பார்வதி சமேதா, ஏ கங்காதரா, ஏ சூலபாணி என்பதாகப் பலவிதம போற்றித் துதித்து வணங்கி நீதானு இவ்விதமாக வந்து இவ்வளவு வேடிக்கை செய்தனை. அயன, அரி, இந்திரன் முதல் தேவர்களும் முடிதிண்டத் தேடியும் கிடைபபதற்கரிய நின் திவ்ய பாதங்கள் மண் தீண்டும்படியாக நடந்தா வந்தனை. ஐயோ பாவிகள் முன்னமே அறியாமற் போனேமே என்பதாகப் பரதவித்துப பின்பு ஆனந்தப் பிரவாகத்தினுல் கண்களில் நீர் சொரிய அரஅர சமபோ சங்கரா, சர்வேசா என்பதாகக் கூவி ஆடிப்பாடித் துதித்துச் சிரித்து வணங்கிப் பின்பு இந்தப் புண்ணிய ஆன்மாக்களால் பாவிகளாகிய நாங்கள் எல்லோரும் தெரிசிக்கப் பெற்றோம் என்பதாக இவர்களை யும போற்றி வணங்கினர்கள். அதன பிறகு முனிவர் இவர்களை நோக்கி நான் எவ்வளவோ வருடமாக வனத்தில் அரிய தவத்தைச் செய்தும் காணப்பெறுத இறைவனை உங்களால் தெரிசிக்கப் பெற்றேன், உண்மை நிலையும்

உணர்ந்தேன் என்பதாகக் கூறிச் சில நாள் இவர்களுடன் ஆனந்தமாக இருந்து பின்பு தேச சஞ்சாரம் செய்து மீண்டும் வருவதாகக் கூறி இவர்களை இங்கேயே வசிக்கும படி செய்து விடைபெற்றுச் சென்றனர். இவர்கள் இங் கேயே வசித்துக்கொண்டு அந்தக் குழந்தையைத் தங்க ளுடன் சூளிக்கவும பூசை செய்யவும் செபம், தியானம் செய் யவும் அன்பு. பத்தியுடன் பாடவும் எது சாப்பிடினும் முன்ன தாக ஒரு ஜீவனுக்குக் கொடுத்துச் சாப்பிடவும் பெரியோர் கள் வந்தால் எழுந்து வணங்கவும் இவ்விதமாக எல்லாக் குணங்களையும் நடத்தைகளையும் மிகப் பால்ய வயதிலேயே பழக்கி வந்தார்கள். இவர்களை அந்நகரத்திலும் சுற்றுக் கிராமங்களிலுமுள்ள ஜனங்களெல்லாம் தெய்வமாகப் பாவித்துப் பணிவிடை செய்யவும் உணவுகள் அளிக்கவும் நான் நீ என்பதாக ஒருவருக்கொருவர் சண்டைகள் போட ஆரம்பித்தார்கள். இதை அறிந்த சில பெரியோர்கள் ஒரு நாளைக்கு ஒருவராக முறை ஏற்படுத்தி அதன்பிரகாரம் நடந்து வந்தன, நாளுக்கு நாள் பெரும் கூட்டமும் பூசனை யும் துதியும் கொண்டாடுவதும் அதிகமாயிற்று. இவருக் குத் தொந்தரவாகவும் மனக்கஷ்டமாகவும் இருந்தன. இவர் யோசித்து மனைவியும் குழந்தையும் அழைத்துச் செல்ல முடியாது இந்த ஜனங்கள் விடமாட்டார்கள். அவர்கள் இங்கேயே சுகமாக இருக்கட்டும். நாம் தெரியாத படி ஏகாந்தமாகப் போய் இருக்கலாம் என்பதாக நடு ராத்தி ரியில் புறப்பட்டு அந்நகரைக் கடந்தார்.

இவருக்கு முன் ஓர் கள்வன் தடியை ஓங்கிக்கொண்டு அடே நிருடா, எங்கே போகின்றாய். நில், நில் என்ப தாக மறுத்தான். இவர் பலவிதம் கூறியும் கேட்காது போக முடியாதபடி தடுத்தனன். இதற்குள் இவளுக்குக் கனவிற் தோன்றி எழுந்து குழந்தையையும் அழைத்துக் கொண்டு தலைவிரி கோலமாக வேகமுடன் ஓடிவந்து இவ ரைக் கண்டு அழுது தாங்கள் இப்படிச் செய்வது தர்ம மாகுமா என்பதாக வணங்கிக் கூறினாள். இதற்குள் அக் கள்வன், அடே மடையா, பெண் பிள்ளைக்குத் தெரியாமலா ஓடப் பார்த்தாய். ஓகோ சரி சரி இவளையும் கூட்டிச்செல் என்பதாகப் போய்விட்டான். இவர் அடி பெண்ணே, என் னால் உனக்கும் குழந்தைக்கும் கஷ்டம். உங்களால் எனக் கும் கஷ்டம். ஆகவே நீங்கள் இங்கே சுகமாக இருக்கலாம்

என்றனர். இந்த அமமையார் அழுது மறுத்தனள். அதன் பிறகு மூவரும் புறப்பட்டு நடந்து அம்சபுரி என்னும பட்டினத்தை அடைந்து ஓர் சத்திரத்தில் போய்த் தங்கினர்கள். இதற்குப பக்கத்திலுள்ள வீட்டுக்காரர்கள் மிகுந்த அன்பு, பத்தி, தருமம் முதலிய நற்குணமுடையவர்கள். இவர்களைக் கண்டு விசாரித்தார்கள். ஐயா, நாங்கள் ஜீவிப்பபதற்காக இங்கே வந்தோமென்றார்கள். இதைக் கேட்டு மிகுந்த அன்புடன் அழைத்துச் சென்று ஸ்நான முதலியவைகள் செய்யும்படி ஏற்படுத்திப் பின்பு ஆகாரமும் அளித்துச் சத்திரத்தில் படுக்கும்படி செய்தார்கள். இவ்விதம் மூன்று காள் வரை இருந்தார்கள். இவருக்கு மனக் கஷ்டமாக இருந்தது. இதை அறிந்த அந்த அம்மையார் அவர்களிடம் போய் அம்மா எனக்கு ஏதாவது ஒரு வேலை பாருங்கள் என்பதாகக் கூறினள். இதற்குள் அதற்கடுத்த வீட்டுப் பெண்பிள்ளை அரண்மனையில் ராணி இடத்தில் வேலை இருக்கின்றது. அதற்காகத் தான் ஓர் ஆளைத் தேடுகினறேன். நீ வருவதானால் வா அம்மா என்றனள். இதற்கு எல்லோரும் சம்மதித்து அப்படியே ஏற்படுத்தி வேலை பார்த்து வந்தனள். இந்த அம்மாள் நடவடிக்கையை அறிந்த ராணியும் மிகுந்த அன்பாகப் பாவித்து வேண்டிய பணமும் அரிசி, பருப்பு, காய்கறி, வஸ்திரம் முதலியவைகளும் அளித்தாள். பக்கத்து வீட்டுக்காரர்களும் வேண்டிய உதவிகள் செய்தார்கள். இதைக் கொண்டு தாங்களும் ஜீவித்துக்கொண்டு முன்போல தான தருமங்களும் செய்து கொண்டு இன்புடன் வசித்து வந்தார்கள். இவர் ஒன்றும் கவனிப்பதில்லை. சதா ஈச்சுர தியானத்திலேயே தனிமையாகவே இருந்து வந்தனர். சாப்பாட்டுக்கு அழைத்த பொழுது வந்து சாபபிடுவார். இந்தப் பையன் தாயாருடன் அரண்மனைக்குச் சென்று விளையாடுவான் ராணியானவள் இவன் நடத்தையையும் இனிய பாட்டையும் அறிந்து மிகுந்த சந்தோஷமுறறு அடிக்கடி பாடச்செய்து எல்லோர்களும் கேட்டு வேண்டிய பண்டு பலகாரங்கள் அளிப்பார்கள். அந்த ராணியின் பெயர் **ரத்னாம்பாள்**. அவ்வரசன் பெயர் **தினகர மகாராசன்**. இவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை உற்பவித்து இறந்துவிட்டது. அதன் பிறகு ஓர் பெண் குழந்தை ஏற்பட்டது. அதற்கு **ஆனந்தம்** என்பதாக நாமம சூட்டி அன்புடன் வளர்த்து வந்தார்கள். இவ்வரசனுக்குப் பிரிய தினேகிதரும் மிகுந்த தனவந்தருமான

மாணிக்கஞ் செட்டியாருக்கும் செல்வம் என்னும் ஓர் பெண் குழந்தை உண்டு. அக் குழந்தையும் அரண்மனையிலேயே இக் குழந்தையுடன் படித்துக்கொண்டும் விளையாடிக்கொண் டும் இருந்து வந்தது. இப்படி இருக்க இப்பையனும் இவை களுடன் சேர்ந்து விளையாடுவதும் படிப்பதும் கல்லைச் சுவாமியாக வைத்துப் புஷ்பம் சாத்திப் பண்டு பலகாரங் களைப் படைத்துச் சுற்றி வந்து மேலே விழுந்து வணங்கிப் பாடுவதும் செபம் செய்வதும் பின்பு அவைகளை எடுத்து எறும்பு, பட்சி, நாய், பூனை முதலியவைகளுக்கும் மற்ற வேறு குழந்தைகளுக்கும் முன்னதாகக் கொடுத்துப் பின்பு இவர்கள் சாப்பிடுவதும் சில சமயம் அப்பெண்கள் மறந்து விட்டால் கையில் இவன் அடிப்பதும் இவ்விதமாக இருந்து வந்தார்கள். இப்படி இருக்க ஒருநாள் வழக்கமபோல் எல் லாம் செய்து சாஷ்டாங்கமாக வணங்கும்பொழுது இப் பெண்கள் இரண்டும் தலையைத் தரையில் படியாது நிமிர்ந்து வணங்கினர்கள். இவன் கண்டு கோபமுற்று நன்றாக வணங்குங்கள் என்பதாக இருகரத்தாலும் இரு தலையையும் பிடித்துத் தரையில் வேகமாக அமுக்கினன். உடனே நெற்றியானது அடிபட்டு உடைந்து இருவருக்கும் உதிரம் வடிந்தன. ஓவென்று அலறி அழுக ஆரம்பித்தார்கள்.

இதைக் கண்ட எல்லோர்களும் ஓடி வந்து தூக்கினர் கள். இதற்குள் அரசன் கேள்வியுற்று வேகமுடன் ஓடி வந்து பார்த்து மிகுந்த கோபமுடன் இப்பையனைத் திட்டி அடித்துப் பிடித்துத் தூணில் கட்டி வைத்தனன். மறுபடி யும் கோபமுடன் இவன தலையைப் பிடித்து அத்தூணில் முட்டவைத்தான். உடனே நெற்றியில் உடைந்து உதிரம் வடிந்தது. மயங்கி, அழுது சோர்ந்து நின்றனன். எவர் களும் பயந்துகொண்டு அவிழ்க்கவில்லை. அந்தப் பெண் களுக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்தார்கள். பின்பு இவன் நிற்கும் பரிதாப நிலையை உணர்ந்த ராணியானவள் மனம் வருந்தி சிறிய குழந்தை தெரியாது செய்துவிட்டான் என்பதாக அவிழ்த்து விடும்படி செய்து தாயுடன் வீட்டுக்கு அனுப்பினள். உடனே அரசன மந்திரியிடம் வேலைக்காரி மகன் இவ்விதம் செய்திருக்கின்றன். இது மிகவும் கேவல மாகிவிட்டது. ஆகையால் இவர்கள் இங்கே இருக்கக் கூடாது. இன்றைக்கே நம் தேசத்தைவிட்டு அபபுறப் படுத்த வேண்டுமென்றனன். மந்திரி எவ்வளவோ கூறியும்

கேட்கவில்லை. பின்பு அப்படியே உத்சரவிட்டான். இதை அறிந்த இவர்களும் இதுவும் ஈச்சுரனின் திருவிளையாடல் தான் என்பதாக அப்படியே புறப்பட்டார்கள். மற்ற ஜனங்களெல்லாம் கேட்டு மிகுந்த துக்கமுற்று ஐயோ விளையாட்டுக் குழந்தை செய்ததற்காக இவ்வரசன் இவ் விதம் செய்யலாமா. இந்த அநீதம் உண்டா என்பதாக வருந்தினர்கள். பக்கத்து வீட்டுக்காரர்களும் மிகுந்த துக்க முடன் அழுது வருந்தி இவர்களுக்குக் கட்டுச்சாத முதலிய வைகள் கொடுத்து வணங்கி அனுப்பினர்கள். இவர்களும் விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். பின்பு கட்டுச்சாத மும் ஆகிவிட்டது பசியாலும தாகத்தாலும் களைத்து ஓர் மரத்தடியிற் போய் உட்கார்ந்து அடி பெண்ணே நீயும் குழந்தையும் உன் தாய் தந்தையரிடம் சுகமாக இருக்காது. இவ்விதமாக வந்து கஷ்டப்படுவதும் உங்களால் நானும் கஷ்டப்படுவதும் தருமமாகுமா. ஈச்சுரனும் நம்மை இன்னும் சோதிக்கின்றனர் என்பதாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஓர் கூலிவேலை செய்யும் வாலிபன் தோளில் மண் வெட்டியும் கையில் ஓர் தோண்டியில் கூழும், உப்பு மிளகா யும் கொண்டு மிக உல்லாசமாகப் பாடிக்கொண்டு வந்த னன். இதைக் கண்டு இவர் சிரித்துப் பெண்ணே இவரைப் போன்றுதான் நான் ஆகியில் சந்தோஷமாக இருந்தேன். பின்பு புகழும் செல்வமும் கடவுள் அளித்து இந் நிலைமையை அடைந்தேன் என்றனர். இதற்குள் அவன் வந்து கோபமுடன் என்னைப் பார்த்தால் பரிகாசமாக இருக் கின்றதா. சிரிக்கின்றீர்களே என்றனன். இவர் எழுந்து ஐயா பரிகாசமில்லை. நானும் உங்களைபபோல் கூலி வேலை செய்தேன். அந்த ஞாபகம் ஏற்பட்டது என்றனர், சரி தான் நீங்கள் எங்கே செல்லுகின்றீர்கள் என்றான். ஐயா எங்கேயாவது சிவிக்கச் செலலுகின்றோம் என்றார்கள். இதோ அந்த ஊரில் ஓர் பெரிய தனவந்தர் இருக்கின்றார். அவர் மிகுந்த அன்பு, பத்தி உடையவர். அங்கே வசிக்க லாம். நானும் அங்குதான் போகின்றேன். இதைச் சாப் பிட்டு வாருங்கள் என்பதாகத் தோண்டியைக் கொடுத் தான். ஐயா உங்களுக்கு வேண்டுமே என்றார். அடா பாவி நீ. வேலை செய்யும்பொழுது பசித்தவர்களுக்குக் கொடுக்காது நீயே சாப்பிட்டாயா என்றனன். இல்லை என்றார். அப்படி இருந்தால் இப்படி ஏன் கூறுகின்றாய். சாப்பிடுங்கள் என்றான். இவர்களும் சாப்பிட்டார்கள்.

மிகவும் திவ்யமாக இருந்தது. பின்பு இவர்களையும் அழைத்துத் கொண்டுபோய் அத்தனவந்தருடைய விட்டுத் திண்ணையில் உட்காரச் செய்து தோண்டியும் மண்வெட்டியும் இவர்களிடம் வைத்து இதையும் வைத்திருங்கள் இதோ வருகின்றேன் என்பதாகப் போய்விட்டான். அத்தனவந்தர் வெளியில் வந்து ஐயா தாங்கள் யார் என்பதாக விசாரித்தனர். ஐயா நாங்கள் ஜீவிக்கும் நிமித்தமாக இங்கே வந்தோம என்றனர். அது யாருடையது என்றனர். ஐயா வழியில் யாரோ ஒரு கூலிக்காரர் எங்களைச் சந்தித்து ஆகாரமும் கொடுத்து அழைத்துவந்து இங்கே இருக்கும்படி செய்து அவைகளையும் வைத்துவிட்டுப் போய் வருவதாகச் சென்றார். இன்னும் வரவில்லை என்றனர். பின்பு சிறிது நேரம் சென்று அவைகள் இருக்கட்டும். நீங்கள் வாருங்கள் என்பதாக அழைத்துச் சென்று ஸ்நானம், சாப்பாடு முதலியதெல்லாம செய்து வைத்தனர். மறுநாள் காலையில் இந்த மண்வெட்டியும் மண் தோண்டியும் பொன்மயமாக விளங்கின.

இதைக் கண்ட அத்தனவந்தர் முதல் எல்லோர்களும் ஆச்சரியமுற்று இவர்களிடம் காண்பித்தார்கள். இவர்களும் ஆச்சரியமுற்றுச் சிறிதுநேரம் யோசித்து ஐயா நாங்களும் அறியாதபடி ஈச்சுரனே கூலிக்காரன் மாதிரியாக வந்து எங்களையும் ஏமாற்றி இவ்விதம் செய்திருக்கின்றார் என்பதாக ஈச்சுரனை வணங்கித் துதித்து அழுதுகின்றனர். இதைக் கேட்ட எல்லோர்களும ஈச்சுரனையும் இவர்களையும் போற்றித் துதித்து வணங்கினர்கள். இவைகளை அத்தனவந்தருடைய பூசை அறையில் இருக்குமபடி ஏற்படுத்தினர்கள். அதுமுதல் இவர்களை அத்தனவந்தர் முதல் எல்லா ஜனங்களும் அன்பு, பத்தியுடன் கொண்டாடி வந்தார்கள். இப்படி இருக்க முன்னமே இத் தனவந்தர் ஊருக்குப் புறத்தில் ரோட்டின்மீது ஓர் சத்திரம் ஏற்படுத்தி அங்கே பிரதிதினம் உச்சி வேலையின்போது பத்துச் சாதுக்களுக்கு அன்னமளிக்கும்படி ஏற்படுத்தி நடந்துவந்தனர். அதை இவர்கள் அறிந்து அங்கே வசிக்க விரும்பினார்கள். அப்படியே அங்கே வேண்டிய வசதிகளும் செய்து வசிக்கும்படி ஏற்படுத்தினர். இவர்கள் அங்கே போனவுடன் தண்ணீர்ப் பந்தல, அன்னதான மண்டபம், குளம், கிணறு, ஆலயம முதலியவைகளும் சில வீடுகளும் ஏற்பட்டன. எல்லாம்

இவர்களே கவனித்து வந்தார்கள். இவ்விதமாகச் சந்தோஷ முடன் இருந்து வரும்பொழுது குழந்தைக்கு வயதும் பதினெட்டு ஆயிற்று. அப்பொழுது அவன் தாய் தந்தை யரை வணங்கி நான் யாத்திரை செய்துவர விரும்புகின் றேன் என்றனன். இவர்களும் சரி என்பதாகப் பல புத்தி மதிகளையும் போய் வரவேண்டிய கிரமங்களையும் கூறிப் பின்பு தாங்கள் உற்பவித்து வசித்த ஊர்களையும் சத்திரம் முதலிய தர்மங்களையும் மற்றும் வேண்டியவர்களையும் அந்தப பிராம ணரையும் பார்த்தும் விசாரித்தும் நீ இன்னனென்பது தெரி யாமலும் அங்கே தங்காமலும் வரும்படியாகவும் பின்பு அமசபுரிக்கு வந்து சத்திரத்திற்குப் பக்கத்து வீட்டுக்காரர் களையும் கண்டு அங்கே தங்கி இருந்து அந்த அரசன் ராணி முதலியவர்கள் க்ஷேமத்தையும் அறிந்து கொண்டு சுகமாக வந்து சேரும்படி கூறி அனுப்பினர்கள்.

இவனும் அவர்களை வணங்கிப் புறப்பட்டுச் சென்று அங்கங்கே புண்ணிய நதிகளில் மூழ்கியும் மகான்களாகிய பெரியோர்களைத தெரிசித்தும், ஸ்தலங்கள் தோறும் சென்று தெரிசித்து அன்பும் பத்தியும் ததும்ப இனிமை யுடன பாடி ஈச்சுரனையும் மற்ற அன்பர்களையும் மகிழ்வுறச் செய்தும் யாதொரு குறைவின்றிச் சந்தோஷமாக யாத் திரை செய்து கொண்டு பின்பு தாய் தந்தையர் உற் பவித்து வசித்த ஊர்கள் முதல் எல்லாம் நேரிற்கண்டும் விசாரித்தும் மிகுந்த சந்தோஷமுடன் எவர்களும் அறியாத படி புறப்பட்டு அமசபுரிக்கு வந்துசேர்ந்து அவர்களுடைய வீட்டை விசாரித்து அங்கேசென்றனன். அவர்கள் கண்டு நீ யாரய்யா என்று விசாரித்தார்கள். இவன் வணங்கி உண் மையைக் கூறினன். இதைக் கேட்டவுடன் அவர்கள் ஓடி வந்து கட்டிப்பிடித்து அழுது பின்பு அவர்களையும் விசா ரித்து உட்காரச் செய்து அன்புடன் எல்லா உபசாரமும் செய்து ஒரு வாரம் வரை இருந்து போகும்படி கூறினர்கள். சரியென்பதாக இருந்தனன். மறுநாள் இவர்களுக்கு முக் கிய பந்துக்களில் ஒருவர் இறந்து ஆள் வந்தது. உடனே அழுதுகொண்டு அவசரமுடன் இவனை வீட்டில் இருந்து மூன்று நாள் வரை பார்த்துக் கொள்ளும்படியாகக் கூறி வசதிகளும் ஏற்படுத்திவிட்டுச் சென்றார்கள். இவன் இங்கே இருந்தனன். மாலையில் நகரைச் சுற்றிப்பார்க்க விருப்பிச் சென்று அரண்மனையின் பக்கமாக வரும்பொழுது மேல்

மாடியில் ராஜகுமாரத்தியும் சேடிகளுமாகப் பெரிய மாம் பழங்களைப் பந்து மாதிரியாகச் சுற்றி நின்று கொண்டு ஒரு வர் கையில் ஒருவர் எறிவதும் பிடிப்பதுமாக விளையாடும் பொழுது ராஜகுமாரத்திக் கோபமுடன் சேடியின் பக்கம் வேகமாக எறிந்தாள், அது கைக்குத் தவறி அப்பால் சென்று வீதியிற் சென்ற இவனுடைய தோளின் மீது விழ்ந்து உடைந்து சரீரம், வேஷ்டியெல்லாம் வடிந்தன. உடனே இவன் உயரப்பார்த்தான். அப்பொழுது இவர் களும் ஓடிவந்து எட்டிப்பார்த்துச் சிரித்து இவன பார்த்த வுடன் ஓடிவிட்டார்கள். இவன் வருத்தமுடன் குளிப்பதற் குக் குளத்திற்குச் சென்றான். அங்கே ஓர் பெரியவர் இவ னைக் கண்டு அய்யா இது என்ன என்பதாக விசாரித்தனர் இவன் நடந்ததைக் கூறினன். அவர் சந்தோஷித்து அய்யா இது கெடுதியில்லை. நன்மைதான். மங்களகரமான விஷயம் ஏற்படும் என்பதாகக் கூறிப் பின்பு இந்த ராஜகுமாரத்திக் கும் செட்டியார் குமாரத்திக்கும் நெற்றி உடைந்தது முதல் இவன் தாய் தந்தையர் முதலாக இங்கே வசித்ததும் பினபு வேறு தேசம் துரத்தியதும இப்பெண்களின் அன்பு, பத்தி ஒழுக்கம் முதலிய நிலைமைகளையும் கூறி அய்யோ அவர்கள் மூவரும் எங்கே இருக்கின்றார்களோ பாவம் என்பதாக வருத்தமுற்றார். இவைகளை யெல்லாம் கேட்டவுடன் இவ னுக்குக் கொஞ்சம ஞாபகம் ஏற்பட்டு ஓகோ நாம தான் போலிருக்கின்றது. எனபதாக எண்ணிக்கொண்டு மற்றும் ராஜா, ராணி, அப்பெண்கள் முதலாக எல்லா க்ஷேமலாபங் களையும் மற்ற முக்கியமான விடயங்களையும் விபரமாக விசா ரித்துக் கொண்டு பின்பு அவரையும் வணங்கி ஸ்நான முத லியவைகள் செய்துவிட்டு இங்கே வந்து படுத்திருந்தனன். அன்றிரவில் தான பெண்வேடமாகச் செட்டியார் மகளுடன் அரண்மனைக்குப் போனதாகவும் அரசன் மகளுடன் மூவ ரும் கலந்து பேசிச்சிரித்து ஆனந்தமாக இருந்ததாகவும் கனவு கண்டு எழுந்து ஆச்சரியமுற்று யோசித்துக்கொண டிருந்து பின்பு காலையில் ஸ்நானம் பூசை முதலிய கருமங் களை முடித்தனன். அவ்வீட்டில் அவர்களுடைய ஆடை ஆபரணப் பெட்டியைப் பூட்டாதபடி அவசரத்தில் திறந்த படி வைத்திருந்தது. அதையும் கண்டு ஆச்சரிய முற்று வெளித்திண்ணையில் வந்து உட்கார்ந்திருந்தான். இந்த வீட்டிறகு அடுத்த வீட்டில் ராஜகுமாரத்தியின் தாசியான வள் வசித்தனள். அவள் வந்து வெளியில் நின்று தன்

தாயிடம் இன்றைக்கு இரவு ஏழு மணிக்குச் செட்டியார் குமார ரத்தி அரசர் குமாரத்தியைக் காண விரும்பி வருகின்றார்கள் இங்கே வந்து தான் போவார்கள். நானும் கொண்டு போய் விட்டு வரவேண்டும் என்பதாகக் கூறினாள். இதையும் கேட்டவுடன் மிகுந்த ஆச்சரியமடைந்து வெகுநேரம் யோசித்தான். முன் தாங்கள் இங்கே வசித்ததும் தலை உடைந்ததும் பின்பு மாம்பழம் விழுந்ததும் பெரியவர் கூறியதும் கனவு கண்டதும் பெட்டி திறந்திருப்பதும் சேடி கூறியதும் ஒவ்வொன்றாக யூகித்து எல்லாம் ஒற்றுமையாக இருக்கக்கண்டு இது ஈச்சுர சங்கல்பந்தான் என்பதாகக் கருதி அரசன் குமாரத்தியை நேரில் பார்த்துவிட்டு வர வேண்டுமென்பதாக உத்தேசித்தான். ஆனால் தாய் தந்தையர் வாக்கிற்கும் சத்தியத்திற்கும் ஈச்சுரனுக்கும் நீதிக்கும் விரோதமாக மறைமுகமாய் மாறுவேடம் கொள்வதும் மற்ற பெண்களைத் தீண்டுவதும் அந்தப்புரத்திற்குச் செல்வதும் பொய் கூறுவதும் விரோதமாகுமல்லவா. இதற்கென் செய்வது என்பதாக வெகுநேரம் யோசித்துப் பின்பு நாம் அப் பெண்ணை நேரிற் காண்பதற்காகப் போவதன்றி வேறு கெட்ட அபிப்பிராயம் சிறிதுமில்லை.

அவர்களுக்கும் சிறிதும் கெடுதியில்லை. நாம் தீண்டாமலே விலகி இருந்து வேறு எதுவும் கூறாமல் பார்த்துப் போக வந்ததாக ஒரே வார்த்தை கூறிவிட்டு உடனே வந்து விடவேண்டும் என்பதாக நிச்சயித்து ஒருவாறு மனம் தேறிப் பின்பு தூயோ நாம் அவர்களுடைய பண்டு பலகாரங்கள் எவ்வளவோ உண்டிருக்கக் கூடுமே. நாமும் இப் பொழுது சும்மா போகக்கூடாது என்பதாகத் தன்னிடம் இருந்த பணத்தில் பண்டு பலகாரங்களும், புஷ்பம், இரண்டு மாலை, சந்தனம், குங்குமம் முதலியவைகளும் வாங்கி வந்து ஓர் தட்டில் வைத்திருந்தனன். பின்பு மாலையில் அப்பெட்டியிலிருந்த ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டவுடன் இவன் மிகவும் அழகாகவும் சிறு பருவமாகவும் இருப்பதால் சுத்தப் பெண் போன்றும் ராஜகுமாரத்திகள் போன்றும் காணப்பட்டது. அங்கே சேடியானவள் தயாராக இருந்தாள், இவனும் தயாராக இருந்தான், ஏழு மணிக்கு ஓர் வண்டியில் தன் சேடியுடன் செட்டியார் மகள் வந்தனள். உடனே இவனும் போய்ச் சேர்ந்தான். சேடியும் வந்து வணங்கி நின்றாள். இவனை யாரென்பதாகச் சேடியும்

அவளும் விசாரிக்கவுமில்லை, இவனும் ஒன்றும் பேசவில்லை. உடனே சேடியும் வண்டியில் ஏறினாள். இவனையும் ஏறும்படி கூறினார்கள். இவன் பின்புறமாகத் தீண்டாதபடி விலகி இருந்தான். அரண்மனைக்குப் போய் அந்தப்புரத்திற்குச் சென்றார்கள். இவள் வரவை எதிர்பார்த்திருந்த ராஜகுமாரத்தி ஓடிவந்து இவளையும் இவனையும் கட்டிப்பிடித்துப் போய்த் தன் கட்டிலின்மீது உட்கார வைத்தனள், இவன மனம் பதறி நடுங்கி விலகி இருந்தான். பின்பு அரசன் மகள் அவளுக்கும் இவனுக்கும மாலை போட்டாள். இவளும் அவளுக்குத்தான் கொண்டு சென்ற மாலைகளைப் போட்டு இவனுக்கும் ஒன்று போட்டாள். இவனும் யோசித்துப் பின்பு தான் கொண்டு சென்ற மாலைகளை இருவருக்கும தொடாதபடி போட்டான். பின்பு அவர்கள் மிகுந்த சந்தோஷமுடன் ஒருவர்க்கொருவர் சந்தனம், புனுகு முதலியவைகளைப பூசி இவனுக்கும் பூச வந்தார்கள். இவன் பயந்து மறுத்து விலகியும ஓடி வந்து பலவந்தமாகப் பிடித்துச் சென்று இருவருக்கும மத்தியில உட்காரச் செய்து சந்தன முதலியவைகளைப் பூசிப் பொட்டும வைத்தார்கள. இவன் இதற்கெல்லாம் சிறிதும் சந்தோஷிக்காது மிகுந்த துக்கமுடன் இருந்து எழுந்தும் விடவில்லை. பின்பு பண்டு பலகாரங்களை இவனுக்கும வாயில் ஊட்டினார்கள். இவனும் மறுக்க முடியாதபடி உண்டான். இதற்குள் ராணியும் இதை அறிந்து உடனே வந்தனள். இருவரும் திடீரென்று எழுந்து வணங்கினார்கள். செல்வம் சுகமாக இருக்கின்றாயா என்பதாக விசாரித்தனள். ஆம் என்பதாகக கூறிப் பண்டு பலகாரங்களும் புஸ்பமும் கொடுத்தார்கள். வாங்கிக்கொண்டு சென்று அரசனுக்கும் இதைக் கூறினாள். அவனும சந்தோஷமுடன் வந்து வெளியில் நின்று செல்வம் சுகமாக இருக்கின்றாயா என்றனன். இவர்கள் பயந்து திடீரென்று எழுந்து வணங்கி நின்று ஆம் என்பதாகக் கூறக் கேட்டு ஒன்றும் பேசாது போய்விட்டான். பின்பு இவர்கள் மிகுந்த சந்தோஷமுடன் சேடிகளுக்கும் பண்டு பலகாரம், புஸ்ப முதலிபவைகள் அளித்து நாளைக்கு வண்டியுடன் வரும்படி கூறி அனுப்பினார்கள. இவனும் செல்ல வேகமுடன் எழுந்தான். உடனே இருவரும பிடித்துக் கொண்டு நாளைக்குப போகலாம் என்பதாகக் கூறிக் கதவை அடைத்து விட்டார்கள். இவன் எவ்வளவோ கூறியும் கேட்கவில்லை. பின்பு மூவரும் கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டு பல சந்தோஷமான வார்த்தை

களையும் முன்பு படிக்கும்பொழுது நடந்துள்ள விஷயங்களை யும் பேசிச் சிரித்து அதன்பிறகு இவன் நெற்றியை நோக்கித் தழும்பைக் கண்டு இது ஏன் ஏற்பட்டது என்றார்கள். இவன் உண்மையைக் கூறவோ பொய் கூறவோ இரண்டிற் கும் பயந்து சிறிதும் பேசாது இருந்து பின்பு உங்களுக்கும் இருக்கின்றதே. அது ஏன் என்றனன. இவர்கள் சிரித்துச் சிறிய குழந்தையின் போது வேலைக்காரி மகனுடன் விளை யாடினதும் அவன் செய்ததும் பின்பு அவனையும் அடித்து இவ்விதமாக உடைத்து ஊரைவிட்டுத் துரத்தியதும் அதன் பிறகு அவர்கள் மகா உத்தமர்களும செல்வந்தர்களும் என்பதாகத் தன் தந்தை கேள்வியுற்றுத் தேடி வரும்படி ஆள் அனுப்பியதும் அவர்களைக் காண முடியாமல் வந்த தாகவும் கூறி அதுமுதல் நாங்களும் அன்பு' பத்தி, ஒழுக் கம், தருமம் முதலிய குணங்களைக் கைக்கொண்டதாகவும் கூறி ஐயோ பாபம் அவர்கள் எங்கே இருக்கின்றார்களோ அல்லது இறந்தார்களோ. தெரியவில்லை என்பதாக இரு வரும் வருத்தமாகக் கூறினர்கள்.

இவைகளைக் கேட்டவுடன் இவனுக்குத் தன்னை அறி யாது கண்ணீர் சொரியத் தேம்பித் தேம்பி அழுதான். இதைக் கண்டு இவர்கள் பிரமித்து இவனைப் பிடித்துக் கண்ணீரைத் துடைத்து ஏன் அழுகின்றாய் என்பதாகப் பலதரம் கேட்டார்கள். இவன் ஒன்றும் கூறாது மறைத் தான். இவர்களும் விடாது உண்மையைக் கூறுமபடி வற் புறுத்தினர்கள். என் செய்வான், வேறு வழியில்லை. ஏசு சுரா என்னை இவ்விதம் கொண்டுவந்து பரதவிக்கவிட்டு விட்டாயே. இது தர்மமா. இது முறையா எனபதாக மனத் துள் நினைந்து அஞ்சி ஒடுங்கி இனி உள்ளது. ஆகட்டும் என்பதாகத் திடமுடன் அம்மா அந்தப் பாவிதான நான என்பதாகத் தலையில் அடித்துக் கொண்டு அழுதான். இதைக் கேட்டவுடன் இருவரும் திகிலடைந்து மனம பதை பதைத்துப் பிரமித்து ஒன்றும் தோன்றாது சிறிது நேரம் இருந்து மீண்டும் நீ யார் என்றார்கள். நீங்கள் கூறிய சண் டாளன்தான் நான், எனறான். இவர்கள் பயந்து பெண்ணைக இருக்கின்றாயே என்றார்கள். இவன் ஒன்றும பேசவில்லை. மீண்டும கேட்டார்கள். பாவம என செயவான். முன்னும் பின்னும் விழித்தான். பயப்படவேண்டாம. உண்மையைக் கூறு என்றார்கள். உடனே புடவையை அவிழ்த்துவிட்டு

வேஷ்டியுடன் நின்றான். இவர்கள் கண்டு மனமும் சரீரமும் நடுங்கி மூர்ச்சித்துக் கட்டிலின்மீது சாய்ந்து வெகு நேரம் சென்று எழுந்து மனம் தேறி நீ இதுவரை எங்கே வசித்தாய். இப்போது இங்கே எப்படி வந்தாய் என்றார்கள். இவன் இங்கிருந்து போனதுமுதல் நடந்த விடயங்களையும் தாங்கள் வசிக்கும் இடத்தையும் யாத்திரையாக வந்ததும் பின்பு இந்நகரம் வந்து தங்கியதும் மாம்பழம் விழுந்ததும் பெரியவர் கூறியதும் கனவு கண்டதும் ஆடை ஆபரணப் பெட்டி திறந்திருந்ததும் பக்கத்து வீட்டில் சேடிகள் கூறியதும் அதற்குமேல் பார்க்க ஆவல் ஏற்பட்டுத் தீண்டாமலும் பொய் கூறுமலும் பார்த்துவிட்டுப் போகலாமென்பதாக மறைமுகமாக வந்ததும் ஒழியாதபடி எல்லாவற்றையும் கூறி அழுது நான் பாவி உங்களைத் தீண்டும்படியாகவும் ஏற்பட்டு விட்டது. தாய் தந்தையர் சொல்லுக்கும் சத்தியத்திற்கும் நீதிக்கும் விரோதமாகவும் ஏற்பட்டது. எல்லாம் ஈச்சுரனே இவ்வளவும் செய்து திருவிளையாடலாக வேடிக்கை பார்க்கின்றார். நான் என் செய்வேன் என்பதாக அழுது மயங்கிக் கீழே விழுந்தான். இவைகளையெல்லாம் கேட்ட இவர்களும் பிரமையும ஆச்சரியமும் அளவிறந்த துக்கமும் பயமும் கொண்டு மயங்கிக் கட்டிலின்மீது சாயந்து கிடந்தார்கள். பின்பு இவன் எழுந்தான். அவர்களும எழுந்து ஐயோ இதென்ன இப்படி நடந்திருக்கின்றது. தாய் தந்தையர் கண்டால் என்ன ஆகும். மேலும் எங்கள் கற்பு நிலைமையும் கெட்டுப்போயிற்றே. இதற்கென் செய்வோம். நீ இவ்விதம் மறைமுகமாக வரலாமா என்பதாகப் பலவிதம் புலம்பி அழுதார்கள். இவன் எழுந்து அம்மா இப்பொழுது உங்களுடைய கற்பிற்கு அழிவு ஒன்றுமில்லை. நானும் கெட்ட எண்ணத்துடன் வரவுமில்லை. இங்கும் சிறிதுகூட ஏற்படவுமில்லை. நீங்களும் என்னைப் பெண்ணைக் கருதித் தீண்டியதல்லாமல் ஆடவனைக் கருதித் தீண்டவில்லை. ஆகையால் ஒன்றும் தோஷம் ஏற்படாது. உங்கள் தாய் தந்தையரும் கண்டு அறியவில்லை. ஆகவே காலையில் நான் போய்விடுகின்றேன். நீங்கள் அழுது மனம் வருந்தாது கடவுள் கிருபையால் உங்களுக்குத் தகுந்த உத்தமமான அரச குமாரர்களை மணந்து மங்களகரமாகவும் ஆனந்தமாகவும் வாழப் பெறுங்கள் என்பதாகக் கூறினான். அவர்கள் கேட்டு நீ சொல்வது உண்மையே. ஆனால் உதரியாமலே இருந்துபோயிருந்தால் குற்றமில்லை. இப்பொழுது தெரிந்து

விட்டது. எங்களுடைய மனத்திலும் சங்கல்பமும் துக்கமும் நாணமும் பயமும் ஏற்பட்டுவிட்டது. மேலும் திருமணம் நடந்த மாதிரியாகவே நம் மூவர்களும் மாலைகளை அணிந்தும் சந்தனம் பூசியும் பண்டு பலகாரம், தாம்பூலம் ஊட்டியும் கட்டிப்பிடித்துத் தழுவியும் ஓர் கட்டிலின்மீது உட்கார்ந்து சிரித்து விளையாடியும் ஏற்பட்டுவிட்டது. மற்றும் என் தாய் தந்தையரும் காணும்படியாகவும் நேர்ந்தன. ஆகவே இந்த ஞாபகமானது என்றும் மாறுவது அன்று. இருந்தே திரும். ஆகையால் மற்றொரு புருடனைத் திருமணம் செய்வது கற்பிறகுப் பொருத்தமன்று என்பதாகக் கூறி அழுது வருந்திப் பின்பு நடந்துள்ள விடயங்களை யெல்லாம் யோசித்து இது உன்பேரிலும் குற்றமில்லை. எங்கள் பேரிலும் குற்றமில்லை. ஈச்சர சங்கல்பமும் பிரார தவ்கருமமும் சேர்ந்தே எல்லாம் ஒன்றுபடுத்தி இவ்விதமாக நடந்திருக்கின்றது. ஆகையால் இனிமேல் என செய்வது. நாங்கள் பிரமச்சாரியாகவே இருக்கவேண்டும். இல்லையேல் இறகவேண்டும் என்றார்கள். இதைக் கேட்டவுடன ஐயோ இந்தச் சண்டாளன் இதற்காகவா இங்கு வந்தேன், உங்களுக்கு ஆதியிலும் இப்பொழுதும் எமனாக வந்தேனே யென்பதாக அழுது விழுந்து நானும் இறந்தே தீர்வேன். இல்லையேல் இந்த பாவம் என்னையே சேரும் என்றனன். பின்பு இவர்கள் தேற்றி ஐயா நீயும் உத்தமமானவர்களுக்குப் பிறந்தவராகவும உதாதமராகவும இருக்கின்றீர். ஆகையால் உமமை மணந்துகொள்வது கேவலமும் கெடுதியுமன்று. பெருமையுமு நன்மையுந்தான். ஆனல் எங்கள் தாய் தந்தையர்களும மற்ற அரசர்களும உடனபடார்கள். இது முடியாத காரியம, அல்லது மறைமுகமாகவும் நாம் நடந்துகொள்வது நமக்குப் பொருத்தமனறு. ஆகவே, நாங்கள் ஒரு யோசனை கூறுகின்றோம. அவ்விதம் செய்ய வேண்டும. நமக்கு ஈச்சர அனுக்கிரகமும முன் வினையும் எங்கள் கற்பும உண்மையாக இருந்தால் கூடி வரட்டும். இல்லையேல் எப்படியோ நடக்கட்டும. அதாவது நாங்கள் தாய் தந்தையரிடம தண்டோரா மூலமாக எல்லோர்களையும் வருவித்துச் சபை கூட்டி நாங்கள் கொடுக்கும் புஷ்ப மாலையைப் பட்டத்து யானையானது எவர் கழுத்தில்ப் போட்டதோ அவர்கள் யாவராயினும் அவர்களையே திருமண செய்து கொள்வோமே அல்லாது மற்றவர்களை விரும்போ மென்பதாகக் கூறுகின்றோம். அவ்விதமே செய்வர்ர்கள். நீயும்

அங்கே முன்னதாகவே வந்து இருக்கவேண்டும் அதுவரை யில் இவ்வூரில் அந்த வீட்டிலேயே இருக்கவேண்டும என் ரூர்கள். இவனும் சரி யென்ரூன். பின்பு இருவரும் இரண்டு மோதிரங்களைக் கொடுத்தார்கள். பின்பு இவனை அடையா ளம் அறிந்து கொள்ளும் பொருட்டு ஓர் மஞ்சன் நிறப் பட்டும கொடுத்து செலவுக்கும் வேண்டிய பணமும் கொடுத்து இந்த விஷயங்கள் முழுதும் நமக்கும் ஈச்சுர்னுக் கும தெரிந்ததாக இருக்கவேண்டும என்பதாகவும கூறி னார்கள். மறுநாள் காலையில் வண்டியுடன் சேடிகளும வந் தார்கள். உடனே இருவரையும் அனுப்பி வைத்தாள இவன் வழியில் இறங்கிக் கொண்டு அவர்களை அனுப்பிவிட்டு அந்த வீட்டுக்கு வந்து அந்த ஆடை ஆபரணங்களை முன் போல பெட்டியில் வைத்துவிட்டு இவைகளையும தன் மூட் டையில் வைத்துக் கொண்டு ஈச்சுரனைப் பூசித்துக் கொண் டும அன்புருகப் பாடிக்கொண்டும மிகுந்த துக்கமுடனும இருந்து வந்தான். அவ்வீட்டுக்காரர்களும வந்து சேர்ந்து இனபுடன் எல்லோர்களும் இருந்தார்கள் இப்படி இருக்க அப்பெண்கள் இருவரும தாய் தந்தையரிடம் இவ்விதமாகக் கூறினர்கள். அரசனும் செட்டியாரும் மிகுந்த துக்கமுடன் யோசித்துப் பினபு நடந்தது நடக்கட்டும என்பதாக அந்நக ரில் அவ்விதமே தண்டோராப் போடும்படி செய்தாகள். போட்டதின் பின்பு யோசித்து அது கூடாது. கூலிக்காரன் முதல் எல்லோர்களும வரகூடும். எவன் கழுத்திலும், போட்டுவிடக் கூடும். ஆகையால் அரசர்கள் மந்திரிகள் மற்றும் தகுந்த தனவந்தர்களுக்கு மட்டிலும் அங்கங்கே திருமுகம் அனுப்பி வருவித்துச் சபை கூட்டி அரண்மனைக் குள்ளேயே நடத்தவேண்டும். வேறு எவர்களும் அங்கே வரக்கூடாது என்பதாகப் பேசி அவ்விதமே செய்தார்கள். இவ்விடயம இப்பெண்களுக்கும் இவனுக்கும் தெரியாது. அரண்மனையிலும் மற்ற வீதிகளிலும் பந்தல்களும தோர ணங்களும் அலங்காரங்களும செயதார்கள். அந்தப் பெண் களும் ஈச்சுரனைத் துதித்துக் கொண்டே இரவும் பகலும் மிகுந்த துக்கமுடன் இருந்தார்கள் இப்படி இருக்க இன் னும் இரண்டு நாள் இருந்தன. இவன் வெளித்திருணை யில் இருக்கும பொழுது ஓர் வயது சென்ற குறக்கிழவி கை யில் பிரம்புடன் இவனிடம வந்தாள். இவன் விசாரித்தான். அப்பா நான் குறி சொல்பவள். வேண்டுமானால் உனக்கும் சொல்கின்றேன் என்றனள். சரியென்று கரத்தை நீட்டி

னன். இவள் பார்த்துச் சிரித்து உனக்கு நல்ல ராஜயோக மும் திருமணமும் ஏற்படவேண்டுமே. நீ யாத்திரையாகவா வந்திருக்கின்றாய் என்று கூறி மற்றும் உண்மைகளைக் கூறினாள். இவன் கேட்டு இது உண்மையா என்றான். ஆம் அப்படி நடந்தால் எனக்குத்தக்க ஆடை ஆபரணம் கொடுப்பாயா என்றாள். சரியென்றான். பின்பு தன் மூட்டையும் பிரம்பையும் அவளிடம் கொடுத்து இங்கே இருக்கட்டும். திரும்பி வந்து வாங்கிக்கொள்ளுகின்றேன் என்பதாகக் கொடுத்துவிட்டு அடுத்த வீட்டுக்குச் சென்றான். அந்தத் தாசியானவள் கண்டு அரசன் மகளிடம் அழைத்துச் சென்று குறி கேட்டார்கள். அவள் கரத்தைப் பார்த்து உனக்கு நீ கோறியபடியே திருமணம் நடக்கக்கூடும் என்பதாகக் கூறிப் பின்பு ரகசியமாக ஐயோ பாபம். ஓர் ஏழையான யாத்திரை வாசியே. உனக்குப் புருடனுக்கூடும் போலிருக்கின்றது. உன் தலை விதிக்கு என் செய்வது என்றனள். இவள் கேட்டு மனத்துள் சந்தோஷமுடன் ஒன்றும் கூறாது வேண்டிய ஆடை ஆபரணங்கள் கொடுத்து அனுப்பினாள் பின்பு செட்டியார் மகளுக்கும் போய் இதே மாதிரியாகக் கூறிச் சன்மானம பெற்றுக்கொண்டு இவனிடம் வந்து அம் மூட்டையும் பிரம்பும கேட்டாள். இவன் உள்ளே சென்று பார்த்தான். வைத்திருந்த இடத்தில் காணவில்லை. எங்கும் தேடினான். அவர்களையும் கேட்டான். அவர்களும் எடுக்கவில்லை. மிகுந்த ஆச்சரியமும் பயமும் கொண்டு இவளிடம வந்து கூறி அதற்குரிய விலையைக் கொடுப்பதாகவும் சொன்னான். இவள் கேட்டு மிகுந்த கோபமுடன் அடா திருடா அடா பாவி, இப்படியா மோசம் செய்கின்றாய் எனக்கு அதுதான் வேண்டும் என்பதாகக் கூறினாள். பெரும கூட்டமாகி விட்டது. இவள் வேகமுடன் ஓடி அரசனிடம இவ்விடயதத்தைக் கூறி அழுது கதறினாள். உடனே அரசன் அவனையும அவ்வீட்டுக்காரர்களையும் பிடித்து வந்து அரண்மனைக்குள் செயிலில் அடைத்து வையுங்கள்.

இரண்டு நாள் சென்ற பின்பு தான் விசாரிக்க வேண்டும். இவளையும் அன்றைக்கு வருமபடி கூறி அனுப்புங்கள் என்பதாகச் சேவகரிடம கூறினான். அவ்விதமே செய்தார்கள். இவனும் அவ்வீட்டுக்காரர்களும் மிகுந்த துக்கமுடன் அழுதுகொண்டு ஏ கடவுளே. இது உனக்குச் சம்மதம்

தாரை. இப்படியும் ஏற்படலாமா என்பதாகச் செயிலுக்குள் இருந்தார்கள். இவ்விடயத்தைத் தாதிகள் மூலமாக அறிந்த அரசன் குமாரத்தி மனம் பதை பதைத்து அழுது வாடி அய்யோ இதென்ன. அநியாயமாக இருக்கின்றதே என்னுடைய கற்பு நிலை போய் விட்டதே ஈசுசுரா இப்படியும் செய்வது தருமந்தானா என்பதாகப் பலவிதம் புலம்பி அழுது வருத்தமுடன் இருந்தாள். அவளும் கேள்வியுற்று இவ்விதமாக இருந்தனள். பின்பு எல்லோர்களும் வந்து சேர்ந்து சபை கூடினார்கள். வேறு எவர்களும் உள்ளே வராதபடி வாசற் கதவுகளைப் பூட்டிவிட்டார்கள். அதன் பிறகு ராஜகுமாரத்தியும் செட்டியார் குமாரத்தியும் இறப்பதற்கு நிச்சயித்துக்கொண்டு பாஷாணமும் தயார் செய்து பின்பு தாங்கள் கூறியபடி துக்கமுடன் வந்து இரண்டு மாலைகளையும் பட்டத்து யானையின் கையில் கடவுள் வணங்கியும் அழுதும் கொடுத்தார்கள். அதை வாங்கிக்கொண்டு வந்து சபையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தது. எல்லோர்களும் எனக்கு உனக்கு என்பதாகத் தலையை ஆட்டினார்கள். அப்பெண்களும் பார்த்துக்கொண்டே மாடியில் நின்றார்கள். இது எல்லோரையும் விட்டுச் செயிலுக்கு ஓடி அந்தக் கம்பிக் கதவை மிதித்து உடைத்து உள்ளே சென்று இவனுடைய கழுத்திற் போட்டு இவனைத் தூக்கி முதுகில் வைத்துக்கொண்டு வந்து இவர்கள் முன் நின்றது. இதைக் கண்ட அரசன் மிகுந்த துக்கமும் நாணமும் கோபமும் கொண்டு தலை கவிழ்ந்தபடி இருந்தான். மற்ற அரசர்கள் முதல் எல்லோர்களும் மிகுந்த பொறுமையும் கோபமும் துக்கமும் கொண்டவர்களாய் இவனைப் பார்த்தார்கள். பின்பு யானையும் கீழே இறக்கிவிட்டன. இதைக் கண்டவுடன் அப்பெண்களுக்கு அளவிறந்த ஆனந்தம ஏற்பட்டது. இவர்கள் எல்லாம் இவனை நோக்கி அடே யார என்ன ருர்கள். இவன் பயமுடன் அரசர்களை நான் ஒரு யாத்திரைவாசி என்றும் பின்பு செயிலில் அடைத்த விடயங்களையும் கூறினன் அடடே இதென்ன அநியாயம். இவன் ஏழையான யாத்திரைவாசியாகவும் மற்றும் குறத்தியின் பொருளைத் திருடிச் செயிலில் அடைக்கப்பட்டவனாகவும் இருக்கக்கூடிய இவனுக்குராஜஸ்திரீக்கும் தகுதியாகுமா. ஏதோ மிருகமானபடியால் தெரியாமல் போட்டுவிட்டது. இது கூடாத காரியம் இன்னொரு தடவை போடுமடி செப்பவேண்டும். இல்லையேல் அப்பெண்களை சுற்றி எரிய

வேண்டும் என்றார்கள். உடனே அவ்வரனும் அதுதான் சரி என்றனன். இதற்குள் மிகுந்த வயது சென்ற ஓர் கிழட்டு அரசர் எல்லோரிலும் சிறந்தவராய் நவரத்ன முடியும் ஆடை ஆபரணங்களும் அணிந்தவராய் பொற்தடியும் ஊன்றிக்கொண்டு எழுந்து ஓய் அரசர்களே என்ன சொன்னீர்கள். இது நன்றாக இருக்கின்றதா. இதுதானா அரசநீதி. இது அனீதமாகும். இவனுக்குத்தான் திருமணம் செய்தாக வேண்டும் என்றனர். இதைக் கேட்ட எல்லோர்களும் கோபித்து அடா கிழட்டு அரசனே உனக்கு ஏன்ன தெரியும். நீ எதற்காக இந்தச் சபைக்கு வந்தாய் உன் தேசமெது. பேசாது எழுந்து போ என்பதாகக் கூறினர்கள். இவரும் கோபமுடன் ஒகோ நியாயத்தைக் கூறினால் எழுந்து போகவா சொல்லுகின்றீர்கள். நான போவேன். உங்கள் சாமார்த்தியத்தைப் பார்க்கின்றே னென்றனர் மற்றும் இரண்டொரு அரசர்கள் இவர் கூறுவது சரிதான் என்றார்கள். பின்பு இவர்களுக்கும் அவர்களுக்கும் வெகு நேரம வரை பெரும் தர்க்கம் ஏற்பட்டன. சூரியனும் அஸ்தமனமாயிற்று.

நாளையத் தினம் பேசிக்கொள்வதாக எல்லோரும் எழுந்து சென்றார்கள். பின்பு இவனைச் செயிலில் அடைக்கும்படி சொன்னர்கள். கூடாதென மறுத்து வேறு தக்க அறையில் இருக்கும்படி அக்கிழவர் ஏற்படுத்தினர். இப்படி இருக்க முன் இவனுடைய தந்தையைச் சோதிக்கும் பொருட்டு பிராமணரை அனுப்பிய அரசர்கள் இருவரும் யாத்திரை செய்ய விரும்பிச் சேனைகளுடன் அங்கங்கே யாத்திரை செய்துகொண்டும் அவரையும் தேடி விசாரித்துக் கொண்டும் வரும்பொழுது மிகுந்த பசி, தாகத்துடன் அவர்கள வசிக்கும் சத்திரத்தின் வழியாக வந்தார்கள். தண்ணீர்ப் பந்தலைக் கண்டு எல்லோர்களும் தண்ணீர் சாப்பிட்டார்கள். அரசர்களும் இறங்கி அச்சத்திரத்தில் உட்கார்ந்து தாகவிடாய் தீர்த்துக்கொண்டு களைப்புடன் இருக்கும்பொழுது இவர்கள குணங்களையும் அந்த அம்மையாரையும் கண்டு இவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு ஐயா தாங்கள் யார் உறவித்த ஊர் எது இங்கே எப்பொழுது வந்தீர்கள். என்பதாக விபரமுடன் விசாரித்தார்கள். இவரும் உண்மையைக் கூறினர். இவைகளைக் கேட்டவுடன் ஓவென்று அலறி அழுது இவருடைய காலில் விழுந்து புரண்டு ஐயோ, கொடிய பாவிகளாகிய எங்களால் அல்

லவா உங்களுக்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டன. நாங்கள் தான் தங்களைச் சோதிக்க வேண்டி அந்தப் பிராமணரை அனுப்பினேம். அது விளையாட்டே விணையாக முடிந்தது என்பதாகக் கூறி அழுதார்கள். இவரும் அழுது அவர்களை வணங்கினர். இதற்குள் அத்தனவந்தர் முதல் ஜனங்களெல்லாம் ஓடி வந்து சேர்ந்தார்கள். அதன் பிறகு இவரை நோக்கிப் புறப்படுங்கள். போகலாம் என்றார்கள். அரசர்களே இனிமேல் அதைக் கனவிலும் விரும்பேன். இவ்வூரும் அதுவும் ஒன்றே என்றனர். இவர்கள் வணங்கி அது வேண்டாவிடினும் எங்களுடைய அரண்மனையில் வந்து வசிக்கவேண்டும். இல்லையேல் நாங்கள் இருவரும் உங்கள் முன்னதாகவே உயிரைப் போக்கிக் கொள்வோமென்றார்கள். பல சமாதானங்கள் கூறியும் கேட்கவில்லை. அத்தனவந்தரும் நானும் வருகின்றேன். போயிருந்தாவது பின்பு வரலாம் என்றனர், இவரும் உடன்பட்டு யாத்திரை சென்றிருக்கும் குழந்தையானவன் வந்தவுடன் அவ்விடம் அழைத்து வரும்படி வாகனமும் ஆளும் நிறுத்திவிட்டுப் பின்பு ஈச்சரனை கூலிக்காரன் மாதிரியாக உருவம் செய்து வைத்து அதற்குத் தினமும் இந்தப் பொற்தோண்டியில் கூழும் உப்பும் மிளகாயும் வைத்து படைத்து ஆராதனை செய்து எல்லோர்களுக்கும் அளிக்குமபடியாகவும் வருடம் ஒருமுறை இவைகளையும் பொன், மண்வெட்டியும் வைத்து ஊர்வலமும் உற்சவமும் செய்யும்படியாகவும் ஏற்படுத்திப் பின்பு எல்லோர்களும் புறப்பட்டு வரும்பொழுது இந்நகரத்தை அடைந்து இவ்விடயங்களையும் கேள்வியுறறுத் தாங்களும போகவேண்டிய முறையானபடியால் அங்கே கூடாரமடித்து எல்லோர்களும் தங்கிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு இவர்களையம் அழைத்து வந்து ஓர் புறத்தில் இருக்கும்படி செய்து இவர்கள் அரசர்கள் சபைக்குள் வந்தார்கள். இவர்களைக் கண்ட அக்கிழட்டு அரசர் ஓய் அரசர்களே, அவர்கள் யார் இங்கே என் அழைத்து வந்தீர்கள் என்றனர். அவர்கள் நாம் எல்லோரிலும் சிறந்த தெய்வீக உத்தம புருடர்கள். என்றார்கள். இதைக் கேட்டவுடன் இவரும் மற்ற அரசர்களும் பெரு நகையுடன் சிரித்துக்கொண்டு ஓய் அரசர்களே எப்படி அவர்கள் மேன்மக்களானவர்கள். கூறுங்கள் என்றார்கள். இவர்கள் எழுந்து நின்று ஆதியோடந்தமாக இவர்களுடைய சரிதங்களையெல்லாம் விபரமாகவும அழகாகவும் கூறிப் பின்பு தாங்கள்

தேடிப்பிடித்து இப்போது அழைத்துப் போவதாகவும் கூறினார்கள். இவைகளை யெல்லாம கேட்ட எல்லோர்களும் மிகுந்த ஆச்சரியமும் பிரமையும் கொண்டு ஆஹா இப்படியும் ஓர் பனிதர் உலகில் உண்டா என்பதாக அசைவற்றிருந்தார்கள். உடனே அக்கிழவர் ஆஹா அப்படியா. அவரை இங்கே வருவியுங்கள் என்றனர். அவரும் வந்தனர். அவரை நோக்கி ஐயா உத்தமரே நீர் உபமுடைய ஊரைவிட்டுத் தெரியாமல் வந்தது முதல் நாளது வரையில் நடந்தவைகளை ஒழியாமற் கூறும என்றனர். இவர், தான் வந்ததும் முனிவரைக் கண்டதும் தன் மனைவியை ஈச்சுரன் கிழவனுக்கு கூட்டி வந்ததும பின்பு இங்ஙகரில் வந்து சேர்ந்து அரண்மனையில் தன் மனைவி வேலை பார்த்ததும் மகன் செய்ததும் பின்பு அடித்துத் துரத்தியதும அதன் பிறகு ஈச்சுரன் கூலிகாரன் மாதிரியாக வழியில் வந்து கூழும் அளித்து இத்தனவந்தருடைய விட்டிற் சேர்த்தது முதல் எல்லாம ஒழியாதபடி கூறினர்.

இக்கிழவரும் மற்றோர்களும் மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷமுமுடையவர்களாய் இருந்தார்கள. அப்பொழுது அக்கிழவர் ஓய் அரசனே இது உண்மைதானு என்றனர். அவர் மிகுந்த துக்கமும அழுகையுடன வந்து ஆம் உண்மையென்றும கூறி இவரை வணங்கி அழுது நான் பாவித் தங்களுடைய பெருமையை அறியாதடி செய்து விட்டேன. அதன் பிறகு கேள்வியுற்றுத் தேடி வரும்படி ஆட்களை அனுப்பினேன. காண முடியவில்லை. தாங்கள் பொறுத்தருள வேண்டுமென்றனன். பின்பு கிழவர் ஓய் உத்தமரே உம்முடைய மகன் எங்கே என்றனர. அரசே அவன் யாதிரையாகச் சென்றிருக்கின்றன். என்றனர். இதறகுள் அவனையும் சபைக்கு அழைதது வந்தார்கள். இவனைக் கண்டவுடன் இவருக்கும அவனுக்கும மனம் நடுங்கி மெய்மறந்து ஒன்றும் தோன்றுது இருக்கும் பொழுது ஐயா இவன் உங்களுக்குத் தெரியுமா என்றனர். இவர் பயப பதஸ்ட்டமுடன ஆம என்றார். எப்படித தெரியுமென்றனர். சிறிது நேரம இருந்து ஐயா இவன் தான் எனனுடைய குமாரன் என்பதாகக் கூறி அழுதனர். இதைக் கேட்ட எல்லோரும் பிரமித்தார்கள். இக்கிழவர் அடடே உன் மகனு இங்கே எப்படி வந்தான். ஐயா வரும்பொழுது இந்த ராஜா ராணியின் சுக க்ஷேமத்தையும் பக்கத்து வீட்டுக்காரர்களின் சேமத்தையும் அறிந்து வரும்படி கூறி

அனுப்பினேன். அதற்கு மேல் ஒன்றும் தெரியாது என்றனர். பின்பு அவனே நோக்கி அடா சூழந்தாய் நீ இங்கே வந்தது முதல் நடந்தவையெல்லாம் ஒழியாமற் சொல் என்றனர். இவன் மனம் பதைத்து அழுது ஐயா அந்த உண்மைகளைக் கூறில் பெரும் அபாயங்களும் உயிர்ச் சேதங்களும் ஏற்படும். நானும் கொடும் பாவியாவேன். உயிரையும் நீப்பேன் என்றனன். அடே அப்படி ஒன்றும் ஏற்படாது. பயப்படாமல் கூறு விடுமாட்டோம் என்றனர். இவன் மிகுந்த துக்கமுடன் தான் வந்து தங்கியதும் மாம்பழம் விழுந்ததும் பெரியவர் கூறியதும் தான் அரண்மனைக்குப் போனது முதல் சூறக்கிழவி வந்தது வரை எல்லாம் ஒழியாமற் கூறினன். எல்லோர்களும் மெய்மறந்து பதுமைகள் போலிருந்தார்கள். பின்பு அந்த வீட்டுக்காரர்களையும் சேடிகளையும் விசாரித்து அதன் பிறகு ராணியையும் அந்த இரு பெண்களையும் வருவித்து மறைமுகமாக நிற்கச் செய்து இவன் கூறியதெல்லாம் உண்மையா யென்றனர். அவர்களும் மனம் பதைத்து அழுது ஆம் என்றார்கள். பின்பு அரசனை நோக்கி நீர் இவனை பார்த்ததுஉண்மையா என்றனர். மிகுந்த நாணமுடன் ஆம் பெண்ணுக நானும் ராணியும் கண்டோம் என்றனன், பின்பு அபபெண்களை நோக்கி நீங்கள் உங்கள் தாய் தந்தையரிடம் எப்படிக் கூறினீர்கள் என்றார். எல்லோர்களையும் தண்டோரா மூலம் வருவித்து யானையின் கையில் மாலையைக் கொடுத்து அது யார் கழுத்தில் போட்டதோ அவர்கள் எவர்களாயினும் அவர்களையே திருமணம் செய்து கொள்வதாகக் கூறினேம் என்றார்கள். ஓய் அரசர்களே கேட்டீர்களா இப்படிக் கூறி இருக்க இவ்வரசனும் செட்டியாரும் இவ்விதம் செய்யலாமா? என் பேரில் எல்லோரும் கோபித்தீர்களே, ஓகோ சரி சரி அந்தக் சூறக்கிழவி செய்த வேலையும் நல்லவேலை தான். அப்படிச் செய்யாவிடில் இவனை உள்ளே விடப் போவதுமில்லை. மாலையும் போடப்போவதில்லை. நல்ல காரியம் செய்தாள் என்று சிரித்தனர். எல்லோர்களும் பதுமைகள் போல் இருந்தார்கள். இவர் எழுந்து தன் ஆடை ஆபரணங்களையெலலாம் அவனுக்கு அணிந்து பொற்கடியும் கொடுத்து நவரத்ன மகுடத்தையும் தலையில் அணிந்தார். உடனே ஓர் பெரும் சப்தமானது திடீரென்று கேட்டது. எல்லோர்களும் பயந்து நடுங்கிப் பின்பு பார்த்தபொழுது இவரைக் காணவில்லை, இவனுடைய கழுத்திலும் அப்

பெண்களுடைய கழுத்திலும் தெய்வீக புட்ப மாலைகள் விளங்கின. இதைக் கண்ட எல்லோர்களும் இவர் ஈச்சுர னென்றும் குறத்தியாக வந்தது தேவியென்றும் தெரியப் பெற்று ஆனந்தப் பிரவாகத்திலில் ஆடிப்பாடிக் குதித்தும் ஆனந்த அருவி சொரிய அழுதும் அர அர சிவ சிவ சமபோ சங்கரா சர்வேசா எனபதாகப் பலதரம் கூவித் தொழுதும் ஏ கைலாசவாசா, ஏ கங்காதரா, ஏ, கால கண்டா, ஏ திரிநேத்திரா, ஏ சூலபாணி, ஏ பரதேவி, ஏ பராசக்தி. ஏ சகதமாதா, உங்களுடைய அன்புதான் என்னே, எனனே உங்கள் கருணைதான என்னே என்னே உங்கள் திருவிளையாடல் தான் என்னே என்னே என்பதாகப் பல்விதம் போற்றித துதித்து வணங்கிப் பின்பு இவர்களை யும் போற்றித துதித்து வணங்கி ஏ மகாப்புண்ணியவானே தங்களால் பாவிகளாகிய நாங்களும ஈச்சுரனைத் தெரிசிக்கப் பெற்றோம் என்பதாகப் புகழ்ந்து பின்பு அவனையும அந்தப் பெண்களையும அன்புடன் தழுவிப் போற்றிப புகழ்ந்து அதன் பிறகு எல்லோர்களும் இருந்து மிகுந்த விமரிசையாக முறைப்படி ஆனந்தமெனனும அரசன் குமாரத்தியையும செல்வமென்னும செட்டியார் குமாரத்தியையும இந்தப் பஞ்சாட்சரமென்பவனுக்குத் திருமணம் முடித்துப் பின்பு வேதபாராயணங்களும ஈச்சுர தோத்திரங்களும பாடல்களும் உபந்நியாசங்களும செய்து முடித்துப் பின்பு முப்பத்திரண்டு தான தருமங்களும் பந்திபோசனங்களும செய்து ஆனந்த மாகவும, மங்களகரமாகவும எல்லாம பூர்த்தி அடைந்து எல்லோர்களும ஆனந்தித்தார்கள். அதன் பிறகு எல்லோ ரும் இவர்கள உறபவித்து வசித்த ஊர் முதல் எல்லாவற் றையும காண விரும்பி இவர்களுடன் புறப்பட்டு வந்தார்கள்.

இவர்கள் வரவை அறிந்த அத்தேசத்திலுள்ள எல்லா நகரங்களிலும ஊர்களிலும பந்தல்களும் தோரணங்களும் தண்ணீர்ப பந்தல்களும அன்னதானங்களும அங்கங்கே ஏற்படுத்தியும இவர்களை எல்லா ஆண, பெண குழந்தை கள புதல யாவரும ஓடிவந்து எதிர்கொண்டழைத்து ஏ கரு ணாகடலே ஏ அனபின் வடிவே ஏ சாந்தப பொருளே ஏசத் திய உருவமே. ஏ செலவமே எங்கள் உயிரினும உயிரே. எங் களை இபபடித் தவிக்கவிட்டுச் சென்றீரே. இது தருமந்தானா எனபதாக ஓவென்று அழுதும பாதத்தில் விழுந்தும பிரண் டார்கள. சிலர் ஆனந்தபபெருக்கால் கட்டிப்பிடித்தார்கள் சிலர் ஆடிப்பாடினார்கள். இவைகளை யெல்லாம் கண்ணுற்ற

அரசர்களெல்லாம் மிகுந்த வியப்பும் பிரமையும் கொண்டு நாம் அரசர்களாக இருந்தும் நம்மை பொருட்படுத்தாது அவர்களைப் போற்றிப் புகழ்ந்து அழுது வணங்குவதும் சந்தோஷிப்பதும் என்ன ஆச்சரியம. இவர்கள் பெருமையும் அவர்கள் அன்பும் பக்தியும் ஆவலும் என்னே என்னே என்பதாகப் பேசிச்சிரித்து ஆனந்தித்துத்தாங்களும் மிகுந்த அன்பு, பத்தி உடையவர்களாய் இவர்கள் ஊரையும் பூகமபம் ஏற்பட்ட அந்த ஊரையும் இவர்கள் வசித்த நகரம், வீடு, வேலைக்காரர், பிராமணர் முதல் மாமன், மாமி முதலியவர்களையும் தர்ம நிலயங்களையும் சுற்றிப் பார்த்துப் பின்பு இந்த அரசர்களுடைய அரண்மனைக்கும வந்து விருந்துண்டு மீண்டும எல்லோர்களுமாக அமசபுரிக்கு வந்து இவனுக்குப் பட்டமும் சூட்டிவைத்து எல்லோர்களும் அளவிறந்த ஆனந்தமுடன் இவர்களை வணங்கி விடைபெற்று அவரவர்கள் பட்டினம் போய்ச சேர்ந்தார்கள்.

இவர்கள் இங்கே வசித்து வந்தார்கள் பஞ்சாட்சரமென்பவனும் ஆனந்தம - செல்வம் என்னும் பெண்கள் இருவரும் அளவிறந்த சந்தோசமுற்று ஈச்சுரனைப் போற்றித் துதித்து வணங்கிச் சிரகாச்சிரம முறைப்படி அன்பு, பத்தி, ஒழுக்கம் கருணை, தருமம், அடக்கம் பொறுமை, முதலிய நற்குணங்களுடனும் ராச நீதியுடனும் ஆனந்தமாக வாழ்ந்துவந்தார்கள். அது முதல் அமபலவாணரும அவர் மனைவியாரும சதா ஈச்சுர தியானத்தோடும கூடிய நிஷ்டை நிலையில் ஈடுபட்டுச் சர்வ பற்றுக்களும் அற்ற ஆத்ம ஞானிகளாய் சிவன் முத்தர்களாய் இல்லறத்திலேயே வாழ்ந்துவந்தார்கள் இதனை அறிந்த முனிவர்களும்-சாதுக்களும்-பிராமணர்களும-வித்வான்களும் மற்றோர்களும் ஆச்சரியமுற்று இங்கே வந்து இவர்களை வணங்கிப போற்றி இலலறத்தில் எவ்விதப்பற்று மின்றி ஆத்ம ஞான நிலையில் ஆனந்தமாக வாழலாமென்பதைப் பல சாஸ்திரங்களினாலும - கேள்வியினாலும - ஆராய்ச்சியினாலும் அறிந்ததாமே அன்றி நேரிற் காணவில்லை இபபெரமுது உங்களையே நேரிற்கண்டு சந்தேகம் நீங்கி ஆனந்தித்தாமெனபதாகப் புகழ்ந்து பேசிப் போவார்கள். பின்பு இவர்களும் அந்நிலையிலேயே ஆனந்தமாக வாழப்பெற்று அதன் பிறகு மேலான அததுவித சமாதி நிலையை அடைந்து முத்திப் பேற்றை அடையப் பெற்றார்கள்.

(5-வது)

அனதன் சரிதம்

முன் காலத்தில் மயூரவனம் என்னும் கிராமத்தில் 'அனதனென்'னும் ஒரு குடியானவர் இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் 'சுகி' அவருக்கு மூன்று சகோதரர்கள் உண்டு. அவர்களோடு ஒரே குடும்பமாக வசித்து வந்தனர். அனதரும், சுகி யென்பவளும், மிகுந்த அன்பு, பக்தி, ஒழுக்கம், காருண்யம், தருமம, அடக்கம் முதலிய நற்குணங்கள் எல்லாம் வாய்ந்தவர்கள். பிரதி தினமும் சச்சரணைப் பூசிப்பதும், சாதுக்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னம், கூழ், நீராகாரம முதலியவைகளை மிகுந்த அன்புடன் அளிப்பதும், எறும்பு முதல் எல்லாச் சிவரிடத்தும் மிகுந்த அனபுடையவர்களாயும் எறும்புகளுக்கும். பட்சிகளுக்கும தானியம, நொய் முதலியவைகளை அளிப்பார்கள். எவ்வுயிர்களும் வருந்தவோ, இறக்கவோ இவர்கள் மனம சகிக்காது இவர்களுக்குப் போதிய இடம, பொருள ஏவலும் ஏற்கெனவே தந்தையால் ஏற்பட்டிருந்தது. இவ்விதமிருக்க இவர்களுடைய நடவடிக்கை மற்ற சகோதரர்களுக்கும், அவ்வூரிலுள்ள சில பாமரர்களுக்கும் பிடிக்காது பைத்திய காரர்களென்றே பரிகசிப்பாகள். மற்ற அறிவுடையோர்கள் எல்லாம புகழ்ந்து கொண்டாடுவார்கள. இவர்கள் எதையும் கவனிப்பதில்லை. இவர்கள் தலைவன, தலைவியாக இருப்பதால் மற்ற சகோதரர்களும், மனைவிகளும் மறுக்க முடியாது, மனதிற்குள்ளாகவே வெறுப்புடன் இருந்து வந்தார்கள். இவர்களுக்கு 'அம்ச' மென்னும் ஒரு பெண் குழந்தையும், 'பிரகாச' னென்னும ஒரு ஆண் குழந்தையும் ஏறபட்டிருந்தன. இக் குழந்தைகளையும தங்களைப்போலவே பழக்கி வந்தார்கள். இவ்விதமிருக்க நாளுக்கு நாள் கடன் ஏற்பட்டு வட்டியும முதலும் அதிகமாகிவிட்டன. இதை இவரே எழுதிக் கொடுத்து, ஒரு தனவந்தரிடம் வாங்கியிருந்தார். அந்த தனவந்தர் தனக்கு பணமோ அல்லது அதற்குப் போதிய சொத்தையோ கொடுக்கும்படியாகக் கேட்டார். இதை அறிந்த மற்ற சகோதரர்கள் பலர் போதனையின்பேரில் எங்களுக்கும் இக்கடனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. எங்களுக்காகவோ அல்லது நாங்கள் சொல்லியோ இவர் பணம வாங்கிச் செலவு செய்யவுமில்லை.

இவரே வாங்கி விஞ்ஞகத் தான, தர்மங்களைப் பைத்தியகாரன் போன்று செய்தார். மேலும் வரக்கூடிய வருமானங்களையும், பல சொத்துக்களையும் பாழாக்கிவிட்டார். ஆகவே அவருடைய பாகம் எவ்வளவு இருக்கின்றதோ அதையே எழுதி வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள். இதைக் கேட்டவுடன இவர் மிகுந்த மனமகிழ்ச்சி கொண்டு, ஐயா என்னுடைய பாகத்தையே எழுதித் தருகின்றேன் என்பதாகக் கூறி விடு முதல் எல்லாவற்றையும் கொடுத்தும மேலும ஐந்நூறு ரூபாய் கொடுக்கவேண்டியதிருந்ததால், நாங்கள் பணத்தைக் கொடுக்க வழி இல்லை. ஆதலால் ஐந்து வருடத்திற்கு என் குடும்பத்துடன உங்களுக்கு அடிமையாக இருந்து எல்லா வேலைகளையும செய்கின்றேனும என்றார். இதைக் கேட்ட அத் தனவந்தனும் சிறிது நேரம யோசித்துப பார்த்துத் தனக்கும் ஆள் தேவையா யிருந்ததடியால், சரியென்று ஒப்புக்கொண்டு பினபு இவர்களைத் தன் விட்டிற்கு அழைத்துச் சென்று, தன் வீட்டின் பக்கத்தில் ஒரு குடிசை ஏற்படுத்தி அங்கே இருக்குமபடிச் செய்தான். இவர்களும் அங்கேயே வசித்துக்கொண்டு அவன் இட்ட வேலைகள் கஷ்டமாக இருபபினும அன்பாகவும் உண்மையாகவும் செய்துகொண்டும், அவன் தங்களுக்கு உணவுக்காக அளிக்கும தானியத்தில், தாங்கள் அரை வயிறு சாப்பிட்டுக்கொண்டு மீத்த பாதியைச சாதுக்களுக்கும ஏழைகளுக்கும முன் போன்று அளித்தும, பிரதினமும ஈசுவரனைப் பூசித்துக்கொண்டும மகிழ்சியோடு இருந்து வந்தார்கள். பின்பு அத் தனவந்தனால் பலவித இன்னல்கள் ஏற்பட்டும பொறுத்துக்கொணடு நான்கு வருடம் கழித்தார்கள். ஈஸ்வரன் இவர்களைப பரிசோதிக்க விரும்பி, அடுத்த தெருவில் ஒரு சாது வடிவாகச் சென்று ஒரு செம்பைத் தண்ணீர் அருந்துவதற்காக வாங்கிப் பினபு அவர்களுக்குத் தெரியாமல் கொண்டுவந்து இந்த அம்மாளிடம் கொடுத்து இதைப பத்திரமாக வைத்துக்கொண்டிருங்கள் நான குளத்திற்குச் சென்று ஸ்நானம பூசைகள் முதலியவைகளை முடித்துக்கொண்டு இங்கே அன்னம் அருந்த வருகின்றேன என்று கூறிச் சென்றார். இவர் வெகுநேரமாகியும வரவில்லை. அதற்குள் அந்தச் செம்புக்குச் சொந்தக்காரா சாமியாரையும செபபையும காணாதபடியால், அங்கங்கே விசாரித்துப் பின்பு இவர்கள் விட்டிற்குள திடீரென்று நுழைந்து பார்த்தபொழுது அச் செம்பு

அங்கே இருந்தது. அவனும் அவன் மனைவியும் முன் கோபமும் முறட்டுக்குணமும் உடையவர்கள். அடி திருடி, அடி பாவி, நீ மிகுந்த பக்தியும், தருமமும் உடையவள் மாதிரியாக ஏமாற்றிச் சாமியார்ப் பயல்களுக்குச் சோற் றைப் போட்டு ஊரிலுள்ள சொத்துக்களைத் திருடிக் கொண்டு வரச்செய்தா அதனால் சிவிகின்றாய் என்று பல விதமாகத் திட்டி அவளைப் பிடித்து வெளியில் தள்ளி விட்டார்கள். அந்த அம்மையார் உண்மையைக் கூறியும் அங்கு கூடியிருந்த சனங்கள் நம்பவில்லை.

இதை அறிந்த தனவந்தனும் வந்து இதை விசாரித்து, நீங்கள் சொல்வது உண்மைதான். இல்லாவிடில் நான் கொடுக்கும் தானியத்தில் எப்படித் தருமம் செய்ய முடியும், என்று கூறினன். இதற்கு முன், தன் குழந்தையின் காப்பு களைப் பக்கத்து வீட்டுக்காரி தெரியாமல் கழற்றிப் போய் விட்டாள். இதை இந்த அம்மையார் கழற்றிவிட்டதாகச் சந்தேகமுற்றுப் பின்பு இவள் நடத்தையைப் பார்த்து இவள் செய்திருக்க மாட்டாள் என்று விட்டிருந்தனன். இதைக் கேட்டவுடன் அதையும் இவளதான் திருடியதாக எண்ணி கண்டபடி திட்டினன். அதற்குள் அனைவரும் வந்தனர். அவரையும் திட்டி அந்தக் காப்பின் கிரயத்திற் காக, சாப்பாட்டுக்குக் கொடுக்கும் தானியத்தில் பாதியை எடுத்துக்கொண்டு பாதியைக் கொடுப்பதாகவும், செம்பைத் திருடிய குற்றத்திற்காக அபராதம் ஏற்படுத்தி அதைக் கட்ட வழி இல்லாததால் அவர்களிடம் சாதுக்களுக்குக் கூழ் நீராகாரம் அளிக்கக்கூடிய ஒரு செம்பு இருந்தது. அதனை எடுத்துக் கொடுத்துவிட்டார்கள். பின்பு இவர்கள் மனம் வருந்தி இதுவும் ஈச்சுரனின் சோதனையாக இருக்கும் என்பதாகத் தேறி அவனுடைய வேலைகளைச் செய்து கொண்டும், அவன் கொடுக்கும் பாதித் தானியத்திலும் பாதியைத் தாங்கள் சாப்பிட்டுக்கொண்டு பாதியை சாதுக் களுக்கும் ஏழைகளுக்கும அளித்துக்கொண்டும் வந்தார் கள். பின்பு ஐந்தாவது வருடமும் கழிந்த பின், தனவந்த னிடம் சென்று அன்புடன் நால்வரும் வணங்கி விடை பெற் றுக்கொண்டு, வேறு தேசம் சென்று சிவிக்க விரும்பிச் சென்றார்கள். இதற்குள் இவர்களுடைய செம்பைப் பலாத் காரமாக எடுத்துச் சென்றவள். அன்றையத் தினம், அதில் தன் புருடனுக்கு நீராகாரம் கொடுத்தாள். உடனே அவ

னுக்கு வாந்தியும் பேதியும் மயக்கமும் அதிகமாயிற்று இதற்கு முன்னதாகவே இவனுடைய மனைவி, வேறு புருடனை நட்பு வைத்திருப்பதாகச் சச்சரவு ஏற்பட்டு இதற் காக இவனுக்குப் பாஷாணத்தைப் போட்டுக் கொன்று விடுவாள் என்ற சந்தேகம் இருந்து வந்தது. ஆகவே இதைக் கண்டவுடன், அவள் தனக்கு விஷம் கொடுத்தாள் என்று கதறினன், இதனை அறிந்த இவனுடைய பந்துக் கள் அவளை அடித்துத் திட்டினர்கள். பெரும் கூட்ட மாயிற்று. இவள். நான் ஒன்றும் விஷம் போடவில்லையே களிம்பு ஏறி இருக்கும என்று கூறினள். இதைக் கேட்ட பல பெரியோர்கள் இந்தச் செம்புக்குச் சொந்தக்காரரைக் கூட்டி வரும்படி கூறினர்கள். பின்பு தேடி வந்து இவர் களை அழைத்துச்சென்று விசாரித்தபொழுது, ஐயா இது களிம்பேறவுமில்லை, பாசாணத்தைப் போடவுமில்லை. ஏதோ ஈஸ்வர சங்கல்பம் போன்றிருக்கின்றது, என்பதாகக் கூறி னர்கள். இதைக் கேட்டுச் சிறிதுநேரம் யோசித்து இது தான் உண்மை என்பதாக உணர்ந்து அச்செம்பை நீங்களே கொண்டு செல்லுங்கள். இவர்கள செய்தது அக்கிரமம் என்பதாகக் கூறி அதைக் கொடுத்துவிட்டார்கள். அதைச் சந்தோஷமாக வாங்கிக்கொண்டு புறபபட்டுச் சென்று அன்று பகல் முழுவதும் ஆகாரமின்றி நடந்து மாலையில் ஓர் சிறிய நகரத்தை அடைந்து, பசி, தாகம் களைப்புடன் ஓர் வீட்டின் திருணையில் உட்கார்ந்தார்கள். அவ் வீட்டுக்காரி வந்து இங்கே இருக்காதீர்கள். சத்திரம் சாவடிக்குப் போங்கள் என்பதாகக் கூறினள். உடனே எழுந்து பக்கத் தில் உள்ள மரத்தடியில் போய்ச் சிறிது நேரம் அமர்ந்து பின்பு அருகில் உள்ள குளத்திற்குச் சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு. நீரை உணவாக அருந்தி மறுபடியும் மரத்தின்கீழ் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். பின்பு சிறிது நேரம் ஈச்சுரனை அன்பு பக்தியுடன் சிந்தித்து அதன் பிறகு சந்திரனைக் கண்டவுடன் நாளைக்குப் பௌர்ணமி என்பதை அறிந்து வருந்தினர்கள். இவர்கள் பௌர்ணமி தோறும ஈச்சுரனுக்கும தேவிக்கும் அலங்காரம் தூபதீபம் நெய் வேத்தியம செய்து சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் மற்ற பிராணிகளுக்கும் அன்னமளிபபது வழக்கம. ஆகை யால், இதற்கென்ன செய்வதெனபதாக மனம வருந்திப் பின்பு தன்னுடைய திரு மாங்கல்யத்தையாவது விற்று, அதைக்கொண்டு இதை முடிக்கலாம் என்று கூறினள்.

இதைக் கேட்டு அனதர் மிகவும் சந்தோஷமடைந்து சரி என்று படுத்திருந்தார்கள். குழந்தைகள் இரண்டும் பசியால் அழுதன. அவைகளுக்கு வேண்டிய சமாதானங் களைக் கூறினர்கள். இதற்குள் பக்கத்தில் உள்ள மரத்தடி யில் யாரோ அம்மா அப்பாவென்று உபாதியால் பிதற்றும் சப்தம் கேட்டது. இவர்கள் சென்று பார்த்தபோது அங்கே மிகுந்த விருத்த பருவமுடைய ஒரு கிழவரும் ஒரு கிழவியும் படுத்திருக்கக் கண்டு ஐயா தாங்கள் யார்? ஏன் பிதற்றுகின்றீர்கள் என்றனர். ஐயா நாங்கள் வெளியூரி லிருந்து அன்னபுரியென்னும் பட்டிணத்திற்குப் போகின் றோம இங்கே பொழுது போய்விட்டது. ஆகையால் இங் கேயே தங்கினோம். கால் கைகள எல்லாம் நோகின்றது வலி தாங்க முடியவில்லை. என் செய்வோம் என்றார்கள். இதற் காக நீங்கள் வருந்தவேண்டாம். உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றார்கள். ஐயா சிறிது நேரம் கால் கைகளைப் பிடித்தால் உபாதி குறையும் என்றார்கள். உடனே சந்தோஷமாக நால்வரும் அவர்களுக்கு மிக்க அன்புடன் அவர்களுடைய கை கால்களைப் பிடித்தார்கள் பின்பு சிறிது நேரம சென்று எங்களிடத்தில் கொஞ்சம் கட்டுச்சாதம் இருக்கின்றது நாளைக்கு இது இருந்தால் கெட்டுப்போய்விடும் ஆகையால் நீங்கள சாபபிடுங்கள் என்றார்கள், அதை மகிழ்சியுடன் வாங்கி வந்து சாப்பிட்ட பொழுது மிகுந்த திவ்யமாகவும் நால்வருக்கும் போதியதாக வும இருந்தது. பின்பு அங்கே வந்து மீண்டும் அவர்க ளுடைய கை கால்களைப் பிடித்தார்கள். அப்பொழுது அவர்கள் இருவரும் இவர்களுடைய சரிதங்களை விசாரித் தார்கள். இவர்களும் ஆதியோடந்தமாகக் கூறினர்கள். இதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு நீங்கள் பைத்தியக்காரர் கள் உங்களாலேயே நீங்கள் கெடுத்துக் கொண்டீர்கள். புண்ணியமாவது, பாவமாவது, தானம தருமமாவது இது என்ன மூடத்தனம் நீங்கள் துன்புற்றதைத் தவிர வேறு என்ன பலனைக் கண்டீர்கள். இனிமேலாவது ஒழுங்காக இருங்கள் என்று கூறினர்கள்.

இதைக் கேட்டவுடன் திகில் அடைந்து மனவருத்த முடன பேசாதிருந்தார்கள. பினபு சரி சரி நாங்கள் சொல் வது உங்களுக்குக் கஷ்டமாகவா இருக்கின்றது. ஐயோ இந்தக் குழந்தைகள நல்ல குழந்தைகளாக இருக்கின்றன

இவைகளையும் நீங்கள் கெடுத்துவிடுவீர்கள்போல் இருக்கின்றதே என்று கூறி அவைகளை நோக்கி உங்களுக்குப் பாடத் தெரிந்தால் ஒன்று பாடுங்கள் என்றார்கள். அவைகளும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஈச்சரனுடைய தோத்திரப் பாடல் ஒன்றைப் பாடினார்கள். இதைத் திருச் செவியுற்று மிகுந்த ஆனந்தம் ஏற்பட்டும் அதை மறைத்துக் கொண்டு இந்தச் சாமி பூதம் பேரில்தானு பாடத்தெரியும். உன் தந்தை இதை யா கற்றுக் கொடுத்தார் என்று பரிகாசமாகக் கூறிப பின் கண் துயின்றார்கள் இவர்கள் நால்வரும் அலுப்பினல் நன்ரு கத் தூக்கிவிட்டார்கள். பின்பு காலையில் அந்த இருவர்களை யும் காணமுடியவில்லை. பின்பு காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஓர் சத்திரத்திற்குச் சென்று திருமாங்கிலியத் தைக் கழற்றிக்கொண்டு போய் விற்று கிரயம் செய்து அதைக்கொண்டு வாங்கக் கூடிய சாமான்களை எல்லாம் வாங்கிப் பூசை அன்னதானம் முதலியவைகளை மகிழ்ச்சி யுடன் முடித்துப் பின்பு அன்றிரவிலும அங்கேயே தங்கி யிருந்து மறுநாளைக் காலையில் எழுந்து புறப்பட்டுச் சென்று அன்னபுரியென்னும பட்டிணத்திற்குச் சிறிது தூரத்திற் சென்றார்கள்.

அங்கே ஒரு மரத்தடியில் அந்தக் கிழவரும், கிழவியும் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அவர்களும் நல்ல காலத்தில் வந்துவிட்டீர்கள் இதோ நாங்களும் வருகின்றோம் என்பதாகக் கூறி இவர்களின் கரங்களைப் பலமாகப் பிடித் துக் கொண்டு எழுந்து பின்பு மெதுவாக நடப்பதும், உட் கார்ந்து கொள்வதும் பின்பு கொஞ்ச தூரம் தூக்கிச் செல் லும்படிச் செய்வதும், அப்பா, அமமா கால்கள் எல்லாம் நோகின்றதே என்று பிதற்றுவதும் இப்படியாகப் பல பாசாங்குகள் செய்து இவர்களுக்குப் பல தொந்தரவுகள் கொடுத்தும் நேரத்தைக் கடத்தியும் சூரியன் அஸ்தமான உடன் அப்பட்டிணத்தைச் சேர்ந்தார்கள். பின்பு இவர்களை நோக்கி ஐயா நாங்கள் இனி மெதுவாகச் செல்கின்றோம். நீங்களும் இப்பட்டிணத்திலேயே இருங்கள் இதை விட்டு வேறு எங்கும் செல்லாதீர்கள் இது செழிப்புள்ள நகரம் இன்றிரவு அதோ முன்புறத்தில் இருக்கின்ற வீட்டின் திருணையிற் படுத்துக் கொள்ளுங்கள என்று கூறி இரு குழந்தைகளையும தடவிக் கொடுத்துப் பின்பு சென்றார்கள். இவர்களும் அவர்கள் கூறியபடி அந்த வீட்டுத் திருணை

யின் மேல் போய் பசி தாகம் களைப்புடன் உட்கார்ந்தார்கள் அதற்குள் அந்த வீட்டுக்காரர் வந்து நீங்கள் யாரய்யா என்றார்.

ஐயா நாங்கள் வெளியூரிலிருந்து இங்கே சிவிக்கும் நிமித்தம் வந்திருக்கின்றோம் என்றனர். சரிதான் என்பதாக அவரும் ஒரு புரத்தில் உட்கார்ந்திருந்தனர் இதற்குள் அந்த வீட்டுக்காரருக்குப் பிரிய சிநேகிதர் ஒருவர் வந்தனர் இவர்களைக் கண்டு நீங்கள் எந்த ஊர் ஐயா? எங்கே வந்திருக்கிறீர்கள? என்பதாக விசாரித்தனர். ஐயா எங்களுடைய ஊர் மயூரவன மென்னும் கிராமம் அதைவிட்டு இங்கே சிவிப்பதற்காக இப்பொழுதுதான் வந்து சேர்ந்தோம் என்றார்கள். இதைக் கேட்டவுடன ஐயா அவ்வூரில் தண்ணீர் பந்தல், அன்னதான முதலியவைகள் செய்து கொண்டு அனதனென்பவர் ஒருவர் இருந்தாரே அவரும் அவர் மனைவியும் சுகமாக இருக்கின்றார்களா என்றனர். அவர்கள் உங்களுக்கு எப்படித் தெரியும்? என்றார்கள். ஐயா நான் ஒரு சமயத்தில் வழிப்பிரயாணம் செய்து திரும்பி அவ்வூர் வழியாக வரும்போது பசியும் தாகமும் சுரமும் அதிகமாக ஏறபட்டு மிகுந்த வருத்தமுடன் அவர்கள் வீட்டைச் சேர்ந்தேன். என்னுடைய நிலைமையைக் கண்டு ஓடிவந்து யாரென றும் விசாரிக்காது அவர்கள் செய்துள்ள உபகாரமும், அன்பும் என் சொல்லுவேன் எப்படி மறப்பேன் அவர்களுடைய பக்தியும் தருமமும என் சொல்வது என்பதாகக் கூறி அவர்கள் சுகமாய் இருக்கின்றார்களா என்றனர்.

இதைக் கேட்டவுடன் ஒன்றும் கூறாது மறைத்தார்கள். மீண்டும் அவர் வினவவே அப்பொழுது ஐயா அவர்கள் தாம் நாங்கள் என்றனர். உடனே சுபீரென்று எழுந்து வீட்டுக்குள் போய் விளக்கை எடுத்து வந்து இவர்களைப் பார்த்தவுடன் கட்டிப் பிடித்துக்கொண்டு ஓவென்று கூவி அழுதார். ஐயோ உங்களுக்கா இப்படியான நிலைமை ஏற்பட்டது. அந்தக் கடவுளுக்குக் கண்ணில்லையா என்று வாயிலும், தலையிலும் அடித்துக்கொண்டு அழுதார். இதற்குள் பக்கத்தில் உள்ள சனங்கள் எல்லாம் வந்து கூடிப் பெரும கூட்டமாயிற்று. அவர்களுக்கெல்லாம் இவர்களுடைய பெருமையைப்பற்றிக் கூறினர். எல்லோரும் மகிழ்ச்சியுற்றார்கள். பின்பு இவர்களைத் தன்னுடைய வீட்

டிற்கு அழைத்தார். அவ் வீட்டுக்காரர் இன்றிரவு இங்கேயே இருக்கட்டும் என்பதாக அவர்களை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போய் கால், முகம் அலம்பச்செய்து மிகுந்த அன்புடன் அன்னமளித்துப் பினபு அங்கேயே படுக்கும்படி செய்தார்கள். காலையில் எழுந்தவுடன் இவர்களைத் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று குளிக்கும்படி செய்து இவர்களுக்கு வஸ்திரங்கள் கொடுத்து அணியச்செய்து மற்றும் வழக்கம்போல் பூசை முதலியவைகளும் முடிக்கும்படி ஏற்படுத்திப் பினபு எல்லோரும் ஆகாரம் உண்டு மகிழ்ச்சியுடன் உட்காந்து இவர்களை நோக்கி நடந்த விஷயங்களைப் பற்றி விசாரித்தனர். ஆதியோடந்தமாக அவைகளைக் கூறினர். இவைகளையெல்லாம் கேட்டு மனம் வருந்தி இனிமேல் நீங்கள் ஒன்றுக்கும் வருந்தவேண்டாம் என்பதாகக் கூறித் தன் வீட்டிலேயே அன்புடன் வைத்திருந்தார். பின்பு இவர்கள் முன்பு வந்து தங்கியிருந்த தன்னுடைய நன்பருடைய வீட்டின் பக்கத்தில் அவருடைய இடம் காலியாக இருந்தது. அவ்விடத்தில் ஒரு வீடு ஏற்படுத்தி இவர்களை அங்கேயே இருக்கும்படிச் செய்து அவரைத் தங்களுடன் வேலைக்கு வைத்துக்கொண்டு அந்த அம்மாளிடம் பயறு, கடலை முதலிய தின்பண்டங்கள் வாங்கி வந்து கொடுத்து அவைகளைச் சொற்ப விலைக்கு விற்றுக் கொண்டும தண்ணீர்ப் பந்தல் வைத்துக்கொண்டும் இருக்கும்படியாக ஏற்படுத்தினர்கள். அவ்விதமே மிகுந்த சந்தோஷமுடன் இருந்து வந்தார்கள். கிராமங்களிலிருந்து வரக்கூடிய சனங்களும, நகரத்தில் உள்ள கூலிச் சனங்களும் போரும் பொழுதும் வரும் பொழுதும் இங்கே வந்து சொற்பக் காசுக்குத் தின்பண்டத்தை வாங்கிச சாப்பிட்டுத் திவ்யமான நீராகாரத்தையும சாப்பிட்டுப் பசியும் களைப்பும் நீங்கிச் செல்வார்கள். இவர்களுடைய அன்பையும் தருமத்தையும் கண்டு கிராமத்தில் உள்ள சனங்கள் கேழ்வரகு, கமபு, சோளம், காய்கறி பதார்த்த முதலியவைகளைக் கொண்டு வந்து கொடுத்து இவைகளைச் சமைத்து சாதுக்களுக்கும், ஏழைகளுக்கும் அளிக்கும்படிச் சொல்லுவார்கள், மற்றவர்களும் சிலர் அரிசி பருப்பு முதலியவைகளைக் கொடுப்பார்கள். இவைகளை அனபுடன் வாங்கி அவ்விதமே செய்து கொண்டும், ஈச்சுரனைப் பூசித்துக் கொண்டும் இராக் காலங்களில் ஈச்சுரனுடைய பெருமை நிறைந்த புத்தகங்களையும் உண்மையான

விஷயங்களைப்பற்றிய புத்தகங்களையும் பல பேர்களும் கேட்டு இன்புறப் படித்துக் கொண்டும் தம் குழந்தைகள் அன்பு பக்தியுடன் உருக்கமாக பாடச் செய்து கொண்டும் மிக்கச் சந்தோஷமாக இருந்துவந்தார்கள். எந்த நேரத்திலும் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு அளித்து அவர்களிடம் அன்பு பராட்டி வந்தார்கள். அதன் பிறகு அந்தப் பெண் குழந்தையும் புட்பவதியாயிற்று. அதற்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்தும் இன்புற்றிருந்தார்கள். இப்படி இருக்க அப்பட்டினத்தில் அத்தேசத்தை ஆள்கின்ற **மனுநயன்** என்னும் அரசன் வசித்து வந்தான். அவன் மிகுந்த சுபாபகுணமுடையவன் சாமர்த்தியம். தேக பலம், ஆயுதப் பயிற்சி ஆடம்பரம் முதலியவைகள் எதுவும் இல்லாதவனுகவும் சேனைகளும் மிகக் குறைவாகவே வைத்துக் கொண்டும் நல்வழியிலோ தீயவழியிலோ ஈடுபடாமல் சாதாரண மாந்தர்களைப்போன்ற தன்மையிலேயே இருந்து வந்தனன். இவனுடைய மந்திரியும் இத்தன்மையனுகவே இருந்து வந்தான்.

இவ்வரசனுக்குப் பரசுகன் என்னும் ஓர் ஆண் குழந்தை இருந்தது. அக்குழந்தையும் சிறுவயதிலேயே கல்வி அறிவு ஒழுக்கம் அன்பு பக்தி தருமம் முதலிய நற்குணங்களை உடையவனுகவும் பலம்சாமர்த்தியம் ஆயுதப் பயிற்சி ஆடம்பரம்: முதலியவைகள் அற்றவனுகவும் இருந்தனன். இவ்வரசனுடைய மனைவியின் உடன் பிறந்த வனுகிய உக்ரமார்த்தண்டன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் மிகுந்த புஜபல பராக்கிரமும் யுத்தப் பயிற்சியும் முன்கோபமும் முறட்டுக் குணமும் உடையவன், அவனுக்கு மற்ற எல்லா அரசர்களும் பயப்பவார்கள். நீதி கருணை முதலிய இன்றிக் கொடுங்கோல் ஆட்சி புரிபவன். குடிமக்கள் பல கஷ்டங்களைச் சகிக்க முடியாது அவனைத் திட்டியும் தூசித்தும் அவனுக்கு அஞ்சியே யிருந்தார்கள். இவனுக்குப் பல தாரங்கள் திருமணம செய்தும் குழந்தை இல்லை. பின்பு ஒரு பெண்குழந்தை உற்பவித்தது. அக் குழந்தையையே ஆண் குழந்தையாகப் பாவித்து, அதற்கு **ஜெயப் பிரதாபி** யென்பதாக நாமகரணம் சூட்டி மிகுந்த அன்புடன் வளர்த்துக் கல்வி கற்பித்தும் யானை யேற்றம், குதிரை யேற்றம் விற் போர், மற்போர் வாற் போர் தண்டப் போர் முதல் இன்னும் பலவித யுத்தப் பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்துப் பின்பு இதை அரங்

கேற்றம் செய்வதற்காக ஒரு நன்னாள் குறிப்பிட்டுப் பின்பு பல ஆடம்பரமான காரியங்களையும் ஏற்படுத்தி மற்ற எல்லாத் தேசத்து அரசர்களுக்கும் திருமுகம் அனுப்பினன். இதைஅறிந்த எல்லோரும் மிகுந்த ஆச்சரியமுற்று எல்லா அரசர்களும் அவரவர் குமாரர்களுடனும் சேனைகளுடனும் வந்து சேர்ந்தார்கள். இம்மனுதயன் என்னும் அரசனுக்கும் திருமுகம் வந்தது. இதைக் கண்டவுடன் அவனும் அவனுடைய மனைவியும் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்து பின்பு தம் குமாரனை அன்புடன் அழைத்து இவ்விஷயத்தைப் பெருமையுடன் கூறி நாம் எல்லோருமாகப் போய் வரலாம் நீயும் வா என்றழைத்தார்கள் இதைக் கேட்டதும் இவன் ஒரு அரசனு இவனு ஒரு வீரன் என்று பலவிதமாக இகழ்ந்து கூறி அக்கழுதைகளை நீங்களே போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் நான் வரப்போவதில்லை என்று கூறிவிட்டான். இதைக் கேட்டவுடன் திடீரெனப் பதை பதைத்துப் பிரமித்து வருந்திப் பின்பு மந்திரியை நோக்கி இதென்ன விபரீதமாக இருக்கின்றது. இதை அவன் அறிந்தால் நம்முடைய கதி என்ன ஆகும் அவனுடைய உதவியினால் அல்லவா நம்முடைய ஆட்சி சரிவர நடைபெறுகின்றது. இல்லையேல் மற்ற அரசர்கள் நம் நாட்டைக் கவர்ந்து விடுவார்களே மேலும் அப்பெண்ணையே இவனுக்குத் திருமணம் செய்ய நாங்கள் உத்தேசித்திருக்க இவன் இவ்விதம் கூறுகின்றனே என்பதாக வருந்தினர்கள் அப்பொழுது மந்திரியானவன் இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். சிறுவயதானபடியால் விபரம் தெரியாமற் கூறி விட்டார். இனிமேல் எல்லாம் சரிப்பட்டு விடும். ஆகவே இப்பொழுது நாம் போய் வரலாம் என்பதாகக் கூறிச் சேனைகளுடன் அரசனும் மந்திரியும் புறப்பட்டார்கள் இதை அறிந்த அரசன் மனைவியும் தானும் வருவதாகவும இப்பொழுதே அப் பெண்ணைத் தன் மகனுக்கு நிச்சயித்து வரவேண்டும் என்பதாகவும் கூறி அவளும் புறப்பட்டு எல்லோரும் போய்ச் சேர்ந்தார்கள்.

அதன் பிறகு அரங்கேற்று விழா ஆரம்பித்து அப் பெண்ணை அழைத்து வந்தார்கள். அவளும் பெண் சிங்கத்தைப் போன்று வந்து நின்று வெட்கம், நாணம் அச்சம் முதலிய தன்மை யெல்லாம் அற்று ஆடவன்போல் தான் கற்றுள்ள சர்வ யுத்தப் பயிற்சிகளையும் தேக பலத்தையும்

ஒப்பற்றுக் கெம்பீரமாகச் செய்து காட்டினுள். இதைக் கண்ட எல்லா அரசர்களும் அரசகுமாரர்களும் மற்றெல்லோரும் பிரமித்து மிகுந்த ஆச்சரியமும மகிழ்ச்சியும் அடைந்து இவளுக்கு நிகராக எந்த அரசனுடைய பெண்ணும இல்லை என்று கூறிப் புகழ்ந்து பல விலை உயர்ந்த வெகுமதிகளை வழங்கப் பெற்றார்கள். பின்பு அவளுடைய தந்தையான அரசனையும் வெகுவாகப் புகழ்ந்து போற்றினார்கள். இப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்கு இச்சையுற்றுத் தனிமையாக ஒவ்வொரு அரசரும் பேச ஆரம்பித்தார்கள் இதைக் கேட்ட அந்த அரசன் இபபொழுது எதுவும சொல்வதற்கில்லை எல்லாம் போய் வாருங்கள் எனபதாகக்கூறி அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளையும் உபசாரங்களையும் செய்து அனுப்பினன். அதன் பிறகு மலையதன் எனற அரசன் தன் மனைவி மந்திரி முதலியவர்களுடன் அங்கேயே இரண்டு மூன்று நாட்கள் வரை தங்கி இருந்து பின்பு தன் மகனுக்கு அப பெண்ணைக் கொடுக்குமபடியாகத் தானும மனைவியுமாக அவவரசனிடம தெரிவித்தார்கள். இதைக் கேட்டவுடன் கல கல வெனறு சிரித்துக் கொண்டு என மகளாகிய சிங்கக்குட்டிக்கு உன்னுடைய மகன் புருஷனுகுமா உன்னைப்போன்றல்லவா உன்னுடைய மகனும பேடிகளைப்போல் இருக்கினருன். அவன் அரச குமாரனு மறற அரசரெல்லாம பழிக்கமாட்டார்களா ஏதோ உனககு என் சகோதரியைத் தெரியாமல் கொடுத்துவிட்டோம் இனிமேல் இப்பேச்சைக் கனவிலும பேசவேண்டாம் என்றனன்.

இதைக் கேட்டு மனம் வருந்தி இருவரும் அழுது அப்பா நீ கொடுக்காவிட்டால் வேறு யார் பெண் கொடுப் பார்கள். மேலும் உன்னல் அல்லவா எங்களுடைய அரசாட்சியும் நாங்களும் இருந்து வருகின்றோம். இல்லையேல் வேறு அரசர்கள் வந்து கைப்பற்றிக் கொளவார்களே. எங்களுடைய கதி என்ன ஆவது. ஆகவே உன்னுடைய மகளை அவசியம் கொடுத்துத்தான் ஆகவேண்டும. இல்லையேல் நாங்கள் இங்கேயே இறந்துவிடுவோம் என்பதாகக் கூறி அழுதாகள. இவன்ஒனறும பேசாது எழுந்து போய்விட்டான. பின்பு மறுநாள தன் மந்திரியுடனும அவன் மந்திரியுடனும் இன்னும் பல தக்க பெரியோர்களையும் கொண்டு அவ்வரசனுக்கு வேண்டிய சமாதானங்களைக்

கூறிப் பலவிதமாக வேண்டிப் பலவந்தமாய்ச் சம்மதிக்கும் படி செய்து நிச்சயதாம்பூலம் மாற்றிக்கொண்டு திருமண நாளையும் குறித்துக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப் பட்டு வந்து சேர்ந்தார்கள். பின்பு இங்கே சபை கூட்டித் தன் மந்திரி முதல் எல்லோரும் இருக்கத் தன் மகளையும் அழைத்து வரும்படி செய்து, அங்கே நடந்த எல்லா அற்புதமான விஷயங்களைப் பலவிதமாகப புகழ்ந்து கூறி னன். இதைக் கேட்டவுடன் எல்லோரும் மிக்க ஆச்சரிய மும், மகிழ்ச்சியும் அடைந்தார்கள். பின்பு திருமண விஷயத்தையும் அவர்களுக்குக கூறினன். இவ் விஷயங் களை யெல்லாம் மிகுந்த வெறுப்புடன் கேட்டுக் கொண் டிருந்த அரசகுமாரன் திருமண விஷயத்தைக் கேட்டவுடன் மனப்பதஸ்ட்டமுடன் எனக்கும், உனக்கும் நம் தேசத்திற்கும் பெரும் சனியனைத் தேடிக்கொண்டாயா. போதும் போதும் அவ் விஷயத்தைக் கனவிலும் நினையாதே என்பதாகக் கூறினன். இதைக் கேட்டவுடன் அரசன் மிகவும் கோப முற்று அடே நீ சிறுபயல்தனமாக முன்னொரு தினம் அவனை இவ்விதம் அலச்சியமாகக் கூறினாய். இப்பொழு தும் அவ்வாறு கூறுகின்றாய். இதை அவனறிந்தால் என்ன ஆகும் தெரியுமா? அவனுடைய வீரமும் பலமும் பெருமையும் நீ அறியவில்லை போன்றிருக்கின்றது. அவனைக் கண்டால் எல்லா அரசர்களும் நடுங்குவார்கள். மேலும் அவ னுடைய பலத்தால் அல்லவா நானும் நீயும் இத்தேசமும் இருக்கின்றது. இல்லையேல் நம் கதி யென்ன ஆகும் தெரி யுமா? அந்தப் பெண்ணை எல்லா அரசர்களும் எவ்வளவோ வேண்டிக் கேட்டும் மறுத்துவிட்டான். பின்பு நாங்கள் கேட்டும் மறுத்துவிட்டான். அதன் பிறகு நாங்கள் பலவிதம் வேண்டி அழுதும மந்திரிகளையும் மற்றும் பல தக்க பெரியோர்களையும் கொண்டு பலவந்தமாகச் சரிப் படுத்தி உடனே நிச்சயமும் செய்து வந்திருக்க நீ இவ்விதம் கூறுகின்றாய். இனிமேல் அவ் வார்த்தைகளை விட்டுவிட்டு உடன்படுவாய் என்பதாகக் கோபமுடன் கூறினன். பின்பு மந்திரியும் அவனுடைய பெருமைகளையும் அங்கு நடந் துள்ள விஷயங்களையும் யெடுத்துக் கூறினன். இதைக் கேட்ட அரசகுமாரன் இவர்களை நோக்கி உலகில் இவ் வரசனைப் பார்க்கிலும் புஜபல பராக்கிரமம் வாய்ந்திருந்த அரசர்கள் இப்பொழுது யார் உள்ளனர்? இதற்கு முன் இத்தேசம் எவருடைய பலத்தால் இருந்தது என்றான்.

மேலும் மந்திரியை நோக்கித் தன்னுடைய பலத்தினாலோ சாமர்த்தியத்தினாலோ அல்லது பிறருடைய பலத்தினாலோ தாம் வாழ்கின்றோம் என்பது அறிவின்மையே ஆகும். சர்வத்திற்கும் காரணமாயும் சர்வ சக்திகளை யுடையதாயு முள்ள கடவுளுடைய சக்தியினாலேயே சர்வமும் நிலவி நிற்பது அல்லாமல் அவனில்லாது ஓரணுவும் அசையாது. அக் கடவுளுடைய சக்தியும் அனுக்கிரகமும் நான் விரும்புவது அல்லாமல் மற்றவைகளை விரும்புவதுமில்லை. எதற்கும் அஞ்சுவதுமில்லை. அந்தப் பெண்ணும் எனக்கு வேண்டியதில்லை, என்றான்.

இதைக் கேட்டு, அரசன் மந்திரி முதலானவர்களும் மற்றும் தக்க பெரியோர்களும் வந்து பலவிதச் சமாதான வார்த்தைகளைக் கூறியும், அழுதும் வேண்டியும் பலவந்தமாக ஒருவாறு உடன்படச் செய்து அதன்பிறகு திருமணத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்யத் தொடங்கி எல்லாம் விமரிசையாக ஏற்படுத்தினார்கள். இப் பட்டினத்தில் உள்ள எல்லோரும் ஒருவகையிற் சந்தோஷமும் மற்றொரு வகையில் அச்சண்டாளன் தொட்டர்பு இங்கே ஏற்பட்டால் இத் தேசமும் எப்படியாகுமோ என்பதாகத் துக்கமும் கொண்டவர்களாய் இருந்தார்கள். திருமண ஓலைகளை வரைந்து அங்கங்கே எல்லா அரசர்களுக்கும் அனுப்பினார்கள். அரண்மனை முதல் வீதிகள்தோறும் சுத்தம செய்து பந்தல்களும் தோரண முதலிய அலங்காரங்களும் செய்தார்கள். திருமணம் இன்னும் மூன்று தினங்கள்தான் இருக்கின்றது. நாளையத் தினத்தில் இவர்கள் எல்லோரும் மற்ற அரசர்களும் அங்கே புறப்பட்டுச் செல்லச் சித்தமாக எல்லாம் தயாராக இருந்தார்கள். இப்படி இருக்க அன்றிரவில் அரசகுமாரனுக்குப பலவித சிந்தனைகள உதித்தன. ஐயோ அந்தச சண்டாளனுடைய மகளை நான் எப்படி மணம் புரிவேன். அவனும அவன் மகளும மிருகங்களைப் போன்றவர்களாயிற்றே. அவர்களால் எனக்கும் இத்தேச மக்களுக்கும் என்ன கதி உண்டாகுமோ தெரியவில்லையே இதை மறுக்கவும் கூடவில்லையே. இதற்கு ஒரு வழியும் தோன்றவில்லையே இதறகென்ன செய்வதெனபதாகப் பலவாறு சிந்தித்து வெகுநேரம் வரையில் நித்திரை வராது இருந்து பின்பு எழுந்து வெளியே வந்தான். நிலவு வீசிற்று பட்டிணத்தைச் சுற்றிப் பார்த்து வரலாமென்பதாகக் கூறி இரு

சேவகரையும் அழைத்துக்கொண்டு மூவரும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். இப்படி வரும்பொழுது கடைசி வீதியில் உள்ள அனதன் என்பவரும் அவர் மனைவியும் முதல் நாள் இரவில் நித்திரை செய்யும்பொழுது ஈச்சுரனும் தேவியும் கனவிற்தோன்றி உங்களிடம் சாதுவாக வந்து செமபைத் திருடிக்கொடுத்ததும், பின்பு இழவன் இழவியாக வந்ததும் நாங்கள்தாம். ஆகவே நீங்கள் இந் நகரிலேயே சந்தோஷமாக இருங்கள். உங்களுடைய குழந்தைகளுக்குத் திருமணம் செய்யவேண்டிய காலமும் நெருங்கிவிட்டது என்று கூறி மறைந்தார்கள். இதை அறிந்த இருவரும் உடனே எழுந்து மிகுந்த ஆனந்தக்கடலில் மூழ்கின்றவர்களாய் ஏ, பரமேஸ்வரா! ஏ, பர தேவி! நீங்கள்தானு இவ்விதக் கோலத்துடன் நாங்கள் அறியாதபடி வந்து பல வேடிக்கைக ளெல்லாம் செய்தீர்கள் எனபதாக இனனும் பலவிதமாகப் போற்றியும் யேற்றியும் துதித்தார்கள். இவர்கள் செய்தவைகளை நினைந்து சிரித்துப் பின்பு காலையில் குழந்தைகளுக்கும் மற்ற பெரியோர்களுக்கும் இவைகளைக் கூறி ஆனந்தித்தும் மறுதினம் வெள்ளிக்கிழமை யானபடியால் வழக்கம்போல் ஈச்சுரனுக்கும் தேவிக்கும விமரிசையாக அலங்காரம் செய்து தூபதீபம், நெய்வேத்தியம செய்து அன்பு பக்தியுடன் போற்றி வணங்கிப் பின்பு இரு குழந்தைகளையும் பாடச் செய்தார்கள். அவர்களும் இனிமையாகவும் உருக்கமாகவும பாடினார்கள். இச் சப்தமானது இந்த அரசகுமாரனுக்குக் கேட்டது. இதைக் கேட்பதற்காக அவன் இவர்கள் வீட்டிற்கு வந்தான. அப்பொழுது அப் பெண் மட்டிலும் தனியாகப் பாடினாள். இதைக் கேட்கக் கேட்க இவனுக்கு அன்பும் பக்தியும் சந்தோஷமும் பெருக்குற்று மனதைக் கவர்ந்துவிட்டது. சிறிது நேரம் பதுமைபோல் நின்றான. பின்பு அவ்விட்டின் வெளித் திண்ணையில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அதன்பிறகு அப் பெண் பாடி நிறுத்தினாள். பின்பு அரசகுமாரன் சேவகரிடம் கதவைத் தட்டும்படி தெரிவித்தான். அபபடியே அவர்களும் தட்டினார்கள். அனதன ஓடிவந்து கதவைத் திறந்து அரசகுமாரனைக் கண்டு பயந்து ஒருபுறமாக ஒதுங்கி வணங்கி நின்றார்.

உடனே அரசகுமாரன் வீட்டிற்குள்ச் சென்று இப் பொழுது பாடிய பெண் யார் என்றான். அரசே என்

குமாரத்திதான் இதோ நிற்கின்றது என்று காட்டினர். அப்பெண் தன்னை மறந்து கண்களை மூடிக்கொண்டு சுவாமியை வணங்கியபடி நின்றுகொண்டிருந்தது. இதைக் கண்டவுடன் மனம் பிரமித்து நின்று பின்பு இப்பெண்ணை யெனக்குத் திருமணம் செய்ய விரும்புகின்றேன். உம முடைய விருப்பம் எப்படி யென்றான். அனைவர் வணங்கி அரசகுமாரரே, தாங்களோ அரசகுலம். நாங்களோ தங்க ளுடைய குடியானவர்கள் குலம். எங்களுடைய நிலைமைக்கும் தங்களுடைய நிலைமைக்கும் பொருத்தமாகுமா? உங்க ளுடைய தாய் தந்தையர் சம்மதிப்பார்களா? மேலும் தங்க ளுக்குத் திருமணக் காலமும் இனனும் மூன்று நாட்கள் தான் இருக்கின்றன. அப்படியிருக்க எங்களைச் சோதிக்க லாமா என்றனர். ஐயா அந்த வீண் வார்த்தை யெல்லாம் வேண்டாம். அவசியம் கொடுக்கத்தான் வேண்டும் என் றான். அரசே தங்கள் இஷ்டம்போல் நடக்கட்டும் என்னால் அதை மறுக்கக்கூடுமா என்று அன்பன் கூறினர். இதைக் கேட்டவுடன் நானாயத்தினம் பல்லக்கை அனுப்புவேன். நீங்கள் நால்வரும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தாக வேண்டும் என்றுகூறிப் போய்விட்டான். காலையில் அரசன் மந்திரி முதலானவர்கள் புறப்பட்டுக்கொண்டு அரசகுமா ரனை வருவித்துப் புறப்படும்படி கூறினர்கள். அப்பொழுது அரசகுமாரன் நான் அங்கே வரமுடியாது அந்தப்பெண்ணும் வேண்டியதில்லை. நம் பட்டினத்தில் ஓர் உத்தமமான குடியானவர் புத்திரியை நிச்சயித்து விட்டேன். அப் பெண்ணைத்தான் திருமணம் செய்யவேண்டு மென்றனன். இதைக் கேட்டவுடன் அரசனுக்கு அளவிறந்த கோப முண்டாயிற்று. அடே சண்டாளா! அடே பாவி! அடே மடையா! நீ யென்னைப் பரிகாசம் செய்கின்றாயா? எங்களை யும் எங்கள் தேசத்தையும் பாழ்படுத்தப் பார்க்கின்றாயா, உனக்கும் கேடுகாலம் பற்றிக்கொண்டதா நீயும் ஓர் அரச குமாரனு, கேவலம் குடியானவன் மகளைத் திருமணம் செய்வேனென்று கூறுகின்றாயே? உனக்கு வெட்கமில்லையா மானமில்லையா. அவள் இங்கே அரண்மனைக்குள் வரமுடி யுமா? திருமணம் செய்ய முடியுமா? எனபதாகப பலவிதம கடூரமாகக் கூறி வினைக் கெட்டுப்போகாதே புறப்படு என் றனன். பின்பு மந்திரியும் சமாதானமாகக் கூறினன். இவன் ஒன்றும் பேசாது சென்று விடுதியென்றும் சிறிய அரண் மனை யென்றும் ஏற்பட்டுள்ள மற்றொரு கட்டிடத்தில் இவர்

களுக்குத் தெரியாமல் ரகசியமாகத் தன் சினேகிதர்களையும் மற்றும் சில பெரியோர்களையும் அழைத்துச் சுருக்கமாகவும் அவசரமாகவும் திருமணத்திற்கு வேண்டிய தெல்லாம் ஏற்படுத்தச் செய்தான். இப்படி இருக்க அங்கே அனதன் முதலியவர்கள். ஒருவகையிற் சிறிது சந்தோஷமும், மற்றொரு வகையில் மிகுந்த பயமும் கலக்கமும்-துக்கமும் கொண்டிருந்தார்கள். இதற்குள் இதை அறிந்த பக்கத்தில் உள்ளவர்களும் மற்ற நண்பர்களும் வந்து ஐயோ இதென்ன தர்ம சங்கடமாக நேர்ந்திருக்கின்றது. அந்தச் சண்டாளன் மகாக் கொடியவனயிற்றே. இதனை அறிந்தால் உடனே வந்து இந்த அரசகுமாரனையும் அவன் தாய் தந்தையரையும் இப் பட்டினத்தையும் என்ன கொடுமை செய்வானோ? உங்கள் நால்வரையும் என்ன சித்திரவதை செய்வானோ தெரியவில்லையே. உங்களுக்குக் கடவுள் இவ்விதம கஷ்ட நிலைமையை அளித்திருக்கின்றாரே என்பதாகக் கூறினர்கள். இதைக்கேட்டு இவர்கள் நால்வரும் அழுதுகொண்டிருந்தார்கள். இதற்குள் பல்லக்கும் வந்துவிட்டது.

இதைக் கண்டவுடன் மனம் பதறி அழுது மிகுந்த துக்கமுடன் நால்வரும் ஏ ஈஸ்வரா? ஏ பரமேஸ்வரி! நீங்கள் தான் கதி என்று கூறிக்கொண்டே பல்லக்கில் ஏறிக் கொண்டு அந்த அரண்மனையை அடைந்தார்கள். அங்கே எல்லாம் தயாராக இருந்தன. உடனே ஒரு ஐயரைக் கொண்டு கிரமபடி சிக்கிரமாகத் திருமணம் செய்து முடித்துப பின்பு சந்தனம் தாம்பூலம் போசனம் முதலியவைகளை அளித்து அங்கேயே அவர்களை இருக்கும்படி செய்தான். இங்கே அரசன் முதலானவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது இவனைக் கூபபிட்டார்கள். பின்பு இவ் விஷயத்தைக் கேட்டவுடன் அரசனும் அவன் மனைவியும் மனம் வருந்தி ஓவென்று அலறிக்கொண்டு அழுதார்கள். ஐயோ எங்களை என்ன பாடுபடுத்துவானோ? என்பதாகப பலவிதமாகப் பிதற்றியும் மயக்கமுற்றும் கீழே விழுந்து கிடந்தார்கள். இதனை அறிந்த மந்திரியும் பயந்து ஐயோ நம்முடைய கதியும் என்ன ஆகுமோ என்பதாக நடுங்கி இதற்கு ஒன்றும் தோன்றாது இருந்து பின்பு யோசித்துத் திருமணமும் பயணமும் தடையாகிவிட்டது அரசனும் மனைவியும் மூர்ச்சித்துக் கீழே கிடக்கின்றார்கள் அங்கே அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால் இவ்

விஷயத்தையாவது அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டு மென்பதாக உத்தேசித்து எவர்களும் போவதற்கு அஞ்சு கிறபடியால் பின்பு சேனாபதியை நோக்கிநீ ரதத்தின்மீது சென்று அப்பட்டணத்தின் அருகிலுள்ள கிராமத்தில் தக்க மனிதரிடம் இவ் விஷயத்தைக் கூறி அங்கே தெரிவிக்கும் படி செய்து வரும்படியாக அனுப்பினன். அங்கே திருமணத் திற்கு வேண்டிய காரியங்களெல்லாம் மிக ஆடம்பரமாக ஏற்படுத்தி எல்லாத் தேசத்து அரசர்களும் சேனைகளுடன் வந்து கூடிக்கொண்டு இவர்களை எதிர்பார்த்திருந்தார்கள். இவர்கள் வரவைக் காணுமல் உடனே சில வீரரை அனுப்பி னன் அவர்களும இச் சேனாபதியும் சந்தித்து இவ்விடயங் களை விபரமாகக் கூறிவிட்டுத் திரும்பினன். அங்கே உக்ர மார்த்தண்டன் இவ்விடயத்தைக் கேட்டவுடன் படபட வென்று மீசைகள் துடிக்கின்றன. கண்களிற் பொரிகள் பறக்கின்றன, திடீரென்று சிம்மாசனத்தை விட்டுக் கீழே குதித்தான், தன் வாளை உருவினன். அடே அற்பப் பயல் களே. அடே பேடிப்பயல்களே நீங்களா என்னை இவ்வித மாக அவமானப் படுத்தினீர்கள், எனக்கும் என் மகளுக்கும நீங்கள் தகுமா நானும் ஒப்புக்கொள்ளுவேனு, என்னுடைய காலிலப்பிடித்து வேண்டி அழுதபடியாலல்லவா பலவந்தத் திற்காக ஒப்புக்கொண்டேன். நானியத் தினம் உங்கள எல்லோரையும் என் மகளுடைய தேர்க்காலில் கட்டிவைத்து அடித்து இங்கே கொண்டுவந்து பந்தக்காலில் கட்டிவைத்து என்னுடைய இந்த வாளுக்கு இரையாக்குகின்றேன் என்ப தாகப் பலவிதம கூறிப் பின்பு ஏற்கெனவே தான் விரும்பிய பராக்ரமசாலியான அரசகுமாரனுக்கு உடனே திருமணம் செய்து முடித்து மற்ற சடங்குகளெல்லாம் அவர்களைக் கட்டிக்கொண்டு வந்துதான் செய்யவேண்டும் என்பதாக நிறுத்திவிட்டு எல்லா அரசர்களும் சேனைகளும் தானும் தன மகள் மருமகன் முதலாக எல்லோரும புறப்பட்டு வந்து இவனுடைய பட்டிணத்திற்குச் சிறிது தூரத்தில் நின்றுகொண்டு என் மகளுடன் யுத்தத்திற்கு வருகின்றாயா அல்லது உன் பட்டிணத்திற் பிரவேசிக்கவா என்பதாக வீரர்களை அனுப்பினன்,

இதைக் கேட்ட அரசகுமாரன் தைரியமாக யுத்தத் திற்கு வருவதாகச் சொல்லி அனுப்பினன். இதை அறிந்த மந்திரி பதஸ்டமுடன் ஓடி அரசனுக்குத் தெரிவித்தான்.

இதைக் கேட்டதும் பயந்து நடுங்கி வேகமுடன் எழுந்து தங்களுக்கு வேண்டிய ஆடை ஆபரணம் திரவியம் முதலிய வைகளை எடுத்துக்கொண்டு தன மனைவியுடன் ரதத்தின் மீது ஏறித் தனக்குச் சினேகிதனன அரசனுடைய பட்டினத்திற்குச் சென்றான். மந்திரியும் பயந்து தன் குடும்பத்தோர்களைப் பதனமாக வைத்துவிட்டுத் தான் அரசனைக் கொண்டுபோய் விட்டு வருவதாகச் சென்றான். இதை அறிந்த அப்பட்டினத்து சனங்களெல்லாம் பயந்து பக்கத்துக் கிராமங்களுக்கு ஓடிச் சென்றார்கள். சிலர் கதவுகளைப் பூட்டிக்கொண்டு நடுக்கமுடன் இருந்தார்கள. அரசகுமாரன் சேனாதிபதியை யுத்தத்திற்குத் தயார்ப்படுத்தினன். சேனாதிபதியும் மற்ற வீரர்களும் பயந்து அவர்களுடைய சேனைகளையும் பலத்தையும் பலதரம் சமாதானமாக எடுத்துக் கூறியும் இவன் கேட்கவில்லை. இப்படி இருக்க அங்கே அரண்மனையிலுள்ள அனதன் அவர் மனைவி, மகள் மகன் முதலான நால்வரும் பயந்து மிகுந்த துக்கமுடன் ஐயோ நம்மால் இவ்வரசகுமாரனும் இத்தேசமும் அழிந்து பாழாகி விடும் போலிருக்கின்றதே என்பதாகப் பலவிதம் சிந்தித்துக் கொண்டும் சுசுரனையும் தேவியையும் துதித்துக்கொண்டும் இருக்கும்பொழுது இதற்கு முதல்நாள் தேவியானவள் ஓர் வேடுவக் கிழவிபோன்று கையில் ஓர் பழமையான வில்லும் சில பழமையான அம்புகளும் வைத்துக்கொண்டு அந்த அரண்மனைக்குச் சென்றாள அங்கே எவர்களுமில்லை. கதவுகள் உட்புறம் பூட்டி இருந்தது தட்டி அழைத்தாள். உடனே வந்து திறந்து நீ யாரம்மா என்றனர்: ஐயா, நான் வேடுவச்சாதி அரச குமாரத்திகளுக்கு வில்வித்தை கற்றுக் கொடுப்பது என்னுடைய தொழில் ஆகையால் விசாரித்து இங்கே வந்தேன என்பதாகக் கூறி மேலும் ஐயா இதென்ன இப்பட்டினம் முழுதும் நீங்களும் பூட்டிக்கொண்டிருக்கின்றீர்களே என்ன காரணமென்று வினவினாள, இதற்குள் அவர் மனைவியும் வந்தனள் இருவரும் இக் கிழவியை உள்ளே அழைத்துச் சென்று உட்காரச் செய்து நடந்த விடயங்களையெல்லாம் கூறி மிகுந்த துக்கமுடன் அழுதார்கள். இதைக் கேட்ட கிழவியானவள் நீங்கள ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள், உங்களுடைய பெண்ணுக்கு இன்றைக்கே எல்லா வித்தைகளையும் கற்றுக்கொடுத்து விடுகின்றேன். இப் பெண்ணுக்கு இவ்வுலகில் எவரும் நிகராகமாட்டார்கள். அந்தப் பெண்ணுடன் அரசகுமாரன் யுத்தம் செய்வது

மதிப்பல்ல இந்தப் பெண்ணே சென்று யுத்தம் செய்யட்டும் இப் பெண்ணே ஜெயமடைவாள், வேண்டுமானால் எனக்குச் சாரதித் தொழிலும தெரியும். நானே ஓட்டிச் செல்லுகின்றேன் என்பதாகக் கூறி அவர்களைத் தேற்றிப் பின்பு உடனே அப்பெண்ணுக்கு எல்லா வித்தைகளையும் கற்றுக் கொடுத்தாள் அளவிறந்த தைரியமும் வீரமும் பலமும் தனக்கு உலகில் எவர்களும் நிகரில்லாத் தன்மையும் ஏற் பட்டன. மறுநாள் அரசகுமாரன் யுத்தத்திற்கு புறப் பட்டுக் கொண்டு இவர்களிடம் தெரிவித்துப் போவதற் காக இங்கே வந்தான். அப்பொழுது இந்தப் பெண் வணங்கி நீங்கள் போகக்கூடாது. நான்தான் போகவேண்டு மென்பதாகக் கூறிப் புறப்பட்டனள். அரசகுமரன் புன் முருவலாகச் சிரித்துக்கொண்டு ஐயோ பாவம் உனக்கு என்ன தெரியும் வேண்டாம் சும்மா இரு என்று மறுத்தான். இதற்குள் அக்கிழவியானவள் அய்யா அரச குமாரனே இவளுக்கு நிகராக இவ்வுலகில் எவர்களுமில்லை.

இவளே சென்று யுத்தம் செய்யட்டும் வேண்டுமானால் நானே சாரத்தியம்செய்கின்றேன் அப்பெண்ணுடன் நீ நின்று யுத்தம் செய்வது தக்கதன்று என்பதாக இன்னும் பல விதம் கூறிச் சமாதானப்படுத்தி அவளையும் சேனைகளையும் நிறுத்திவிட்டு இப் பெண்ணை யுத்தகோலம் பூணச்செய்து தன்னுடைய வில்லையும் அம்புகளையும் கொடுத்து அரச னுடைய தேரில் ஏறச்செய்து தான் ஓட்டிக்கொண்டு சென் றனள் இதை அறிந்த இவனும் சேனசயினியங்களும் மற்ற எல்லாச் சனங்களும் மிகுந்த வியப்பும் சந்தோசமும் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்கள் அங்கே நாரத முனிவரும் கண்ணுவ முனிவரும் தேச சஞ்சாரமாக வரும் பொழுது தற்செயலாக இவ்வரசர்களையும் சேனை சயினியங் களையும கண்டு ஆச்சரியமுற்று அவர்களிடம் வந்து விசா ரித்தார்கள் எல்லோர்களும் வணங்கி நடந்ததைக் கூறினர் கள் இவர்கள் கேட்டு அரசர்களே அவ்வரசன் புத்தியில்லா மற் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொண்டு திரும்பிச் சென்றால் மிகவும் பெரும்தகைமையாக இருக்கும் இல்லையேல் அவனும் அவனுடைய ஆட்சியும் நாசன மடையக்கூடும் அவன் பலமும் சேனைகளும் அற்றவன் சாதுவைப் போன்ற வன் ஈச்சுரனே பலமும் துணையுமாகக் கருதுபவன் ஒருசமயம் சச்சுர அனுக்கிரகத்தால் உங்கள் எல்லோருக்கும் பெரும்

அபாயம் ஏற்படினும் ஏற்படக்கூடும் ஆகவே பொறுமை யுடன் திரும்பிச் செல்லுங்களென்பதாகப் பலவிதம் கூறியும் கேட்காது முனிவர்களே நீங்கள் இவ்விஷயத்தில் தலையிட வேண்டாம செல்லுங்கள் என்பதாக மறுத்து விட்டார்கள். சரி உங்கள் இஷ்டம் என்பதாகச் சிறிது தூரம் சென்று பின்பு இதைப் பார்க்க விரும்பி ஓர் மரத்தடியிற் தங்கி இருந்தார்கள் இதற்குள் இவ்வரசன் மிகுந்த கோபமுடன் துடிதுடித்து அவன் வருகின்றனு இல்லையா என்பதாக மீண்டும் வீரர்களை அனுப்பினன் அவர்களும் ஓடிவந்து இவர்கள் வருவதை அறிந்து இதைப்போய்த் தெரிவித் தார்கள்.

இதைக்கேட்ட எல்லோரும் பரிகாசமாகக் கைகளைத் தட்டிச் சிரித்தார்கள் இதற்குள் கிழவியானவள் தேரை வெகு வேகமாகச் செலுத்தி வந்து முன்னதாக நிற்கும அரசன் குமாரத்திக்கு முன்பு நிறுத்தினள் அப்பொழுது இப் பெண்ணானவள் தைரியமுடன் எல்லோர்களையும் நோக்கி அடி அரசன் குமாரத்தியே மற்றுமுள்ள அரசர்களே சேனை சயினியங்களே நீங்கள் எல்லோரும் கிரமமாக திரும்பிச செல்லுங்கள் இல்லையேல் ஐயோ பாவம் வீணாகக் கெட்டுப போவீர்களென்பதாகக் கூறினள் இதைக் கேட்டவுடன் மீண்டும் எல்லோரும் கைகளைத்தட்டிக் கல கலவென்று சிரித்தார்கள் இதற்குள் அரசன் குமாரத்தியானவள மிகுந்த கோபமுடன அடி ஏழைக்குடியானவன மகளே நீயா எங்களைக்கெடுத்துவிடுவாய் இதோ பார் உன்னை ஒரே அம் பாற் கொன்று விடுகின்றேனென்பதாக வில்லை வளைத்து ஓர் அம்பைத் தொடுத்து விட்டாள் உடனே அதை இவள தூள்த் தூளாக்கினள் மீண்டும பல அஸ்த்திரங்களைப பிர யோகித்தும் வர்ணஸ்த்திரம் வாயுவாஸ்த்திரம் அக்கினி யாஸ்த்திரம் என்று சொல்லக்கூடிய அனேக அஸ்த்திரங் களைப் பிரயோகித்தும் மற்றும பல பாணங்களை அளவில் லாது மிக வேகமுடனு ஒன்றின்பின் ஒன்றுகப் பிரயோகித் தனள். இவைகளையெல்லாம் அவ்வபோதே பஸ்மீகரப் படுத்தினள் பின்பு அவளும் கை சோர்ந்து சலிப்புற்று சிறிது யோசித்தனள் இதற்குள் இவள் சிரித்துக்கொண்டு அடி அரசன் குமாரத்தியே இவ்வளவுதானு உன்னுடைய சாமர்த்தியம இனிமேல் நான் பிரயோகிக்கின்றேன் நீ தடு பார்க்கலாம் என்பதாக ஓர் திவ்ய அஸ்த்திரத்தைத்

தொடுத்து விட்டனள் அது மிக வேகமுடன் சென்று அவளுடைய வில் அம்பு முதலியவைகளையும் தேரையும் தூள்த் தூளாக்கியது இதற்குள் கீழே குதித்து வேறு தேரில் ஏறச் சென்றுள் உடனே நாகபாசத்தை விட்டனள் அது சென்று அவள் காலும் கையும் சேர்த்துக் குண்டுக் கட்டாகக் கட்டிக் கீழே உருட்டிவிட்டது.

இதை அறிந்த வீரர்கள் மிக வேகமுடன் ஓடிவந்து கட்டை அவிழ்த்தும் அறுத்தும் பார்த்தார்கள் முடியவில்லை இதற்குள் சேனாபதியும் அவளை மணந்த புருடனும் ஓடி வந்து இவளை எதிர்த்தார்கள் உடனே இரண்டு பாணம் விட்டு அவர்களுடைய வில் அம்பு தேர்முதல் எல்லாம தூளாக்கினுள் அவர்கள் வேறு தேரில் ஏறுவதற்கு முன் நாகபாசத்தை விட்டுக் கட்டி உருட்டினுள் இவைகளைக் கண்ட உக்ரமார்த்தண்டன் முதல் எல்லா அரசர்களும் மற்றுமுள்ள சேனைகளும் மிகுந்த வியப்பும் கோபமும் கொண்டு வேகமுடன் வந்து இப்பெண்ணைச் சுற்றிலும் வளைத்துக்கொண்டார்கள் இவளும் மிகுந்த தைரியமுடன் பாணங்களை நான்கு திசைகளிலும் ஒன்றின்பின் னொன்றுக அதிவேகமுடன் பிரயோகித்தனள் அவைகள் ஒன்று பத்து நூறு ஆயிரம் லெக்ஷம் கோடியாகத் தோன்றி எல்லோர்க ளுடைய சரீரங்களிலும் சுரீர் சுரீர் என்பதாகப பாய்ந்து இதனல் துடிதுடித்து வருந்தச்செய்தன யானை குதிரை ஒட்டகை முதலியவைகள் கத்திக் கொண்டு ஓட்டம் பிடித் தன அவ்வரசர்கள் மிகுந்த கோபமுடன் அளவில்லாத பாணங்களைப் பிரயோகித்தார்கள் அவைகளையெல்லாம் பஸ்மீகரமாக்கினுள் உடனே கிழவியும் கண் இமைக்குமுன் தேரை அங்கு மிங்குமாகச் சுற்றிச் சுற்றி நான்கு திசைகளி லும் அதிவேகமுடன் மிகவும் ஆச்சரியமாக நடத்தினுள், இதைக் கண்ட எல்லோரும் வியப்பும் பிரமையும் கொண்டு மயங்கி நின்றார்கள் இதற்குள் இப்பெண்ணனவள் ஒரு சக்தியை எடுத்துத் தேவியின் மந்திரத்தை உச்சரித்து விட்டனள் அச்சத்தியானது பல கோடி சத்திகளாக உருக் கொண்டு அவர்களுடைய வில் அம்பு முதலிய சர்வ ஆயு தங்களையும் சர்வ ரதங்களையும் பஸ்மீகரப்படுத்திவிட்டது. எல்லோரும் நிராயுதபாணிகளாய்த் தரையில் நின்றார்கள் உடனே நாகபாசத்தை விட்டனள் அது சென்று அங்கே வந்துள்ள சர்வதேச அரசர்களையும் மந்திரிகளையும சேனதி

பதிகளையும் காலும் கையும் சேர்த்து முண்டுக் கட்டாகக் கட்டிக் கீழே உருட்டிவிட்டது.

இதைக் கண்ட சேனைகளெல்லாம் பயந்து நான்கு திசைகளிலும் ஓட்டம் பிடித்தன இவர்கள் மட்டிலும் கீழே கிடந்தார்கள் இவைகளை யெல்லாம சிறிது தூரத்தில் பார்த்துக்கொண்டிருந்த அரச குமாரனும் அவன் சேனைகளும் அளவிறந்த சந்தோசமும் வியப்புமுடையர்களாய் வேகமுடன் இங்கே வந்து சேர்ந்தார்கள் பின்பு உக்ரமார்த்தண்டனையும் அவன் மகள் மருமகன் சேனாதிபதி இந்நால்வரையும் இப்பெண்ணினுடைய தேர்க்காலில் கட்டிக் கொண்டும் மற்றவர்களை யெல்லாம் தன் தேர்க்காலிலும் மற்ற தேர்க்கால்களிலும் கட்டிக்கொண்டு புறப்பட்டுத் தன் பட்டினத்திற்கு வந்தார்கள் இதைக்கண்ட எல்லாச் சனங்களும் கரங்களைத் தட்டிச் சிரித்தார்கள் இவர்கள் வெட்கம் மானம் முதலியதெல்லாம் இழந்து உயிர்ப்பிணம்போல் இருந்தார்கள் இவர்களைப் பெரிய அரண்மனைக்குக் கொண்டு வந்து முன்பு திருமணத்திற்காக ஏற்படுத்தி இருந்த மணவரைப் பந்தக்காலில் இந்நால்வரையும் மற்ற கால்களில் மற்ற எல்லோரையும் கட்டி மொட்டை அடித்து மஞ்சளைப் பூசித் தலைகளில் சாண உருண்டைகளை வைத்து அதன்மீது அகில் விளக்குகளை ஏற்றி வைத்தார்கள் பின்பு அரச குமாரன் தன் தாய் தந்தையரையும் மந்திரி முதல் மற்றும் தன் தேசத்திலுள்ள சர்வ சனங்களையும் வருவிக்கும்படி அங்கங்கே தக்க ஆட்களை அனுப்பினன் அங்கே இவன் தாய் தந்தையும மந்திரியும் சென்று அவ்வரசனும் திருமணத்திற்கு வந்துவிட்டபடியால் தாங்கள் மட்டிலும் இருந்துகொண்டு இங்கே என்ன கெதியாயிற்றோ என்பதாக மிகுந்த கலக்கமுடன் இருந்தார்கள். இதைக் கேட்டவுடன் ஒரு வகையில் சந்தோஷமும் மற்றொரு வகையில் துக்கமுமாகப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள. மற்றும் எல்லாச் சனங்களும் வந்து சேர்ந்து இவர்கள் கோலத்தைக் கண்டு கைகளைத் தட்டிச் சிரித்தார்கள். அரசனும் அவன் மனைவியும் கண்டு மனம்வருந்தி அழுது இவர்களை அவிழ்த்துவிடும்படிதன் மகனை வேண்டினார்கள். இவன் அவர்களை அவிழ்க்கவோ கட்டுகளை அறுக்கவோ என்னாலும் உங்களாலும் முடியாது எனக்கு அவசரக் கல்யாணம் முடிந்தது. இனி மேல் ஆனந்தக் கல்யாணம் நடக்கவேண்டும் நடந்தபின்

அவைகள் தானே நீங்கிவிடும் என்பதாகக் கூறிக் கல்யாணத்திற்கு வேண்டியதெல்லாம் உடனே விமரிசையாக ஏற்படுத்திக் கிரமப்படி ஓமத்தீ வளர்த்துப் பெண்ணுக்குத் தாய் தந்தையரையும் மாப்பிள்ளையின் தாய் தந்தையரையும் இருக்கச் செய்து எல்லாவித மேள வாத்தியங்களுடன் அரசகுமாரனுக்கும் அப பெண்ணுக்கும் அந்த வேடுவக் கிழவியின் முன்னிலையில் திருமணம் ஆனந்தமாக நடை பெற்றுப் பின்பு சந்தனம் தாம்பூலம் பந்திபோசன முதலி யவைகளும் நடைபெற்றன. கட்டி இருக்கின்ற இவர்களுக் கும் சந்தனத்தைப் பூசி அன்னத்தை வாய்களில் ஊட்டினார் கள். இவர்களும் மறுக்கமுடியாது சிறிது உண்டும் உண்ணு மல் பிணம்போல் அசைவற் றிருந்தாகள். திருமணமும் மூனருவது நாள் சந்தோஷமாக முடிவுற்றது. அதன்பிறகு அக்கிழவியானவள் அய்யா நான் இனிமேல் என் விட்டுக்குப் போகவேண்டு மென்பதாகப் புறப்பட்டாள. அப்பொழுது அரசகுமாரனும் அவன் மனைவியும் மற்றுமுள்ள எல்லோர் களும் எழுந்து வணங்கி அம்மையே நாங்களும் இத்தேசமும் உமமுடையதே. ஆகவே உங்களுக்கு வேண்டியது எது எதுவோ அவைகளைக் கேளுங்கள. அவ்விதமே தருகின் றேன் பெற்றுச் செல்லுங்கள் என்பதாகக் கூறினன். இதைக் கேட்டவுடன் சிரித்துக்கொண்டு அரசகுமாரனே நீயும் உன் மனைவிமுதல் உன் தேச முழுதும் எனக்கு அடிமை யென்பதாக ஓர் முறி ஓலை எழுதிக்கொடு என்ற னள். அவ்விதமே எழுதிக்கொடுத்து மற்றும் விலை உயர்ந்த ஓர் ஆடையும முத்துமாலை ஒன்றும கொண்டுவந்து பல்லக் கில வைத்து அமமா இதையும ஏற்றுக்கொண்டு பல்லக்கில் ஏறிச் செலலுங்கள் என்பதாகக் கூறி அரசகுமாரன் முதல் எல்லோரும் வணங்கினர்கள்.

அப்பொழுது அரசகுமாரனை நோக்கி அய்யா இனிமேல் அவர்களை ஒன்றும செய்யாதே அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறி அனுப்பி விடுவாயாக என்பதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்று கடைசி வீதியிலுளள அனதனென்னும குடியானவர் வீட்டின்முன் இறங்கிப் பூட்டி இருந்த கதவைத் திடீரென்று திறந்துகொண்டு உள்ளே சென்றனள். பல்லக்குப் போகிகள் திருமபி வந்து இவ்விடயத்தை அரச குமாரனுக்குத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டவுடன் அரசகுமாரன் முதல் எல்லோரும்

ஆச்சரியமுற்று அதிவேகமுடன் ஓடிவந்து இவ்வீட்டினுள் பார்த்தபொழுது காணப்படவில்லை. பின்பு பூசை அறையைத் திறந்து பார்த்தபொழுது அங்கே அந்த முறி ஒலியும் ஆடை ஆபரணமும் இருந்தது. இதைக் கண்டவுடன் எல்லோர்களும் ஆனந்தப் பிரவாகத்தினுல் ஆடிப் பாடிக் குதித்து அழுதும் சிரித்தும் ஏ பரமேஸ்வரி, ஏ ஜெகதீஸ்வரி, ஏ பராசத்தி, ஏ தேவி நீதானு இவ்விதமாக வந்து இத்தகைய திருவிளையாடல்களைச் செய்தீன ஐயோ நாங்கள் அப்பொழுதே அறியாமற் போனேமே உன்னுடைய கருணை தான் யென்னே யென்னே யென்பதாகப் பலவிதம் புகழ்ந்து போற்றித் துதித்து வணங்கி ஆனந்தித்தார்கள். இப்படி இருக்க அங்கே நாரதமுனிவரும் கண்ணுவ முனிவரும் மரத்தடியிலிருந்து அங்கே நடந்த யுத்த விடயங்களை யெல்லாம் கண்டு மிகுந்த வியப்பும் சந்தோஷமும் கொண்டு இப்பொழுது நாம் அங்கே போகக்கூடாது. கடைசியாகத்தான் போகவேண்டும் என்பதாக உத்தேசித்து மூன்று நாள் வரைப் பக்கத்து ஊரில் தங்கியிருந்து பின்பு இப் பட்டினத்திற்கு வந்தார்கள். இவர்கள் வரவை அறிந்த அரசகுமாரன் முதல் எல்லோரும் சோடச உபசாரங்களுடன் போற்றி வணங்கி ஆசனங்களில் அமரச்செய்து பின்பு தேவியினுடைய திருவிளையாடல்களையும் எடுத்துக் கூறினர்கள். இவைகளைக் கேட்டவுடன் அவர்களும் அளவிறந்த சந்தோஷ மடைந்து தேவியைப் பலவிதம் போற்றிப் புகழ்ந்து வணங்கிப் பின்பு அரசகுமாரனையும் அவன் மனைவிமுதற் தாய் தந்தையரையும் புகழ்ந்து கொண்டாடி அவர்களுடைய அன்பு, பத்தி, ஒழுக்கம், கருணை, தருமம் முதலியவைகளைப் பற்றியும் புகழ்ந்து அதன்பிறகு இவர்களைக் கட்டி வைத்திருக்கும் பந்தலின் கீழ் வந்து எல்லோரும அமர்ந்து இவர்கள் இருக்கும் கோலத்தைக் கண்டு வேடிக்கையும் சிரிப்பும் பரிதாபமும் உடையவர்களாய் நாங்கள் முன்னமே கூறியும் கேட்கவில்லை என் செய்வது என்பதாகப் பேசாது இருந்தார்கள். அப்பொழுது அரசகுமாரன் எழுந்து நின்று, தன் மாமனுகிய அரசன்முதல் மற்ற அரசர்களுடைய அனிதமான நடத்தைகளையும் கொடுங்கோல் அரசாட்சிகளையும் சனங்கள் படும் துயரங்களையும் இவர்களுடைய மிருகத் தன்மைகளையும் பின்பு தன் மாமனுக்கும தனக்கும் நடந்துள்ள திருமண விடயங்களையும் ஆதியோடந்தமாக எடுத்துக் கூறி நீங்களும் ஆறறிவோடும் கூடிய மனிதர்கள்தானு,

நீங்களும் ஒரு அரசர்கள்தானு, உங்களுடைய பலமெங்கே வீரமெங்கே பராக்கிரமமெங்கே ஆயுதப் பயிர்ச்சி யெங்கே சேனைகள் எங்கே கோபமெங்கே மானமெங்கே பெருமை யெங்கே ஆடம்பரமெங்கே தானென்னும் அகங்காரமெங்கே ராஜகோல மெங்கே நீங்கள்தானு எங்களைத் தேர்க்கால் களில் கட்டிக்கொண்டு போய் அதன்பின் கல்யாணம் முடிப்பதாகக் கூறி வந்தீர்கள். ஐயோ பாவம், இப்பொழுது என்ன ஆயிற்று. உங்களுடைய பலமும் சாமர்த்தியமும் ஈச்சுரனிடத்திற் செல்லுமா உலகில் சிவர்கள் தங்களுடைய பலத்தாலும் சாமர்த்தியத்தாலும் வசிக்கின்றோ மென்பது மூடத்தன மல்லவா சர்வத்திற்கும் காரணமாயும் சர்வ சக்தி களை உடையதாயுமுள்ள ஈச்சுரனல்லவா உலகம் நிலவி நிற்கின்றது. இந்த உண்மையை அறிந்தோர்கள் நானென் னும் அகம்பாவித்தம கொள்வார்களா என்பதாக இன்னும் பலவித்தம் கூறினன். இவைகளை யெல்லாம் கேட்ட முனிவர் கள் மிகுந்த வியப்பும் சந்தோஷமு மடைந்து, இவனுக்கு வேண்டிய சமாதானங்களைக் கூறிப் பின்பு உக்ரமார்த் தண்டன் முதல் எல்லா அரசர்களுக்கும் அன்பு, பக்தி, ஒழுக்கம், தருமம், ஞானம், காருண்யம் ராசநீதி முதலியவை களை யெல்லாம் எடுத்துக்கூறி இனிமேல் உத்தமமான முறையில் நீதி நெறியுடன் வாழவேண்டு மென்பதாகவும் கூறிப் பின்பு கடவுளுடைய பெருமையையும் அனதனுடைய குடும்பத்தார்களின பெருமைகளையும் எடுத்துக்கூறிப் பின்பு அந்தப் பெண்ணை வரவழைத்துப் புகழ்ந்து ஆசீர்வதித்து இவர்களுடைய கட்டுகளை விடுவிக்கும்படி கூறினர்கள். உடனே அப்பெண் இம்முனிவர்களை வணங்கிப் பின்பு தேவி யைத் தியானித்து வணங்கினள். உடனே எல்லா நாகபாசக் கட்டுகளும் நீங்கின. அவர்களெல்லோரும் எழுந்து மிகுந்த வெட்கமும் துக்கமுமாக முனிவர்களை வணங்கிக் குனிந்தபடி பிணம்போல் நின்றார்கள். பின்பு குளித்து ஆடைகள் அணியச்செய்து எல்லோருமாகப் பந்தி போசனங்கள் செய் யும்படி ஏற்படுத்தி இவர்களைச் சந்தோஷப்படுத்தியும் அவ ரவர்கள் தேசத்திற்கு அனுப்பிவிட்டுத் தாங்களும் விடை பெற்றுச் சென்றார்கள்.

அதுமுதல் அவ்வரசர்கள் ஈச்சுரனிடத்திலும் தேவி யிடத்திலும மிகுந்த அன்பு பத்தியும் உடையவர்களாய் உத்தமமான வழியில் நடந்துகொண்டு நீதி நெறியுடன்

அரசாட்சி செய்து வந்தார்கள். இங்கே அரசகுமாரன் தன் மாமனாகிய அனந்தருடைய மகனுக்குத் தன் மந்திரியினுடைய மகளைத் திருமணம் செய்து இவனையே மந்திரியாக வைத்துக்கொண்டு இவர்களைச் சிறிய அரண்மனையில் வசிக்கும்படி செய்து இவர்கள் முன்னிருந்த வீட்டை இடித்து விசாலமாகவும் அழகாகவும் கோபுரங்களுடன் ஈச்சுர ஆலயம் ஏற்படுத்தி பூசை அறை இருந்த இடத்தில் தேவியினுடைய விருத்த வடிவத்தையும் வில்லுடன் செய்து வைத்து இத்திருவிளையாடல் உற்சவமும், தினம் ஆறுகாலப் பூசையும் நடைபெறச் செய்து அதன் பக்கத்தில் அன்னச் சத்திரமும் ஏற்படுத்தி, அங்கே சாதுக்களுக்கும் பிராமணர் களுக்கும் ஏழைகளுக்கும் எப்பொழுதும் இல்லை என்னுமல் அன்னம் அளிக்கும்படியாக ஏற்படுத்தி ஆதியில் அனந்தன் முதலியவர்களுக்கு உதவியாக இருந்த பக்கத்து வீட்டுக் காரர்களுக்கும் மற்றோர்களுக்கும் வேண்டிய வெகுமதிகளை அளித்து அவர்களையே இச்சத்திரத்திற்கு மேல்பார்வை யாகவும் ஏற்படுத்திப் பின்பு, தன் தேச முழுதும் அங்கங்கே கோவில், குளம், சத்திரம், மடம், பாடசாலை, வைத்திய சாலை, ஏரி, கால்வாய், இணறு, சாலை, சோலை முதலியவை களை ஏற்படுத்தியும் முன்னிருந்தவைகளைச் சீர்திருத்தியும் தன் தேசமுழுதும் எக்குறைவுமின்றிச் செழிப்புற்றும் அன்பு பத்தி ஒழுக்கமுடனும் வாழும்படி ஏற்படுத்தித் தானும் பிரதி தினமும் தன் தாய் தந்தை மாமன் மாமி மனைவி முதலியவர் களுடன் ஆலயத்திற்கு வந்து ஈச்சுரனைப் பூசித்து வணங்கிப் பின்பு எல்லோருக்கும் அன்னம் அளித்து அதன் பிறகு வந்து தான் சாப்பிடுவதுமாக இருந்து வந்தான். இவ்வித மிருக்கும்பொழுது அங்கே அனந்தனுடைய சகோதரர்கள் ஒன்றுக்கொன்று சண்டை ஏற்பட்டு அடிதடிகள் உண்டாகி முன் இருந்த சொத்துக்களையும் ஒழித்துவிட்டுக் களவு, சூது, பொய், குடி முதலிய தீயவழிகளில் நடுபட்டுப் பின்பு அங்கே பஞ்சகாலம் ஏற்பட்டபடியால் வசிக்க முடியாது தங்கள் மனைவி மக்களுடன் புறப்பட்டு இப்பட்டினத்திற்குச் சீவிக்க வந்து சேர்ந்தார்கள். மற்றும் பக்கத்துக் கிராமத்திலுள்ள தனவந்தனுடைய சொத்துகளையெல்லாம் கள்வர்கள் திருடிக்கொண்டு இவன் வலது கரத்தையும் அடித்து ஒடித்துவிட்டார்கள். அதுமுதல் அவனும் பலவித கஷ்ட நஷ்டமடைந்து மனைவி மக்களையும் இழந்து பஞ்சகாலக் கொடுமையால் பிச்சைக்காரனாகி இப்பட்டினம் வந்து சேர்ந்

தான். இவர்கள் எல்லோரும் இச்சத்திரம் வந்து சேர்ந்தார்கள். அனந்தனும் அவர் மனைவியும் இவர்களைக் கண்டு சந்தேகமுற்று விசாரித்தார்கள். அவர்கள் உண்மையைக் கூறினர்கள். இதைக் கேட்டவுடனே ஓவென்று அலறி அவர்களைக் கட்டிப்பிடித்து அழுதார்கள். இதைக் கண்ட அரசகுமாரன் முதல் எல்லோரும் பிரமித்து நின்றார்கள் அவர்களை நோக்கி இவர்கள் என் சகோதரர்கள், நான் எந்த வேலையும் செய்யாது இவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து விளைகின்ற தானியங்களையும் பணம் முதலிய பொருள்களையும் என்னிஷ்டம்போல் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் ஈச்சுர கைங்கரியத்திற்கும் செலவு செய்தேன். இவர்கள் எதுவும் கேட்கவில்லை. பின்பு பணமில்லாமல் இந்தத் தனவந்தரிடம் ஆயிரக்கணக்கில் வாங்கித் தருமம் செய்தேன். பின்பு இவருக்கு நாங்கள் ஐந்து வருடம் அடிமையாக இருந்தபோழுதும் இவர் எங்களுக்குச் சாப்பாட்டுக்காகக் கொடுக்கும் தானியத்திலும் தருமம் செய்தேன். பின்பு இவர்களாலேயே இவ்விடம் நாங்கள் வரவும் இத்தகைய பெருமைகளை அடையவும் ஏற்பட்டன என்பதாகக் கூறினர். இதைக் கேட்டு எல்லோரும் சந்தோஷித்து அத்தனவந்தனை அச்சத்திரத்திலேயே ஓர் அறையில் இருக்கும்படி ஏற்படுத்தி மற்றவர்களுக்கெல்லாம் வீடு முதலிய வசதிகளும் வேண்டிய பொருள்களும் கொடுத்து அன்பு பத்தியுடன் ஒழுக்கமாக வசிக்கும்படி ஏற்படுத்திப் பின்பு தாங்களும் எக்குறைவுமின்றி ஆனந்தமாக வாழப்பெற்றுச் சதா ஈச்சுர தியானநிலையும் பற்றற்ற ஆத்மஞான நிலையும் அடையப்பெற்று முடிவில் சிவலோக பதவியை அடையப் பெற்றார்கள்.

சுபம்

திருச்சிற்றம்பலம்.

(6-வது)

சித்தி அம்மையின் சரிதம்

ஆதவனூர் என்னும் ஓர் பெரிய கிராமத்தில் பல வஷிஸ்ட்ணப் பிராமணக் குடும்பங்கள் வசித்து வந்தார்கள் அவர்கள் விஷ்ணு மதத்தில் மிகுந்த பற்றும் சிவ மதத்தில் மிகுந்த துவேசமும் உடையவர்களாக இருந்து வந்தார்கள் அவர்களுள் சீனிவாச அய்யங்காரென்பவர் ஒருவர் இருந்தார் அவர் மிகவும் ஏழை சாதிமதத்துவேசமில்லாதவர் எல்லோரிடத்திலும் அன்பும் சிவகாருண்யமும் தரும குணமும் உடையவர் அந்த ஊரிலும் சுற்றுக்கிராமங்களிலும் புரோகிதத் தொழில் செய்து சீவித்து வந்தார் தனக்கு உணவு உடைக்கு மிகுந்த தரித்திர நிலமையாக இருந்தபோதிலும் மற்றவர்கள் உணவு உடை இல்லாதபடி கஷ்டப்படும் பொழுது உடனே அவர்கள் கேட்காமலே அன்புடன் அளிப்பார் இவரை எல்லாச் சனங்களும் அன்பாகக் கொண்டாடுவார்கள் பிராமணர்கள் மட்டிலும் பைத்தியகாரன் என்பதாகத் திட்டி இகழ்ச்சியாகப் பேசி வெறுப்பார்கள். இவருடைய மனைவியின் பெயர் **கமலி அம்மையார்** அந்த அம்மையாரும் இவரைப் போலவே எல்லாக் குணங்களும் வாய்ந்திருந்தனள். இப்படி இருக்க இவர்களுக்குக் குழந்தை இல்லாதபடியால் இந்தக் கவலையே அதிகமாயிற்று. பிரதி தினமும், ஏ. விஷ்ணு ஏ. நாராயண ஏ பரந்தாமா எனக்குக் கருணை செய்யமாட்டாயா நான் எத்தனையோ பெயர்களுக்குத் திதி பிண்டம் கொடுத்து வருகின்றேனே எனக்குத் திதி பிண்டம் கொடுக்கவும் என பெயர் சொல்லவும் ஒரு ஆண் குழந்தை இல்லையே மேலும் குழந்தை இல்லாதவர்களுக்கு நரலோகந்தான் கிடைக்கு மென்பதாகவும் சொல்லுகிறார்களே இதற் கென்செய்வேன் என்பதாக இரவும் பகலும விஷ்ணுவை வேண்டுவதும் பிதற்றுவதுமாக இருந்தார். பிரதி தினமும் அதிகாலையில் மூன்றுமணிக்கெல்லாம் குளத்திற்குள்ப போய்க் கழுத்தளவு தண்ணீருக்குள் நின்று கொண்டு தவம் செய்வார் இப்படி இருக்க அவ்வூரில் முத்தன் என்னும் குடியானவன் ஒருவனிருந்தான் அவனுக்கும் குழந்தை இல்லாமல் பல பாத்திரைகளும் பிரார்த்தனைகளும் செய்து குறைகோடாங்கி

சோதிடங்களும் பார்த்து வந்தான் அவனுக்குச் சாதுக்கள்டத்தில் மிகுந்த அன்பு பத்தி உண்டு ஒருநாள் ஒரு உத்தமமான சாதுவைக் கண்டு வீட்டுக்கழைத்துப் போய் வேண்டிய உபசாரங்கள் செய்து தன்னுடைய குறையைத் தெரிவித்தான் அப்பொழுது அச்சாதுவானவர் அவனை நோக்கி மாந்தர்கள் முன் சென்மத்தில் சொத்துகளுக்காகவும் ஆடை ஆபரணங்களுக்காகவும் இச்சை வைத்துச் சிறிய குழந்தைகளைக் கொலை செய்வதும் மேலும் கல்யாணம் நடைபெறுத பெண்களையும் விதவையான பெண்களையும் கூடுவதால் கெற்பம் ஏற்பட்டு அதை அழிப்பதுமான பாவதோசங்கள்தான் இச்சென்மத்தில் அவர்களுக்கு குழந்தை இல்லாமல் ஏக்கமுறும்படியாக ஏற்படுகின்றது.

என் செய்வது ஆனல் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்து வந்தால் கடவுள் கிருபையால் ஒருக்கால் குழந்தை ஏற்படக் கூடும் அதாவது நீயும் உன் மனைவியும் பிரதினமும் அதிகாலையில் நான்கு மணிக்கு எழுந்து குளத்திற்குப் போய்க் குளித்துவிட்டு அரசடிப் பிள்ளையாருக்கு ஐந்து குடம் தண்ணீர் விட்டு அபிஷேகம் செய்து புட்பம் போட்டுக் கற்பூரம் கொலுத்திவர வேண்டியது குழந்தை பிறந்த பின்பு ஒரு மாதம் சென்று அபிசேகம் அலங்காரம் அர்ச்சனை தூபதீப நெய்வேத்திய முதலியவைகள் எல்லாம் கிரமமாகச் செய்து சாதுக்களுக்கும் குழந்தைகளுக்கும் அன்னமளித்து அதன்பிறகு அக்குழந்தைக்கு மகா கணபதியின் நாமகரணமும் சூட்டவேண்டியது என்பதாகச் சொன்னர் முத்தனும் அவ்விதமே செய்வதாகச் சொல்லி வணங்கினன் அவர் விடைபெற்றுக்கொண்டு யாத்திரையாகச் சென்றார் பின்பு இவர்கள் தினமும் அவ்விதமே தவராமல் செய்து வந்தார்கள் சிலமாதம் சென்று அவன் மனைவிக்குக் கெற்பம் உண்டாகி ஆண்குழந்தை ஓர் நல்ல சுபதினத்தில் பிறந்தது இவர்கள் சந்தோசமுற்று அன்புடன் வளர்த்து வந்தார்கள் ஒரு மாதம் சென்ற பிறகு அந்தச் சாதுவானவர் சொன்ன பிரகாரம் அரசடிப் பிள்ளையாருக்குப் பூசை முதலியவைகள் செய்ய உத்தேசித்து அதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் சேகரித்துக் கொண்டு மறுநாள் காலையில் நான்குமணிக்கெல்லாம் எழுந்து அங்கே சுத்தம் செய்வதற்காகச் சென்றான் சென்ற பொழுது குளத்துத் தண்ணீருக்குள் ஏதோ கருப்பாகத்

தோன்றியது இவன் பயந்து கல்லால் அதைப் பலமுறை எரிந்தான் பினபு ஒரு கல் அதன்பக்கத்தில் விழுந்தவுடன் அடே அடே பாவி என்னைக் கொன்றுவிடாதடா நான் சீனிவாச அய்யங்கார் தவம் செய்கிறேண்டா என்பதாகக் கூவிக்கொண்டே கரைக்கு ஓடிவந்தார் இவன் பயந்து பதறி நின்று வணங்கிச் சுவாமி இந்நேரத்தில் தண்ணீருக்குள் என்ன செய்திர்கள் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னியுங்கள் என்றான். பிள்ளை வரத்திற்குப் போய்ப் புருடனைப் பறிகொடுத்தமாதரியாக நான் குழந்தைக்காக வந்து தவம செய்தால் நீ என்னைக் கொல்லப்பார்த்தாய் ஏதோ நல்ல காலம் கொஞ்சம் தவறிவிட்டது. நீ எதற்காக இங்கே இந்நேரத்தில் வந்தாய் என்றனர் அவன் நடந்த விஷயங்களையெல்லாம் ஆதிமுதல் தெரிவித்து இன்று பூஜை செய்ய வேண்டியதிருபபதால் ஆலயத்தைச் சுத்தம் செய்ய வந்தேன் என்றான் இவைகளைக் கேட்டவுடன் இவருக்கு மிகுந்த சந்தோசம் ஏற்பட்டு நானும் அவ்விதம் செய்தால் குழந்தை ஏற்படுமா என்று ஆவலாகக் கேட்டார்.

சுவாமி அப்படியே ஏற்படும் தவமும் வேண்டாம் தானமும் வேண்டாம் என்றனன் அடே இவ்விஷயத்தை மற்ற பிராமணர்களுக்குச் சொல்லாதே என்று சொல்லிவிட்டு வினயகரையும் சுற்றிவந்து வணங்கிக்கொண்டு சிக்கிரமாக வீட்டுக்கு வந்தார் மனைவியைப் பார்த்து ஏதோ நல்லகாலம் என் உயிர் தப்பியது ஆனால் ஒரு சந்தோசமான விஷயமும் தெரிய வந்தது எனபதாக இங்கே நடந்த விஷயங்களையும் முத்தன் சொன்ன விஷயங்களையும் தெரிவித்து இனிமேல் நாமிருவரும அவ்விதமே செய்ய வேண்டு மென்றனர் இவைகளைக் கமலை அம்மையார் கேட்டு ஐயோ இதை மற்ற பிராமணர்கள் அறிந்தால் சாதிமதப் பிறஷ்டன் என்பதாகத் திட்டி அடித்துத் துரத்திவிடுவார்களே இதற்கென் செய்வது என்றனள் இவர் கோபமுடன் ஏண்டி இந்தச் சாதியும் மதமும் விஷ்ணுவும் பிராமணர்களும நமக்குத் திதி பிண்டம முதலியது கொடுப்பார்களா நமக்குக் குழந்தைதானே வேண்டியது எதைப் பூசித்தாலெனன எதுவந்தாலும வரட்டும் நீ யோசிக்காதே இது கண்கண்ட பலனை இருக்கிறது மேலும் காசு பணச்செலவு மில்லை காலை நான்கு மணிக்கு எவர்களுக்கும் தெரியாமலும் செய்யக்கூடியதாகவுமிருக்கிறது எனபதாக மனைவியைத்

தேற்றி இருவரும் தினமும் முத்தன் சொன்ன பிரகாரம் அன்பு பத்தியுடன் செய்து வந்தார்கள் சில மாதம் சென்ற பின்பு இவருடைய மனைவிக்குக் கெற்பம் ஏற்பட்டது இவருக்கு அளவிறந்த ஆனந்தம் ஏற்பட்டு மனைவிக்குச் சிறிதும் சிரமமில்லாதபடி எல்லா வேலைகளையும் தானே செய்தார் இவ்விஷயத்தை எல்லோரிடத்திலும் சொல்லிச் சந்தோசித்தார் எல்லோரும் சிரித்து இவரைப் பைத்தியகாரனென்று பேசினார்கள் பின்பு இவருக்கு அது ஆணை பெண்ணை என்கிற சந்தேகத்துடன் பிள்ளையாரை வேண்டிக் கொண்டிருந்தார் அதன பிறகு ஒரு நல்ல சுபதினத்தில் ஆண் குழந்தை பிறந்தது இதைக் கேட்டும் கேட்காததற்கு முன்னமே அளவிறந்த ஆனந்தப்பெருக்கால் வீதிக்கு ஓடி வந்து ஆடிப்பாடிக் குதித்தார் வேகமாக ஓடிப்போய் எல்லோருக்கும் இதைத் தெரிவித்தார் அவர்கள் கேட்டு இவருக்கென்ன பிள்ளைப் பைத்தியமா இவருடைய ராச்சியத்திற்கு முடிசூட்ட ஆள் இல்லாமற் போயவிடுமா என்பதாகப் பலவிதம் பேசிச் சிரித்தார்கள்.

இவர் இதையெல்லாம் கவனிக்காமல் குழந்தையை மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தார் ஒரு மாதம் சென்றது முத்தன் சொன்ன பிரகாரம் அரசடிப் பிள்ளையாருக்குப் பூஜை முதலியவைகள் செய்து குழந்தைக்கு நாமகரணம் சூட்டவும உத்தேசித்து மற்ற பிராமணர்களுக்குத் தெரியாதபடி பூசை முதலியவைகளைக் காலையில் நான்குமணிக்கு முன்னமே நாம் செய்து முடித்துவிடலாம சாதுக்களுக்கு அன்னம் அளிப்பதை முத்தனிடத்தில் ஒப்பித்து அதற்கு வேண்டியதைக் கொடுக்கலாம் என்பதாக இருவரும் யோசித்து அதற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் பலரிடம் யாசகம் செய்து வாங்கிச் சேர்த்தனர் அன்றிரவில் அவருடைய கனவில் பிள்ளையார் தோன்றி ஓய் சினிவாச அய்யங்காரே முன்பு தான் தெரியாமல் எனக்குப் பூசை செய்தாய் இபபொழுதும் அதே மாதரியாகத் திருட்டுத்தனமாய்ச் செய்யப்பார்க்கின்றாய் நான் அதை ஒப்புக் கொள்ளமாட்டேன் உன் குழந்தை ஜாக்கிரதை என்பதாகச் சொல்லி மறைந்தனர் இவர் திடீரென்று விழித்து எழுந்து பதஸ்டமாக மனைவியை எழுப்பி இவ்விஷயத்தைக் கூறி இது என்ன தரும சங்கடமாக இருக்கிறது நம்முடைய உயிர் போனாலும் சரி குழந்தை மட்டிலும்

பிழைத்து இருந்தால் போதுமான்று என்பதாக முடிவு செய்து மறுதினம் காலையில் முத்தனையும் அழைத்து வந்து அரசடிப் பிள்ளையாருக்குச்செய்ய வேண்டிய அபிஷேகம் முதலிய எல்லாக் காரியங்களும் செய்து குழந்தைக்குக் கணேசன் என்பதாக நாமமும் சூட்டிச் சாதுக்களுக்கும குழந்தைகளுக்கும் அன்னமும் அளித்தார்கள் இவைகளையெல்லாம் குளத்திற்கு வந்த பிராமணர்களும் பிராமணப் பெண்களும் பார்த்து மிகுந்த கோபமுடன் இவர்களை எல்லோரும் கண்களை உறுத்திப் பார்ப்பதும் பூணூலை உருவுவதும் தலையிரைத் தட்டித்தட்டி முடிவதும் முறைத்துப் பார்ப்பதும் பற்களை நற நற வெனறு கடிப்பதுமாக இருந்து பொது சனங்களுக்கும் முத்தனுக்கும் பயந்து கொண்டு ஒன்றும் சொல்லாமல் இவர்கள் வீட்டுக்குத் தானேவர வேண்டும் என்பதாகப் போய் அங்கே எல்லோரும் ஒன்று கூடிப் பேசி இந்தச் சண்டாளச் சாதிமதப் பிறஸ்ட்டன் வந்தால் அடித்துத் துரத்தி விடவேண்டுக் என்பதாக எல்லோரும் இவர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு மிகுந்த கோபமாக இருந்தார்கள். இவர்கள் எல்லாம செய்து முடித்து முத்தனுக்கும் பிரசாதம் கொடுத்து விட்டுக்கனுப்பி விட்டு இவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள் இவர்கள் வீட்டுக்குள் நுழைந்தது தான் தாமதம உடனே எல்லோரும் திடிம் திடிமென்று ஓடி வந்து இஷ்டம்போல் அடித்து உதைத்துத் திட்டினாகள இவர் இதையெல்லாம் கவனிக்கவில்லை அடிகமலை குழந்தை பதனம் குழந்தை பதன மென்று சொல்லிக் கொண்டு எங்களையாவது கொன்றுவிடுங்கள் குழந்தையைக் கொன்று விடாதீர்கள் என்பதாகக் கதறி வணங்கினர் இதைப் பார்த்துச் சிலர் சிரித்தார்கள் அவர்கள் கோபம் தீரும வரை அடித்து வஸ்திரங்களைக் கிழித்துப் பூநூலையும் அறுத்து அடா சாதிமதப் பிறஸ்ட்டச் சண்டாளர்களே இனிமேல் இங்கே இருக்கக்கூடாது ஓடி விடுங்கள் என்பதாகத் துரத்தி விட்டாாகள இவர்கள் மிகுந்த வருத்தமுடன் புண்யவான் கள் குழந்தையை ஒன்றும் செய்யவில்லை நல்லகாலம் என்பதாக இருவரும முத்தனுடைய வீட்டுக்கு வந்தார் கள் இந்நிலைமையைக் கண்ட சனங்களும் பின்தொடர்ந்து வந்தார்கள் முத்தன் ஓடிவந்து சாமி இதென்ன இப்படி வருகிறீர்கள் என்றான் இவர்கள் நடந்ததைக் கூறினர்கள். இதைக் கேட்ட எலலோரும் மிகுந்த கோபமும் வெறுப்பும்

கொண்டு அவர்களைத் திட்டினர்கள். இவர் வஸ்திரத்தைப் பார்த்தார் காணவில்லை பூநூலையும் காணவில்லை. தலையில் இருந்த நாலந்து மயிரையும் தட்டி முடியத் தடவினர் அதுவும் காணவில்லை ஐயோ இதென்ன இந்தப் பிராமணர்கள் எல்லாவற்றையும் பிடுங்குகிறவேலையில் ஆரம்பித்து விட்டார்கள் ஏதோ குழந்தையை மட்டிலும் பிடுங்காது விட்டுவிட்டார்கள் நல்லகாலம் என்றனர் இதைக்கேட்ட ஆண்பெண்கள் எல்லாம் கைதட்டி சிரித்தார்கள் அதன் பிறகு முத்தனுடைய மாட்டுக் கொட்டம் ஒன்று தனிமையாக இருந்தது அதைச் சுத்தம் செய்து அங்கே இருக்கும் படியாக ஏற்பாடுசெய்தார்கள் அவ்விடத்தில் சந்தோசமாக வசித்துக்கொண்டும் தன் புரோகித் தொழிலைச் செய்து கொண்டும் குழந்தையை அன்பாக உயிரைப் போன்று பாதுகாத்துக் கொண்டும் வந்தார்கள் இப்படி இருக்கப் பக்கத்து ஊரிலுள்ள ஓர் பெரிய தனவந்தனுடைய தகப்பனருக்குத் தீனி வந்தது.

அங்கே இவர் சென்று எல்லாம் செய்து முடித்து அச்சதை அவர்களுக்குக் கொடுத்த பொழுது அத்தனவந்தன் வணங்கிச் சுவாமி எனக்கு எல்லாச் செல்வங்களும் இருந்தும் ஒரு குழந்தைச் செவ்வந்தான் இல்லை இதற்காகப் பல யாத்திரைகளும் பிரார்த்தனைகளும் குறி கோடாங்கி சோதிடம் முதலியது எல்லாம் பார்த்தும் இன்னும் கடவுள் கருணை செய்யவில்லை என்றுன் இவர் கேட்டதும் அடடே இவ்விஷயத்தை நீங்கள் இதுவரையில் சொல்லவில்லையே நான் சொல்லுகிறபடி செய்யுங்கள் அவசியம் உங்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என்பதாகத் தாங்களும் முத்தனும் செய்து அதனல் குழந்தை ஏற்பட்ட விஷயங்களை விபரமாகச் சொன்னர் இதைக் கேட்ட அத்தனவந்தனும் மிகுந்த சந்தோசமுற்று அப்படியே செய்கிறேனென்பதாகக் கூறி இவரை அனுப்பி விட்டுப் பின்பு தானும் மனைவியும் அரசடிப்பிள்ளையாருக்குத் தினமும் அவ்விதமே செய்து வந்தார்கள் சில மாதங்கள் சென்று அவனுடைய மனைவிக்குக் கெற்பம் ஏற்பட்டு ஒரு நல்ல சுபதினத்தில் ஆண்குழந்தை பிறந்தது இதைக்கண்ட அத்தனவந்தன் அளவிறந்த சந்தோசமுற்று சர்க்கரை பழம முதலியது எல்லோருக்கும் வழங்கிப் பின்பு ஒருமாதம் சென்றவுடன் இந்தச் சினிவாச அய்யங்காரையும் வர

வழைத்து அரசடிப்பிள்ளையாருக்குச செய்ய வேண்டிய அபிஷேகம் முதலாக எல்லாம் மிகவும் பிரமாதமாகச் செய்தும ஆயிரக்கணக்கான சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்து அக்குழந்தைச்சுக் கணேசன் என்பதாக நாமமும் சூட்டிய பின்பு இவருக்குமுப்பத்திரண்டு தான தருமங்களும் கிரமமாக வழங்கினன் அதன் பிறகு இவர் வசிக்கும் நிலைமையும் அந்தப் பிராமணர்கள் செய்த காரியங்களையும் இவர் சொல்லத் தெரிந்து கோபமுற்று நாளையத்தினம் நான் அங்கே வருகிறேன் இந்தப் பொருள் களெல்லாம் இங்கேயே இருக்கட்டும் என்பதாக இவரை அனுப்பிவிட்டு மறுதினம் சில ஆட்களுடன் இந்த ஊருக்கு வந்து இங்கே சில பெரியோர்களையும் அழைத்துக் கொண்டு அந்தப் பிராமணர்கள் வசிக்கும் தெருவிற்குப் போய் அவர் களை எல்லாம் வருவித்து நீங்கள் செய்தது மிகவும் அனீதமான காரியம் இனிமேலாவது சாதிமதத் துவேசமும் கபடமும் விட்டு விட்டுச் சிவாலயத்திற்கும் விஜயசர் ஆலத்திற்கும் போய் பூசிக்க வேண்டும் இவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுன் அதற்கு அப்பிராமணர் கள் பலவிதமாகப் பேசி மறுத்தார்கள் இவன் மிகுந்த கோபமுடன் நீங்கள் இவ்விதம் செய்யாத போனல் இந்த ஊரில் நீங்கள் வசிக்க முடியாத நிலைமை ஏற்படும் நாளையத் தினம் இந்தப் புரோகிதருடைய வீட்டை இடித்து விட்டுப் பெரிய மாடி விடாகக் கட்டப் போகிறேன் தடை செய்தால் கலவரமும் பெரும் கஷ்டங்களும் ஏற்படும் என்பதாகக் கூறிவிட்டு அந்த ஊருக்குள்ப் போய்க் கூட்டம் போட்டு இனிமேல் எவர்களும் அந்தப் பிராமணர்களுடன் பேசுவதோ சினேகம் செய்வதோ வேலை பார்ப்பதோ நிலம் உழுவதோ கூடாது என்பதாக ஏற்பாடு செய்து விட்டுத் தன் ஊருக்குப் போனன் அன்றிரவில் அப்பிராமணர்கள் எல்லாம் ஒன்று கூடி மிகுந்த துக்கமும் பயமும் கொண்டு இது என்ன தருமசங்கடமாக வந்திருக்கிறது இதற் கெல்லாம் அந்தச் சனியன் பிடித்த புரோகிதப்பயலல்லவா காரணமாக இருக்கின்றன் சாதிக்கும் மதத்திற்கும துரோகியாக இருக்கின்றனே இந்த ஊர்க்காரர்களுடன் விரோதம் செய்து கொண்டு நாம எப்படி வசிக்க முடியும் வேறு ஊருக் காவது போய்விடலாமென்றல் வீடுகளையும் நிலங்களையும் எவர்கள் வாங்குவார்கள எல்லாம் விட்டு விட்டுத்தான போகும்படி நேரும என்ன செய்வது என்பதாக யோசித்துப்

பின்பு வேறுவழியில்லாமல் அந்தத் தனவந்தன் சொன்ன படியே செய்வதற்கு உடன்பட்டு ஆரம்பத்தில் தொந்தரவுக் காகச் செய்து பின்பு நாளுக்கு நாள அந்தத் துவேசங்கள் மாறி உண்மையாகவே செய்யும் பழக்கமாகி விட்டது அந்தத் தனவந்தன் வந்து இவருடைய வீட்டை இடித்து விட்டுப் பெரிய மெத்தை வீடாகக் கட்டிப் பண்ட பாத்திரங் களும பசுமாடுகளும் நிலங்களும் இன்னு மற்ற எல்லாத் தருமப் பொருள்களையும் இவரிடம் ஒப்பிவித்துக் கிரகப் பிரவேசமும் செய்து விட்டுச் சந்தோஷமாகத் தன் ஊருக்குப் போனான் இதை அறிந்த இன்னும் சில தனவந்தர் களும் நிலம் பசு முதலிய பல தானங்களும இவருக்குச் செய்தார்கள் இவர் பெரிய செல்வந்தராக ஏற்பட்டார் இவை யெல்லாம மகா கணபதியின் அனுக்கிரகம் என்ப தாகக் கருதித் தினமும் அரசடிவினயகருக்குத் தானே போய் விமரிசையாக அபிஷேகம் பூசை முதலியது செய்து வருவார் தன் மனைவியிடம் இந்தச் செல்வம் முழுவதும் நம்முடையதல்ல எல்லாம் பொது மக்களுடையது ஆகவே நாம் அன்புடன் அவர்களுக்கே உபயோகப்படுத்த வேண்டு மென்பதாகக் கூறிப்பசுவின் பாலைக் காய்ச்சிப் பால் இல்லாத குழந்தைகளுக்குக் கொடுப்பார்கள் மீதிப் பாலை மோராக்கிப் பெரிய அண்டாகளில் நிறைப்பித் திருணையில் வைத்து நீராகாரமும் வைத்து எல்லோருக்கும் கொடுப்பார்கள் எந்த நேரமும் அன்னம் வைத்திருப்பார் கள் பசி என்று யார் வந்தாலும் உடனே அன்புடன் அளிப் பார்கள் ஆடை இல்லாதவர்களைக் கண்டால் உடனே ஆடை கொடுப்பார்கள் மழை குளிர் காலத்தில் வேளாண்மை செய்யும் பொழுது ஏர் உழவர்களுக்கும் நாற்று நடுபவர்களுக்கும் பச்சரிசி வெள்ளம் முதலியவை களைக் கொண்டுபோய்த் தின்னும்படி கொடுப்பார்கள் ஆகவே இவர்களை எல்லோரும் போற்றிப் புகழ்ந்து அன் புடன் கொண்டாடினார்கள் இவர்களுடைய பெரு மையும் புகழும் எங்கும் பரவியது இப்படி இருக்க இவருக்கு இரண்டாவது ஒரு பெண் குழந்தையும் நல்ல சுபதினத்தில் பிறந்தது அதை மிகவும் சந்தோசமுடன் வளர்த்து அதற்குச் **சித்தி அம்மை** என்பதாக நாமமும் சூட்டி அன்புடன் வளர்த்து வந்தார்கள் இவர்கள் எல்லோரும் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் முதலியது செய்து திருநீறு அணிந்து வினயகர் பூசை

முடித்துச் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்து அதன்பிறகுதான் இவர்கள் சாப்பிடுவது வழக்கம் இந்தப்பெண்ணும் அதேமாதரியாகச் செய்து கொண்டும் மிகுந்த அன்பு பக்தி ஒழுக்கம் சிவகாருண்யம் தருமம் அடக்கம், முதலியவைகளில் சிறந்து விளங்கி வந்தது. அதன் பிறகு இப்பெண்ணிற்குத் திருமணம் செய்வதாக உத்தேசித்தபொழுது, கஜேந்திரபுரம் என்னும் பட்டினத்திலிருந்து வந்து **கோவிந்தசாமி அய்யங்கார்** என்னும் மாப்பிள்ளைக்குக் கேட்டு இவர்களும் சரியென்று ஒப்புக் கொண்டிருந்தார்கள் இதை அறிந்த இந்த ஊர்ப் பிராமணர்கள் சீனிவாச அய்யங்காரிடம் வந்து நீங்களோ சாதிமதத் துவேசமின்றி திருநீறு அணிந்து விளையகரைப் பூசிக்கின்றீர்கள் சந்நியாசிகளுக்கு அன்னமளிக்கின்றீர்கள். அந்தப் பட்டினத்திலுள்ள பிராமணர்கள் மிகுந்த சாதி மதத் துவேசமுடையவர்கள். சிவாலயத்தைக் கண்ணால் பார்க்கவே மாட்டார்கள் சிவா என்னும் நாமத்தைக் காதிலே கேட்கவே மாட்டார்கள் சந்நியாசிகளுக்குப் பிச்சை போடவே மாட்டார்கள் மிகுந்த சிவமதத் துவேசமும் விஷ்ணு மதத்தில் அதிகப் பற்றும் உடையவர்கள் ஆகவே உங்கள் பெண்ணை அங்கே திருமணம் செய்து கொடுத்தால் மிகுந்த கஷ்ட நஷ்டங்கள்தான் ஏற்படக் கூடும் ஆகவே இந்த ஊரிலேயே ஒரு மாப் பிள்ளைக்குத் திருமணம் செய்தால் அந்தத் தொந்தரவுகளெல்லாம் ஒன்றும் ஏற்படாது என்பதாகத் தெரிவித்தார்கள் இதைக் கேட்டவுடன் ஆமாம் நீங்கள் சொல்வதுதான் சரி நான் இதை யோசிக்காமல் முட்டாள்தனமாக ஒப்புக்கொண்டேன் அவர்கள் வந்தால் ஏதாவது போக்குச் சொல்லி அனுப்பிவிடலாம் என்று சொல்லி இவ்வூரிலேயே கொடுக்க யோசித்துக் கொண்டிருந்தார்கள் அன்றிரவில் இவருடைய கனவில் விளையகப் பெருமான் தோன்றி ஓய் சீனிவாச அய்யங்காரே நீ உன் பெண்ணை முதலில் ஒப்புக்கொண்டபடி அவனுக்குத் தான் திருமணம் செய்யவேண்டும் இந்த ஊரிலும் மற்ற யாருக்கும் கொடுக்கக்கூடாது என்பதாகச் சொல்லி மறைந்தார்

இவர் திடீரென்று எழுந்திருந்து மனைவியையும் எழுப்பி இவ்விஷயத்தைக் கூறி இதென்ன தரும சங்கடமாக இருக்கின்றது என்று இருவரும் மிகுந்த வருத்தமுற்றுப் பின்பு

எல்லாம் விஞயகப் பெருமானுடைய திருவைதான் எப்படியோ நடந்தது, நடக்கட்டும். அவர் சொன்னபடியே செய்யலாமென்பதாக முடிவு செய்து மற்ற பிராமணர்களுக்கும் இவ்விஷயத்தைக் கூறினர். அவர்கள் பலவிதம் மறுத்தும் கேட்காமல் அந்த மாப்பிள்ளைக்கே முடிவு செய்து திருமணமும் விமரிசையாக முறையுடன் நடைபெற்றுச் சித்தி அம்மையாரையும் புருடன் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். இப்பெண் போகும்பொழுது ஒரு பிள்ளையாரையும் பூசைச் சாமான்களையும் திருநீறும் தன் பெட்டிக்குள் வைத்துக்கொண்டு போயிருந்தது அந்த வீதியிலுள்ள இருநூறு வீடுகளும் வசிஸ்ட்ண மதப பிராமணர்கள் மிகுந்த சாதிமதத் துவேஷ முடையவர்கள் சிவாலயங்களைக் கண்களால் பார்க்காமல் மூடிக்கொண்டு போவார்கள். சிவ நாமத்தைக் காதில் கேட்காதபடி காதுகளை மூடிக்கொள்ளுவார்கள். சிவனடியார்களைக் கண்டால் பேசவோ பார்க்கவோ மாட்டார்கள். பிச்சைபோடவு மாட்டார்கள். சித்தி அம்மையின் வீட்டிலும் புருடனும் மாமியாரும் அப்படியே சிவமதத் துவேஷிகளாக இருந்தார்கள், மாமனார் இல்லை முன்னமே இறந்துபோனார், இந்த நிலைமைகளை யெல்லாம் பார்த்து மிகுந்த துக்கமும் பயமும் கொண்டு யாருக்கும் தெரியாதபடி பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தாள் ஒரு நாள் நெற்றியில் திருநீறு இருப்பதை மாமியார் பார்த்துக் கோபமுடன் ஏண்டி இதென்ன பண்டாரச்சி மாதிரியாகச் சாம்பலைப் பூசி இருக்காயே என்று திட்டினாள். இப்பெண் உடனே ஒன்றும் பேசாமல் அதை அளித்துவிட்டாள். அதன் பிறகு ஒருநாள் இப்பெண் தெரியாதபடி பூசை செய்து கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று மாமியார் வந்து பார்த்துவிட்டாள் வேகமாக ஓடிவந்து அப் பெட்டியைத் தூக்கிப்போய் வீதியில் போட்டு அந்தப் பிள்ளையாரையும் உடைத்து எல்லோருக்கும் காண்பித்து இது என்ன அனியாயமாக இருக்கிறது, இவள் பாப்பாத்தியா அல்லது பண்டாரச் சிறுக்கியா தெரியவில்லையே வேறு மதத் தெய்வத்தைப் பூசிப்பதும் பண்டாரங்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும என் வீட்டிலுள்ள அரிசி சோறு முதலியதெல்லாம போட்டுவிடுகிறாள். சனியன் மாதிரியாக இருக்கிறாளே இவளை என்ன செய்வது என்பதாகத் திட்டி அடித்தாள். புருடனும் வந்து இதைக் கேள்வியுற்று இப் பெண்ணைத் திட்டி அடித்து இனிமேல் இதெல்லாம் செய்யக்

கூடாது என்றான். அவ்வீதியிலுள்ள ஆண் பெண்களெல்லாம் கூடித் திட்டி இனிமேல் இப்படிச் செய்தால் துரத்தி விடுவோம் என்று சொல்லிப் போய்விட்டார்கள். இப்பெண் மிகுந்த வருத்தமுடன் அழுது கொண்டிருந்தாள். எதிர் வீட்டிலுள்ள ஆதிசேஷ அய்யங்கார் என்னும் பெரியவர் சாதிமதத் துவேஷமில்லாதவர் உத்தமமான குணமுடையவர் அவர் வந்து இப்பெண்ணுக்குச் சமாதானம் சொல்லி அனுப்பினர். இப்பெண் மிகுந்த கவலையுடன் அழுது கொண்டு விஜயப் பெருமானே இதுவும் உன் திருவிளையாட்டா என்ன இப்படிச் சோதிக்கலாமா காட்டினுள் விலங்குகளின் நடுவில் பசுவின் கன்றுனது அகப்பட்டு வருந்துவது போன்று வருந்தி வாடும்படி செய்யலாமா உன்னை ஆனந்தமாகப் பூசை செய்ய முடியாமல் மறைவாகச் செய்தும் கூட இப்படித் துன்பத்தில் விட்டுவிடலாமா என்ன அங்கேயே திருமணம் செய்திருந்தால் எவ்வளவு ஆனந்தமாக உன்னைப் பூசை செய்வேன் எவ்வளவு சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்து ஆனந்திப்பேன். இங்கே ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ன செய்வேன், எல்லாம உன் செயல்தான் இன்னமும் எப்படிச் செய்தாலும் செய் என்பதாகப் பரதவித்துப் பின்பு முன் போல் வசித்து வந்தாள். மறுபடியும் இவர்களுக்குத் தெரியாமல் ஒரு பிள்ளையார் உருவம் வாங்கி வந்து பெட்டிக்குள் வைத்து மிகவும் மறைவாகவும் ஜாக்கிரதையாகவும் பயந்து பயந்து தினமும் தவராமல் பூசை செய்துகொண்டும் தருமம் செய்துகொண்டும் சதா நேரமும் கடவுளைச் சிந்தித்துக் கொண்டும் இருந்து வந்தாள். அதன் பிறகு இவளுக்கு ஒரு ஆண் குழந்தை நல்ல சுபதினத்தில் பிறந்தது. அதையும் அன்புடன் வளர்த்து வந்தாள். அந்த வீதியின் வழியாகத் தினமும் கோவில் யானைகளை ஆற்றுக்குக் குளிப்பாட்டக் கொண்டு போவார்கள். அப்பொழுது இவள் பழம் முதல் ஏதாவது ஒன்று வைத்திருந்து அந்த யானைகளைப் பிள்ளையாரைப் போன்று பாவித்து வணங்கி அந்தப் பொருளையும் தின்னும்படி கொடுப்பாள். பின்பு தன் குழந்தையிடமும் கொடுத்து அதற்குக் கொடுக்கும்படிச் செய்வாள். தான் திருநீற்றை அணிந்து உடனே தெரியாதபடி அழித்து விடுவாள்.

பூசை செய்வதற்கும் பிச்சைபோடுவதற்கும் சில சமயங்களில் முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படும் அப்

பொழுதும் மிகுந்த கஷ்டப்பட்டு அதை விடாதபடி செய்து முடிப்பாள்.

அவ்வீதியிலுள்ள ஆண் பெண் எல்லோரும் இவளைப் பண்டாரச்சி என்றே கூப்பிடும்படி ஏற்பட்டது இவள் புருடன் பக்கத்து வீட்டிலுள்ள ஒரு பெண்ணுடன் சினேகமாகிக் கொண்டு அங்கேயே எப்பொழுதும் இருப்பான் அந்தப் பெண்ணும அவள் தாயாரும் இவள் பண்டாரங்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் கண்டபடி அரிசி அன்னம் உடை பணம் முதலியவைகளைத் திருடிக் கொடுப்பதாகவும் இன்னும் பல கோள்களும் இவனிடம் சொல்லி அடிக்கும்படி செய்வார்கள் மாமியாளிடமும் இதே மாதிரியாகச் சொல்லி சண்டை மூட்டிவிடுவார்கள் மற்ற பிராமணப் பெண்களும் ஆண்களும் கண்டபடி திட்டிப் பரிகாசம் செய்வார்கள் இவைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு இருந்து வந்தனள் ஒரு நாள் மாமியும் புருடனும் இல்லாத சமயத்தில் வழக்கம் போல் பூசை செய்து கொண்டிருந்தாள் திடீரென்று மாமியார் வந்தவுடன் பயந்து அவசரமாகப் பெட்டியை மூடினுள் அவள் ஓடிவந்து திறந்து பார்த்து மிகுந்த கோபமும் ஆவேசமும் கொண்டு பெட்டியைக் கொண்டுவந்து வீதியில் போட்டு இந்தப் பண்டாரச் சிறுக்கி செய்கிறதைப் பார்த்தீர்களா எத்தனையோ தடவை சொல்லியும் கேட்கிறுளில்லையே இவள் கீலியாயிருக்கிறுள் சாதிமதத் துரோகியாயிருக்கிறுள் எங்கள் குலத்தையும் குடும்பத்தையும் கெடுத்து விட்டாளே என்று சிறி ஓடிப் போய் இவள் தலைமயிரைப்பிடித்து இழுத்துவந்து வீதியில் போட்டு அடித்தாள் இதைக்கண்ட மற்ற ஆண்களும் பெண்களும் ஓடிவந்து கூடி எல்லோரும் திட்டி அடித்தார்கள் இந்த வீதியில் பண்டாரங்களையோ பிச்சைக்காரர்களையோ பார்க்கமுடியாது இந்தப் பண்டாரச்சி வந்ததிலிருந்து எப்பொழுதும் அந்தக் கூட்டமாகிவிட்டது விஷ்ணு மதத் துரோகியாய் இருக்கின்றுள் இவள் இங்கே இருக்கவே கூடாது இவள் நம சாதிக்கும் மதத்திற்கும் சனியன் மாதிரியாக வந்திருக்கிறுள் நாளைக்கே இவள் தகப்பனுகிய பண்டாரப் பயலுக்கு ஆள் அனுப்பிவரச் சொல்லிக் கூட்டி அனுப்பவேண்டும் அல்லது நம்முடைய ஆள் மூலமாவது கூட்டி அனுப்பி விடவேண்டும் அனுப்பத் தவரினுல் நீங்களும் இங்கே இருக்கக்கூடாது வேரிடத்திற்கு

போய்விட வேண்டும் என்பதாக எல்லாப் பிராமணர்களும் தெரிவித்தார்கள். இவர்களும் அப்படியே செய்வதாகச் சொன்னார்கள். இவைகளை எல்லாம் அறிந்த எதிர்விட்டு ஆநிசேஷ அய்யங்கார் என்னும் பெரியவர் வந்து ஐயோ பாவம் அந்தப் பெண்ணை ஏன் எல்லோரும் இப்படி அடித்துத் திட்டித் தொந்தரவு செய்கிறீர்கள். கொலை செய்தாளா, களவு செய்தாளா, அல்லது விபசாரம் செய்தாளா, எந்தத் தெய்வத்தைப் பூசித்தாலென்ன, எவருக்குப் பிச்சை போட்டாலென்ன எல்லா உயிரும் எல்லாத் தெய்வமும் ஒன்றுதானே, இந்த அலியாயம் செய்யாதீர்கள். கடவுளுக்குப் பொறுக்காது என்பதாகக் கூறினர். இதைக் கேட்ட வுடன் எல்லோருக்கும் மிகுந்த கோபம் வந்து அடே கிழட்டுப் பயலே, அடா சண்டாளப் பயலே, நீயுமா அவளுடன் கூடிச் சாதிமதத் துரோகம் செய்கிறாய், இனிமேல் இந்த மாதிரியாகச் சொல்வாயானால், உன்னையும் இப்படித் தான் அடித்துத் துரத்திவிடுவோம், ஜாக்கிரதை என்றார்கள். இவர் ஒன்றும் பேசாது போய்த் திருணையில் உட்கார்ந்துகொண்டார். மற்ற எல்லோரும் அவரவர்கள் வீட்டுக்குப் போனார்கள். இவள் மாமியாரும் புருடனும் தங்கள் வீட்டுக்குப் போகாமல் மகளுடைய வீட்டுக்குப் போய்விட்டார்கள். இவளும் குழந்தையுடன் வீட்டுக்குப் போய் மிகுந்த துக்கமுடனும் அடிபட்ட மிகுந்த உபாதியுடனும் தாங்கமுடியாமல் அழுதுகொண்டு, ஏ விநாயகப் பெருமானே, ஏ விக்னேஸ்வரப பெருமானே, இது தர்மந் தானு, இது நியாயம்தானு, உனக்குச் சிறிதும கருணை இல்லையா, என்னை இப்படிச் சோதிக்கலாமா, இந்தப் பாவிச் சண்டாளக் கொடிய ராக்ஷசக் கூட்டத்தார்களிடம் கொண்டு வந்து சேர்த்து இப்படிப் பரதவிக்கும்படி செய்து வேடிக்கை பார்ப்பதும் நியாயம்தானு என்பதாக ஓவென்று அலறி அழுது இனிமேல் இங்கே இருக்கக்கூடாது, தந்தையிடம் போய்ச் சேருவதுதான் சரி என்பதாகச் சூரிய உதயத்தை எதிர்பார்த்துக் கொண்டு இரவு முழுதும் துயிலாமல் அழுது கொண்டே இருந்தனள். காலை நான்கு மணி நேரம் வந்தது. அப்பொழுது ஒரு பண்டாரக் கிழவர் மிகுந்த வயதுடையவராகவும் நரைத்த தாடி மீசையுடனும் பெருத்த உருவமும் தொந்தி வயிருடனும் திருநீறும் உத்திராக்க மாலையும் நிறைய அணிந்துகொண்டும் கக்கத்தில் ஒரு தடியை வைத்துக்கொண்டும் கையில் சங்கு சேகண்டியை முழக்கிக்கொண்

டும் அர அர சிவசிவ சம்போ சங்கரா மகாதேவா, மகாதேவா சம்போ சங்கரா சிவசிவ சிவசிவ என்பதாகப் பெரும் சூர லுடன் கூவியும் பாடியும் ஆடியும் அந்த வீதியில் அங்கு மிங்குமாகத் திரும்பித் திரும்பி ஓயாது வந்தனர், இதைக் கேட்டவுடன் இவளுக்குத் துக்கமும் உபாதியும் நீங்கி வேக மாக ஓடிவந்து கதவைத் திறந்து இவரைப் பார்த்து அள விறந்த சந்தோஷத்துடன் நின்று கொண்டிருந்தாள். இச் சப்தத்தைக் கேட்ட பிராமணர்கள் எல்லோரும் மனம் பதை பதைத்துக் காதுகளை எல்லாம் அடைத்துக் கொண்டார் கள். அப் பண்டாரக் கிழவர் ஓயாமல் பெருங் சூரலுடன் அர அர சிவசிவ என்று கத்துவதும் சங்கு சேகண்டியை முழக்குவதும் ஆடுவதும் பாடுவதுமாக அந்தத் தெரு முகப்பு வரையில் இங்குமங்குமாகச் சுற்றி இப்பெண்ணின் வீட்டுக்கு முன்னதாக நின்றுகொண்டு அதிகமாகக் கத்து வார். இந்தப் பெண்ணுக்கும் எதிர்வீட்டுத் திருஷபிலுள்ள ஆதிசேஷ அய்யங்காருக்கும் மிகுந்த சந்தோஷமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. மற்ற பிராமணர்களும் பிராம ணப் பெண்களும் யாரோ ஒரு பண்டாரப்பயல் அதிகாலை யில் வந்துகொண்டு இந்த மாதிரியாகக் கத்துகிறானே. இதுவரையில் இப்படி இல்லையே, இதென்ன அனியாயமாக இருக்கிறது. எல்லாம் அந்த பண்டாரச் சிறுக்கியாலல்லவா இந்தப் பண்டாரப்பயல்கள் கூட்டம் இந்தத் தெருவில் ஏற் பட்டது. இன்னும் இவன் போகிறானில்லையே என்பதாக மிகுந்த கோபமும் வெறுப்புமாகக் காதுகளையும் கதவுகளை யும் அடைத்துக்கொண்டு ஆற்றுக்குக் குளத்திற்குப் போகாமலும் குளிக்காமலும் பூசை முதலிய கருமங்கள் செய்யாமலும் சமையல் சாப்பாடு இல்லாமலும் இருந்தார் கள். இவரும் போனதாக இல்லை மணியும ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. மென்மேலும் அதிகமாகவே கத்துவதும் சங்கு சேகண்டியை முழக்குவதுமாக இருந்தார். சில சமயம் பேசாது சும்மா நிற்பார். எல்லோரும் பண்டாரப்பயல் ஒழிந் தான் என்பதாகக் கதவுகளையும் காதுகளையும் திறந்து கொண்டு வேகமாக வெளியே வருவார்கள். திடீரென்று மறுபடியும் சிவசிவ அர அரவென்று கத்திக்கொண்டும் சங்கு சேகண்டியை முழக்கிக்கொண்டும் அங்குமிங்கும் ஓடு வார். அவர்கள் மறுபடியும் ஓடிப்போய்க் கதவுகளையும் காது களையும் டப் டப்பென்று மூடிக்கொண்டு இந்தச் சனியன் பிடித்த பண்டாரப்பயல் ஒழிந்துபோகிறானில்லையே என்ப

தாகப் பற்களைக் கடித்துக்கொண்டும் பூநூல்களை உருவிக் கொண்டும் வீட்டுக்குள் இருந்தார்கள்.

அதன் பிறகு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் பொறுக்க முடியவில்லை. சில வாலிபப் பிராமணர்கள் காதுகளை அடைத்துக்கொண்டும் முக்காடு போட்டுக்கொண்டும் மிகுந்த கோபமுடன் வந்து, அடே பண்டாரக் கிழவனே உனக்குப் புத்தி இருக்கா, இல்லையா? அதிகாலையில் இங்கே வந்துகொண்டு இந்த மாதிரியாக அனியாயம் செய்கிறாயே எங்களை ஆற்றுக்குக் குளத்துக்குப் போகாமலும் பூசையும் சாப்பாடு முதலியது செய்யாமலும் கெடுத்துக்கொண்டு அட்டகாசம் பண்ணுகிறாயே கிரமமாகப் போகின்றாயா உனக்குச் சாப்பாடு வேண்டுமா என்பதாகக் கடிந்து கூறியும் இவர் கேட்காதவர் போன்று; கத்திக்கொண்டே வந்தார். இவர்களுக்கு அதிகமாகக் கோபம் வந்து அவருக்கு முன் வந்து மறைந்து நின்றுகொண்டு மீண்டும் அவ்விதமாகக் கூறினர்கள். அவர் நின்று அதைக் கேட்டவுடன் சிரித்துக் கொண்டு, ஓ பிராமணர்களே, நீங்களா எனக்குச் சாப்பாடு கொடுக்கப் போகிறீர்கள். இதோ கக்கத்தில் இருப்பதைப் பார்த்தீர்களா! நான் யாரு என்பது தெரியுமா, நான் உங்களை என்ன செய்கிறேன், ஆற்றுக்குக் குளத்துக்குப் போகாமலும் சாப்பிடாமலும், கதவுகளையும் காதுகளையும் அடைத்துக்கொண்டு இருக்கச் சொல்லுகிறேனே அல்லது உங்களை ஏதாவது பிச்சை கேட்கிறேனே, கெட்ட வசனங்கள் எதுவும் சொல்லுகிறேனே ஏதோ என்னுடைய பிரார்த்தனைக்காகச் சிவசிவ அர அரவென்று கத்தினால் உங்களுக்கு என்ன நடுவீதியாருக்குச் சொந்தமானது என்பதாக மறுபடியும் கத்திக்கொண்டே திரிய ஆரம்பித்தார். இவர்கள் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை பின்பு அரசனிடம் சொல்வதற்காக அரண்மனைக்குச் சென்றார்கள். அரசன் ஊரில் இல்லை, வேறு தேசத்து அரசனுடைய திருமணத்திற்குப் போயிருந்தான்; மந்திரியுமில்லை, சேவகரிடம் இதைத் தெரிவித்து அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள் சேவகர்கள் இங்கே வந்து, ஓய் பண்டாரக் கிழவரே, நீரென்ன இங்கே வந்துகொண்டு அந்தப் பிராமணர்கள் ஆற்றுக்குக் குளத்துக்குப் போகாமலும பூசையும சாப்பாடு முதலியது செய்யாமலும் கதவுகளை அடைத்துக் கொண்டு வருந்தும்படி செய்கின்றாயே, நீ பெரும் அக்கிரம

மும் வம்பும் செய்கின்றாய். இனிமேல் இங்கே நிற்கக்கூடாது. வேரிடத்திற்குப் போ என்பதாகக் கோபமுடன் கூறினார்கள். இதைக் கண்ட மற்ற வீதியிலுள்ள பொது ஜனங்களும் வந்து பெரும் கூட்டமாகக் கூடினார்கள். அப்பொழுது இவர் சிரித்துக்கொண்டு, ஓய் சேவகர்களே, நான் என்ன அக்கிரமமும் வம்பும் செய்கிறேன், இவர்களோ எல்லாம் ஆற்றுக்குக் குளத்திற்குப் போகக்கூடாது. பூசை செய்வதோ சாப்பிடவோ கூடாது. கதவுகளையும் காதுகளையும் அடைத்துக்கொண்டே உள்ளே இருங்கள் என்று நான் சொல்கிறேனு அல்லது ஏதாவது பிச்சை கேட்கிறேனு கெட்ட வசனங்கள் ஏதாவது சொல்கிறேனு என் பிரார்த்தனைக்காக அரஅர சிவசிவ சங்கரா சம்போ மகாதேவா என்று கூவியும் சங்கு சேகண்டியை முழக்கினால் இவர்களுக்கு என்ன கஷ்டம் நஷ்டம் இருக்கிறது ஒன்றுமில்லையே. அரிஅரி நாராயண கோவிந்தாவென்று மற்ற வீதிகளிலும் இங்கும் கூவுகிறார்களே அதற்கு யார் என்ன சொல்லுகிறார்கள் இது மட்டிலும் கூடாதா நடுவீதி எவர்களுக்குச் சொந்தம், என்னுடைய பிரார்த்தனை முடியும் வரையில் எவர்கள் சொன்னாலும் போகமாட்டேன். அவர்களுடைய பிரார்த்தனை எது வரையில் இருக்கிறதோ இருக்கட்டும என்று மறுபடியும் ஆரம்பித்தார். இதைக் கேட்ட சேவகர்களும் மற்ற பொது ஜனங்களும் கோபமுற்று, ஓய் பிராமணர்களே நீங்கள் செய்வதுதான் பெரும் அக்கிரமமும் சாதி மதத் துவேஷமுமாக இருக்கின்றது. ஆகவே அவர் அப்படித்தான் கத்துவார் நீங்கள் அவரை ஏதாவது செய்தால் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம் என்பதாகக் கடிந்து கூறினார்கள். இவர் மீண்டும் ஆரம்பித்து அதிகமாகக் கத்துவதும் சங்கு சேகண்டியை முழக்குவதும் ஆடுவதும் பாடுவதுமாகச் சுற்றித் திரிந்தார்.

இதைக் கண்ட மற்ற ஆண் பெண்களும் குழந்தைகளும வந்து கூடிக்கொண்டு கைதட்டிச் சிரித்து வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிராமணர்கள் மிகுந்த வருத்தமுடன் விட்டுக்குள் இருந்து இருந்து பார்த்தார்கள் வேறு வழியில்லை பாபம் என்ன செய்வார்கள் இந்தச் சனியன் பிடித்த பண்டாரப் பயல் எங்கிருந்து வந்தான் நமக்கு எமனாக இருக்கின்றானே இவன் போகிறதாகக் காணோமே மற்ற பாவிப் பயல்களும அவ

னுக்கு உடைந்தையாக இருக்கிறார்களே என்ன செய்வது என்பதாக யோசித்து இலிமேல் இவளைப் பார்த்தால் எல்லாம் இறக்கவேண்டியதுதான் என்பதாகக் காதுகளை அடைத்துக் கொண்டும் முக்காடுகள் போட்டுக் கொண்டும் வெளியே வந்து ஆற்றுக்கும் குளத்துக்கும் கடைகளுக்கும் தலைகளைக் கவிழ்த்து கொண்டே போக ஆரம்பித்தார்கள் சிலர் வீட்டுக்குள் குளித்தும் குளியாமலும் சாப்பிட்டும் சாப்பிடாமலும் இருந்து வந்தார்கள். சித்தி அம்மையின் புருடனும் மாமியாரும் அவளுடைய மகள் வீட்டில் இவர்களைப் போலவே இருந்து கொண்டு எல்லாம் அந்தப் பண்டாரச் சிருக்கியால் தானே வருகிறது. இன்றைக்கு அவளை எப்படியும் தகப்பன் வீட்டுக்குத் துரத்திவிடலாமென்று இருந்தால் இதற்குள் இப்படி வந்துவிட்டது. இருக்கட்டும் நாளைக்கு அவசியம் அவளை ஒழித்தே தீரவேண்டும் என்பதாகப் பேசிக்கொண்டு மிகுந்த கோபமாக இருந்தார்கள். இப் பெண்ணானவள் இங்கே நடந்த வேடிக்கைகளை எல்லாம் சந்தோசமாகப் பார்த்திருந்து எல்லாம் கடவுள் செயல்தான் என்பதாக யோசித்துக் கொண்டு பின்பு ஸ்நானம் முதலிய கருமங்களை முடித்துச் சந்தோசமாகப் பிள்ளையார் பூசையும் செய்து அன்புடன் தோத்திரமும் செய்து முடித்து அதன் பிறகு சிக்கிரமாகச் சமையல் செய்து கொண்டு ஐயோ பாவம் அந்தப் பண்டாரப் பெரியவரும் அய்யங்காப் பெரியவரும் இன்னும் சாப்பிடாமல் இருக்கிறார்களே அவர்களுக்கும் அளிக்கவேண்டும் இதனால் வந்தது வரட்டும் கடவுள் இருக்கிறார் என்பதாக அன்னமும் இலையும் கொண்டுவந்து பண்டாரக் கிழவரைப் பார்த்துச் சுவாமி கொஞ்சம் சாப்பிடுங்கள் என்பதாக அன்புடன் கூறினாள். அவர் சிரித்துக்கொண்டு நான் இப்பொழுது தண்ணீர்கூட சாப்பிடமாட்டேன் என் பிரார்த்தனை தீரவேண்டும் நீ சாப்பிடலாமென்று கூறினார். எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. பின்பு அந்தப் பெரியவரிடம் போய் இதை அன்புடன் அளித்துச் சாபபிடச் செய்து அதன் பிறகு குழந்தைக்கும் அளித்துத் தானும் சாப்பிட்டுவிட்டுச் சந்தோசமாக இந்த வேடிக்கையைப பார்த்துக்கொண்டு இருந்தனள். இதைக்கண்ட பிராமணர்களும் பெண்களும் மிகுந்த கோபமுடன் இவளை எடுத்து விழுங்கிவிடுவது போன்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதன் பிறகு இரவு நேரம் வந்தது. சிவ சிவ அர அர வென்னும் சப்தமும்

சங்கு சேகண்டிச் சப்தமும் அதிகமாகக் கேட்க ஆரம்பித்தது காதுகளில் துணிகளை அடைத்திருந்தும் கதவுகளை பூட்டி இருந்தும் தலையில் அடித்த மாதிரியாகக் கேட்டது. எவர்களும் நித்திரை செய்ய முடியவில்லை. புறண்டு புறண்டு படுத்தும் எழுந்து உட்கார்ந்திருந்தும பார்த்தார்கள் முடியவில்லை. பாவம் என்ன செய்வார்கள் அளவிற்கு மீறிக் கோபம் வருகிறது இவரும் போவதாகவுமில்லை. அடித்துத் துரத்துவதென்றாலும் பெரும் கலவரங்கள் ஏற்படும் போலிருக்கிறது சிலசமயம் கதவண்டையில் வந்து கத்துவதாகக் கேட்கும் மிகுந்த கோபமுடன் ஓடிவந்து திரப்பார்கள் அவர் தூரத்தில் நிற்பார் இப்படியாக இரண்டு நாள் இரவும் பகலும் முடிந்தது மூன்றுவது நாள் இவர்கள் எல்லோருக்கும் காதுகளில் ஜுரலும் உபாதியும் நமிச்சலும் ஏற்பட்டது தாங்கமுடியவில்லை துணியை எடுத்தால் உபாதியில்லை மூடினால் உண்டாகிறது என்ன செய்வார்கள் எல்லோரும் துணிகளை எடுத்துவிட்டார்கள் இவரும் போகிறதாகத் தெரியவில்லை பின்பு கதவுகளையும் திரந்துவிட்டார்கள் முக்காடுகளையும் எடுத்துவிட்டுத் தலையைக் கவிழ்ந்து கொண்டே வெளியே போகவர ஆரம்பித்தார்கள்.

இவர் இதையெல்லாம் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஓகோ உங்கள் பிரார்த்தனையும் கொஞ்சம் கொஞ்சமாக நீங்குகிறதா என்பதாகத் தன்னுடைய வேலையை நடத்திக் கொண்டிருந்தார். நான்காவது நாள் காலையில் நின்று கொண்டு இந்தப் பிராமணர்களுடைய பிரார்த்தனையும் முடிந்தது என்னுடைய பிரார்த்தனையும் முடிந்தது. நான் போகிறேன் என்பதாகப் பெரும் சூரலுடன் சொல்லிச் சிரித்துக் கொண்டே போய்விட்டார். இதைக்கண்ட பிராமணர்களெல்லாம் சனியன் பிடித்த பண்டாரப்பயல் ஒழிந்தான் ஒழிந்தான் என்பதாக மிகுந்த சந்தோசமுடன் வெளியே வந்து கூடிப்பார்த்துப் பேசினார்கள் சிலர் அவன் மூன்று நாளாகச் சாப்பிடவில்லையே அதற்காகப் போய்ச் சாப்பிட்டுவிட்டு திரும்பி வந்தாலும் வருவானே என்பதாகப் பயந்து மாலை ஐந்து மணி நேரம் வரையில் பார்த்தார்கள் வரவில்லை பினபு எல்லோரும ஒன்று கூடி இந்தப் பண்டாரச்சிக்கு எவ்வளவு தைரியம் பார்த்தீர்களா நமக்குத் திண்டாட்டம் அவளுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. அந்த பண்டாரப் பயலுக்குச் சாப்பாடு கொடுக்க ஆரம்பித்

தாள் நாம் எவ்வளவு அடித்தும் திட்டியும்கூட சட்டை பண்ணவில்லை. எல்லாவற்றிற்கும் இவள்தான் காரணம் நாளைக்கு ஒரு கூலி ஆள் பார்த்தாவது அவனுடன் இவளை தகப்பன் வீட்டுக்கு அடித்துத் துரத்தவேண்டும் என்பதாக நிச்சயித்துவிட்டு அவரவர்கள் வீட்டுக்குப் போனார்கள் இப் பெண்ணின் மாமியாரும் புருடனும் இவள் முகத்தில் விழிக்கக் கூடாது என்பதாக முன்போலவே மகள் விட்டிற்போய் இருந்தார்கள் மணி ஏழு ஆயிற்று தண்டோராச் சப்தம் கேட்டது அதாவது கோவில் யானைகள் இரண்டும் மதங் கொண்டுபோயிருக்கிறது ஆகவே பட்டினத்திலுள்ள எல் லோரும் சிக்கிரமாகச் சாப்பிட்டதும் படுத்துக்கொள்ள வேண்டும் வெளியில் எவரும் படுப்பதோ திரிவதோ கூடாது கதவுகளைப் பூட்டவேண்டும் ஜாக்கிரதையாக இருங்கள் என்பதாகப் பறை அறிவித்தான் பட்டினத்திலுள்ள சனங்களெல்லாம் சிக்கிரமாகப் படுத்துக் கொண்டு தூங்கி யும் தூங்காமல் இருந்தார்கள். இந்தப் பிராமணச் சனங் களோ இதைக் கேட்டவுடன் திகிலடைந்து, ஐயோ அந்தப் பண்டாரப் பயல் செய்த வேலை இந்த மூன்று நாளும் நித்திரை செய்ய முடியவில்லையே இன்றைக்கும் இப்படி இருக்கின்றதே இந்தப் பண்டாரச்சி ஒரு வேலையா செய்திருக் கிறாள் அந்த யானைகளுக்கும் போகும்பொழுதும் வரும் பொழுதும் எதேதோ கொடுத்துப் பழக்கம் செய்திருக்கின் றாளே முதலில் இந்தத் தெருவிற்குத் தானே அவசியம் ஓடிவரும் என்ன செய்வது என்பதாக துக்கமுடன் இவர் களும் சிக்கிரமாகச் சாப்பிட்டு வீட்டுக் கதவுகளைப் பூட்டிக் கொண்டு நித்திரை செய்தும செய்யாமல் மிகுந்த பயத் துடன் இருந்தார்கள் அந்தப் பெரியவர் மட்டும வெளித் திருணையில் வழக்கம்போல் படுத்துக்கொண்டு நாம் இறந் தால் பரவாயில்லை என்பதாக இருந்தார் அவருடைய மகன் முதலியவர்களும் இவரைக் கவனிக்கவில்லை.

சித்தி அம்மையும் இவைகளை அறிந்து நாளைக்கு நம்மை அவசியம தகப்பனருடைய ஊருக்கு அனுப்பிவிடு வார்கள் நமக்கும் மிகுந்த சௌகரியமும் நன்மையுமாக இருக் கிறது இன்றிரவுதானே இங்கே இருக்கப்போகிறோம் ஆகவே நன்றாகவும நிம்மதியாகவும் விளையாடைப் பூசை செய்யலாம் வீட்டிலும் வேறு யாருமில்லை என்பதாக யோசித்துப் பூசைக்குவேண்டிய தேங்காய் பழம் முதலிய

சாமான்களைத் தெரியாமல் வாங்கி வந்து. சூழ்ந்தைக்கு ஆகாரம அளித்துப் படுக்க வைத்து விட்டுத் தான் குளித்துத் திருநீறு நனருக அணிந்து கொண்டு பிரசாதம் முதலியதும் சமையற் செய்து பினபு பிள்ளையாருக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனை முதலியதை நிதானமாகச் செய்து தூபதீப நெய்வேத்தியங்களும் இஷ்டம்போல் செய்து கொண்டிருந்தாள் குழந்தையும் விழித்து எழுந்தது அதையும் பக்கதில் உட்காரும்படி செய்து எல்லாம செய்து முடித்துப் பின்பு வினயகரைப் பலவித தோத்திரம் செய்து ஓம் வினயகப் பெருமானே. ஓம் விக்னேஸ்வரப் பெருமானே ஓம் கஜமுகப் பெருமானே நீ உன் குழந்தையாகிய என்னை இப்படிச் சோதிப்பது தருமந்தானு இது நியாயமாகுமா இது நீதியாகுமா சிறிதும் கருணையில்லையா இந்தக் கொடிய சண்டாளர்களிடத்தில் கொண்டுவந்து விட்டு வேடிக்கை பார்க்கின்றாயே இது முறைபாகுமா இங்கே வந்தது முதல் உன்னை ஒரு நாளாவது சந்தோசமாகவும் நின்மதியாகவும் பூசிக்கவும் சாதுக்களுக்கும ஏழைகளுக்கும் அன்புடன் பயமில்லாமல் அன்னம் அளிக்கவும் முடியவில்லையே என்னுடைய வாழ்நாள் இப்படிக் கழியும்படி ஏற்பட்டதே இது என் தலைவிதியா என்பதாக இன்னும் பலவிதம புலம்பி அழுது வணங்கினாள் அப்பொழுது விநாயகப் பெருமான் குழந்தாய் அஞ்சேல் என்பதாக இவள் முன் வந்து நின்று காட்சியளித்தனர் இதைக்கண்டவுடன் இப்பெண்ணானவள் அளவிறந்த சந்தோசமுடனும் மிகுந்த அன்பு பக்தியுடனும் பிரதக்ஷிணமாகப் பலதடவை சுற்றிவந்து சாஷ்ட்டாங்கமாக வணங்கிக்கிடந்து எழுந்து நின்று ஏ என்தந்தையே ஏ பிரபுவே இன்றுதான் கருணை வந்ததா என்பதாக ஓவென்று அலறித் தேம்பித்தேம்பி அழுதுகொண்டு நின்றனள்.

இதைக் கண்ட குழந்தையானது இதற்குமுன் வரக் கூடிய யானைதான் வந்தது என்பதாக நினைத்து அம்மா யானை வந்திட்டது, அமமா யானை வந்திட்டது, யானை அமமா, யானை அம்மா என்பதாகக் கத்திக்கொண்டு ஒரு பழத்தை எடுத்து வழக்கமபோல் துதிக்கையில் கொடுத்தது விநாயகர் சிரித்துக் கொண்டு அதைத் துதிக்கையில் வாங்கினார். இப்பெண் இதைக் கவனிக்காமல் பெரும் சப்தமுடன கத்துவதற்காகத் தலையில் அடித்துச் சுமமா இரு

என்பதாக தள்ளினாள், குழந்தையானது கீழே விழுந்து பெரும் குரலுடன் அழுது கதறியது, இவளும தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நின்றாள். குழந்தாய் அஞ்சாதே இன்னும் ஒரு வாரத்தில் உனக்கு அருள் புரிவோம, அது வரையில் யாருடனும் பேசவேண்டாம் என்பதாகக் கூறி விநாயகப் பெருமான் மறைந்தருளினார். இப்பெண்ணானவள் மேலும் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்து பின்பு தன்னை மறந்த நிட்டைநிலையில் அப்படியே இருந்துவிட்டாள் குழந்தையும் அழுதுகொண்டிருந்து அப்படியே படுத்துத் தூங்கிவிட்டது. இப்படி இருக்க இங்கே குழந்தை அழுததையும், இப்பெண் அழுததையும் பக்கத்துவிட்டுப் பெண்கள் கேட்டுப் பயந்து வெளியே ஓடிவந்து ஐயோ இந்தப் பண்டாரச்சி வீட்டுக் கதவை யாரோ மிதித்து உடைத்துக் கொண்டு உள்ளே போய் அவளையும். அவள் பிள்ளையையும் மிதித்துக் கொல்லுகிறதே, கொல்லுகிறதே என்று அலறிக் கொண்டு ஓடினார்கள். இதைக் கேட்டவுடன் அவ்வீதியிலுள்ள பிராமணச் சனங்களெல்லாம் கத்திக் கதறிக் கொண்டு உடுத்தி இருந்த உடைகளுடன் குழந்தை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு விழுந்தடித்து ஓடினார்கள், சில பெண்களுக்கும், ஆண்களுக்கும் உடைகள் சிக்கி விழுந்து கால் கை ஒடிந்தும் அதையும் பார்க்காது ஓடினார்கள், ஒரு பெண்ணுக்குப் பற்கள் எல்லாம் உடைந்து உதிரம் வடிந்த துடன் ஓடினாள், அதில் ஒருத்தி வந்து அது என்ன என்ன என்று மறித்துக் கேட்டாள், இவள் லொல-லொல வென்று சொல்லிக்கொண்டே ஓடினாள். இப்படியாக எல்லோரும் பதஸ்டமுடன் ஒன்றுமே எடுக்காமல் ஓடிப்போனார்கள். இப்பெண் இதையெல்லாம் அறியாமல் தன்னை மறந்திருந்தனள், எதிர் வீட்டிலுள்ள பெரியவர் மட்டிலும் திருஷ்டியில் உட்கார்ந்துகொண்டிருந்தனர், இந்த விஷயம் அந்தப் பட்டினமுழுதும் பரவிவிட்டது, எல்லாச் சனங்களும் எழுந்து கத்திக் கதறிக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள், பலர் ஓடி வந்து பிராமண வீதியோடாவது யானைகள் நிற்கட்டுமென்பதாக அந்த வீதியின் இரு முகப்பிலும் வைக்கோல் கட்டுகளையும், விறகுக் கட்டைகளையும போட்டு நெருப்பை வைத்து விட்டார்கள், அது எரிந்து இருபக்கத்திலுமுள்ள வீடுகளில் பற்றி நெடுகலும் எரிய ஆரம்பித்தது. இதை அமைத்துவதற்கு எவர்களும் வரவில்லை, அந்தப் பட்டினமுழுதும்

அவரவர்கள் வீட்டின் முன்னதாகக் கட்டைகளையும், வைக்கோல்களையும் போட்டு எரித்துக்கொண்டும். தகரங்களைத் தட்டிக்கொண்டும் மிகுந்த பயத்துடன் இருந்தார்கள், சிலர் ஓடிவிட்டார்கள். சிலர் ஓடிப்போய் யானைப் பாகனைக் கூவி அழைத்தும் அவன் பயந்துகொண்டு பேசவில்லை பின்பு கதவைத் தட்டி வம்புசெய்து அவனை எழுப்பி இதைத் தெரிவித்தவுடன் தன் வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளி ஒருவனை அனுப்பி யானைக் கொட்டகையில் மேலே இருந்த அங்குசத்தை எடுத்துக்கொண்டு சிக்கிரமாக ஓடிவரும்படி சொன்னான் அவன் வேகமாக ஓடிப்போய் அங்கே இருட்டாக இருந்தபடியாலும் பதஸ்டத்திலும் யானைகள் இருப்பதைக்கவனியாமல் அங்குசத்தை எட்டி எடுத்தான், உடனே அவன் கையை யானை பிடித்துக்கொண்டது இவன் பயந்து ஐயோ, என்னை யானை பிடித்துக்கொல்லுதே, கொல்லுதே என்பதாக அலறினான் இதைக் கேட்டவுடன் தீவட்டிப் பந்தங்களைப் பிடித்துக்கொண்டும் தகரங்களை அடித்துக் கொண்டும் அங்கே ஓடினார்கள். இதைக் கண்டவுடன் யானைகள் இரண்டும் பயந்து பெரும் சூரலுடன் கதறிக்கொண்டு இவனை விட்டுவிட்டுச் சங்கிலிகளை முறித்துக்கொண்டு வீதியில் வேகமாக ஓட்டம் பிடித்தன.

இதைக்கண்ட சனங்களெல்லாம் பயந்து அலறிவிழுந்தடித்து ஓடினார்கள். யானைகள் பிராமணவீதிப் பக்கமாக ஓடின. அங்கே நெருப்பு எரிவதைக் கண்டு பயந்து கதறிக்கொண்டு அடுத்த வீதிக்கு ஓடின, அங்கும் எல்லா வீட்டின் முன்பு நெருப்பு எரிவதையும் தகரச் சப்தத்தையும் கேட்டுப் பயந்து கதறிக்கொண்டு அடுத்த வீதிக்கு ஓடின அங்கும் இப்படியே இருந்தன. இவ்விதமாக அங்கு மிங்குமாகப் பயந்து கத்திக் கதறிக்கொண்டு ஓடித்திரிந்தன. சனங்களும் அங்குமிங்குமாகப் பயந்து அலறிக்கொண்டு ஓடிஅலைந்தார்கள் சில வாலிபர்கள் வேடிக்கைக்காக இதோ யானை வந்து விட்டது என்பதாகக் கத்துவார்கள் சனங்கள் அங்குமிங்குமாக விழுந்தடித்து ஓடுவார்கள். திருடர்கள்பாடு கல்லவேட்டையாக இருந்தது, பாவம் பிராமணச் சனங்கள் பட்டபாடும் அவர்கள நிலமையும் மிகவும் பரிதாபமாக இருந்தது, இப்பட்டின முழுதும் பெரும் கலவரமாகவும் அல்லோலகல்லோலமாகவும் கூக்குரலாகவும் இருந்தன, அந்த இரவு முழுதும் யானைகளும் அங்குமிங்கும் ஓடித்தவித்து மதமும் பல

மும் குறைந்து ஆற்றுப் பக்கமாக ஓடி மயங்கி அப்படியே விழுந்து கிடந்தன. சனங்களும் அங்குமிங்குமாக ஓடித் தவித்து மயங்கி அங்கங்கே வீடுகளிலும் சத்திரம் சாவடிகளிலும் விழுந்து கிடந்தார்கள், காலை ஆறுமணிக்கு மேலானது யானைப் பாகன் போய்பார்த்துப் பயந்து மெதுவாகப் போய் யானைகளைப் பிடித்து எழுப்பிக் குளிப்பாட்டிக் கொண்டுவந்து கட்டினான் பிராமண வீடுகள் முழுதும் எரிந்து சாம்பலாயின அந்தப் பெரியவர் இருந்த திருணையும் சித்தி அம்மையார் இருந்த அறையும் எரியாமல் அப்படியே இருந்தது, சனங்களெல்லாம் வந்து பார்த்து மிகுந்த ஆச்சரிய முற்றார்கள், பிராமணச் சனங்களெல்லாம் வந்து பார்த்து வயிரெரிந்து ஓவென்று அழுது கத்தினர்கள், ஐயோ இந்தப் பண்டாரச் சிருக்கி மந்திரகாரியோ அல்லது மாயக்காரியோ தெரிய வில்லையே ஒரு பண்டாரக் கிழட்டுப் பயல் வந்து மூன்று நாளும் தொந்தரவு கொடுத்து உண்ணுமலும் உறங்காமலும் செய்தான், இன்றிரவும் படாத பாடுபட்டும் வீடுகளும் பொருள்களும ஒன்றும தவராமல் எரிந்து சாம்பலாயிற்றே என்ன செய்வது என்பதாகப் புலம்பி அழுதார்கள் மற்ற வீதிகளிலும் இன்னும் சில வீடுகள் அங்கங்கே எரிந்து சாம்பலாயின திருடுகளும் போயிற்று விழுந்தடித்து ஓடியதால் சில பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் காயங்களும் கால் கைகள் ஒடிந்தும் துன்புற்றார்கள். அதன்பிறகு அரண்மனை அதிகாரிகள் வந்து எல்லாம் சுற்றிப் பார்த்து இவ்விஷயத்தை அரசனுக்குத் தெரிவிக்கும்படியாகக் குதிரைச் சேவகர்களை அனுப்பினர்கள் அவர்கள் அதிவேகமுடன் சென்று அரசனுக்கு இவ்விஷயங்களை விபரமாகத் தெரிவித்தார்கள். இவைகளைக் கேட்ட அரசனும் மற்ற அரசர்களும் மிகுந்த ஆச்சரியமுற்று நாங்கள் வருகிறவரையில் எல்லாம் இப் பொழுது இருக்கிறபடியே இருக்கவேண்டும் ஒன்றும் செய்யக்கூடாது என்பதாகச் சேவகரைத் திருப்பி அனுப்பினன் அவர்கள் வந்து அரசன் சொன்னபடி சொல்லி அங்கங்கே பாராப் பந்தோ பஸ்துடனிருந்தார்கள். சித்தி அம்மையானவள் காலையில் ஆறு மணிக்கு விழித்து எழுந்து வெளியேவரப் பார்த்தபொழுது தங்கள் வீடுமுழுதும் எரிந்து சாம்பலாகக்கிடந்தது உடனே பயந்து திகிலடைந்து நின்று மேலே பார்த்தாள் அந்த அறைமட்டிலும் எரியாமல் இருந்தது பின்பு வீதியில் எட்டிப் பார்த்தாள் அப்பெரியவர் வீதியின் நடுவில் நின்றுசொண்டிருந்தார் சந்தோசித்துக் கை

யைத் தட்டிக் கூப்பிட்டாள் அவர் பார்த்துமிருந்த சந்தோச முடன் அப்படியே இருங்கள் என்பதாகச் சொன்னார் இவள் அறைக்குள் போய் இரவில் பூசைக்காக வைத்திருந்த தண்ணீர் மீதமிருந்ததைக் கொண்டு பல் முகம் சுத்தம் செய்து பின்பு பிள்ளையார் பூசையும் செய்து முடித்துவிட்டு இரவில் இருந்த பிரசாதங்களைக் குழந்தைக்கும் அளித்துத் தானும் உண்டு அந்தப் பெரியவரையும் கையைத்தட்டி அழைத்து இதை உருட்டி எரிந்தாள் அவரும் பிடித்துக் கொண்டு சிரமப்பட்டு ஆற்றுக்குப் போய் ஸ்நானம் முதலிய கருமங்களை முடித்து இதையும் சாப்பிட்டுவிட்டு மீண்டும் இங்கே வந்திருந்தனர் பின்பு அடமழை ஆரம்பித்து இரவும் பகலும் விடாமற் பெய்தது ஐயோ பாவம் அந்தப் பிராமணச் சனங்களெல்லாம் பிள்ளைகளும் குட்டிகளுமாக உணவு உடை இல்லாமலும் தங்க இடமில்லாமலும் சத்திரம் சாவடிகளிலும திருணைகளிலும், காற்று மழையாலும், குளிரினாலும் வருந்தி வாடி அங்குமிங்குமாகப் பரதவித்தார்கள் சித்தி அம்மையின் புருடனும் மாமியார் முதலாகப் பந்துக்களும் இங்கே இருப்பதற்காக ஓடிவந்தார்கள் இதைக்கண்ட சேவகர்கள் மறுத்து அரசன் வரும்வரையில் எவர்களும் அங்கே போகக்கூடாது என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். இவர்களும் அந்தப் பிராமணர்களைப் போன்று உணவு உடை இடமில்லாமல் படாத பாடுபட்டு வருந்தி வாடிப் பரதவித்தார்கள். ஏழுநாள் வரையிலும் மழையும் விடவில்லை. அரசனும் வரவில்லை, பாவம் இவர்கள் நிலமை அரசனுக்கு என்ன தெரியும்.

அதன் பிறகு அரசனும் மற்ற இன்னும் சில அரசர்களும் மந்திரிகளும் வந்து சேர்ந்து பட்டினம் முழுதும் சுற்றிப் பார்த்தார்கள். அரசனைப் பிராமணச் சனங்கள் கண்டவுடன் ஓவென்று அலறி அழுது வணங்கினர்கள். அரசன் அவர்களுக்குச் சமாதானம கூறிக்கொண்டு பிராமண வீதியை வந்து பார்த்தார்கள். இருநூறு வீடுகளும் எரிந்து சாம்பலாகிக் கிடந்தன. அந்தப் பெரியவர் இருந்த திருணையும் சித்தி அம்மையார் இருந்த அறையுமட்டும் எரியாமல் இருந்தது. இதைக் கண்டு அரசர்கள் முதல் எல்லோரும் மிகுந்த ஆச்சரியமுற்று இவர்களையும் பார்த்து விட்டு அரண்மனைக்குப் போய் இவர்களை அழைத்து வரும் படியாகச் சேவகரை அனுப்பினன். இப் பெண்ணானவள்

கைச்சாடையாக இன்றைக்கு எதுவும் பேசமாட்டேன். நாளைத்தினம் வந்து எல்லாம் சொல்கிறேன் என்றனள். அந்தப் பெரியவரும் மற்ற பிராமணர்களும் அங்கே போனார்கள். அரசன் இப்பெண் சொன்னதைக் கேட்டுச் சரி நீங்களும் போய் நாளைக்கு வாருங்கள் என்பதாகக் கூறி அனுப்பிவிட்டுச் சேவகர்களை நடந்ததை விசாரித்துக் கொண்டு பின்பு பிராமணர்களுக்கு உணவுக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்தான். மறுதினம் எல்லோரையும் வரும்படி செய்து முதன்மையாகப் பிராமணர்களை விசாரித்தான். பிராமணர்கள் சொன்னதாவது அரசே எங்களுடைய வீதியில் வசிக்கும் கோவிந்தசாமி அய்யங்கார் என்பவர் ஆதவனூர் என்னும் கிராமத்திலிருந்து ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு வந்தார். அந்தப் பெண் இங்கே வந்தவுடன் எங்கள் சாதிக்கும் மதத்திற்கும் நேர் விரோதமான முறையில் சாம்பலைப் பூசுவதும் பிள்ளையாரைப் பூசிப்பதும் பண்டாரங்களுக்கும் ஏழைச் சனங்களுக்கும் அரிசி அன்ன முதலியதுகளை அளிப்பதும் யானைகளுக்குப் பழ முதலியதுகளைக் கொடுப்பதுமாகத் திருட்டுத்தனமாய்ச் சில நாள் செய்து வந்திருக்கின்றாள். ஒருநாள் அவள் மாமியார் அலமேலு என்பவள இதைக் கண்டு மிகுந்த கோபமுடன் அவளைத் திட்டி அவைகளைத் தூக்கி வந்து போட்டு உடைத்து எங்களுக்கும இவ்விஷயங்களைச் சொல்லிக காண்பித்தாள் நாங்களும் கோபித்து நீ எங்கள் சாதி மதத்திற்கு விரோதமானதைச் செய்யக்கூடாது என்பதாகத் திட்டி இனி மேல் இதெல்லாம் கூடாது என்பதாகச் சொல்லி இருந்தும் கேட்காதபடி மறுபடியும தெரியாதபடி செய்திருக்கின்றாள். இங்கே பண்டாரங்களும் பிச்சைக்காரச் சனங்களும் முன்பு எவர்களும் வருவதில்லை. இவள் வந்ததிலிருந்து எப்பொழுதும் பெரும் கூட்டமாகவும் தொந்தரவாகவும் ஏற்பட்டது. அவள் புருடனும் மாமியாரும் பல தடவை திட்டியும் அடித்தும்கூடக் கேட்கவில்லை. பின்பு ஒருநாள் பூசை செய்யும பொழுது மாமியார் கண்டுபிடித்து அந்தப பெட்டியுடன் பிள்ளையாரையும் தூக்கி வந்து வீதியில் போட்டு உடைத்து அவளையும் தலைமயிரைப் பிடித்து அடித்தாள். நாங்களும இதை அறிந்து எல்லோரும் வந்து கூடிக் கோபம் தாங்காமல் அடித்துத் திட்டி இனிமேல் இவளை இங்கே வைக்கக்கூடாது இவளுடைய தகப்பன் வீட்டுக்கு நாளையத் தினம அனுப்பிவிட வேண்டுமென்பதாக முடிவு செய்திரு-

தோம். மறுநாள் காலை நான்கு மணிக்கெல்லாம் ஒரு பண்டாரக் கிழவன் சங்கு சேகண்டியை முழக்கிக்கொண்டு வாயினல் ஏதேதோ பெரும் குரலுடன் ஓயாதபடி கத்திக் கொண்டும் ஆடிக்கொண்டும் எங்கள் வீதியில் அங்குமிங்கு மாகச் சுற்றினன் காலை ஒன்பது பத்து மணி வரையில் இவன் போவான் என்று பார்த்திருந்தும் போகவில்லை. பின்பு சிலர் போய்ப் போகும்படி சொல்லியும் கேட்காமல் மறுபடியும் வீபபுக்காக அதிகமாகவே கத்திக்கொண்டு ஆடுவதும் ஓடுவதுமாகத் திரிந்தான். தங்களிடம் தெரிவிப் பதற்காக அரண்மனைக்கு வந்தோம். நீங்கள் இல்லாதபடி யால் சேவகரை அழைத்துப்போய் அவர்கள் சொல்லியும் கேட்கவில்லை. சில பொது ஜனங்களும் அவனுக்கு அனு கூலமாகப் பேசினர்கள். பின்பு மிகவும் உற்சாகமாக மூன்று நாள் இரவும் பகலும் எங்களை ஆற்றுக்குக் குளத்துக்குப் போகாமலும் குளிக்காமலும் பூசை செய்யாமலும சாப்பிடா மலும் பெரும் தொந்தரவு செய்து நான்காவது நாள் காலை யில் ஒழிந்துபோனன். இதெல்லாம் அந்தப் பெண்ணுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. அக் கிழவனுக்கு ஆகார முதலிய உதவியும் செய்ய முயன்றாள்.

பின்பு மாலையில் எல்லோரும் கூடிப் பேசி இவளை நாளைக்கு அனுப்புவதாக நிச்சயித்திருந்தோம். அதன் பிறகு கோவில் யானைகள் மதம்கொண்டு போயிருப்பதாக வும் எல்லோரும் ஜாக்கிரதையாக இருக்கும்படியாகத் தண் டோராப் போட்டார்கள். இதைக்கேட்டு மிகுந்த வருத்த முடனும் பயமுடனும் படுத்திருந்தோம். நடு இரவில் ஐயோ பண்டாரச்சி வீட்டுக் கதவை யானைகள் உடைத்து உள்ளே போய் அவளையும் அவள் பிள்ளையையும் அடித்துக் கொல் லுதே கொல்லுதே என்பதாகச் சப்தம் கேட்டது. உடனே எல்லோரும் பயந்து அணிந்திருந்த ஆடைகளுடன் பிள்ளை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு விழுந்தடித்து ஓடிவிட்டோம். சிலருக்கு விழுந்து கால் கை ஒடிந்தும் பல் உடைந்தும் போயிற்று. இவ்விஷயம் பட்டினமுழுதும் பரவிவிட்டது. எல்லோரும் எழுந்து அங்குமிங்கும ஓடினர்கள். சிலர் வந்து எங்கள் வீதியோடு யானைகள் நிற்கட்டுமென்பதற்காக வைக் கோல்களையும் கட்டைகளையும் போட்டு எரிய விட்டார்கள். அது அதிகமாக எரிந்து இருமுகப்பிலுள்ள வீடுகளில் பற்றி இருநூறு வீடுகள் முழுதும் எரிந்து எங்கள் சாமான்

களும் பணம் காசு முதலாக எல்லாம் சாம்பலாகி விட்டது. இதற்குள் சிலர் ஓடிப்போய் யானைப்பாகனை எழுப்பி அழைத்தார்கள். அவன் வீட்டு விருந்தாளியை கொட்டகையிலுள்ள அங்குசத்தை எடுத்துவர அனுப்பினன் அவன் அதிவேகமாகப் போய் அதை எடுத்தவுடன் யானைகள் பிடித்துக்கொண்டதாகக் கத்தினன்.

இதைக் கேட்டுச் சிலர் தீவட்டிப் பந்தங்களைக் கொண்டு ஓடினர்கள். இதைக்கண்டவுடன் யானைகள் பயந்து கதறிச் சங்கலிகளை முறித்துக்கொண்டு வீதியில் ஓட ஆரம்பித்தன இதைக் கண்ட நாங்களும் மற்ற சனங்களும் பயந்து முன்னிலும் அதிகமாக அங்குமிங்கும் ஓடினோம் வீடுகள் தோறும் வரசலில் நெருப்புகளை மூட்டியும் தகரங்களை வைத்துத் தட்டிக்கொண்டும் சிலர் இருந்தார்கள் இதைக்கண்ட யானைகள் பயந்து கத்திக் கதறிக் கொண்டு அடுத்த வீதியில் ஓடுவதும் அங்கும இப்படி இருக்க மற்ற வீதியில் ஓடுவதுமாக இருந்தது நாங்களும் மற்ற சனங்களும் இப்படியே அங்குமிங்குமாக விழுந்தடித்து ஓடித்திரிந்தோம பினபு காலை ஆறுமணிக்கு யானைகளும் சக்தியற்று மதமும் போய் ஆற்று ஓரமாக ஓடி விழுந்துவிட்டது நாங்களும் சக்தியற்று அங்கங்கே விழுந்து கிடந்தோம் பின்பு இவ் விஷயங்களைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி ஆள் அனுப்பினோம் தாங்கள் கேட்டு நீங்கள் வரும் வரையில் அப்படியே இருக்கும்படியாகச் சொல்லி யனுப்பியதாகச் சொன்னார்கள் உடனே அடமழையும் ஆரம்பித்து ஏழுநாள்வரை இரவும் பகலுமாக விடாமல் பெய்தது நாங்களெல்லோரும் தங்க இடமில்லாமலும் உணவு உடை இல்லாமலும் மழையினாலும் குளிரினாலும் படாதபாடுபட்டு வருந்தினோம் பின்பு தாங்களும வந்து சேர்ந்தீர்கள் சென்ற பத்து நாட்களும சகிக்க முடியாத கஷ்டங்களை அடைந்தும் எங்கள் வீடுகளும் மற்ற எல்லாப் பொருளும் ஒன்றும் தவராமல் எரிந்து சாம்பலாகி விட்டது நாங்கள் என்னசெய்வோம் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும் இவ்வளவுக்கும் காரணமாயிருந்த சண்டாளப் பாதகியாகிய அந்தப் பெண்ணிருந்த அறையும் அவளுக்கு ரகசிய உதவியாயிருந்த சண்டாளக் கிழவன் ஆதிசேஷ அய்யங்காரிருந்த திருநீயுமட்டிலும் எரியாத காரணம் தெரியவில்லை அவள் மந்திரகாரியோ அல்லது மாயக்காரியோ தெரியவில்லை அந்தக் கொடிய

நீலியைக் கொலை செய்தாலும் தகும் தாங்கள் விசாரித்து தக்கபடி தண்டனை செய்யவேண்டும் என்பதாகச் சொல்லி முடித்தார்கள் இவைகளை எல்லாம் ஆதியோடந்தமாகவும் மிகவும் வருத்தமாகவும் ஆச்சரியமாகவும் கேட்டுக்கொண்டிருந்த அரசனும் மற்ற அரசர்களும் அந்தப் பெண்ணினுடைய புருடனையும் மாமியாரையும் கூப்பிட்டு விசாரித்தார்கள் அவர்களும் தாங்கள் அந்தப பெண்ணினுடைய பழக்க வழக்கங்களை அறியாதபடி திருமணம் செய்து வந்ததாகவும் வந்தது முதல் அவள் எங்களுக்குத் தெரியாதபடி சாதி மதத்திற்கு விரோதமாகவும் துரோகமாகவும் பிள்ளையார் பூசை செய்வதும் பண்டாரங்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் எங்கள் அரிசி அன்ன முதலிய பொருள்களை யெல்லாம் இஷ்டம்போல் கொடுப்பதும் சாம்பலைப் பூசிக்கொள்வதுமாக இருந்து பின்பு ஒரு நாள் நான் கண்டு கோபித்துத் திட்டியும் கேட்காமல் மீண்டும் செய்தாள் மறுபடியும் கண்டு அப்பெட்டியை உடைத்துத் திட்டி அடித்து எல்லோருமாகக்கூடி இவள் இனிமேல் இங்கே இருக்கக் கூடாது என்பதாகவே இவளுடைய தகப்பன் வீட்டுக்கு நாளைக்கு அவசியம் அனுப்பிவிடுவதாகப்பேசி இவள் போகும்வரை இவள் முகத்தில் விழித்துக்கொண்டு இங்கே இருக்கக்கூடாது என்பதாக வேறிடத்தில் போயிருந்தோம் என்பதாகவும் பின்பு பண்டாரக் கிழவர் வந்ததுமுதல் யானைகள் வந்ததும் வீடுகள் நெருப்புப்பற்றி எரிந்ததும் அடமழை பிடித்துக்கொண்டதும் தாங்கள் பட்ட கஷ்டங்கள் முதலாக எல்லாம் சொல்லிமுடித்து எங்கள் குலத்திற்கும் மதத்திற்கும் துரோகமாகவும் எங்கள் வீடுகளுக்கும சொத்துகளுக்கும் துரோகியாகவும் இருந்து நாடுகளும இவ்விதமாகப் பத்து நாட்கள்வரையில் சகிக்கமுடியாத கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பதற்கும் காரணமாகிய இந்தச் சண்டாளியைச் சித்திரவதை செய்தாலும் தக்க தாகும் தாங்கள்தான் இதை அறிந்து தக்க தண்டனை செய்யவேண்டும் என்பதாகச் சொல்லி முடித்தார்கள். அதன் பிறகு பக்கத்து வீட்டுக்காரப் பெண்களை விசாரித்தார்கள் அவர்களும் ஆதியோடந்தமாக நடந்த விஷயங்களையும் இப் பெண்ணினபேரில் கூட்டிக் குறைத்தும் சொல்லி எல்லாவற்றிற்கும் இந்தப் பாதகிதான் காரணம் என்பதாகக் கூறி முடித்தார்கள். பின்பு அந்த எதிர் வீட்டிலுள்ள பெரியவரை விசாரித்தார்கள் அவரும் நடந்த விஷயங்களை

ஆரம்ப முதல் விபரமாகக் கூறிப் பின்பு ஒருநாள் எல்லோரும கூடி இப்பெண்ணைத் திட்டி அடித்துக கொண்டிருந்த பொழுது நான் மனம் சகிக்காதபடி வந்து ஐயோ பாவம் அந்தப் பெண்ணை ஏன் இப்படி எல்லோரும் திட்டி அடிக்கின்றீர்கள். அவள் திருடினளா விபசாரம் செய்தாளா அல்லது கொலை செய்தாளா எல்லா உயிரும் எல்லாக் கடவுளும் ஒன்றுதானே எவருக்குப் பிச்சை போட்டாலென்ன எந்தத் தெயவத்தைப் பூசித்தாலென்ன என்பதாகக கூறியதும எல்லோரும் கூடித் தன்னையும் கண்டபடி திட்டி அடிக்க வந்தது முதல் எல்லாம விபரமாகக் கூறி, ஆனல் யானைகளை மட்டும் நான பார்க்கவே இல்லை. ஏதோ இவைகளை எல்லாம உற்றுக் கவனித்தால் தெய்வ சங்கல்பமாகத்தான் எல்லாம் நடந்திருக்கின்றது. எவர்கள் பேரிலும குற்றமாக எனக்குத் தோன்றவில்லை. இன்னும தாங்கள் விசாரித்து நியாயப்படி செய்யுங்கள் என்பதாகக் கூறி முடித்தார். அதன்பிறகு அந்தப் பெண்ணை அழைத்து நீ நடந்த விஷயங்களை ஆரம்ப முதல் விபரமாகவும் உண்மையாகவும் சொல்லுவாய் என்று கேட்டார்கள். அப்பொழுது அந்தப் பெண் நான் ஆதவனூரில் வசிக்கும் சினிவாச அய்யங்காருடைய மகள. எங்கள் வீட்டில் எல்லோரும் காலையில் விஷ்ணுவையும் பிள்ளையாரையும் பூசித்துச் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்ன முதலியது அளித்து அதன்பிறகுதான் சாபபிடுகிற பழக்கம, நானும அவ்விதமே செய்து வந்தேன். பிறகு என்னை இந்த நகரில் திருமணம செய்து கொடுத்தார்கள். இவர்களுடைய பழக்க வழககம் எனக்குத் தெரியாது. நான் இங்கே வரும்பொழுது நான் பூசித்த பிள்ளையார் விக்கிரகத்தையும் பூசைச் சாமான்களையும என்னுடைய பெட்டிக்குள் வைத்துக்கொண்டு வந்தேன். இவர்களுடைய மதத் துவேஷங்களைப் பார்த்து அதை இவர்களுக்குத் தெரியாத முறையில் வைத்து மறைமுகமாகப பூசித்து வந்தேன். சந்நியாசிகளுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் இவர்களுக்குத் தெரியாதபடி அன்ன முதலியதை அளிப்பதும் யானைகளுக்கும் பழம முதலியது கொடுப்பதுமுண்டு. இப்படிச் செய்துவரும்பொழுது ஒருநாள் என் மாமியார் இதைப் பார்த்துக் கோபமுடன அந்தப பிள்ளையாரையும் உடைத்து என்னையும் கண்டபடி திட்டி என் புருடருக்கும் சொல்லி அடிக்கும்படி செய்து இனிமேல் இவ்விதம் செய்யக்கூடாது என்பதாகக் கூறினர்கள். இதை

அறிந்த மற்ற பிராமணர்களும் திட்டிக் கண்டித்தார்கள் அதன்பிறகும் என் பழக்கம்போல் வேறொரு பிள்ளையார் வாங்கி வந்து மிகவும் தெரியாத முறையில் பூசை செய்து கொண்டும் பிச்சை அளித்துக்கொண்டும் இருந்துவந்தேன். பக்கத்து வீட்டிலுள்ள பெண்ணினிடத்தில் என் புருஷர் சினேகமாக இருந்தனர். அப்பெண் முதலியவர்கள் அவரிடத்திலும் என் மாமியிடத்திலும் நான் பண்டாரங்களுக்குக் கண்டபடி தான தருமம் செய்வதாகச் சொல்லிக்கொடுத்து அடிக்கடி சண்டை போடவும் அடிக்கும்படியும் செய்வார்கள். மற்ற பிராமணர்களும் பெண்களும் இப்படியே கலகம் செய்வதும் உண்டு. என்னை இவ்வீதியில் எல்லோரும் பண்டாரச்சி என்றே கூப்பிடுவதும் பரிகாசம் செய்வதும் உண்டு. இவைகளை எல்லாம் பொறுத்திருந்தேன். பின்பு ஒருநாள் நான் பூசை செய்வதைத் திடீரென்று வந்து என் மாமியார் பார்த்து ஓடிவந்து பெட்டியைத் தூக்கி வீதியில் போட்டு உடைத்து என்னையும் தலைமயிரைப் பிடித்து அடித்துப் பல துன்பப்படுத்தினார்கள். இதைக்கண்ட மற்ற பிராமணச் சனங்கள் எல்லாம் ஓடிவந்து அடித்துக் கண்டபடி திட்டினார்கள். அப்பொழுது எதிர் வீட்டுத் திருணையிலிருந்த பெரியவர் வந்து நியாயமான வார்த்தைகளைச் சொல்லி விலக்க வந்தபொழுது அவரையும் திட்டி அடிக்கப்போனார்கள். பின்பு என்னை நாளையத்தினம் என் தகப்பனார் வீட்டுக்கு அனுப்புவதாகப் பேசி இருந்தார்கள். என் புருடனும் மாமியும் வேறொரு வீட்டில் போய் இருந்தார்கள்.

நானும் குழந்தையும் இங்கே இருந்தோம். காலை நான்கு மணிக்குத் திருநீறும் உத்திராக்கமும் அணிந்த ஒரு பண்டாரப் பெரியவர் அரஅர சிவசிவ சங்கரா சம்போ மகாதேவா என்பதாகப் பாடிக்கொண்டும் சங்கு சேகண்டியை முழக்கிக் கொண்டும் அந்த வீதியில் அங்குமிங்குமாகச் சுற்றிவந்தார். பிராமணச் சனங்களெல்லாம் கதவுகளையும் காதுகளையும் அடைத்துக்கொண்டு உள்ளே இருந்தார்கள். ஒன்பது மணி வரையில் இவரைப்பார்த்தும் இவர் போவதாக இல்லை. மிகுந்த கோபமுடன் சிலர் முக்காடுடன் வந்து திட்டிப்போகச் சொல்லியும் போகவில்லை. பின்பு சேவகரிடம் சொல்லி அவர்கள் வந்து விசாரித்து உண்மையை அறிந்து அவர்களும் மற்ற பொது ஜனங்களும் பிராமணர்கள் செய்வதுதான் அக்கிரமம் என்பதாகவும் பண்டாரப் பெரியவரை உன் இஷ்டப்

படி பாடு என்பதாகவும் சொல்லிப் போனார்கள். இவர்கள் கவலையுற்று உள்ளேயே இருந்து பார்த்தும் வேறு வழியில்லாமல் பின்பு கதவுகளையும் காதுகளையும் திறந்துகொண்டு மிகுந்த கோபமும் வெறுப்புமாக வெளியே வந்து எல்லாக் காரியங்களும் செய்ய ஆரம்பித்தார்கள். அந்தப் பெரியவரும் அன்னம் தண்ணீரில்லாமல் பாடித்திரிந்தார். நான் அவருக்குச் சாப்பாடு கொடுத்தும் மறுத்துவிட்டார். மூன்று நாள் வரையிலும் திரிந்து பின்பு பிராமணர்கள் பிரார்த்தனையும் முடிந்தது நானும் போகிறேன் என்பதாகக் கூறிப் போய்விட்டார். இந்த மூன்றுநாளும் பெரும் வேடிக்கையாகத்தான் இருந்தது. அன்று மாலையிலும் எல்லோரும் கூடிவந்து என்னைத் திட்டி நாளைக்கு ஊருக்கு அனுப்புவதாக முடிவு செய்து போனார்கள். மாலை ஏழு மணிக்கெல்லாம் யானைகள் மதம் கொண்டிருப்பதாகத் தண்டோராப் போட்டார்கள். இதைக் கேட்டுப் பயந்து கொண்டு எல்லோரும் சீக்கிரமாகப் படுத்துவிட்டார்கள். நான் யோசித்து நாளையதினம் ஊருக்குப் போகிறபடியால் இன்றிரவாவது பிள்ளையார் பூசையை நன்றாகச் செய்யலாமென்பதாகக் கருதி அதற்கு வேண்டிய சாமான்களும் வாங்கி வந்து பிரசாதங்களும் செய்து கிரமமாகப் பூசை முதலியவைகளை முடித்துப் பின்பு தோத்திரம் செய்துகொண்டிருந்தேன். என் குழந்தையும் விழித்து எழுந்து இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தது. அப்பொழுது விநாயகப்பெருமான் கருணை வைத்துக் காட்சி அளித்தனர். நான் பிரதக்ஷணமாக வந்து வணங்கி அன்பினால் உருகி அழுது நின்றேன். குழந்தையானது யானை வந்ததாக நினைந்து அம்மா யானை வந்திட்டது அம்மா யானை வந்திட்டது என்பதாகக் கத்தியது. பின்பு விநாயகப் பெருமான் குழந்தாய் அஞ்சேல் அருள் புரிவோம், இன்னும் ஒரு வாரமவரை எதுவும் பேசக்கூடாது என்பதாகச் சொல்லி மறைந்தனர். நானும் தன்னை மறந்து அப்படியே இருந்துவிட்டேன். குழந்தையும் தூங்கிவிட்டது. யானைகள் வந்ததோ நெருப்புப்பிடித்து எல்லாம் எரிந்ததோ எதுவும் எனக்குத் தெரியாது. காலையில் எழுந்து வெளியே பார்த்தால் எங்கள் வீடுமுதல் எல்லா வீடுகளும் எரிந்து சாம்பலாகக் கிடந்தன. இந்த அறைமட்டும் எரியவில்லை. நான் பயந்து வெளியே எட்டிப் பார்த்தேன். எதிர் வீட்டுப் பெரியவர் நடு வீதியில் நின்றிருந்தார். அவரிருந்த திண்ணையும் எரியாமல் இருந்தது. நான் ஆச்சரியமுற்று ஒன்றும்

தோன்றுமல் நின்று பின்பு அறைக்குள்ளிருந்த தண்ணீரால் பல் முகம் சுத்தி செய்துகொண்டு பிள்ளையார் பூசையும் முடித்து இரவில் இருந்த பிரசாதங்களை நானும் குழந்தையும் சாப்பிட்டு அந்தப் பெரியவருக்கும் உருட்டி இலையில் வைத்து அவரிடம் எரிந்தேன். அவரும் பிடித்துக்கொண்டார். பின்பு எல்லாச் சனங்களும அழுதுகொண்டு வீதி நெடுகலும் பார்த்தார்கள். நானும எட்டிப் பார்த்தேன். அவர்களும் பார்த்துவிட்டுப் போனார்கள். நான அந்த அறைக்குள்ளேயே இருந்தேன். மாலையில் அடமழை ஆரம்பித்து இரவும் பகலுமாக ஏழு நாள்வரை பெய்தது. நான் வெளியே வந்து சௌகரியமாகக் குளிபபதும் பிரசாதங்கள் செய்து பிள்ளையார் பூசை நன்றுகச செய்வதும் நாங்களும் சாப்பிட்டு அந்தப் பெரியவருக்கும் கொடுப்பதுமாக இருந்தேன். அவரும் திருநீயிலேயே இருந்தார். நானிருந்த அறையில் முன்னமே அரிசி பருப்பு முதலிய எல்லாச் சாமான்களும் இருந்தன. எனக்குச் சிரமமில்லாதிருந்தது. பின்பு மழையும் விட்டது. சேவகர் வந்து தாங்கள் கூப்பிடுவதாகச் சொன்னார்கள். நான் பேசாதபடியால் நாயகத்தினம் வந்து எல்லாம் சொல்லுவதாகச் சாடை மூலம் சொல்லி அனுப்பினேன் இவ்வளவுதான் நடந்த விஷயம். தாங்கள் எல்லாம் அறிந்து நியாயம் எதுவோ அப்படிச் செய்புங்கள் என்பதாகச் சொல்லி முடித்தாள். பின்பு இப்பெண்ணினுடைய தகப்பனரை உடனே அழைத்து வரும்படியாகச் சேவகரை அனுப்பினார்கள். அவர்கள் அவ்வூருக்குப் போய் இவ்விஷயங்களைச் சொல்லியவுடன் சினிவாச அய்யங்காரும அவர் மனைவி முதலானவர்களும மிகுந்த வருத்தமும பயமும் உடையவர்களாய் அழுது பின்பு வினயகப பெருமானுடைய செயலின்படி நடந்தது நடக்கட்டுமென்பதாகத் தேறிப் பின்பு அவரும் இன்னும் சில முக்கியமானவர்களும புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள். அரசன் பார்த்து ஆதியோடந்தமாக எல்லா விஷயங்களையும் சொல்லப்படி சொனனன் நான் ஆதவனூரில் வசிக்கும் வஷிட்டண பிராமணர்களில் ஒருவன். மிகவும ஏழையாகவும புரோகிதத் தொழில் செய்து கொண்டும் சிவித்து வந்தேன். எனக்குக் குழந்தை இல்லை, இதற்காக விஷ்ணுவை நோக்கித் தினமும பூசையும் தவமும் செய்தேன்.

என்பதாகக் கூறிப் பின்பு முத்தனென்னும் குடியானவன் மூலம் அரசடி வினயகரைத் தெரியாமல் பூசித்ததும

ஆண் குழந்தை பிறந்ததும் பூசை செய்ததை அறிந்து அந்தப் பிராமணர்கள் அடித்துத் துரத்தியதும் பின்பு பக்கத்து ஊர் தனவந்தனுக்கும் குழந்தைபிறந்ததும்தனக்கு முப்பத்திரண்டு தான தருமங்களும் செய்து இந்த ஊர்க் காரர்களுடன் சேர்ந்து அந்தப் பிராமணர்களைச் சண்டை போட்டு எல்லோரும் இனிமேல் சாதி மதத்து வேசமில்லா மல் இருக்கும்படி செய்ததும் தனக்குமிகுந்த செல்வம் ஏற் பட்டதும தினமும் நாங்கள் எல்லோரும் விஷ்ணுவையும் விஞயகரையும் பூசை செய்து சாதுக்களுக்கும் ஏழைகளுக் கும் அன்னம அரிசி மோர் முதலியவைகள் அளித்து அதன் பிறகு சாப்பிடுவதும் பின்பு சித்தி என்னும் பெண்ணும் பிறந்து அக்குழந்தையும இவ்விதமே செய்து வந்ததும் அப்பெண்ணை இங்கரிலிருந்து கேட்டு முடிவு செய்ததும் பின்பு அந்தப் பிராமணர்கள் மூலமாக இந்தப் பிராமணர் களின் சாதிமதத்துவேசத்தை அறிந்து இங்கே கொடுப் பதை மறுத்து உள்ளூரிலேயே திருமணம் செய்ய உத்தேச சித்ததும் அன்றிரவில் விஞயகர் கனவிற் தோன்றி இங்கே கூடாது அங்கேயே கொடுக்கும்படி சொல்லி மறைந்ததும் அதன் பிறகு இந்த மாப்பிள்ளைக்கே திருமணம முடித்து இந்தப்பட்டினத்திற்கு அனுப்பிவைத்தது முதல் எல்லாம் விபரமாகச் சொல்லி அதன பிறகு இங்கே நடந்த விஷயங் கள எதுவும் எனக்குத் தெரியாது இப்பொழுது சேவகர் வந்து சொல்லத்தான் இவ்விஷயங்கள் தெரியும் எல்லாம் தெய்வச் செயலாகத்தான் நடந்திருக்கிறது. என்ன செய் வது என்பது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை தாங்கள் தான் எல்லா உண்மைகளையும் அறிந்து நியாயம் சொல்ல வேண்டியது என்பதாகச் சொல்லி முடித்தார். இவைகளை பெல்லாம கவனமாகவும் மன நேர்மையாகவும் விபரமாகவும் கேட்டுக் கொண்டிருந்த சிவமத அரசர்களும் மற்றபொது சனங்களும் இவர்களுடைய அன்பு பக்தி ஒழுக்கம் சிவகா ருண்யம தருமம் சமத்துவம முதலியவைகளையும விஞயகப் பெருமானுடைய திருவிளையாடல்களையும நினைந்து நினைந்து சந்தோசித்துச் சிரித்தார்கள் விஷ்ணுமத அரசர்களும் பிரா மணர்களும இவைகளை நினைந்து நினைந்து மிகுந்த கோபமும் வெறுப்பும் கொண்டு ஓய் சிலிவாச அய்யங்காரே நீ விஷ்ணு மதப் பிராமணராக இருந்தும் சாதிமதத்திற்கு நேர்விரோத மாக நடந்திருக்கின்றீர் நீ சாதிமதத் துரோகி அல்லவா நீயும் உன்மகளும் தான் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கும்

காரணமாகும் என்பதாகக் கடுரமாய்க் கூறினர்கள் இதைக் கேட்டுச் சிவமத அரசர்களும் மற்ற சனங்களும் மிகுந்த கோபமுடன் இவ்வளவிற்கும் காரணம் இவர்களல்ல அந்தப் பிராமணர்கள் தான் காரணம் அவர்கள் தான் சாதிமதத்து வேசிகள் அவர்கள் செய்தது கொடிய அனீதமான காரியம் என்று கோபமாகக் கூறினர்கள் இவ்விதமாக இருதரப்பி லும் பெரும் தர்க்க வாதங்களும் விவகாரங்களும் கலவரங் களும் ஏற்பட்டது மூன்று நாள்வரை முடியவில்லை அந்தப் பட்டினத்து அரசனும் விஷ்ணு மதமாக இருப்பினும் சாதி மதத்து வேசமில்லாதவன் தரும நியாயமானவன் ஆகவே எதுவும் சொல்லாமல் மத்திபமாகவே இருந்து கொண்டு ஒன்றும தோன்றுமல் மனவேதனையுடன் பலவிதமாக யோசித்துக் கொண்டிருந்தான் பெரும் கலவரங் களும் யுத்தங்களும் ஏற்படக்கூடிய நிலமை ஏற்பட்டது எங்கும் ஜனசமுத்திரமாகக் கூடியிருந்தார்கள் அச்சமயத் தில் முன்பு வந்த பண்டாரக்கிழவர் நரைத்ததாடி மீசையுட னும் தொந்திவயிருடனும் நிறையத் திருநீறும் உத்திராக்ஷ மணிகளும் அணிந்தவராய்ச் சங்கு சேகண்டியை முழக்கிக் கொண்டும். தடியை ஊன்றிக் கொண்டும் அர அர சிவசிவ சம்போ சங்கரா மகாதேவா மகாதேவா சிவசிவ சிவசிவ சின் மயா என்பதாகப் பெரும் குரலுடன் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் சனங்களுக்குள் வேகமாக வந்தனர். இதைக்கண்ட சனங்களெல்லாம் அந்தப் பண்டாரக்கிழவர் வந்தார் வந்தார் என்பதாகக் கைகளைத் தட்டிச்சிரித்துக் கொண்டு எழுந்து வழிவிட்டார்கள் அரசர்கள இருக்கும் இடத்திற்கு உள்ளே சென்றார் இவரைக் கண்ட அந்தப் பிராமணர்களெல்லாம் மிகுந்த கோபமும் வெறுப்புமகொ ண்டு இதோவருகிற சண்டாளக் கிழட்டுப் பண்டாரப் பயல் தான் எங்களை மூன்று நாள் வரை இரவும் பகலும் அன்ன ஆகாரமும் நித்திரையு மில்லாமல் இதே மாதிரியாகக் கத்திக் தொந்தரவு செய்தவன் என்பதாக மற்ற அரசர் களிடம் கூறினர்கள் இவர் அரசர்கள் இருந்த இடத்திற்குப் போய்ப் பெரும் சப்த முடன் சிவசிவ சங்கரா சம்போ அர அர வென்று கூவியும் சங்கு சேகண்டியைப் பலமாக முழக் கியும் ஆடியும் குதித்தும் பெரும் அட்டகாசம் செய்தார். இதைக் கண்ட சிவமத அரசர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த சந்தோசமாகவும வேடிக்கையாகவும் சிரிப்பாகவும் இருந்தது விஷ்ணுமத அரசர்களுக்கும் அந்தப் பிராமணர்

களுக்கும் இவரைச் சித்திரவதை செய்யலாமா கடித்துத் தின்று விடலாமா என்கிற முறையில் அவ்வளவு கோபமாக இருந்தது. இவர் மென்மேலும் அப்படியே அட்டகாசம் செய்து சிவசிவ வென்று கத்திக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த அரசர்கள் ஓய்ப்பண்டாரக் கிழவனே நீ இந்தப் பிராணர்கள் வீதியில் முன்புவந்து இதே மாதிரியாகக கத்திக்கொண்டு பெரும் அட்டகாசம் செய்து அவர்களை யெல்லாம் ஆற்றுக்குக குளத்திற்குப் போகாமலும் பூசை முதலியது செய்யாமலும் சாபபிடாமலும் தூங்காமலும் கதவுகளையும் காதுகளையும் அடைத்துக் கொண்டு இருக்கும் படியாக மூன்று நாளும் செய்திருக்கிறாய் அப்பொழுது நாங்கள் இருந்தால் உன்னைச் சித்திரவதை செய்திருப்போம் இப்பொழுதும் உனக்கு எவ்வளவு தைரியம் அரசர்கள் இருக்கக் கூடிய சபையில் வந்து கொண்டு பெரும்ஆர்ப்பாட்டம் செய்கிறாய் உடனே வெளியே போகின்றாயா அல்லது எமனுலகம் போகின்றாயா என்பதாகச் சிறிக் கொண்டு சொன்னார்கள் இவர் கேட்காதவர் போல கத்திக் கொண்டும் ஆடிக்கொண்டும் சிவசிவ வென்று பிராமணர் களைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டே மிக ஆர்ப் பாட்டம் செய்தார். விஷ்ணுமத அரசர்கள் அளவிறந்த கோபமுடன் எழுந்து அடே பிச்சைக் காரப்பயலே இதோ உன்னை கொல்லுகிறோம் பார் என்பதாக உக்கிரத்துடன் அவர் முன்னதாக வந்து நின்றார்கள் இவர் உடனே நின்று இவர்களையும் பிராமணர்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்துச் சிரித்து ஓ அரசர்களே மற்ற பொது சனங்களே நான் முன்பு இந்தப் பிராமணர்கள் வீதியில் போய் இவர்களை எல்லாம் ஆற்றுக்குக் குளத்துக்குப் போகவேண்டாம் பூசை செய்ய வேண்டாம் சாபபிட வேண்டாம். தூங்க வேண்டாம் கதவுகளையும் காதுகளையும் அடைத்துக் கொண்டு வீட்டுக் குள்ளேயே இருங்கள் என்பதாகச் சொன்னேனு அல்லது இவர்களை ஏதாவது பிச்சை கேட்டேனு அல்லது கெட்ட வசனங்கள் புகன்றேனு நான் நடுவீதியில் நடந்து கொண்டு சிவசிவ அரஅரஎன்று சொன்னால் இவர்களுக்கு வந்த கஷ்ட நஷ்ட மென்ன நடுவீதியாருக்குச் சொந்தம் அரிஅரி நாராயண கோவிந்தா வென்று கத்திக்கொண்டு திரிகிறார்களே அவர்களை யாரும் ஒன்றும் சொல்ல வில்லையே இவர்களுக்கு மட்டிலும் ஏன இவ்வளவு துவேசமிருக்கிறது இவைகளை

உற்று உணராமல் நீங்கள் என்னைக் கொல்லவா போகிறீர்கள். பேஷ் நன்றாக இருக்கிறது என்னையில் இருப்பதைப் பார்த்தீர்களா ஜாக்கிரதை என்றனர்.

இதைக் கேட்டவுடன ஒரு அரசன் வேகமாக உடை வாளை எடுத்தான். இதற்குள் சிவமத அரசர்களும் வீராவேசமுடன் எழுந்து உடைவாளை வேகமாக எடுத்தார்கள். இரு பக்கத்திலுமுள்ள சனங்களெல்லாம் வேகமாக எழுந்து பெரும் கலவரமான சமயத்தில் திடீரென்று பெரும் சப்தமானது கேட்டது. எல்லா அரசர்களும் சனங்களும் பயந்து அப்படியே நின்றார்கள். அப்பொழுது அப்பண்டாரக் கிழவர் நின்றுகொண்டிருந்த இடத்தில் வலதுபுறம அக்கினிச் சுவாலையோடும் கூடிய காலருத்திர மூர்த்தியின் வடிவமும் இடதுபுறம் அகோரமான தந்தங்களை உடைய நரசிம்ம மூர்த்தியின் வடிவமும் மத்தியில் மும்மதம் பொருந்திய யானைமுக மூர்த்தியின் வடிவமும் அகோரமான கோபமுடன் வலது கரங்களை ஓங்கிக்கொண்டு பிரமாண்டமாக நிற்கவும் இதைக் கண்ட எல்லா அரசர்களும் மற்ற எல்லாச் சனங்களும் பயந்து கிடுகிடுத்து கால் கைகள் நடுக்குற்றுச் சிலர் அப்படியே பிரமை கொண்டு ஒன்றும் தோன்றாமல் நின்றார்கள். சிலர் மூர்ச்சையாகப் படுத்துக்கொண்டார்கள். சிலர் கதறினார்கள் சிலர் ஓடினார்கள் சிலர் வணங்கித் தோத்திரம் செய்தார்கள். அந்தச் சனிவாச அய்யங்காரும் அவர் மகள் சித்தி அம்மையும் சிறிதும் பயப்படாமல் அளவிறந்த அன்பும் பக்தியும் ஆனந்தமும் ததும்ப இரு கண்களில் அருவி சொரியவும் இரு கரங்களையும் சிரமேற் கூப்பிக் கொண்டு ஏ கணேசப் பெருமானே, ஏ விக்னேஸ்வரப் பெருமானே, ஏ வினயகப் பெருமானே, ஏ ருத்திரமூர்த்தி, ஏ காலகால திரிநேத்திர மூர்த்தி, ஏ சம்மார மூர்த்தி, ஏ சாம்பசிவ மூர்த்தி, ஏ அரிஅர மூர்த்தி, ஏ நரசிம்ம மூர்த்தி, ஏ விஷ்ணு மூர்த்தி, ஏ நாராயண மூர்த்தி இந்த ஏழைகள் மீது இவ்வளவு கருணை வைத்து ஆயிரக் கணக்கான வருடங்கள் அரிய தவங்களைச் செய்தும் காணமுடியாத தங்களுடைய இவ்ய தெரிசனங்களை ஒரே சமயத்தில் நாங்களும மற்ற எல்லோரும் தெரிசிக்குமபடியாகக் காட்சி அளித்ததைப் பற்றி ஆனந்திக்கின்றோம். தங்களுடைய கோபங்களையும் இந்த அகோரமான வடிவங்களையும் மறைத்துச் சாந்த சொரூபமான காட்சியை அளியுங்கள் என்பதாக இன்னும்

பலவிதமாகத் தோத்திரம் செய்து நின்றார்கள். அப் பொழுது இவர்களை அஞ்சேல் என்பதாகக் கையமர்த்தி அந்தப பிராமணர்களையும் அரசர்களையும் பார்த்து அடா சாதி மதத் துவேசச் சண்டாளர்களே, உலகிற் தோன்றக் கூடிய சர்வ சரீரங்களும் அதிலுள்ள சர்வ ஆன்ம கோடி களும் ஒன்றென்பதாகவும் சர்வ மதங்களும் அதற்குரிய சர்வ தெய்வங்களும் ஒன்றென்பதாகவும் அறியாமல் இவ் விதம் செய்தீர்கள். இனிமேலாவது உண்மையை அறியுங் கள் என்பதாகப் பெரும் சப்தமுடன் கூறித் திடீரென்று அந்த மூன்று வடிவங்களும் மறைந்துவிட்டன. இதைக் கண்ட அரசர்கள் முதல் எல்லோரும் பயந்தெளிந்து எழுந்து இரு கரங்களையும் சிரமேற் கூப்பிக்கொண்டு விஜய மூர்த்தி யையும் உருத்திர மூர்த்தியையும் நரசிம்ம மூர்த்தியையும் பலவிதமாகத் தோத்திரம் செய்து ஏ விஜயப் பெருமானே, ஏ சிவபெருமானே, ஏ விஷ்ணுப் பெருமானே, நாங்கள் அறி யாமல் செய்த குற்றங்களையெல்லாம் பொருத்தருள வேண் டும். இப்பொழுதுதான் உண்மையை அறிந்தோம், அறிந் தோம் என்பதாக வணங்கித் துதித்து அழுது பின்பு இந்தச் சிவாச அய்யங்காரையும் சித்தி அம்மையாரையும் எல்லோரும் போற்றிச் சாஷ்டாங்கமாக வணங்கி உங்களு டைய திருபைபால் தேவர் சித்தர் முனிவர் முதலாக எவர் களும் தேடியும் காண முடியாத இவ்ய தெரிசனங்களை யெல்லாம் ஒரே சமயத்திற் பாவிகளாகிய நாங்கள் தெரிசிக் கும்படி கிடைக்கப் பெற்றோம் என்பதாகக் கூறி ஆனந்தித் தார்கள். விஷ்ணு மத அரசர்களும் அந்தப் பிராமணர்களும் இவர்கள் முன்பு வந்து சாஷ்டாங்கமாக வணங்கித் துதித்து ஓவென்று கதறி அழுது ஏ பக்தியிற் சிறந்த உத்தமர்களே. பாவிகளாகிய நாங்கள் உங்களுக்கு அறியாமற் செய்த பெரும குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ளுங்கள், இந்தச் சண்டாளர்களை மன்னியுங்கள், உங்களுடைய பெரு மைகளை அறியாமல் ஏதேதோ திட்டினோம அடித்தோம் தூசித்தோம் மனம் வருந்தும்படி செய்தோம் ஐயோ இதற் கென் செய்வோம் என்பதாக வாயிலும் கையிலும அடித்துக் கொண்டு ஆயிரக் கணக்கான வருடங்களாக அரிய பெரிய தவங்களைச் செய்தும் காணமுடியாத காட்சிகளை எல்லாம் காணப் பெற்றோம் உண்மைகளையும் அறியப்பெற்றோம். உங்களுடைய பெருமைகளையும் தெரியப்பெற்றோம் உங் களுக்குச் செய்த பெரும் குற்றங்களுக்காக உங்கள நேரி

லேயே சகிக்கமுடியாத பலவித கஷ்ட நஷ்டங்களையும் அடையப்பெற்றோம்.

என்பதாகப் பலவிதம் போற்றிப் புகழ்ந்து வணங்கி நின்றார்கள் இவர்களும் அவர்களைப் பார்த்து வணங்கி அழுது எல்லாம் இறைவனுடைய செயல் தான் இதெல்லாம் அவனுடைய திருவிளையாடல் தான் உங்கள் பேரில் குற்ற மில்லை இதற்காகக் கவலைப் படாதீர்கள் உங்களால் தான் நாங்களும் தெரிசிக்கப பெற்றோம். இனிமேலாவது சாதி மதத்துவேசத்தையும் வன்மையான குணத்தையும நீக்கிச் சமத்துவமும் சிவகாருண்யமும் கைக்கொளளுங்கள் என்பதாகக் கூறிச் சமாதானம செய்தார்கள் பின்பு எல்லோரும் ஆதிசேஷ அய்யங்காரையும் போற்றிப் புகழ்ந்து வணங்கினார்கள் சித்தி அம்மையின் மாமியும் புருடனும் தனியாக வந்து இவர்கள் முன் கீழேவிழுந்து புறண்டுஅழுது உங்கள் பெருமையை அறியாமல் என்னென்ன திட்டினோம் என்னென்ன தூசித்தோம் எவ்வளவு அடித்தோம் எவ்வளவு கொடுமைகள் செய்தோம் ஐயோ. ஐயோ என்பதாக வாயிலும் கையிலும் அடித்துக் கொண்டு இந்தப் பாவிகள் செய்த குற்றங்களையெல்லாம். மன்னித்துக் கொள்ளுங்கள் என்பதாக அழுதார்கள் பக்கத்து வீட்டுப பெண்களும வந்து இவ்விதமாகக் கூறி வணங்கிஅழுதுநின்றார்கள் இவர்களுக்கும் சமாதானம் கூறினார்கள் அதன்பிறகு எல்லோருமாகக் கூடி இவர்கள் செய்த குற்றங்களுக்கு இவர்கள் அடைந்துள்ள கஷ்ட நஷ்டங்களே போதுமானது என்பதாக முடிவு செய்து பின்பு சித்தி அம்மையின் தாயார் கமலை அம்மாளையும் வருவித்து இவர்கள் மூவரையும் அங்கிருள்ள ஆண் பெண்முதலாக எல்லோரும் தெரிசிக்கும் படியாகப் பட்டினப் பிரவேசமாய்ப் பள்ளக்கில் வைத்துக் கொண்டு வந்தார்கள் அதன் பிறகு அத்தேசத்திலுள்ள விஷ்ணு ஆலயங்கள் முழுதிலும் பிள்ளையார் உருவமும் வைத்துப் பூசிக்கும்படி ஏற்படுத்தினார்கள். பின்பு ஒவ்வொரு அரசர்களும் தங்கள் தங்கள் தேசத்திற்கு இவர்களை அழைத்துப் போய் வேண்டிய உபசாரங்களைச் செய்தும் பட்டினப் பிரவேசங்கள் செய்து வைத்தும் இவர்களுடைய பெருமைகளை எல்லாச் சனங்களுக்கும் தெரிவித்து வணங்கிப் போற்றச் செய்தும் அந்தத் தேசங்களிலுள்ள எல்லாவிஷ்ணு ஆலயங்களிலும் பிள்ளையார் உரு

வத்தை வைத்துப் பூசிக்கச் செய்தும் பின்பு இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். அதன் பிறகு சித்தி அம்மையின் அபிப்பிராயபபடி தாய் தந்தையரை ஊருக்கு அனுப்பி விட்டுக் குழந்தையைப் புருடனிடத்தில் சேர்த்து விட்டு நகரத்திற்கு பக்கத்தில் தனி இடத்தில் பெரிய ஆச்சிரமமும் விநயகர் ஆலயமும் அன்னச் சத்திரமும் கட்டி அதற்கு வேண்டிய இடம பொருள் ஏவல் எல்லாம் ஏற்படுத்தி அங்கே இப்பெண்ணை ஆனந்தமாக இருக்கும்படி அவரசன் ஏற்படுத்தித்தானும் பயபக்தியாக நடந்து வந்தான மற்ற சனங்களும் அன்பு பக்தியாக நடந்து வந்தார்கள். சினிவாச அய்யங்காரும் தன்னுடைய ஊருக்குப்போய் இங்கே நடந்த விஷயங்களை யெல்லாம் கூறினர். இதைக் கேட்ட எல்லோரும் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து வணங்கினர்கள். பின்பு சிலகாலம் ஆனந்தமாக வாழப்பெற்றுப் பரலோகப் பதவியை அடையப் பெற்றார்கள். சித்தி அம்மையும் வெகுகாலம் வரை எல்லோரும போற்றிப் புகழ்ந்து வணங்கும்படி ஞான நிலையில் ஆனந்தமாக வாழ்ந்துகொண்டும் எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் நன்மார்க்கங்களை போதித்துக் கொண்டும் இருந்து ஆத்ம ஞான முத்திநிலையை அடைந்து பின்பு பரலோகப் பதவியை அடையப் பெற்றனள். விஷ்ணு ஆலயங்களில் அதுமுதல் விநயகரையும் வைத்து பூசித்து வரப்பெற்றது. பிற்காலத்தில் சில விஷ்ணு மதப பிராமணர்கள் கட்டுக் கதைகளைப் பொருத்தமாக வரைந்து விஷ்ணு கோவில்களில் இருக்கும் விநயகரைக் கயமுக ஆழவார் என்பதாகப் பிரபல்யப்படுத்தி அவ்விதமே பூசித்து வருகினறார்கள். எவர்கள் எப்படிப் பூசித்தாலும் எவ்வுயிரும எத்தெய்வமும் ஒன்று என்பது உண்மையேயாகும.

சுபம்

திருச்சிற்றம்பலம்

(7–வது)

புஷ்பகவல்லி–ஞானனந்தன் சரிதம்

முன் காலத்தில் திருவொற்றியூரில் ரத்தினமபாளி என்னும ஓர் தாசி இருந்தனள். அவள் மிகுந்த அழகும ஈச்சுரனிடத்திலும் சாதுக்களிடத்திலும் பெரியோர்களிடத்திலும் மிகுந்த அன்பும பக்தியும வாய்ந்தவளாக இருந்து பிரதி தினமும திருவொற்றிச்சுரர் ஆலயத்திற்குச் சென்று அன்பு, பக்தியுடன் வணங்கித் துதித்து வந்தனள். இவளுக்குக் குழந்தையில்லாதிருந்து பின்பு ஓர் அழகிய பெண குழந்தையும், அதன்பிறகு ஓர் ஆண் குழந்தையும் உற்பவித்தது. இரண்டுக்கும் புஷ்பகவல்லி - ஞானனந்தன் என்பதாக நாமம் சூட்டி அவைகளை மிகுந்த அன்புடன் வளர்த்துடன் பிரதி தினமும ஆலயத்திற்கு அழைத்துச் சென்று பூசித்து வணங்கச் செய்து வந்தனள். பின்பு அப்பெண்ணுக்குப் பன்னிரெண்டு வயதும ஆண் குழந்தைக்கு ஏழு வயதும உளள பருவத்தில இவளுக்கு வியாதி ஏற்பட்டு இறந்தனள். இவளுக்கு வேண்டியவர்கள் வந்து நல்லடக்கம செய்து பின்பு இக்குழந்தைகளுக்குத் துணையாக ஓர் கிழத தாசியை ஏற்படுத்தினர்கள். இக்குழந்தைகள் அச்சிறு வயதிலேயே அன்பு, பக்தி, ஒழுக்கம அறிவும் கருணையும் உடையவைகளாகப் பிரதி தினமும் காலை மாலையில் ஆலயத்திற்குச் செல்வதும் புட்பம் எடுத்து மாலைகள் கட்டிக்கொடுப்பதும் பின்பு பூசித்து வணங்கி அன்பின் பெருக்கால் உருகி அழுவதுமாக இருந்து வந்தன. இவர்கள் நடத்தை அக்கிழவிக்குப் பிடிக்கவில்லை. அவள் குலத் தொழிலையும் அதற்குரிய நடை, உடை பாவனைகளையும் போதிக்க ஆரம்பித்தாள். இவர்களுக்கு அது பிடிக்கவில்லை. அவளை நோக்கி ஓ, ஆயாள் எங்களுக்கு வேண்டியதைப் போதிக்கவும் பாதுகாக்கவும் தாய் தந்தையும துணையுமான ஈச்சுரன் இருக்கின்றார். ஆகையால் நீ உன் வீட்டிற்குப் போய்ச்சேரு என்பதாக அனுப்பிவிட்டுத் தங்கள் இஷ்டம் போல் இருந்துகொண்டு தாய் வைத்திருந்த ஆடை ஆபரணம, பண்ட பாத்திரங்களை ஒவ்வொனருக விறபனை செய்து சீவித்து வந்தார்கள். பின்பு இப்பெண் பக்குவ மடைந்தனள். சில நாள் ஆலயத்திற்குச் செல்லாதிருந்து பின்பு வழக்கம்போல் சென்று பூசிப்பதும், உட்கார்ந்து செபம்

செய்யும் மற்றவர்களைப் பார்த்துத்தாங்களும் கண்களை மூடிச் செபம், தபம் செய்வதும் உருகி அழுவதும பின்பு வீட்டுக்கு வந்து சமைத்து உண்டபின் கதவைப் பூட்டிக்கொண்டு இதே சிந்தனையில் ஈச்சர தியானத்தில் இருப்பார்கள. எங்கும் போவதோ, எவர்களுடனும் பேசுவதோ இல்லை. இப்பெண்ணினுடைய அழகையும் பருவத்தையும அறிந்த அனேக வாலிபர்கள் மோகித்து வீட்டுக்கு வந்து இரவும் பகலும் கதவைத் தட்டித் தொந்தரவு செய்தார்கள். இப் பெண் அறிந்து மிகுந்த வருத்தமுற்று ஐயா உங்களுக்கு ஆகவேண்டியது இங்கு ஒன்றுமில்லையே, என் வீணைத் தொந்தரவு செய்கின்றீர்கள். போய் வேறிடம பாருங்கள் என்பாள். இவர்கள் வெட்கமுடன் போய்விடுவார்கள். இவ் விதமாக இரவும பகலும பெரும் தொந்தரவாக இருந்தது. மறற தாசிகளெல்லாம் நம்மிடம் வரவில்லையே என்று ஏங்கிப் பொறுமையுற்று ஐயோ இவள் ஏன் மறுக்கின்றாள் என்று வியப்புறுவார்கள். இப்பெண்ணே மிகவும் வருந்தி ஐயோ இந்தப் பருவமும் அழகும் ஏன் எனக்கு ஏற்பட்டது. இதுவே பெரும் சனியனாக இருக்கின்றதே என்று துக்கித்துக் கந்தை உடைகளை அணிந்து கொள்வதும், எண்ணெய் தேய்க்காமலும், சீவாமலும் தலையை விரித்தபடி போட்டுக் கொள்வதும திருநீற்றை நெற்றி முதல் எங்கும நிறையப் பூசிக்கொள்வதும இப்படியாகச் சுத்தப் பைத்தியகாரி போன்று வேடம பூண்டு வீதியிற் போகும்பொழுதும் வரும் பொழுதும் ஈச்சுரா, ஈச்சுரா என்று கூவுவதும் அழுவதும், புலம்புவதும் சிரிப்பதுமாக இருந்து வந்தனள். இதைக் கண்ட ஆடவர்களெல்லாம் பைத்தியகாரி என்று சிரித்து இவள்பேர்ல் இச்சையும் தேடி வருவதையும கைவிட்டார் கள். மற்ற தாசிகளெல்லாம் பைத்தியகாரி என்று டாசுசித் துச் சிரிப்பார்கள். இவனையும் இப்படியே கூறிச் சிரிப்பார் கள். இவர்களுக்குச் சனியன் ஒழிந்தது என்பதாகச் சந்தோசித்து அவர்களைக் கண்டு ஐயோ பாபம பைத்திய காரச் சனங்கள் என்பதாக அடிக்கடி இவர்கள் சிரிப்பார் கள். மற்ற எந்த வேடிக்கை விளையாட்டுகளும் எதுவுமில்லை.

பின்பு இப்பையன் சதாக் கண்களை மூடிக்கொண்டு ஆலயத்திலும வீட்டிலும் ஓர் மூலையில் இருந்துகொள் வான். இபபெண் அறிந்து தம்பி எழுந்து கடவுளை அன் புடன் பூசித்து வணங்காமலும் பாடிப் போற்றுமலும் சாப்

பிடாமலும் இருக்கின்றாயே என்பாள். இவன் விழித்துப் பார்த்து அக்காள் எனக்குக் கடவுளைப் பூசிக்கவோ வணங்கவோ சாப்பிடவோ எதுவும் நோக்கமில்லை. சதா ஈச்சுரனை மனத்துள் நினைத்துக்கொண்டே இப்படிச் சும்மா இருப்பது மிகுந்த சந்தோசமாகவும் சுகமாகவும் இருக்கின்றது என்பான். இவளும் சந்தோஷப்பட்டனள். பின்பு இவன் நாளுக்கு நாள் தியான முதிர்ச்சியால் தன்னை மறந்த நிஷ்டை நிலையில் மூழ்கி இருந்துவிடுவான். இப்பெண்ணும் ஈச்சுரனைப் பூசித்து வணங்கிக்கொண்டும், அன்பின் முதிர்ச்சியால் உருகி அழுதும், தேம்பியும் தன்னை மறந்த அந்நிலையில் மூழ்கி இருந்துவிடுவாள். இப்படி இருக்கப் பின்பு ஆடை ஆபரணம பாத்திர முதல் எல்லாம் போய்விட்டது. சீவனத்திற்கு வழியில்லை. இதைபபற்றிக் கவலைப்படாமலும் அவனுக்கும் கூறுமலும் வீடுகளில் நெற்குத்தி வந்து அதைச் சமைத்து சாதுக்களுக்கும் அவனுக்கும் அளித்துத் தானும் உண்பதுமாகச் சில நாள் சீவித்தார்கள். அப்பொழுது வழக்கமபோல் திருவொற்றீச்சுரர் ஆலயத்தில் உற்சவம் நடந்தது. ஒருநாள் உற்சவ மூர்த்தியை குதிரை வாகனத்தில் எழுந்தருளச் செய்து வீதி வலம் வந்தது. விடுகள்தோறும் தீபாராதனை செய்வது வழக்கம. இப்பெண்ணும் கஷ்டப்பட்டுத் தேங்காய், பழம முதலிய பொருள்கள் சேகரித்து ஓர் தட்டில் வைத்து அதை வெளித் திருணையில் வைத்துவிட்டு இருவரும் வாசலில் எதிர்பார்த்து நின்றிருந்தார்கள் அது வெகுதூரத்தில்வந்து கொண்டிருந்தது. பின்பு இவன் திருணையில் உட்கார்ந்து கொண்டுஈச்சுரனை தியானித்திருந்து தன்னைமறந்த மேலான நிலையில் இருந்துவிட்டான். இப்பெண் வாசலில் கரங்களைக் கூப்பி வணங்கியபடி நின்று அன்பின் பெருக்கால் நினைந்து நினைந்து உருகி உருகி அழுது தேம்பித் தேம்பித் தன்னை மறந்த மேலானநிலையில்நினறனள். இதனால் வஸ்திரமானது நெகிழ்ந்து அவிழ்ந்து காலில் வீழ்ந்துவிட்டது. யாதுமற்ற நிர்வாணநிலையில் நின்றனள். இதைக் கண்ட பக்கத்து வீடுகளிலுள்ள தாசிகள் பார்த்துபபார்த்துச் சிரித்துப் பைத்தியகாரிஎன்று பரிகாசம் செய்து மற்றவர்களும் கண்டு சிரிக்க எண்ணி சும்மா இருந்தார்கள். உற்சவ மூர்த்தியும் மேள தாளச் சனக்கூட்டமுடன் வந்து சேர்ந்தது. இவள நிற்பதைக் கண்ட குழந்தைகளும் வாலிபர்களும் ஆண்களும பெண்களும் பார்த்துப் பார்த்து சிரித்தார்கள். சில பெரி

யோர்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டே உற்சவ மூர்த்தியை நிறுத்தாமற் கொண்டு சென்றார்கள். சிலர் பைத்தியகாரி யென்றும் மானபிமானம் கெட்ட தேவடியாச் சிருக்கியென்றும் கண்டபடி திட்டியும் தூசித்தும் சென்றார்கள். பின்பு உற்சவ மூர்த்தியானது கோபுர வாயிலை அடைந்து உள்ளே சென்றுல் போகவில்லை. பின்பு எல்லோர்களும் கூடித் தூக்கிச் சென்றும் முடியவில்லை. இதைக் கண்ட எல்லோர்களும் ஆச்சரியமும் பிரமையுமுற்று ஒன்றும் தோன்றுது நின்றார்கள். இங்கே இப்பெண்ணனவள் வெகு நேரம் சென்று அதன்பிறகு மனப் பிரவிருத்தி ஏற்பட்டுத் திடீரென்று விழித்துப் பார்த்து மூர்த்தியைக் காணுது பதறிக்கதறி அழுது ஐயோ நம்முடைய தேபாராதனை ஆகாது போய்விட்டதே யென்று சேலையும் கவனிக்காது வேகமுடன் தட்டை எடுத்துக்கொண்டு ஓடினாள். காலில் சேலை இழுபடுவதை அறிந்து அதையும் எடுத்து அணிந்தும் அணியாமல் ஓடினாள். மற்ற தாசிகளெல்லாம் சிரித்தார்கள். இப்பையனும் திடீரென்று மனப் பிரவிருத்தி ஏற்பட்டு விழித்துத் தமக்கையுடன் பின் சென்றான். அங்கே இவள் வருவதை அறிந்த எல்லோர்களும் பைத்தியகாரி வருகிறாள் என்பதாகச் சிரித்தார்கள். இவள் ஒன்றும் நோக்காது வேகமுடன் சனங்களுக்குள் விழுந்து சென்று அய்யரிடம் இதைக் கொடுக்கச் சென்றாள். அவர் சீ, சீ, போ, போ வேண்டாம், அசுத்தம் என்று கூறி மறுத்தனர். இவள் கெஞ்சினாள், அழுதாள், கதறினாள், வணங்கினாள் ஒன்றும் பலிக்கவில்லை. போ, போ என்று துரத்தினர்கள். இப்பையனையும் துரத்தினர்கள். இருவரும் வருத்தமுடன் அப்புறம் வந்து நின்றார்கள்.

இவர்கள் எவ்வளவோ முயன்றும் மூர்த்தி உள்ளே போன பாடில்லை. படாத பாடு பட்டார்கள். நேரமும் வெகு நேரம் ஆகிவிட்டது. அப்போது விண்ணில் அசரீரி வாக்காக அனபர்களே என் அன்பிற்கும் ஆனந்தத்திற்கும் உரித்தாகிய ஒப்பற்ற உத்தமமான குழந்தைகளின் இச்சையின்படி தேபாராதனை செய்து அவர்கள் போகச் சொன்னால் தான் உள்ளே போகும். இல்லையேல் போகாது. அவர்கள் குறை தான் என்று கேட்டது. இதைக்கேட்ட எல்லோர்களும வியப்பும் பிரமையும் கொண்டு அவர்களை அழைத்துச் சென்று அதை வாங்கித் தேபாராதனை செய்தார்கள். இவர்

களும் சந்தோசமுடன் பாடிப் போற்றி வணங்கி அழுது நின்ருர்கள்.

அப்பொழுது அய்யர் முதல் எல்லோர்களும் அம்மா நேரமாகிவிட்டது. சுவாமியை உள்ளே போகும்படி கூறுங்கள் என்ருர்கள். அப்படியே, சுவாமி எங்கள் குறைவு பாடு நீங்கியது. ஆனந்தமாக உள்ளே போகலாம் என்று வணங்கினர்கள். உடனே வழக்கம போல் போக ஆரம் பித்தது. இதைக்கண்ட எல்லோர்களும் இவர்களுடைய கால்களில் வீழ்ந்து வணங்கிப் போற்றித் துதித்துத் தெய் வீகத்தன்மை வாய்ந்த மகாத்மாக்களே உண்மை அன்பர் களே உங்களது பெருமையை இதுவரை அறியாது பைத்தி யகாரி யென்றும் பைத்திய காரனென்றும் பரிகசித்துச் சிரித்துத் தூசித்தோமேயென்று வாயிலும் தலையிலும் அடி த்துக் கொண்டு இவைகளையெல்லாம் பொறுத்துக் கொள் ளுங்களென்பதாகக் கூறி அது முதல் எல்லோர்களும் இவர் களை அன்பு பத்தியுடன் வணங்கி வேண்டிய பொருள்களும் அளித்துக் கொண்டாடி வந்தார்கள. மற்ற தாசிகளும் இதை அறிந்து இவர்களை வணங்கிப் பயபக்தியுடன் இருந்து வந்தார்கள். இவர்களும் பின்பு நாளுக்கு நாள் தியான நிஷ்டையிலேயே மூழ்கி இருக்க ஆரம்பித்தார்கள். அப் பொழுது ஈச்சுரன் கோவில் குருக்களிடமும் தர்ம கர்த்தரிட மும் கனவிற் தோன்றி இவர்களிருவரும் மகாத்துமாக்கள் தியான நிட்டை நிலையில் ஈடுபட்டிருக்கின்ருர்கள். இவர்களை ஆலயத்திலேயே ஓர் புறம ஏகாந்தமாக இருக்கும்படி செய்து இவர்களுகும் அங்கே சமாதி மண்டபத்திற்குள ஓர் சாதுவாகிய மகான் முன்பு இல்லாத்தில் நின்று பரிபக் குவமடைந்து பின்பு மெய்ஞ்ஞானத்தை அடைந்து இங்கு வந்து வெகு நாளாகத் தியான நிட்டையில அப்பியாசித்து இப் பொழுது தன்னை மறந்த நிலையில் இருந்து வருகினறனர். அவருக்கும் காலை மாலையில் பால் பழமும உச்சியில் நமமு டைய பிரசாதமும் அளித்துப் பூசித்து அன்புடன கவனித் துக் கொள்ளுங்கள் என்பதாகக் கூறி மறைந்தனர். அவ் விதமே ஏறபடுத்தி நடத்தி வந்தார்கள். இதை அறிந்த அரசர்களும் பெரியோர்களும சாதுக்களும் வந்து இவர் களைத் தெரிசித்து வணங்கி இந்தச சிறு வயதிலேயே ஈச்சுர அனுக்கிரகமும மேலான நிலையும அடைந்ததைப் பற்றி வியப்பும் சந்தோசமும் கொண்டு அன்புடன் அப்பை யனைத்

கழுவி முத்தமிட்டுப் புகழ்ந்து பின்பு அந்தச் சாதுவாகிய மகானையும் தெரிசித்துப் போற்றி வணங்கிச் செல்வார்கள். இவ்விதமாக இருந்து பின்பு சர்வமும் கடந்த மேலான பேரின்ப அத்து விதமுத்தி நிலையை மூவரும் அடைந்து சில காலம் இவ்வுடம்புடன் வசிக்கப்பெற்று அதன் பிறகு முன் பின்னுக மோட்சப் பதவியை அடையப்பெற்றார்கள் ஆகவே இக்குழந்தைப் பையனைப் போன்று முன் சென்மத்தின் விடு குறையின் வாசனையினாலேயே இச்சிறு வயதிலேயே உலக நிலைமைகளும் அன்பு, பக்தி முதலிய வழிபாடுகளும் நீங்கி ஞான நிலையும் தியான நிட்டையும் பொருந்தப்பெற்று ஈச்சுர அனுக்கிரகமும் மேலான நிலையும் முத்தியும் அடைந்ததைப் போன்றும், இப்பெண்ணனதும் முன் சென்மத்தின் விடு குறையின் வாசனையால் இச்சிறு வயதிலேயே உலக நிலைமை கள் நீங்கப்பெற்று அளவிறந்த அன்பு, பக்தியின் முதிர்ச்சி யால் சதா ஈச்சுர சிந்தனையினாலேயே இப்பெண்ணுக்கும் ஈச்சுர அனுக்கிரகமும் இன்ப நிட்டையும் ஞான நிலையும சேரப்பெற்று முத்திப்பதவியை அடைந்ததைப் போன்றும் அந்த சாதுவாகிய மகானும் முன்சென்மத்தின் விடு குறை யின் வாசனையால் அன்பு பக்தி, ஒழுக்கம், கருணை, தருமம் சாஸ்திர ஆராய்ச்சி, சத் சங்கம் கேள்வி, விசாரணை, சாதுக் கள் பத்தி, சாந்தம் அடக்கம் முதலிய உத்தம குணங் களுடன் மனவி மக்களுடன் இல்லறத்தில் வசிக்கப் பெற் றுப் பின்பு அதை நீத்து உண்மையான மெய்த்துறவு நிலையை அடைந்து மெய்ஞான நீட்சை பெற்று சர்வ இச் சைகளும் விட்டு ஏகாந்த நிலையைச்சேர்ந்து மௌனசாதனை யிலும சதா ஈச்சுர தியானத்துடன் கூடிய தியானயோக நிட்டை சாதனையிலும் ஈடுபட்டுப்பின்பு ஞான நிலையும் சர்வ மும் கடந்த மேலான பேரின்ப நிட்டையும அடையப்பெற்று முத்திப்பதவியை அடைந்ததைப் போன்றும் முன் பூர்விக அறுகுறையின் வாசனையிலிருந்தே தொடர்ந்து தீவிரமுடன் ஒரே சென்மத்தில் அடையக் கூடியதாகவும் இருக்கின்றது. எதுவும் நிச்சயித்துக் கூறுவதற்கில்லை யென்றாகும்.

சுபம்

திருச்சிற்றம்பலம்

ஓம்

சாந்தி — சாந்தி — சாந்தி

உயிரெலாம் இன்ப உருவமாய் வாழ்க.

ஸ்ரீலஸ்ரீ சிவ குமார மௌனகுரு சுவாமி அவர்கள்

அந்நந் நிலைகளில் அருளிய நூல்கள்

*

1. சிவா அமிர்தம்
2. கடவுளின் உண்மை விளக்கம்
3. யோகத்தின் ரகஸியம்
4. சும்மா இருக்கும் சுகம்
5. ஆத்ம ஞானப் போரின்பக் கீதம்
6. ஆத்மானந்த போதம்
7. ஆத்மஞான நிலையின் அன்பின் பிரவாகம்
8. தத்துவ ஞானக் கும்மி
9. ஆத்மஞான பாஷியம் அல்லது பரமார்த்த இன்பசாகரம்

மேற்கண்ட நூல்கள் வெளிவந்துள்ளன.
கீழ்க்கண்ட நூல்கள் வெளிவராதவை.

10. பல உண்மைகளின் விளக்க வேடிக்கை இன்பசாகரம்
11. ஆதிப் பூர்வக்யான உண்மைப் பிரகாசம்

ஸ்ரீ மௌனகுரு சுவாமி
ஸ்ரீ திருவொற்றீஸ்வரர் இலவச உயர்நிலைப் பாடசாலை
சென்னை—ஸூளை—வேப்பேரி

Jyothi Printers, Madras-1.

KOVILOOR MUTT LIBRARY, KOVILOOR 39289